

நிகழ்ந்த
கதைகள்

## நூல் விவரப்பட்டியல்

| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | : | நிகழ்ந்த கதைகள் |
| ஆசிரியர் | : | லக்ஷ்மி |
| வெளியிடுவோர் | : | பூங்கொடி பதிப்பகம்<br>14, சித்திரைக்குளம் மேற்குத் தெரு<br>மயிலாப்பூர், சென்னை – 600 004. |
| நூல் உரிமை | : | டாக்டர் கே. மகேஸ்வரன் |
| வெளியீடு | : | முதற் பதிப்பு : டிசம்பர், 1985<br>இரண்டாம் பதிப்பு, ஜூன், 1992<br>மூன்றாம் பதிப்பு, அக்டோபர், 1994<br>நான்காம் பதிப்பு, நவம்பர், 2001<br>ஐந்தாம் பதிப்பு, டிசம்பர், 2007 |
| நூல் அளவு | : | 1 x 8 கிரவுன் |
| பக்கங்கள் | : | 304 |
| நூலின் பொருள் | : | சிறுகதை |
| மொழி | : | தமிழ் |
| எழுத்து | : | 10 புள்ளி |
| தாள் | : | 10.9 கி.கி. வெள்ளைத்தாள் |
| பைண்டிங் | : | சாதா அட்டை |
| அச்சிட்டோர் | : | அமர் ஆப்செட், சென்னை – 5 |

விலை ரூ. 95.00


# பதிப்புரை

திருமதி 'லக்ஷ்மி' அவர்களின் எழுத்துக்கள் பல வாசகர்களின் வாழ்க்கைப் பிரச்சினைகளில் தீர்வு காண முடியாதிருந்தனவற்றிற்குத் தீர்வு காண உதவியிருப்பதாக பயன் பெற்ற வாசகர்கள் கடிதம் எழுதிக் கொண்டிருக்கிறார்கள்.

இன்னும் சிலர் அவர்களுக்குள்ள பாதிப்புகளை கடிதம் மூலம் எழுதி தீர்வு கேட்டுப் பெற்று வருகிறார்கள்.

இவ்வாறு வாழ்க்கையில் பாதிப்புக்குள்ளானோர் பயன்பெறும் பொருட்டு 'தேவி' வார இதழ் "பிரச்சினைக் கதைகள்" என்ற தலைப்புத் தந்து வாசகர்கள் தங்கள் பிரச்சினைகளை எழுதுவதற்கும் அந்த பிரச்சினைகளை மையமாக வைத்து, பிரச்சினையைத் தீர்ப்பதற்கான அறிவுரையை தீர்வாக எழுத திருமதி லக்ஷ்மி அவர்களை ஏற்பாடு செய்தது. அவ்வாறு எழுதப்பட்ட கதைத் தொகுப்புதான் 'நிகழ்ந்த கதைகள்.'

இவ்வாறு ஒரு வித்தியாசமான கதைத் தொகுப்பு வெளி வருவதற்குக் காரணமாக இருந்த தேவி ஆசிரியருக்கும், திருமதி 'லக்ஷ்மி' அவர்களுக்கும் எங்கள் நன்றி உரியதாகும்.

வே. சுப்பையா
பூங்கொடி பதிப்பகம்

# பொருளடக்கம்


| | |
|---|---|
| ஏன் இந்த வேகம் | 5 |
| அந்தக் கடிதம் | 20 |
| அவளுக்கு மறுபடியும் | 29 |
| பட்ட மரம் | 41 |
| இருக்க ஓர் இடம் | 51 |
| மீண்ட சொர்க்கம் | 61 |
| மெல்ல மெல்ல மற! | 70 |
| வாழ்க்கை வாழ்வதற்கே | 80 |
| துணையின் நிழல் | 91 |
| தம்பி என்னும் கருநாகம் | 101 |
| குருவி சொன்னது | 110 |
| கணவன் என்ற கல் | 119 |
| பத்து மாத பந்தம் | 127 |
| காதலுக்குக் கிடைத்த பரிசு | 137 |
| ஜோதிடம் பலித்ததா? | 145 |
| சிறகு முளைத்த பின்னர் | 154 |
| அம்மா | 164 |
| ஆயிரங்காலத்துப் பயிர் | 173 |
| ஆயிரம் மலர்கள் | 185 |
| அடுத்த வீட்டுப்பெண் | 193 |
| ஆடிக்கூழ் | 202 |
| அவளும் ஒரு தாய் | 214 |
| சந்தேகம் என்பது? | 224 |
| இது தேவையா? | 232 |
| அன்பைத் தேடி | 243 |
| இருதலைப் பட்சம்! | 253 |
| ஒருத்திக்கு ஒருவன் | 263 |
| தங்கக் குடம் | 273 |
| பிரச்சினைகள் ஓய்வதில்லை | 281 |
| கவர்ச்சிக் கன்னி | 290 |
| இந்த அம்மா? | 297 |


# ஏன் இந்த வேகம்?

ஒரு மூட்டைத் துணி. அப்பா, அம்மா, பெரிய அண்ணன், சின்ன அண்ணன், அண்ணி அத்தனை பேரும் காலைக் குளியலுக்குப் பின்னர் களைந்து போட்டுவிட்டுப் போன அழுக்குத் துணிகள்.

சோப்புத்தூள் போட்டு இரும்பு வாளிகளில் நனைத்து வைத்துவிட்டு, வீட்டைப் பெருக்கி, துடைத்து, எல்லோருக்கும் மதிய உணவு தயாரித்துவிட்டு—கிணற்றடியில் தோய்க்கப் போனவள்... அவைகளைத் தோட்டத்து வேப்ப மரங்களுக்கிடையே கட்டப்பட்டிருந்த கொடியில் பிரித்து உலர்த்தி விட்டு உள்ளே வருவதற்குள் பொழுது உச்சியை எட்டி விட்டிருந்தது. தாகம் நாக்கை வரட்டியது.

கனமான வாளிகளைத் தூக்கியதாலோ என்னவோ அவளுக்கு வழக்கமாக வரும் நெஞ்சுவலி இன்று கொஞ்சம் அதிகமாகவே வந்துவிட்டது... வைத்தியர் வலிக்காக கொடுத்திருந்த மாத்திரைகளில் ஒன்றைக் கையில் எடுத்துக் கொண்டாள். மூலையிலிருந்த மண் பானையிலிருந்து டம்ளரில் நீரை முகந்து... வாயில் ஊற்றிக்கொண்டு முதலில் மாத்திரையை விழுங்கினாள். பின்னர் தாகம் அடங்கும் வரை டம்ளர் தண்ணீர் பூராவையும் குடித்தாள்.

சில்லென்று விளாமிச்சி வேர் மணத்துடன் தண்ணீர் அந்த வெய்யிலுக்கு குடிக்க சுகமாகத்தானிருந்தது. ஒரு நொடிப் பொழுது சுகம்... அதை அவள் அனுபவிப்பதைக்

கூட அண்ணியால் பொறுக்க முடியவில்லை. அதுவரை வாயிற் திண்ணையில் எதிர் வீட்டுப் பெண்ணுடன் பல்லாங் குழி விளையாடிக் கொண்டு பொழுதை வெட்டியாக கழித்துக் கொண்டிருந்தவள் இப்போது அதட்டிக் கூப்பிட்டாள்.

"தாரணி! மாமா, உங்கண்ணார் எல்லாரும் கடையி லிருந்து வராங்க—கோயிலுக்குப் போன அத்தை கூட திரும்பிட்டாப்பல தெரியுது—எல்லாரும் பசியா இருப்பாங்க.... சீக்கிரமா தட்டுக்களைக் கழுவி மேசையில்வை.... அப்படியே கால் கழுவ தண்ணீர் வாளியும் செம்பையும் எடுத்துவை...."

ராணி போல வாயிலில் உட்கார்ந்தபடியே எட்டு வீடு கேட்கும் குரலில் மிடுக்காக உத்திரவிட்டாள் அண்ணி.

"காலையிலிருந்து நிக்க நேரமில்லாமல் வேலை செஞ்சு ரொம்ப களைச்சுப் போயிட்டேன் அண்ணி! இன்னிக்கு நெஞ்சுவலி ரொம்ப அதிகமா இருக்கு...." —சொல்லத்தான் நினைத்தாள் அவள். ஆனால் துணிவிருக்கவில்லை. உள்ள மும் உணர்வுகளும் புழுங்கி உடைந்து ஓவென்று ஓல மிட்டன.

"அண்ணி! நீயும் ஒரு பெண்—ஒரு நோயாளிப் பெண்ணை இப்படி வாட்டி வதைக்கிறது தர்மமா?"

"நான் செய்தது தவறுதான். அதுக்காக வீடே கூடி எனக்கு தானே சாவு வருமுன் மரணதண்டனை வழங்கிட் டீங்களே? மாசம் என் செலவுக்குன்னு கொஞ்சம் உதவி வந்த சம்பளத்தில் மண்ணைப் போட்டு—அந்த பள்ளிக் கூடத்து வேலையிலிருந்து என்னை நிறுத்தி... இப்ப வீட்டில் அடைச்சு வச்சிருக்கீங்களே?... நான் யார் கிட்ட போய் முறையிட முடியும்...?..."

"அப்பா!... பெரிய அண்ணா! சின்ன அண்ணா உங்களுக்கெல்லாம் என் மனசு ஓலமிடறது கேட்கலையா?...



துயரம் கப்பிய என் கண்களைப் பார்த்து கொஞ்சம்கூட உங்கள் மனம் இரங்கலையா? நான் யார் அப்பா?... நீங்க பெத்த மகள். அண்ணா நான் உங்கள் ரத்தத்தின் ஒரு பகுதிங்கிறதை மறந்துட்டீங்களே! உங்க உயிர் துடிப்பின் ஒரு துளி நான் என்பது புரியலையா?... உறவுங்கிற சங்கிலி யில் நானும் ஒரு பிணைப்புங்கிறத மறந்து ஊராருக்கு மதிப்புக் கொடுத்து... என்னை இப்படி கொடுமைப் படுத் திட்டீங்களே... நியாயமா?..."

பாவம் அம்மா!... ஜாதகம் பார்த்தவர் சொல்லி விட்டதை நம்பிக் கொண்டு விட்டாங்க.

"சீக்கிரம் கல்யாணம் பண்ணினால் உடம்பு குணமாகி விடும்" என்று சொல்லிட்டார் ஜோசியர்.

பரிசோதித்துப் பார்த்த டாக்டர் சொன்னார்... "அறுவை சிகிச்சை உடனடியாக செய்தாகணும்—தள்ளிப் போட்டுக் கொண்டு வந்தால் நல்லதல்ல."

அம்மா ஜோசியரைத்தான் நம்பினாங்க.... அறுவை சிகிச்சையில் மகள் செத்துவிடுவாளோன்னு பயம்... பகவதி அம்மன் கோயிலுக்குப்போய் நித்தமும்... பிரார்த்தனை செய்து கொண்டு... கோயிலைப் பலமுறை வலம் வந்து விட்டு... வேகாத வெய்யிலில்... "தாயே என் மகளுக்குத் தாலிபாக்கியம் தா... உனக்கு தங்கத்திலே தாலி செய்து போடறேன்..." என்று லஞ்சம்பேசி கெஞ்சிவிட்டு வராங்க....

அறுவை சிகிச்சையைப் பற்றி தெளிவாகக் கேட்டுத் தெரிஞ்சுக்க ஒரு வாரம் சென்னைக்கு அம்மாவோட பெரிய டாக்டரைப் பார்க்கப் போயிருந்தாள் தாரணி.

அப்பா ஊரில் இல்லை—அம்மா தான் துணையாகப் போக வேண்டியிருந்தது. அதற்குள் கிராமத்தில் அவர்கள் வசித்த தெருவில் வேறு ஒரு விபரீதமான கதை பரவி விட்டிருந்தது.

"தாராணி எதுக்கு சென்னைக்குப் போயிருக்கா தெரியுமா? அவளுக்கு மூணு மாதம் கர்ப்பம்—அதைக் கலைக்கத்தான் தாய் மகளை இழுத்துக் கொண்டு போயிருக்காள். காரணம் யார் தெரியுமா?... அவள் வேலை செய்கிற பள்ளிக் கூடத்திற்கு அருகே... இருக்கிற பெரிய தெரு முகனை வீட்டிலே குடியிருக்கிறானே... கேசவன்... அவன்தான்... வியப்பா இருக்கா? கேசவன் பெண்ஜாதி மல்லிகாதான் சொன்னாள்..."

படாப்பழிகளைக் கேட்டு ஒரு இளம் பெண் மனம் நொறுங்கிப் போவதைப் போன்ற கொடுமையானதொரு விஷயம் உலகில் வேறு ஒன்றுமே கிடையாது. முதலில் அந்த தெருவில் ஆரம்பித்த கதை இப்போது ஊரே பரவி விட்டிருந்தது.

"கேடு கெட்டவளே! உன்னாலே எங்களுக்கு கடைத் தெருவில் தலைகாட்ட முடியலை. நீ செத்து ஒழிஞ்சு போயிருந்தாலும் நிம்மதியாக இருப்போம்" —அண்ணன்கள் இருவரும்... அவளைப் போட்டு அடித்தபோது சுருண்டு மயங்கி விழுந்துவிட்டாள்... அப்பப்பா! அந்த நாளை நினைத்தாலும் .. உள்ளமும் உடலும் ஒருங்கே நடுங்குகிறதே?

பாவம் அம்மா! பெற்றவள் அல்லவா? ஓடிவந்து மகளை வாரி அணைத்துக் கொண்டாள்—அதைக் கண்டு ஆத்திரப் பட்ட அப்பா... கீழ்ப்பல் உதட்டைக் கிழித்து ரத்தம் முக வாயில் பெருகும் அறை... அம்மாவை எப்படி ஓங்கி பேயாக அறைந்துவிட்டிருந்தார்.

அன்று வீடே அமர்க்களப்பட்டு விட்டதை அவள் இந்த அல்ப உயிர் துடிக்கும்வரை மறக்க முடியுமா?...

மனிதாபிமானமே இல்லாது—இருதய நோயாளிப் பெண்ணை மிருகம் போல தாக்கிய அவர்களது அரக்கச் செயலைத்தான் அவள் மன்னிக்க முடியுமா?



நடையில் காலடி சப்தம் கேட்டது...நினைப்பினின்று தாரணி விழித்துக் கொண்டாள். பரபரப்பாக தண்ணீர் வாளியைத் தூக்கி முற்றத்து ஓரத்தில் வைத்தாள்.

தட்டுக்களைக் கழுவித் துடைத்து—கூடத்தில் கிடந்த மேஜைமீது வைத்துவிட்டு—சமையலறைக்குள் ஓடினாள்.

'அன்பில்லாத மனிதர்கள் ' என்ற நினைப்பு அவள் நெஞ்சை இன்னும் வலிக்கச் செய்தது. வாளியைத் தூக்கிய சிரமம் மூச்சை அடைத்தது.

எதிரே சுவற்றில் தொங்கிய கண்ணாடியில் பார்வை பட்டபோது உதடுகள் லேசாக நீலமாகிவிட்டதை உணர்ந்தாள். "மூச்சுமுட்டல் ஏற்பட்டு உதடுகள் நீலமாகினால் இதயம் தேவையான பிராணவாயு இல்லாது கஷ்டப்படுகிறது என்று அர்த்தம்...அந்த நிலையை நீடிக்கவிடுவது அபாயம்"—டாக்டர் கூறிய அறிவுரைகள் நினைவுக்கு வந்தன. டாக்டர் சொன்னதையெல்லாம் அம்மா திரும்ப வந்து வீட்டிலிருந்தவர்களிடம் சொன்னாள்.

ஆனால் யாருமே காதில் போட்டுக் கொள்ளவில்லை. 'குடும்ப கவுரத்தைக் குழிதோண்டி புதைத்த பாவி சாகட்டும்' என்ற அசட்டை போலும்.

அடுப்பைப் பற்ற வைத்துக் குழம்பைச் சூடு செய்து கொண்டிருந்தாள் தாரணி. முற்றத்தில் அவர்கள் கை கால்களைக் கழுவும் சப்தம் கேட்டது. அடுத்த வீட்டுப் பெண்—தன் அண்ணன் பரிசாக அனுப்பியிருந்த டேப் ரிகார்டரில் சினிமாப் பாட்டுக்களைப் போட்டுவிட்டிருந்தாள்.

ஜன்னல் வழியே பளிச்சென்று பாடல் கேட்டது.

"வருவேன் நான் உனது மாளிகையின் வாசலுக்கே... ஏனோ அவசரமே எனை அழைக்கும் வானுலகே!"

குபீரென்று தாரணியின் கண்களில் நீர் பொங்கிக் கன்னங்களைக் கோடிட்டது.

எத்தனை பொருத்தமான பாட்டு. சின்னஞ்சிறு வயதிலேயே அவளை அழைத்துக்கொள்ள வானுலகத்திற்கு ஏன் இந்த வேகம்?

ஜன்னல் வழியே தெரிந்த வேப்ப மரத்துக் கிளையில் ஒரு குருவி உட்கார்ந்திருந்தது.

காற்றில் தலை அசைத்து கிளைகள் சலசலத்ததும்... சிறகை விரித்துக்கொண்டு கிரீச்சிட்டபடி அது எத்தனை சிங்காரமாக நீலவானை நோக்கிப் பறந்தது...

அந்த வீட்டு மதில் சுவரைத் தாண்டி காற்றிலே ஆடிய போகன் வில்லாவின் சிவப்பு பூக்கள் எத்தனை அழகாக இருந்தன?

அம்மா பிரசாத தட்டுடன் உள்ளே வந்த போது தட்டி லிருந்த மல்லிகைப் பூவின் மணம்....அப்பப்பா—எத்தனை இனிமையாக இருந்தது...ஜன்னல் வழியே லேசாகப் புகுந்து அவளது கன்னங்களைத் தடவிவிட்டு ... முன்நெற்றி கூந்தலைப் புரட்டிய காற்றுகூட எத்தனை சுகமாக இருந்தது...

சிட்டு குருவிக்கும்—காற்றில் தலையசைக்கும் போகன் வில்லாவுக்கும் கூட நீண்ட காலம் வாழ உரிமை இருந்தது. அவளுக்கு?

மேலே பொங்கி வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டு உணவுப் பாத்திரங்களை மேசை மீது வைத்து விட்டு உள்ளே வந்து ஒதுங்கிக் கொண்டாள்.

அவள் சமைக்கலாம்— ஆனால் சாப்பிடும்போது அவளைப் பார்க்க அந்த வீட்டு ஆண் பிள்ளைகளுக்கு அருவருப்பாக இருந்தது. தலைநிமிர முடியாதபடி பயங்கர மானதொரு தவறைச் செய்துவிட்ட பாவப்பட்டவள் அவள்... குடும்பத்தை கெடுக்க வந்த கோடாரிக்காம்பு...



ஆறு மாதங்களுக்கு முன்னர் கணவனுடன் புக்ககம் போய்விட்டிருந்த தங்கை லீலாவைப் பற்றி அவர்கள் பேசுவது காதில் விழுந்தது.

"அவங்க வீட்டிலே லீலாவை ரொம்ப கொண்டாடிக் கிறாங்க... என்ன இருந்தாலும் அவ பதவிசான பெண்... இங்கேயும் ஒண்ணு இருக்கே...."

அண்ணியின் ஏளனமான சொல்...அவளை நிலை குலையச் செய்துவிட்டது...நெஞ்சு படபடப்பு அதிகரித்து மூச்சுத் திணறியது...துக்கம் நெஞ்சை இறுக்க...அவளால் நிற்க முடியாது....கதவை ஆதரவுக்காகப் பிடித்துக் கொண் டாள்.

நாலு சுவருக்குள் அவளை சமாதி கட்டிவிட்டு—உற வினர்கள் வார்த்தைகளாலும் செயலாலும் சித்திரவதை செய்யும்படி தவிக்கவிட்டு —கேசவன் ஒரு மனிதனாக சிறிதும் கவலை கொள்ளாது சமூகத்திலே எந்தவித பயமுமின்றி உலவிக் கொண்டிருக்கிறான்?...

ஆணுக்கொரு நியாயம். பெண்ணுக்கு ஒரு நியாயம் வழங்கும் அக்கிரமமான சமுதாயப் பார்வையிலே அவள் அழிந்து போனவள், தவறு செய்தவள்—துரோகி.

ஒரு வருஷத்திற்கு முன்னர்தான் கேசவன் அறிமுகம் ஏற்பட்டது. அதுவும் எதிர்பாராத நிலையில்.

அப்போது தாரணி அந்த தனியார் பெண்கள் பள்ளிக் கூடத்தில் டைப்பிஸ்ட்டாக வேலைக்கமர்ந்திருந்தாள். அடிக்கடி இருமலும் சளியும்—காய்ச்சலும் வந்து கொண் டிருந்தன. காய்ச்சலுக்கு என டாக்டரிடம் மருந்து வாங்கப் போனபோது தான் முதல் முதலாக அவளுக்கு தன் நோயைப் பற்றி தெரியவந்தது. சின்ன வயதில் எந்தவிதமான அறிகுறி களும் இருக்கவில்லை.

அந்த டாக்டரின் உத்தரவுப்படியே இருதய நோய் நிபுணரைக் கலந்து ஆலோசித்தபோதுதான் விவரமாகத் தெரிந்தது. இது ஒருவிதமான‌ப் பிறவிக் கோளாறு. இருதயத்தைப் பற்றியது. பர்சிஸ்ட்டண்ட் டக்டஸ் ஆர்ட்டீரியோஸிஸ் சுருக்கமாக P. D. A. என்பார்கள். அறுவை சிகிச்சை மூலம் நிவர்த்தி செய்யலாம்—சென்னை ஆஸ்பத்திரிக்கு போய் வருவது நலம் என்று சொல்லியிருந் தார்.

இருதய நோயாளி—அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்றதுமே தாரணியின் உணர்வுகள் தொய்ந்து போயின.

"அறுவை சிகிச்சை செய்து கொள்ளாவிட்டால்?" டாக்டரிடம் துணிவாகத்தான் கேட்டாள்.

"உடனடியாக செய்யாது தாமதித்தால் பிறகு சிகிச்சை செய்ய இயலாது போய்விடும்—இருதயம் பழுதடைந்து விடலாம். இப்படிப்பட்ட பெண்கள் திருமணம் செய்து கொண்டால் தாய்மையடையும்போது சிரமப்படுவார்கள்—மொத்தத்தில் இந்த கோளாறுடன் நீண்ட காலம் வாழ இயலாது போகலாம்."

டாக்டரின் தீர்ப்பில் உற்சாகம் ஒடுங்கி...உணர்வுகள் தொய்ந்து மனம் சோர்ந்தவளாக வேலைக்குப் போய்க் கொண்டிருந்த போதுதான்....அவளுக்கு கேசவனின் மனைவி மல்லிகாவின் சிநேகிதம் கிட்டியது.

"வாங்கோ உள்ளே—இந்த தெருவழியா தினமும் வேலைக்கு போவதைப் பார்க்கிறேன்" வலிய தானே அழைத்தாள் மல்லிகா.

சில நாட்களுக்குப் பின்னர் ஒருநாள் தாரணி அவர்கள் வீட்டுக் கதவை தட்டியபோது வந்து திறந்தவனைக் கண்டு இன்ப அதிர்ச்சியில் செயலற்றுப் போனாள்.

மல்லிகாவின் கணவன் கேசவன்! அன்று வேலைக்குப் போகவில்லை. வீட்டில் இருந்தான்...மல்லிகா தன் கண வனைப் பற்றி ஒன்றும் சொல்லவே இல்லையே? மனதைக் கவரும் ஆண் அழகனாக இருக்கிறாரே...தனக்குள்ளே பிரமித்துப் போனாள் தாரணி.



"நீங்கதான் தாரணியா? மல்லிகா சொன்னாள். வாங்க உள்ளே!" அழைத்தான்.

கேசவன் தோற்றத்தில் மட்டும் வசிகரமானவன் அல்ல... மனதைக் கவரும் வகையில் பேசுமளவு கெட்டிக்காரன்கூட என்பதை சில தினங்களிலேயே புரிந்து கொண்டு விட்டிருந் தாள். அந்த தனியார் பள்ளியில் வேலை செய்ததாலோ என்னவோ அவளுள் ஒரு பலவீனம் உருவாகி விட்டிருந்தது.

ஆங்கில மொழி மீது அபார மோகம்! யாராவது அதை அழகாகப் பேசுவதைக் கேட்டால் போதும்...அவர்கள் வாயையே பார்த்துக் கொண்டிருப்பாள் தாரணி.

கேசவன் ஆங்கில மொழியை சரளமாக—அழகாகப் பேசினான்—ஏன் அதில் கவிதை கூட புனைந்தான்—தான் எழுதிய கவிதைகளை அவளுக்குப் படித்துக் காட்டினான். அவளுக்கும் கவிதை எழுத சொல்லிக் கொடுக்க ஆரம்பித் தான். அவ்வளவுதான்! முதலில் அவன் பேசிய ஆங்கிலத்தைக் கண்டு பிரமித்து...மயங்கினாள் பின்னர் அவனது கவிதை களைப் படிக்க ஆசைப்பட்டாள்—அதற்குப் பின்னர் அவன் மீதே ஆசை கொண்டு விட்டாள்.

மனைவி கல்லாக உயிருடன் இருக்கும்போது அவள் அவனை நேசித்து என்ன புயன்? மனச்சாட்சி சாடியது. ஆனால் மோக மயக்கம்....புத்தியைக் குழப்பியது.

"இதய நோயாளி—விரைவில் சாகப் போகிறவள்... மனதுக்குப் பிடித்தவனைக் காதலித்தால் என்ன மோசம் வந்துவிடப் போகிறது" என்று தனக்குள்ளேயே சமா தானம்.

இரகசியமான சந்திப்புகள்— பேச்சுக்கள்... மனதைக் கவர அவன் புனைந்த கவிதைகள் இவைகளை அவள் மறக்க விரும்பவில்லை.

அந்த ஆண்டின் தொடக்கத்திலே புத்தகக் கடையொன்றில் ஒரு டைரியை அவள் வாங்கினாள்.

அன்றாடம் நடந்த நிகழ்ச்சிகளை—அவர்கள் பேசியதை —அவன் சொன்னதை எல்லாவற்றையும் விவரமாக அதில் ஆங்கிலத்திலேயே எழுதத் தொடங்கினாள்.

காதலின் நினைவு—பெரும் காவியமாக இருக்கப் போகிறது என்று நினைத்துக் கொண்டிருந்தவளுக்குப் பேரிடி.

ஒரு நாள் மனைவி இல்லாத நேரத்தில் அவளிடம் கேசவன் மிகவும் நெருக்கமாகப் பழக முயன்றபோது திடுக்கிட்டு மறுத்து விட்டாள்.

காதல் என்பது தெய்வீகமான உணர்வு என்று உயர்ந்த பீடத்திலே வைத்துப் போற்றிக் கொண்டிருந்த பேதை மனத்திற்கு ஒரு பெரும் அதிர்ச்சி.

வெறும் உடல் நெருக்கத்திலே பிறக்கும் ஒரு ஆவேச உணர்ச்சிதானா அது?

மனக்கசப்படைந்து போன தாரணி அவனை விட்டு மெல்ல விலகிவிடத்தான் தீர்மானித்தாள்.

ஆனால் அந்தப் பாவி அன்றைய தினம அவளிடம் இருந்த அந்த டைரியை சட்டென்று வாங்கித் தன் பைக்குள் வைத்துக் கொண்டு விட்டான்.

கேசவன் ஒரு கவிஞன் அல்ல....பெண்களை ஏமாற்றும் கயவன் என்பது பின்னர்தான் முழுவதும் புரிந்தது.

"என்னைத் தனியே சந்தித்தால்தான் டைரியைத் திருப்பித் தருவேன். இல்லாவிடில் உன் அப்பாவிடம் கொடுத்து விடுவேன்" என்று அவன் பயமுறுத்தியதும்... தாரணி உண்மையில் பயந்துவிட்டாள்.



"ஒரே ஒரு தடவை உன்னை மறுபடி தனியே சந்திக்கிறேன்—டைரியைக் கொடுத்துவிடு" என்று, கெஞ்சிவிட்டு ஒப்புக் கொண்டாள். அந்த சந்திப்புதான் அவளது சரிவுக்குக் காரணமாகியது.

'பேசிக் கொண்டே போகலாம்' என்று சொல்லி பஸ்ஸில் ஏற்றிக்கொண்டு அடுத்த ஊருக்கே அவளை அவன் அழைத்துச் சென்றுவிட்டான்.

அவனுடன் ஒரு இரவு அவள் தனியே தங்கினாள். நடக்கக் கூடாதது நடந்துவிட்டது...தன்னையழித்தவன் காதலன் அல்ல காமுகன்—குடிகாரன், வெறியன்...மட்டமான மனிதன்...எல்லாமே புரிந்துவிட்டது. இனி என்ன பயன்?

தாரணியை இரண்டாம் மனைவியாக ஏற்றுக்கொள்ளப் போவதாக மனைவியிடம் குடி போதையில் பேசிவிட்டிருக்கிறான்.

எந்த மனைவி பொறுப்பாள்? அந்த டைரியை அவனிடமிருந்து பிடுங்கி வைத்துக் கொண்டு மல்லிகா இப்போது... தன் தோழியைப் பழிவாங்கத் தொடங்கி விட்டாள்.

தெருப் பெண்களை கூட்டி வைத்துக்கொண்டு அந்த டைரியைப் படித்து மொழி பெயர்த்து....அவளுக்கும், கேசவனுக்கும் இடையே வளர்ந்திருந்த காதல் விவகாரத்தை....தம்பட்டமடித்து விட்டாள். தெருப் பெண்களுக்கு தெரிந்த சங்கதி ஊரே தீயாகப் பரவிவிட்டது.

சென்னைக்கு டாக்டரைப் பார்க்க சென்ற கதை—வேறு வகையாகத் திரித்து கருச்சிதைவுக்காகத்தான் தாரணி ஊரைவிட்டு ஓடியிருக்கிறாள் என்று பேசச் செய்து விட்டது.

ஊராரின் இழிச் சொறகளைக் கேட்டு ஆத்திரப்பட்டு அண்ணன்மார்கள் அடித்து நொறுக்கினர்—வேலையினின்று நிறுத்தி வீட்டில் அடைத்து வைத்தனர்—இருதய நோயாளி என்று இரக்கம் காட்டாது அண்ணி வீட்டு வேலை அனைத்தையும் செய்யச் சொல்லி வாட்டி வதைத்தாள்.

மல்லிகா இது சமயம் இன்னொரு சதி திட்டமும் உருவாக்கியிருந்தாள். தாரணியின் தங்கை லீலாவுக்கு கல்யாணம் நிச்சயமாயிருந்தது. மாப்பிள்ளை வீட்டவர்களிடம் டைரியைக் காட்டி கல்யாணத்தை நிறுத்தவும் முயன்றாள் மல்லிகா என்பதைக் கேள்விப்பட்டு தாரணி நடுநடுங்கிப் போனாள்.

தன்னால் தன் சகோதரியின் வாழ்வும் அழிய வேண்டுமா? இதற்கு முடிவு தற்கொலை செய்து கொண்டு விட்டால்?...எல்லாவற்றிற்கும் முற்றுப்புள்ளி வைத்து விடலாமே? ஆனால் அதிசயமாக...லீலாவின் கல்யாணம் எவ்விதத் தடங்கலும் இன்றி இனிதே நடந்தேறியது.

சாப்பிட்ட பின்னர்...அப்பா—அண்ணன் முதலானவர்கள் முன்னறையில் அமர்ந்து இளைப்பாறிக் கொண்டிருந்தனர்.

எல்லோருக்கும் உணவு பரிமாறிவிட்டு கடைசியாகத் தான் தாரணி சாப்பிட்டாள்.

இனி இந்த உடலுக்கு சோறு ஒரு கேடா என்றவளை மனம் கசந்து விட்டிருந்தது;

நான்கு மணியளவில் அண்ணா முதலானவர்கள் கடையைக் கவனிக்க புறப்பட்டுவிட்டனர்.

அம்மா அருகிலிருந்த கோயிலுக்கு வழக்கம்போல மாலை பூஜையைப் பார்க்கப் போய்விட்டாள்.

அண்ணி அடுத்த தெருவிலிருந்த சிநேகிதியிடம் வம்பு பேசச் சென்று விட்டாள்.



தாரணி மட்டுமே தனியே வீட்டிலிருந்தாள். கதவு லேசாகத் தட்டப்பட்டது. திறந்தபோது அந்த தனியார் பள்ளியின் தலைவி...செல்லம்மாள் வெளியே நின்று கொண்டிருந்தாள்.

“வாங்கோ—உட்காருங்கோ!” பரபரப்புடன் உபசரித்தாள் தாரணி.

“உட்கார அதிக நேரமில்லை. உன்னிடம் ஒரு முக்கிய விஷயம் சொல்லிவிட்டுப் போக வந்தேன். நான் டாக்டர் வேதமூர்த்தியை நேற்றுப் பார்த்தேன். அவர் சொன்னார். நீ வீணாக் காலதாமதம் செய்யாது சென்னை டாக்டர் சொன்னபடி உடனடியாக அறுவை சிகிச்சை செய்து கொள்ள வேண்டுமாம். உடனே சென்னைக்கு நீ போவது நலமாம். P. D. A. என்னும் இருதயக் கோளாறு—மற்றவைகளுடன் ஒப்பிடும்போது அத்தனை ஒரு பயங்கரமானதல்லவாம்—சுலபமாக அறுவை சிகிச்சையால் குணப்படுத்தி விட முடியுமாம். நீ அதற்கு பின்னர் ஆரோக்கியமாக மற்ற பெண்களைப்போல் திருமணம் செய்து கொண்டு தாய்மை ஏற்று நீண்டகாலம் வாழ முடியுமாம்—உன்னிடம் சொல்லச் சொன்னார்.”

“அம்மா! நான் வாழ வேண்டியது அவசியமா?”

“வாழ்க்கை வாழ்வதற்குத்தான்—சாவதற்கல்ல. உனக்கு எங்கள் பள்ளியின் மூலம் அறுவை சிகிச்சைக்கு ஏற்பாடுகள் செய்யத் திட்டமிட்டிருக்கிறோம். இது ஊனமுற்றோர் ஆண்டல்லவா.. ஒருவருக்கு உடம்பில் எந்த பாகத்தில் ஊனமிருந்தாலும் அதைத் திருத்தியமைத்து அவர்களுக்கு மறு வாழ்வு கொடுக்க வேண்டியது . சமூகத்தில் உள்ள ஒவ்வொரு நபரின் கடமையாகும்.”

“நன்றி அம்மா...” தாரணி தழுதழுத்தாள். இந்தப் பாவிமேல் இத்தனை கருணையா...?

பாவிகள் —புண்ணியம் செய்தவர்கள் என்று மனிதர்கள் மனிதர்களை கணிப்பு செய்ய முடியாது...ஆண்டவனின் கருணைக்கு முன்னால் தீர்மானிக்கப்பட வேண்டிய விஷயம் அது.

“கருச்சிதைவு செய்ய சென்னைக்குப் போவதாக ஊரில் பேசுவதை நீங்கள் நம்புகிறீர்களா?”

“அதை நான் நம்பி இருந்தால் லீலாவின் திருமணத்துக்கு முன்னர் சம்பந்தியம்மாள் உன்னைப்பற்றி விசாரிக்க என்னிடம் வந்தபோது சொல்லியிருப்பேனே—எனக்குத் தெரிந்த வரை மென்மையான உணர்வுகள் கொண்ட அடக்க மான நல்ல பெண் என்றுதான் சொன்னேன்.”

“அம்மா! தாயிலும் மேலான அன்பைக் காட்டும் தங்களிடம் சொல்லுகிறேன். நான் கருச்சிதைவு செய்து கொள்ளவில்லை. ஆனால் கேசவனிடம் பெண்மை அழிந்து போனவள்.”

தாரணி துக்கம் தாங்க முடியாது குமுறி அழுதாள்.

“குழந்தை! இப்படி வா...நீ அழக் கூடாது. உன் உடம்புக்கு அதிகத் துயரம் ஆகாது. மறுபடியும் நான் சொல் கிறேன். நீ அழிந்து போனவள் இல்லை. உணர்ச்சிகளின் உந்தலால்—இளமையின் உற்சாகத்தால் ஒரு தவறு செய்து விட்டாய். அது உனக்கு நேர்ந்துவிட்ட ஒரு விபத்து. அவ்வளவுதான். அதை மறந்து விடு—அறுவை சிகிச்சைக்குப் பின் ஆரோக்கியமடைந்து—உன் மனதிற்குப் பிடித்தவனைத் திருமணம் செய்துகொண்டு சுகமாக நீ வாழ வேண்டும். உன்னை உனக்காக மணக்க யாராவது ஒரு நல்லவன் வருவான். திருமணம் என்பது இரண்டு ஆன்மாக்களின் சங்கமிப்பு. உடல்கள்தான் அழிவுக்கு உட்பட்டவை. ஆன்மா அழிவற்றவை. உனக்கு இதெல்லாம் தெரிந்த சங்கதிதானே—கவலைப்படாதே. உற்சாகமாக இரு...நான் சொன்னதை மறக்காதே.”



தலைவி செல்லம்மாள் அவளைத் தன் மார்போடு அணைத்துக் கொண்டு ஆறுதல் கூறிவிட்டு அகன்றார்.

அவர்கள் வார்த்தை அமுதமாகத்தான் தாரணிக்கு தெம்பைக் கொடுத்தன. புண்ணான மனதிற்கு மருந்துபோல இதமாக இருந்தது. அலமாரியில் அடுக்கி வைத்திருந்த புத்தகங்களிலிருந்து பாரதியாரின் கவிதைக் கொத்தை உருவி எடுத்தாள் தாரணி—

பரபரப்பாக பக்கங்களைப் புரட்டினாள்.

“காலா உனை நான் சிறு புல்லென மதிக்கிறேன் என்றன் காலருகே வாடா! சற்றே உன்னை மிதிக்கிறேன். அட வேலாயுத விருத்தனை மனதிற் பதிக்கின்றேன்—நல்ல வேதாந்த முரைத்த ஞானியார் தமையெண்ணி துதிக் கின்றேன்” தாரணிக்கு இப்போது சமூகத்தைப் பற்றியோ—மரணத்தைப் பற்றியோ பயம் இல்லை.

அவள் அறுவை சிகிச்சை செய்து கொண்டு நீண்டகாலம் ஒரு நல்லவன் மனைவியாக...வாழப் போகிறாள்...

தாரணி! நீ நம்பிக்கையை இழக்காதே!

□

# அந்தக் கடிதம்

சமையலை முடித்துவிட்டு வெளியே வந்தாள் அறையை ஒட்டிய தாழ்வாரத்தில் குழந்தை தொட்டிலில் உறங்கிக் கொண்டிருந்தான். ஒரு வயது நிரம்பிய கண்ணன் தொட்டிலை நிறைத்துக் கொண்டு, அத்துடன் அவர்களது வாழ்க்கையையும் எப்படி மகிழ்ச்சியால் நிறைத்துக் கொண்டிருந்தான்!

தூங்கும் குழந்தையையே அவள் சிறிதுநேரம் பார்த்துக் கொண்டு நின்றாள். இன்னும் சிறிது பொழுதில் அவளது கணவர், பகல் உணவிற்கு வீட்டிற்கு வந்து விடுவார்.

ஸ்கூட்டரை நடையில் வைத்துவிட்டு மெல்ல அடிமேலடி வைத்து தூங்கும் குழந்தையை, அவரும் தொட்டிலருகில் வந்து வேடிக்கை பார்ப்பார்.

"சுமதி! அப்படியே உன் மூக்கைத்தான் குழந்தை கொண்டு வந்திருக்கான்..." என்பார் பூரிப்புடன்.

"முடி... உங்க தலைமுடிதாங்க....ஒரே சுருட்டை" அவள் பதிலளிப்பாள் பெருமையாக.

"நிறம்?" என்று பதிலுக்கு வேடிக்கை செய்தபடி அவளை தலையோடு கால்வரை பார்க்கும் போது, அப்போது தான் மணமேடைக்குப் புறப்படும் புதுமணப் பெண் போல் முகம் சிவந்து நெஞ்சு பதறிப்போவாள்.

முன் பின் பார்த்தோ, பேசியோ, பழகியோ எந்தவித மான அனுபவமில்லாது பெற்றோர்களால் நிச்சயிக்கப்பட்ட திருமணம் அவர்களுடையது.



பெண் பார்க்க மாப்பிள்ளை வீட்டவர்கள் அவருடன் வந்தபோது, முதலில் அவளுக்கு அத்தனை பிடித்தம் இல்லை. காரணம் அவளைப்போல மாப்பிள்ளை நல்ல நிறமாக இருக்கவில்லை.

அம்மா மூலம் அவளது முணுமுணுப்பைக் கேள்விப்பட்ட அப்பா சீறிவிழுந்தார்.

"வாயை மூடிக்கோ. நீ செய்த காரியத்துக்கு உனக்கு இப்படிப்பட்ட ஒரு நல்ல இடம் கிடைக்கிறது யரர் செய்த புண்ணியமோ! ராஜாபோல் இருக்கார். நல்ல படிப்பு. கை நிறைய சம்பளம். வீட்டுக்கு ஒரே மகன்! சொத்துகூட ஏதோ கொஞ்சம் இருக்கு. இந்த வரனை உனக்கு முடிக்கப் போகிறேன். வாயைத் திறக்காதே!" பற்களைக் கடித்தார் அப்பா.

அவர்கள் திருமணம் நடந்தது. மாப்பிள்ளையின் நிறம் கொஞ்சம் மட்டமென்று அடி மனத்தில் இருந்த அந்த நெருடல் கூட நாளடைவில் அவளுக்கு மறந்து போயிற்று.

அவளது கணவர் தனது பேச்சாலும், அன்பு செய்கைகளாலும் அவளை ஒரேயடியாகக் கவர்ந்து கொண்டு விட்டிருந்தார்.

"இவரை வேண்டாம்னு சொல்ல நினைச்சேனே எத்தனை பெரிய முட்டாள்!"

அடிக்கடி தன்னையே கடிந்து கொள்வாள், காற்றுக்கூட தங்கள் இடையே புகமுடியாது என்று நினைக்குமளவு அவர்களது அன்பில் ஒரு நெருக்கம்.

அவர்களது காதல்...காலத்தோடு அதிகரித்ததே தவிர தேயவில்லை. குழந்தை, கண்ணன் பிறந்த பின்னர் அவன் அவரது மதிப்பிலே மிகவும் உயர்ந்து விட்டிருந்தாள்.

"என் கண்ணனுடைய அம்மாவாச்சே; அவ சொன்னதைக் கேட்கலைனா கண்ணன் கோவிச்சுக்குவானே" கன்னத்தைக் கிள்ளி அவளிடம் கொஞ்சுவார்.

முதல் முதல் அவளை சந்தித்தது போன்று அவளுக்கு மனைவியிடம் இன்னமும் அப்படி ஒரு கிறக்கம்.

“சாப்பாட்டுக்கு அவர் வர நேரம். தட்டை கழுவி துடைச்சு மேசையில் வைக்காமே, பழசையெல்லாம் நினைச்சிட்டு...” தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டபடி அவள் உள்ளே திரும்ப முனைந்தபோது, ‘போஸ்ட்’ என்ற குரல் கேட்டது.

தொடர்ந்து கதவிடுக்கு வழியே ஒரு கடிதம் உள்ளே விழுந்தது. அவளது நெஞ்சு படபடவென்று துடிக்கத் தொடங்கியது. மூச்சு முட்டியது. உடம்பெல்லாம் ஒரே வியர்வை.

“வரதன் எழுதி இருக்கான்! எதுக்காக தனக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கான்” பரபரப்புடன் பிரித்தாள்.

“உலகம் எத்தனை சின்னது என்று இப்போதுதான் தெரிந்து கொண்டேன். கெட்டும் பட்டணம் போ என்பதுக்கிணங்க வேலை தேடிக் கொண்டு இங்கே வந்திருந்தேன். ஒரு கம்பெனியில் ஒரு கணக்கர் வேலை கிடைத்திருக்கிறது. என் படிப்புக்கு அது ஒவ்வாது—என் செலவுக்கு பற்றாத சம்பளம். சில நாளுக்கு முன்தான் கேள்விப்பட்டேன். நீ உன் கணவருடன் இந்த முகவரியில் வசிப்பதாக....எனக்கு எவ்வளவு சுலபமாகிவிட்டது பார்த்தாயா? உன் கணவர் எந்த அலுவலகத்தில் வேலை பார்க்கிலார்—பெயர் எல்லா விவரமும் தெரிந்து கொண்டுவிட்டேன். என்னை நான் கொடுத்திருக்கும் முகவரியில் நீ வந்து சந்திக்க வேண்டும். இல்லையென்றால் ஏற்கெனவே எனது காதலியாக இருந்து கெட்டுப் போனவள் நீ என்று உன் கணவரிடம் சொல்லி உன் வாழ்வையே நாசப்படுத்தி விடுவேன்! நான் சொல்வது போல் கேட்டால் நீயும் சுகமாக இருக்கலாம்.

கீழே என் முகவரி எழுதியிருக்கிறேன். அந்த இடத்தில் என்னை வந்து இருநூறு ரூபாயுடன் சந்திக்கவும், மறக்காதே.

உன் பழைய காதலன், வரதன்.



என்ன துணிச்சல் இந்த அயோக்கியனுக்கு, அவள் கணவரிடம் சொல்லிவிடுவேன் என்று பயமுறுத்துகிறானே?

பாவி! அப்படிச் செய்ய அஞ்சாத கிராதகனாயிற்றே, இனி அவள் என்ன செய்வது?

பெண் சிரித்தால் போச்சு, புகையிலை விரித்தால் போச்சு என்று பெரியவர்கள் சொல்வதில் எத்தனை உண்மை இருக்கிறது?

ஒரே கல்லூரியில் ஒரே வகுப்பில் அவர்கள் இருவரும் அப்போது படித்துக் கொண்டிருந்தார்கள். பக்கத்துத் தெருவில் தாயுடன் குடியிருந்தான் வரதன் என்பதும் அவளுக்குத் தெரிந்திருந்தது. கல்லூரிக்குப் போகும் போதும் வரும்போதும் அவள் பின்னாலேயே வருவான்.

கூடப் படிக்கிறவன்தானே என்று ஒருநாள் திரும்பிப் பார்த்து லேசாக சிரித்து வைத்தாள். அது எத்தனை பெரிய தவறு?

அதை சாக்காக வைத்துக்கொண்டு பேசத் துவங்கினான் வரதன். பாடங்களைப் பற்றித்தான் அவர்கள் பேசினார்கள். அவள் மனதிம் கபடம் இருக்கவில்லை. தன்னைவிட மூன்று வயது பெரியவன். படிப்பில் கொஞ்சம் கெட்டிக்காரனாக இருக்கிறானே என்று அவ்வப்போது சந்தேகத்தை தெளிய பாடங்களைப்பற்றி அவள் அவனிடம் கல்லூரி வாயிலில், வராந்தாவில் நின்று கேட்டாள். அவனும் சொன்னான்.

பொருளாதாரம் என்னும் பாடப் பகுதியில் ஏற்பட்ட ஒரு சிறு சந்தேகத்தை அவள் தெரிவித்தபோது,

“இப்ப ரொம்ப நேரமாகுமே, எங்க வீட்டுக்கு வந்தால் விளக்கம் தெரிவிக்கிறேன்” என்றான் வரதன்.

உலக அனுபவம் இல்லாத பதினெட்டு வயது பருவப் பெண். பெற்றோர் பாதுகாப்பிலே கண்டிப்பும் கறாருமாக வளர்ந்து வெளி உலகத்தின் வஞ்சமே தெரியாத சூது வாதற்றவள். தாயார் இருக்கும் வீடுதானே—அங்கே

போனால் என்ன தவறு என்று நம்பி விட்டாள். அம்மாவிடம் சொல்லிவிட்டுத்தான் கிளம்பினாள். மகாலை மங்கும் நேரம். அவன் வீட்டில் தன்னந் தனியாக இருந்தான். சுமதிக்கு சற்று பயம்.

இருப்பினும் பாடத்தைப் பற்றித்தான் பேசினாள். அவன் பார்வை, சிரிப்பு, செயல் எல்லாமே அவள் மனதில் ஏனோ கலவரத்தை உண்டு பண்ணியது. அதனால் சட்டென விடைபெற்றுக் கொண்டு வெளியே வந்து விட்டாள்.

அப்பாவின் நண்பர் கேசவன், அவள் அந்த வீட்டிலிருந்து வெளியே வரும் சமயம் பார்த்து விட்டார். மறுநாள் அப்பாவிடம் விஷயம் காது, கண், மூக்குடன் பரவி விட்டது.

அவ்வளவுதான்! மறுநாள் கல்லூரிக்குப் புத்தகக் கட்டுடன் புறப்பட்டவள் கன்னத்திலே ஓங்கி ஒரு அறை!

"படிச்சுக் கிழிச்சது போதும்! வீட்டிலேகிட. இல்லா விட்டா வீட்டு மானம் வெளியேறிடும்" ஒரே கூச்சலில்—ஒரே அறையில் அவளது படிப்பிற்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டார் அப்பா.

வீட்டோட அடங்கிக் கிடந்தவளையும் அந்தப் பாவி வரதன் விட்டு வைக்கவில்லை.

ஒரு காதல் கடிதம் எழுதி தபாலில் அனுப்பிவிட்டான். கண் குத்திப் பாம்பாக வீட்டையும் மகளையும் கவனித்துக் கொண்டிருந்த அப்பா கையில் அந்தக் கடிதம் கிடைத்தது.

மறுபடியும் வீட்டில் ஒரு பூகம்பம்!

பிறகு நடந்ததொன்றும் தெரியாத வரதன் படிப்பு முடிந்து பட்டணம் போய் விட்டான். அவன் தாயும் இறந்து போனாள். இப்போது அவன் தறுதலையாகத் திரிவதாகக் கேள்விப்பட்டாள். அப்பா அடிக்கடி கோபத்தில் பேசும் போது காதில் பட்ட விவரம்....



அவள் எத்தனை மன்றாடியும், அவள் பேச்சை அப்பா நம்பத் தயாராக இல்லை. ஒரு பெண் இடம் கொடுக்காமல், ஆண் மகன் காதல் விஷயத்தில் முன்னேற மாட்டான் என்பது அவரது ஆணித்தரமான அபிப்பிராயம்.

மகள் மறுபடியும் ஏடாகூடமாக எதையாவது செய்யும் முன், கல்யாணத்தை முடிக்க அவசரப்பட்டார். குமரேசனை அவருக்குப் பிடித்தது. முடித்துவிட்டார். இப்போது மன நிம்மதியும், நிறைவுமாக வாழும் அவளது வாழ்வில் இப்படி ஒரு பேரிடியா?

ஸ்கூட்டர் சப்தம் தெருவில் கேட்டது. நடு நடுங்கிப் போனவளாய், காகிதத்தைச் சட்டென அரிசி டப்பாவிற்குள் போட்டுப் புதைத்து மூடினாள்.

"என்ன உடம்புக்கு?" கணவன் கேட்டபோது குற்ற உணர்வில் திணறிப்போனாள்.

உண்மையைச் சொல்லலாமா? சொன்னால் அவர் நம்ப மறுத்தால்... அவளை உதறி விட்டால்... அன்பான கணவன்... குடும்பம்.... ஐய்யய்யோ... பிறகு உயிரோடு அவள் எப்படி வாழ்வாள்? ஒரு பெண்ணுக்கு இப்படி எல்லாம் சோதனைகள் ஏற்படுமா? கடவுளே! நான் எந்தத் தவறும் செய்யவில்லையே? எனக்கு ஏன் இப்படி ஒரு கஷ்டம்?

கலங்கித் தவித்தாள். வெளிப்படையாக அழுது தீர்க்க முடியாமல், நெஞ்சு சுமையாகக் கனத்தது. யாரிடம் அவளது துயரைச் சொல்லி ஆற்றிக் கொள்வாள்? அறிவுரை கேட்பாள்?

கணவர் சாப்பிட்டு வெளியேறிய பிறகு, முதல் வேலையாக வரதனின் கடிதத்தை எடுத்து நெருப்பிட்டுப் பொசுக்கினாள். கடிதம் வந்த சுவடே தெரியாமல் மௌனம் சாதிப்பதே சிறந்தது என்று இந்த சம்பவத்தை மறக்க முயன்றாள்.

திடீரென அவளது அம்மாவிற்கு உடல்நிலை சரியில்லை என்று தகவல் வந்தது. கணவனைப் பிரிந்து செல்ல அவள் மனம் இடம் கொடுக்கவில்லை. ஆனால் அவர்தான் வற்புறுத்தினார்.

குழந்தையுடன் பிறந்த வீடு வந்தவளுக்கு அந்த சில நாட்கள் முள் மேலிருப்பது போலத்தான் தோன்றியது. திருமணம்...எப்படி பெண்களை மாற்றி விடுகிறது!

மீண்டும் அவள் வீடு திரும்பியதும்தான் மனதில் மகிழ்ச்சி ஏற்பட்டது. அவளது கணவர், குழந்தை, வீடு என்ற உற்சாகத்திலேயே ஒரு மாதம் ஓடிவிட்டது. ஆனால் அவளது நிம்மதியைக் குலைப்பது போல் மீண்டும் ஒரு கடிதம் ... அந்தப் பாவியிடமிருந்து வந்தது.

பிரித்துப் படித்தவளுக்கு உயிரே போய்விட்டது போலத் தோன்றியது.

''கடிதத்திற்குப் பதில் வராவிட்டாலும், உன்னை நான் விடப் போவதில்லை. வருகிற வெள்ளிக்கிழமை உன் கணவனுக்கு 'ஓவர் டைம்' வீடு திரும்ப நேரமாகும். குழந்தையை யாரிடமாவது விட்டுவிட்டு, ரூபாய் இருநூறுடன் மரியாதையாக வந்து சேர். இல்லையேல்...''

அரண்டு போனாள் அவள். சாப்பிட முடியாமல், உறங்க முடியாமல், குடும்பத்தில் சந்தோஷமாக வாழ முடியாமல் நரக வேதனையோடு வெள்ளிக் கிழமையை நெஞ்சு துடிக்க எதிர் நோக்கிக் கொண்டிருந்தாள்.

சுற்றுலா பொருட் காட்சிக்கு சிநேகிதியுடன் போவதாகக் கணவனிடம் கூறிவிட்டு, குழந்தையைப் பார்த்துக் கொள்ள ஏற்பாடு செய்தவள், வீட்டுச் செலவுப் பணத்தில் இருந்து இருநூறு ரூபாய்களை எடுத்துப் பையில் போட்டுக் கொண்டாள். ''பாவி? சண்டாளா'' மனம் சபித்தது.

ஆட்டோ பிடித்துக் கொண்டு, குறிப்பிட்ட முகவரியை அடைந்தவள் முகம் கலவரத்தால் இருண்டு போயிருந்தது.



ஆட்டோ பணத்தைக் கொடுக்க அவள் மெதுவாகப் பையைத் திறந்தபோது, ''கவலைப் படாதே, நான் குடுத்துடுறேன்'' என்ற குரலைக் கேட்டு சப்த நாடியும் ஒடுங்கியவளாய், மேலெல்லாம் வியர்வை பெருக்கெடுக்க, சிலைபோல நின்று விட்டாள்.

ஆட்டோ பின்னால் ஸ்கூட்டரில் குமரேசன்!

''வீட்ல போய் பேசலாமா?''

மறுபேச்சின்றி பின்னால் ஏறியவள், 'இன்றோடு எல்லாமே முடிந்துவிட்டது,' என்ற திகிலும் நடுக்கமுமாக வீடு வந்தாள்.

வேலைக்காரியை அனுப்பிவிட்டு, கண்ணனை உள்ளே அழைத்து வந்த குமரேசன், சுமதியை ஒரு முறை பார்த்தார்.

''சுமதி! வாழ்க்கையில புருஷன் மனைவிக்குமிடையே நம்பிக்கை ரொம்ப முக்கியமா வேணும். திருமணமே, நம்பிக்கையோட அஸ்திவாரத்தில் நடக்கறதுதான். நாம ஒருவருக்கொருவர் வாழ்க்கைத் துணைங்கறதை நீ ஏன் மறந்திட்டே?''

அவள் கண்களில் நீர் சுரந்தது.

''கடந்த காலத்தில் கணவனோ, மனைவியோ எப்படி வாழ்ந்தாங்கன்னு பரிசீலனை செய்ய யாருக்குமே உரிமை கிடையாது. வாழ்விலே கணவனும் மனைவியும் சரி சமமானவர்கள். இப்ப நாம வாழ்கிற நிகழ்காலம், வருங்காலம் இதுதான் நமக்கு முக்கியம். அதை விட்டுவிட்டு கடந்த காலத்தை இடித்து நான் பேசுவேன்னு நீ பயமுறுத்தலுக்கு அடிபணியக் கூடாது.''

சுமதி தலை நிமிர்த்திக் கணவனைப் பார்த்தாள்.

''எனக்கு எல்லாம் தெரியும். நீ ஊருக்குப் போனபோது இந்தக் கடிதம் வந்தது. நான் கிழிக்காம பிரிச்சு படிச்சிட்டு

அப்படியே ஒட்டி வச்சிட்டேன். நீ எங்கிட்டே இதுபத்தி சொல்லி இருக்கணும், சொல்லலே. அதுதான் நீ செஞ்ச தவறு. அதனாலே, நானே அந்த வரதனைத் தேடிப் போனேன். நடந்ததெல்லாம் எனக்குத் தெரியும் என்றும் வீணா பயமுறுத்தினா, போலீஸ்ல பிடிச்சு குடுப்பேன்னும் சொன்னேன். ஆசாமி கம்பியாகிட்டான்..."

அவள் அவனது காலடியில் சுருண்டு விழுந்தாள்.

"நீங்க... நீங்க... ரொம்ப... பண்பானவர்" கதறினாள். "நீ எனக்கு சரி சமமானவள். என்னை வணங்கத் தேவை இல்லை" அவளைத் தூக்கி நிறுத்தினார் குமரேசன்.

"நீ தவறு செய்யாதவள். உன்னைப் பழிக்குப் பழி வாங்குவதா நினைச்சு, நானும் வேற பெண்களை நாடிப் போக முடியும். ஆனால் அழிவு எனக்குத்தான். கடந்த காலத்தை மறந்து வாழ்வதுதான் புத்திசாலித்தனம்."

சுமதி கண்ணீரைத் துடைத்துக் கொண்டே, "அப்படி பழிக்குப் பழி வாங்கும் கணவனாக இருந்தால்" என்று கேட்டாள்.

"மனைவி சற்றுப் பொறுமையாக, கணவன் திருந்துவான் என்று காத்திருக்க வேண்டும், அப்படியும் அவன் மனம் திருந்தாவிட்டால், நம்பிக்கை இல்லாதவனுடன் வாழ்வதைவிட, ஒரு நல்ல வேலை தேடிக்கொண்டு விவாகரத்து பெற்று வாழவேண்டும். படித்த பெண்கள் கண்ணீர் சிந்திக் கதறாமல் சமூகத்தை நிமிர்ந்து பார்க்கத் துணிவும் வேண்டும்" என்றான் தீர்மானமாக.

சுமதி இதைப் புரிந்து கொண்டாள்.

□

# அவளுக்கு மறுபடியும்

வனிதா தான் வேலை செய்த நிறுவனத்திற்கு தினமும் நடந்துதான் செல்வது வழக்கம். கடைத் தெருவைக் கடந்து பஸ் நிலையத்திற்கு அடுத்தபடியாக இருந்த அந்த கல்யாண மண்டபத்தைத் தாண்டித்தான் அவள் தன் அலுவலகத்திற்குப் போகவேண்டும்

அன்று அவள் காதலன் ஆறுமுகத்தின் கல்யாணம் அந்த மண்டபத்தில் தான் நடந்து கொண்டிருந்தது. விடியற்காலையிலேயே முகூர்த்தம். பந்தலை நிறைத்துக் கொண்டிருந்த விருந்தினர் கூட்டம் சாப்பாட்டறையை நோக்கி நகரத் தொடங்கியிருந்தது. மணமேடையில் இன்னமும் நடந்து கொண்டிருந்த சடங்குகளுக்காக அவனும் – தன் காதலனும் அவளுடன் உட்கார்ந்திருப்பதை...வனிதா வெளியே தெருவில் நின்றபடி காண முடிந்தது.

"அந்தோ? என் ஆசையெல்லாம் கொள்ளை கொண்டானே? ஆறுமுக வடிவேலன் சிவபாலன்..." என்று ஷண்முகப்பிரியா ராகத்திலே நாதஸ்வரக்காரர் அவளுக்காகத்தானோ அதே பாடலை இசைத்துக் கொண்டிருந்தார்!

நெஞ்சிலே நெருப்பை அள்ளிக் கொட்டிவிட்டது போன்ற வேதனை. ஆறுமுகத்திற்கு எத்தனை கடினமானதொரு உள்ளம்? சில நாட்கள்வரை அவளைத் தன் உயிருக்கும் இனியவளாகக் காதலிப்பதாகச் சொல்லி

கொஞ்சிப் பேசி அவள் மனதில் ஆசையையும்— அன்பையும் விதைத்துவிட்டு இப்படி திடீர் என்று வேறு ஒருத்தியுடன் கழுத்து நிறைய மாலையுடன் ஜம் என்று மணையில் உட்கார்ந்திருக்கின்றானே? காதலன் என்று நம்பியிருந் தவளை மோசம் செய்துவிட்ட காதகன். அவளது ஆசை களையும்—இன்பக் கனவுகளையும் அழித்துவிட்ட பாவி!

பரிசுப் பொட்டலங்களுடன் மண்டபத்து வாயிலை நோக்கிப் போய்க் கொண்டிருந்த அலுவலகத்துத் தோழி அமிர்தாவின் கண்களில் பட்டுவிட்டாள்.

"ஒன்பதரை மணிக்கு மேலே தானே ஆபீஸ், அதனாலே பரிசைக் கொடுத்துட்டு ஒரு வாய் சாப்பிட்டுட்டு நேரே ஆபீசுக்கு வரலாம்னு கிளம்பினேன்..." சொல்லியவள் திடீரென்று நிறுத்திவிட்டு வனிதாவைப் பரிதாபமாகப் பார்த்தாள்.

"ஸாரி வனிதா! உனக்காக நான் ரொம்ப வருத்தப் படறேன். ஒரே ஆபீசிலே வேலை செய்கிறோம். அவர் நமக்கு மேல் அதிகாரி. அவர் கல்யாணத்துக்கு போகாட்டா நல்லா இருக்காதுன்னுதான் வந்திருக்கேன்...." —மேலே பேச மனமின்றி அமிர்தா மண்டபத்தை நோக்கி நடந்தாள்.

உண்மைதான். அவளைத் தவிர அந்த நிறுவனத்தில் வேலை செய்த அத்தனை பேரும் அது சமயம் கல்யாண மண்டபத்தில்தான் இருந்தனர்.

மனதில் பொங்கிப் புரண்ட துயரத்தையும், அழுகையை யும் அடக்கிக்கொண்டு ஆபீசை நோக்கி நடந்தாள்.

வாயிலில் காவல் ஆள் மட்டும் கதவைத் திறந்து வைத் திருந்தான். வேலைக்காரி தரையைப் பெருக்கி சுத்தம் செய்து கொண்டிருந்தாள். அவர்கள் பார்வையில் பரிதாபம் தெரிந்தது.



"உன்னைப் பார்த்தா..." —வேலைக்காரி சொல்லி முடிக்கும் முன் அவள் மாடிப் படிகளைக் கடந்து தான் வேலை பார்த்த பகுதிக்கு விரைந்து டைப் யந்திரத்தின் முன் அமர்ந்து விட்டாள்.

ஆனாள் குபுக்சென்று அழுகை பொத்துக்கொண்டு வநது விட்டது.

ஒரு நாளா, இரண்டு நாளா? இரண்டு வருஷமாக ஒருவரையொருவர் நேசித்தோமே... அதையெல்லாம் வினாடி யில் மறந்து என்னை இப்படி கைவிட்டுட்டு... ஆறுமுகம்! நீங்க செஞ்சது உங்களுக்கே நல்லா இருக்கா... இந்தப் பகுதிக்கு நீங்க மேல் அதிகாரி...நீங்க என்ன செய்தாலும் உங்களை ஏன்னு கேட்க யாரும் துணிய மாட்டாங்க. நான் இங்கே ஒரு சாதாரண ஊழியர். "எனக்கு ஏற்பட்டிருக்கும் இந்த அவமானத்தைப் பார்த்து சிலர் பரிதாபப்படலாம்— வேறு சிலர், வேணும் இவளுக்கு பெரிசா புளியங்கொம்பை பிடிச்சது போல தெம்பா இருந்தாளே? சறுக்கி விழுந்துட் டான்னு" பின்னாலே பேசி சிரிக்கலாம்... சில நாளில் சங்கதி ஊரே பரவி என் வாழ்வே சிரிப்பா சிரிக்கப் போவுது...

ஆறுமுகம்! இப்படி ஒரு துரோகம் செய்ய என்னிடம் நீங்க என்ன குறை கண்டீங்க?...

மேஜை மீது தலையைக் கவிழ்த்துக் கொண்டு உடல் குலுங்க, உள்ளம் வேதனையால் புழுங்க... அவள் குமுறிக் குமுறி அழுதாள்.

ஹால் கடிகாரம் டாண் என்று ஒருமுறை அடித்து ஓய்ந்ததைக் கேட்டு திடுக்கிட்டு எழுந்தாள். சில நிமிஷங் களில் அலுவலகத்து ஊழியர்கள் அத்தனைபேரும் வந்து விடுவார்கள்.

அழுத கண்ணும்—சிவந்த முகமுமாக அவள் அவர்களது முன் நின்று அவமானப்பட முடியுமா?... அருகிலிருந்த

குளியலறைக்குள் சென்று முகம் கழுவித் தன் முடியை சீராக்கி பொட்டு வைத்துக் கொண்டு திரும்பிவந்து இருக்கையில் அமர்ந்து வேலையைக் கவனிக்கத் தொடங்கினாள்.

ஆனாலும் அன்று அலுவலகத்தில் உள்ளவர்கள் யார், எதைப் பேசினாலும்... அவர் தன்னைப் பற்றித்தான் பேசிச் சிரிப்பதாக அவள் மருண்டு போனாள். இந்த நிலையில் அவள், தேன் நிலவுக்குப் போன பின்பு வேலைக்குத் திரும்பும் ஆறுமுகத்தை அங்கே எவ்வாறு சந்திக்க இயலும்? அவனிடம் வேலைகளைப்பற்றி அவள் எந்தத் துணிவில் இனி பேச முடியும்! எண்ணிய மாத்திரம் துயரத்திலே அவள் துவண்டு போய் விட்டாள்.

வீட்டுக்குத் திரும்பிய மகள் இரவு உணவுகூட சாப்பிடாது நேரே படுக்கச் சென்றுவிட்டதைக் கண்டு தாய்மனம் வேதனைப்பட்டது.

"ஒரு வாய் பாலாவது சாப்பிடம்மா... வேலை செய்கிற பொண்ணு. உன்னை நம்பிதானே அப்பாவும் நானும் காலத்தை ஓட்டிக்கிட்டிருக்கோம்'' அம்மா கெஞ்சியபோது.... தாங்க முடியாது தாயின் மடியில் முகத்தைப் பதித்துக் கொண்டு அவள் கதறி அழுது விட்டாள்.

"அவன் கிடக்கான். அவன் இப்படி செய்வான் நம்பாதேன்னு ஆரம்பத்திலிருந்து நானும் அப்பாவும் சொன்னோம். நீ கேட்கலை போகட்டும் விடு...'' அம்மா அவள் முதுகை அன்போடு தடவிக் கொடுத்தாள்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன் அவள் வேலை பார்த்த நிறுவனத்தின் அந்த பகுதிக்கு உயர் அதிகாரியாக அவன் வந்து அமர்ந்தபோது...முதல் நாளே அவள் மேஜையருகே வந்து நின்று அவளைப் பார்த்ததும் முறுவலித்தான். ஃபைலை கவனிப்பவன் போல அருகில் வந்து நின்ற அவனை அவள் கவனித்தாள்.



களை பொருந்திய முகம். சிரித்த கண்கள்... துடிப்பான பேச்சு... எடுத்த எடுப்பிலேயே அவளுக்குப் பிடித்து விட்டது.

முன்பின் அவன் யாரோ என்று தெரியு முன்பே "என்னோடு சினிமாவுக்கு வரியா?...'' என்று ஒரு துண்டு கடிதத்தில் எழுதி ஒரு நாள் அவள் மேஜை முன் வைத்த போது அவள் மயங்கிப் போனாள். சரி என்று உடனடியாக ஒப்புதல் தந்துவிட்டாள்.

சினிமா—கடைத் தெரு—பூங்கா... என்று இருவரும் வேலைக்குப்பின் ஜோடியாக அலைந்தது அப்பா காதில் பட்டுவிட்டது. ஆத்திரப்பட்டு அவர் அவளை அடிக்கவும் செய்தார். ஆனால் அவள் பிடிவாதமாக அவரைத்தான் மணப்பேன்... என்று உறுதியாகச் சொன்னதைக் கேட்டு முடிவில் பெற்றோர்கள்.. அவள் போக்கில் விட்டு விட்டனர் அலுவலக முழுவதும் அவர்கள் காதல் விஷயம் பரவி விட்டிருந்தது. முதலில் கிசுகிசுவென்று இருந்தது— ஊர்ஜிதமான பின்பு வம்பு பேசுவது அடங்கிப்போனது.

"ஆறுமுகம் ஸாரா? அவர்தான் நம்ம டைப்பிஸ்ட் வனிதா அம்மாவை கட்டிக்கப் போறார்—இரண்டு வருஷமா அவங்களுக்குள்ளே 'இது'வாச்சே?'' ஆபீசு பையன் வரை அதை சாதாரண சங்கதியாக பாவிக்கும் நிலை ஏற்பட்டு விட்டிருந்தது.

சில நாட்களுக்கு முன்தான் ஆறுமுகம் எப்படிப் பட்டவன் என்று அவள் புரிந்து கொண்டாள். அன்று இருவரும் சினிமா பார்த்துவிட்டு திரும்பிக் கொண்டிருந்தார்கள். "வீட்டில் உன்னைக் கொண்டு பத்திரமாக சேர்க்கிறேன்—வழியில் என் அறைக்கு வந்து தாகத்துக்கு ஏதாவது சாப்பிட்டுவிட்டு போ'' அன்புடன் அவன் கேட்டபோது மறுக்க முடியவில்லை.

"உயிருக்குயிராக நேசிக்கும் காதலன் தானே" என்று அவள் கவலைப்படாது அவனுடன் தனியாக இரவின் அந்த வேளையில் அவன் அறைக்குள் நுழைந்தாள்.

கதவைத் தாளிட்டுவிட்டுத் திரும்பிய அவன் முகத்தில் காணப்பட்ட மாறுதலைக் கண்டு அவள் பதறிப்போனாள்.

"என்னை நீ நேசிப்பது உண்மையானால்... இன்று இரவு என்னுடன் இங்கே தங்கி என் மனைவியாக நடந்து கொள்ள வேண்டும். புரிகிறதா...." கேட்டுக் கொண்டே வெறி பிடித்தவன்போல அவளது முந்தானையைப் பிடித்து இழுத்தான். நடுநடுங்கிப் போனாள் வனிதா.

"கல்யாணத்திற்குப் பின் தானே கணவன் மனைவி உறவு...அதுவரை நீங்க காத்திருக்கணும். தயவு செய்து விரைவாகக் கல்யாணத்துக்கு ஏற்பாடு பண்ணுங்க.. இப்போ என்னைத் தொடாதீங்க. விடுங்கோ..." என்று திமிறிக் கொண்டு வாயிலை நோக்கி விரைந்தாள்.

"கல்யாணமா....? உனக்கும் எனக்குமா? யார் சொன்னது..." என்று மிருகம் போல கூவியபடி அவளை வேகமாக அணுகி அறைக்குள்ளே இழுத்துப் போக முயன்ற போது... வலிமையெல்லாம் திரட்டிக்கொண்டு... அவன் கைகளை நகத்தால் கீறிவிட்டு.... தன்னை விடுவித்துக் கொண்டு வனிதா.... ஆடையை சரிசெய்து கொண்டபடி தெருவில் அலங்கோலமாக ஓடி... ஒரே மூச்சில் வீட்டை அடைந்தாள். அம்மாவிடம் உண்மையைச் சொல்லி அழுதாள்.

"அடிப்பாவிப் பெண்ணே? அப்பவே சொன்னேனே.... ஆம்பிள்ளைகளிடம பழகும்போது பெண்கள் அவங்களை நெருப்புன்னு நினைச்சு கொஞ்சம் எச்சரிக்கையாகவே இருக்கணும்னு முட்டிக்கிட்டேனே... காதலிக்கிறார்-கட்டிக் கப்போறார்ன்னு சொன்னியே... அவன் உண்மை உருவம் தெரிஞ்சிட்டதில்லையா? போகட்டும் விடு. நல்ல வேளை



கெட்டழியாது தப்பிச்சுகிட்டு வந்தியே, அதுவரை புத்தி சாலிதான்..." பலவாறு சொல்லி வசை பாடினாள்—தேற்றினாள்.

ஆனால் ஊரார் நினைத்தது வேறு. வனிதாவின் நடத்தையில் பிசகு கண்டுதான் ஆறுமுகம் அவளை உதறி விட்டு வேறு ஒரு பெண்ணைக் கட்டிக் கொண்டு விட்டான். எல்லோரும் அவன் பக்கமேதான் பேசினார்கள். நாட்கள் செல்லச் செல்ல....பழிச் சொல்லைக் கேட்டு மனம் புண்ணான அவளுக்கு அலுவலகம்—அந்த ஊர்—தெரிந்த மனிதரின் சிநேகிதம் எல்லாமே நரகமாகிவிட்டது.

அதற்குப்பின் அவள் வேலையிலிருந்து இரண்டு மாதம் விடுப்பு எடுத்துக் கொண்டாள்.

அந்த சில நாட்களும் அவளுக்கு வேதனையான நாட்களாகத்தானிருந்தன.

அவள் காதல் சங்கதியை தெரிந்தவர்களின் கண்களில் படாது—வீட்டை விட்டு வெளிவர அஞ்சி, அவன் செய்த துரோகத்தை நினைத்து இரவும் பகலும் அடிக்கடி கண்ணீர் விட்டு அழுது சாப்பாடு வெறுத்து—உறக்கம் மறந்து....பித்துப் பிடித்தவள் போல அப்பப்பா.... அவள்பட்ட வேதனை... அது பெரும் சித்திரவதையாக இருந்தது.

ஆனால் ஆறுமுகமோ? தன் புது மனைவியுடன் உல்லாச பவனி வந்து கொண்டிருந்தான். ஒரு கபடமற்ற பெண்ணின் மனதை உடைத்து விட்டோமே என்று கடுகளவும் சிந்திக்க வில்லை...

திரும்ப அலுவலகத்திற்கு வேலைக்குப் போக வேண்டுமே என்று அவள் நடுங்கி கொண்டிருந்த சமயம்... அவள் அக்கா பங்களூரிலிருந்து ஒரு கடிதம் போட்டிருந்தாள். அங்கு அவள் கணவருக்கு தெரிந்த நண்பர் ஒருத்தர் ஆரம்பித்திருக்கும் தனியார் நிறுவனத்தில் அனுபவமுள்ளதொரு டைப்பிஸ்ட்,

தேவைப்படுகிறது.... வனிதாவுக்கு பெங்களூர் வர பிரியமா?'' அவ்வளவுதான்—அம்மா எத்தனை சொல்லியும்—அப்பா அதட்டியும் அவள் தான் செய்து வந்த வேலையை ராஜினாமா செய்துவிட்டு பங்களூருக்குப் பயணமாகி விட்டாள். ஆறுமுகத்தின் கண்களில் படாது தொலை தூரத்தில் வசிக்க வேண்டும் என்பதுதான் அவள் அவா.

அங்கே வேலை கிடைத்ததும் உடனடியாக பெற்றோரை வரவழைத்துக் கொண்டாள். அக்கா உதவியுடன் கண்டோன்மென்ட் பகுதியில் ஒரு வீட்டில் பின்பக்கத்து இரு அறைகளை வாடகைக்கு எடுத்துக் கொண்டு எல்லாவற்றை யும் மறந்து புதிய சூழ்நிலையில் வாழத் தொடங்கினாள்.

இருந்தும் ஆறுமுகத்தின் நினைவு அவளை நிழலாகத் தொடர்ந்து துயரவசப்படுத்திக் கொண்டிருந்தது.

பெண்களுக்கு மட்டும் ஏன் இப்படி வித்தியாசமான மெல்லிய உணர்வுகள்? ஆறுமுகத்தைப்போல் அவள் மனம் ஏன் கல்லாக—இரும்பாகக் கடினமாக இருக்க மறுக்கிறது?

ஒரு நாள் மகாத்மா காந்தி ரோட்டருகில் ஆறுமுகத் தையும் அவன் மனைவியையும் பார்த்துவிட்டாள். உல்லாச மாக ஓய்வு நாட்களைக் கழிக்க அந்தப் பாவி பங்களூருக்கு மனைவியோடு வந்திருக்கிறான்!

மார்பு படபடத்து—உடம்பெல்லாம் வியர்த்துக் கொட்ட அவர்கள் கண்களில் படாது ஓட்டமும் நடையுமாக வீட்டுக்கு வந்து சேர்ந்தவள்... நாலு நாள் காய்ச்சலில் படுத்துவிட்டாள். ஆறுமுகம் அப்படி ஒரு பாதிப்பை அவளுக் குத் தொடர்ந்து தந்து கொண்டிருந்தான். அவனை மறக்கவே முடியாதா? அந்த காதலை அவள் மனதினின்று அழித்துவிட முடியாதா...அவளுக்கு இனி வாழ்க்கையில் நிம்மதி என்பது கிடையாதா? வேறு ஒருத்தனை அவள்



விரும்பி வாழ முடியாதா... மறுபடியும் அவளுக்கு அதே மாதிரியான காதல் உணர்வு மனதில் ஏற்படவே ஏற்படாதா?...

எண்ணி எண்ணி அவள் துயரத்திலே தேய்ந்து... உணர்வுகள் தொய்ந்து நடைப் பிணமாகிக் கொண்டிருந் தாள்... அப்பொழுதுதான் அந்த அதிசயம் நிகழ்ந்தது. அவள் வேலை பார்த்து வந்த அந்த தனியார் நிறுவனத்திள கணக்கு வழக்குப் பகுதிக்கு புதிதாக வந்து வேலைக்கு அமர்ந்தார் சம்பந்தம் என்ற தமிழர். காதோர கிருதாக் களில் லேசாக நரையோடிய அவர் முப்பத்தைந்து வயதைத் தாண்டி விட்டவர் என்று முகத்தின் முதிர்ச்சி சொல்லியது. மாநிறமாகத்தானிருந்தார்... அன்போடு எல்லோரிடமும் பேசினார்... தாமுண்டு தன் வேலையுண்டு என்று ஒதுங்கும் மனிதராகக் காணப்பட்டார். அவரைப்பற்றி வனிதா அதிகம் சிந்திக்கவேயில்லை.

சில மாதங்களுக்குப் பின் ஒருநாள் அவள் வீட்டு சாமான் களை நீலகிரி சூப்பர் மார்க்கட்டில் வாங்கிக் கொண்டு பிளாஸ்டிக் கூடையின் கனம் தோளை இறுக்க திணறியபடி நடைபாதையில் இறங்கியபோது... "நீங்களும் இங்கேதான் சாமான் வாங்க வருகிற பழக்கமா...?'' குரல் கேட்டு திடுக் கிட்டு திரும்பினாள்.

"அந்தக் கூடையைக் கொடுங்க ரொம்ப கனமா இருக் காப்போல தெரியுது...'' —கையை நீட்டினார் சம்பந்தம்.

"உங்களுக்கு ஏன் சிரமம்?'' எத்தனையோ சொல்லிப் பார்த்தாள். அவர் விடவில்லை. கனமான அந்தக் கூடையை அவளிடமிருந்து வாங்கிக் கொண்டு வீடுவரை வந்தார்.

ஒண்டுக் குடித்தனத்தில் வாழ்கிறோம்-அவரை உள்ளே எப்படிக் கூப்பிடுவது? தயங்கினாள் வனிதா...

ஆரம்பத்தில் "நானும் அம்மாவும்—இப்படித்தான் ஒரு சிறு இடத்தில் குடியிருந்தோம். படிப்படியாக

உத்யோகத்தில் உயர்வு ஏற்பட்டது. இப்போ கார்...வீடு எல்லா வசதியும் கம்பெனி கொடுத்திருக்கு—அம்மா தான் இல்லை—ஒண்டி கட்டையாகப் போயிட்டேன்...'' சொல்லிக் கொண்டே கூடவே உள்ளே வந்தவரை அவள் தன் பெற்றோருக்கு அறிமுகப்படுத்தினாள்.

அப்பாவுக்கும் அம்மாவுக்கும்—சம்பந்தத்தை ஒரே சந்திப்பில் பிடித்துப் போயிற்று.

'நம்ம ஊர்ப்பையன்! என்ன அடக்கம்? என்ன பணிவு?' புகழ்ந்தார் அப்பா.

''கை நிறைய சம்பாதிச்சாலும் துளி கர்வம் கிடையாது'' —அம்மா சிலாகித்தாள்.

சம்பந்தம் தொடர்ந்து அடிக்கடி அவர்கள் வீட்டுக்கு வரத் தொடங்கினார். அப்பாவுடன் அதிகம் பேசினார். அம்மா சமைத்ததை சாப்பிட்டும் மகிழ்ந்தார்.

ஒரு நாள் அவள் மட்டும் தனியே இருந்தாள். சம்பந்தம் அவர்கள் வீட்டுக்கு வந்தார். திடுக்கிட்டுப் போனாள்... முந்திய அனுபவத்தின் கசப்பு மனத்தில் இன்னமும் நீங்க வில் லை.

''உட்காருங்க...அம்மாவும் அப்பாவும் அனுமார் கோயில் வரை போயிருக்காங்க. வந்துடுவாங்க'' வாயில் கதவை அகலமாகத் திறந்து வைத்தாள்.

''அவங்க எனக்கு முன்னே சொல்லித்தான் இந்த ஏற்பாடு செய்திருக்காங்க—உன்னோடு தனியா பேசி உன் சம்மதத்தை தெரிஞ்சுக்கணும்''—வியப்பும்...திகைப்புமாக வனிதா விழித் தாள். இவர் என்ன சொல்கிறார்...

''வனிதா நீ என்னைக் கல்யாணம் செய்துக்குவியான்னு கேட்கத்தான் உன்னைத் தனியே சந்திக்க விரும்பினேன் உன் பெற்றோர்கள் சம்மதம் கொடுத்துட்டாங்க. உன் சம்மதம் வேண்டாமா...இதுக்காக அவங்கதான் என்னை இப்போ இங்கே வரச்சொன்னாங்க...''



வனிதாவின் கண்களில் நீர் பெருகியது. துக்கம் நெஞ்சை அடைத்தது...

''என்னைப்பத்தி உங்களுக்கு தெரியாததினாலே...'' அவள் சொல்லி முடிக்குமுன் சம்பந்தம் குறுக்கிட்டார். ''எல்லாம் தெரியும். அப்பா விவரமா சொல்லிவிட்டார். நீ எந்தவிதமான தவறும் செய்யவில்லை. ஒரு மனிதனை விரும்பினாய்—அவன் உன்னை நிராகரித்தான். அதற்காக கால முழுவதும் நீ தண்டிக்கப்படணுமா? நான்கூட சின்ன வயசில் பார்த்த அழகான பெண்களை கட்டிக் கொள்ள ஆசைப்பட்டதுண்டு. அதனால் உடனே நான் ஒழுக்கம் கெட்டவன்னு சொல்லிவிட முடியுமா?...மனதால் நினைத் தால்கூட கற்பு அழிஞ்சு போச்சுன்னு கதை கட்ட ஆரம்பிச்சா உலகத்திலே நல்லவங்கன்னு தேர்ந்தெடுக்கவே யாரும் இருக்க மாட்டாங்க. சினிமாவை பார்க்கிறோம், நடிகர் அழகா அற்புதமா நடிக்கிறார், அவரை எனக்கு ரொம்பப் பிடிக் கிறது. அவர் எனது அபிமான நடிகர்ன்னு ஒரு பெண் சொன்னால் அவள் கற்பு கெட்டுவிட்டதா?...'' சம்பந்தம் கலகலவென்று சிரித்தார்.

சிரிப்பில் களைகட்டிய அந்த முகத்தைப் பார்த்து அயர்ந்து போனாள் வனிதா. அதற்குள் அப்பாவும் அம்மாவும் உள்ளே வந்து விட்டனர்.

''வனிதா என்ன சொல்கிறாள்?'' அப்பா கேட்டதும் அவள் வெட்கத்துடன் தலைகுனிந்து கொண்டுவிட்டாள்.

நான்கு வருஷங்களுக்குப் பிறகு வனிதா....திருமதி சம்பந்தமாக தன் சிறு மகனை அணைத்துத் தூக்கிக்கொண்டு கணவனுடன் லால்பாக் பூங்காவில் நடந்து கொண்டிருந்த போது...ஆறுமுகம் மனைவியுடன் எதிர்பட்டான்.

ஏனோ அவளைக் கண்டதும் அவன் வேறு பக்கம் திரும்பி மனைவியுடன் வேகமாக மறைந்து போனான். குற்றமுள்ள

நெஞ்சு. தன்னைவிட தகுதிமிக்க அன்பான அந்த கணவன்–குழந்தையுடன் அவள் சுகமாக வாழ்வதைக் காண காதலனுக்கு சகிக்கவில்லை போலும்!...

காதலன் செய்த துரோகத்தால் தன்னைப்போல மனம் ஒடிந்து போகும் பெண்கள் நிமிர்ந்து எழுந்து துணிவுடன் உலகை நோக்கத் தெரிந்துகொள்ள வேண்டும்.... அப்பொழுது தான் மறுபடியும் அவர்களுக்கு வாழ்வு தேடிக்கொண்டு வரும்...

வனிதா...தனக்குள்ளே புன்னகைத்துக் கொண்டாள்.

□

# பட்டமரம்

நூன்தான் கதவைத் திறந்தேன். வெயிலைத் தாங்க முடியாதவர் போல தலை மேலே துண்டை போட்டுக் கொண்டு அப்பா உள்ளே வந்தார். இந்த இரண்டு ஆண்டு களில் அவருக்கு திடீரென்று வயது அதிகரித்துவிட்டது போன்று ஒரு முதுமையின் தளர்ச்சி முகத்தில். தள்ளாடியபடி உள்ளே வந்து நடையில் பாதணிகளைக் கழற்றி வைத்தார்.

கதவைச் சாத்தித் தாழிட்டேன். என் நெஞ்சு திக்திக் கென்று அடித்துக் கொண்டது. அன்று கோர்ட்டில் என்னுடைய விவாகரத்து வழக்கில் நீதிபதி தீர்ப்புச் சொல்லும் நாள். அப்பாவின் முகத்திலிருந்து என்னால் எதுவும் ஊகிக்க முடியவில்லை. என்ன ஆச்சு? என்று கேட்கவும் துணிவில்லை. அவரது உதடுகள் துடித்தன... உள்ளேயிருந்து ஓடோடி வந்த அம்மா அவர் முகத்தைத் திகிலுடன் பார்த்தாள்.

"கமலாவுடைய கஷ்டங்களுக்கெல்லாம் ஒரு முடிவு கிடைச்சுட்டது. அவளுக்கு விடுதலை கிடைச்சுட்டது..." அப்பா தழுதழுத்தார்.

அம்மாவின் கண்கள் கலங்கிப் போயின. "சட்டம் கமலாவுக்கு விடுதலை கொடுத்திடுச்சு...சமூகம்?...ஏங்க நம்ப குழந்தை ஒரு பட்டமரமாகிப் போயிட்டாளே?...பச்சைக்கிளி

போல பெண்ணை வளர்த்து சீரும் சிறப்புமாக...நகை நட்டு போட்டு வரதட்சணை கொடுத்து தடபுடலாகக் கல்யாணம் செய்து அந்தப் பாவி கையிலே ஒப்படைச்சதுக்கு பதிலா பாழும் கிணற்றிலே தள்ளியிருந்திருக்கலாம். இந்த இரண்டு வருஷமா நாம் பட்ட துன்பம் எல்லாத்துக்கும் இதான் முடிவா?...''

அம்மா ஓவென்று அலறி அழத் தொடங்கியபோது என்னால் தாங்க முடியவில்லை. விர் என்று உள்ளே ஓடி அறைக்குள் புகுந்து கட்டிலின் மேல் கவிழ்ந்து படுத்துக் கொண்டு மனம் வெடிக்கும் அளவு நானும் குலுங்கி அழுதேன்...

என் கணவன் என்று பெயரளவில் என்னை படாத பாடு படுத்திய சுந்தரம் என்னும் காதகன் எனக்கு விவாகரத்து கொடுத்து தன் வாழ்க்கையினின்று நீக்கிவிட்டான் என்ற துயரத்திற்காக நான் அழவில்லை.

நான் ஆரம்பத்திலிருந்து செய்த முட்டாள்தனமான காரியங்களை எல்லாம் ஒட்டுமொத்தமாக நினைத்து மனம் உடையும் மட்டும் அழுதேன்.

எஸ். எஸ். எல். சி. தேர்வில் நான் வெற்றி பெற்று மேலே படிப்பைத் தொடராது வீட்டிலேயே தங்கிவிட்ட சமயந்தான் மாமன் மனோகரனுக்கு என்ஜீனியர் படிக்க ஐ. ஐ. டி. யில் இடம் கிடைத்து விட்டிருந்த்து. அவர் அன்று சென்னைக்கு புறப்பட இருந்தார். வீடு மகிழ்ச்சி வெள்ளத் தில் மிதந்து கொண்டிருந்தது.

தன் ஒரே தம்பி தாயில்லாதவன்—வசதியான தன் வீட்டில் தங்களுடன் வந்து சின்ன வயதிலேயே ஒட்டிக் கொண்டு புத்திசாலியாகப் படித்து யாருடைய உதவியும் இல்லாது மதிப்பெண்கள் மூலம் உபகாரச் சம்பளத்துடன் என்ஜீனியர் பட்டப்படிப்புக்கு இடம் தேடிக்கொண்டு விட்டான் என்பதைக் குறித்து அம்மாவுக்குப் பெருமை பிடி



படவில்லை. எனக்கு மட்டுமென்ன? என் காதலரின் வெற்றி என் வெற்றியைப் போல....மனமகிழ்ந்து போயிருந்தேன்.

அப்பா முன்னறையில் உறவினர்களுடன் உற்சாகமாகப் பேசிக் கொண்டிருந்தபோது மனோகர் பின் கட்டைத் தாண்டி அவருக்காக நான் காத்திருந்த தோட்டத்து மல்லிகைப் பந்தலருகே விரைந்து வந்தார்.

"கவலைப்படாதே, கமலா. படிப்பு முடிஞ்சதும் உடனடியா நம் கல்யாணம்'' என் கையைப் பற்றி ஆதரவுடன் அழுத்தினார். சில ஆண்டுகள் அவரைப் பிரிய நேருமே என்கிற துக்கம்தான் எனக்கு அப்பொழுது பெரியதாகத் தோன்றியது.

"கமலா எங்கே?...'' கூப்பிட்டுக்கொண்டு பின்கட்டிற்கு ஒன்னைத் தேடிக்கொண்டு வந்த அம்மாவிடம் அப்பொழுதே உண்மையைச் சொல்லியிருந்தால்!...

"மாமனும் நானும் ஒரே வீட்டில் சின்ன வயது முதல் ஒன்றாக வளர்ந்ததாலோ என்னவோ ஒருத்தரை ஒருத்தர் ரொம்ப விரும்புகிறோம். மாமன் ஏழை, உங்க ஆதரவில் தயவில் படித்து முன்னுக்கு வந்தவன்...அதைத் தவிர அவருக்கு வேறு ஒன்றும் குறையில்லை. பார்க்க அழகான தோற்றம்—அடக்கமானவர்...படிச்சு முடிச்சதும் கை நிறைய சம்பாதிக்கப் போகிறவர்...அவருக்கே என்னைக் கட்டி வையுங்கோ அம்மா...அப்பாகிட்ட சொல்லுங்கோ...என்று என் தாயின் காலில் விழுந்து கெஞ்சியிருக்கலாம். ஒரு பக்கம் மகள் மற்றொரு பக்கம் தன் உடன் பிறந்தவன். அவள் கட்டாயம் மனம் இரங்கி ஒப்புக் கொண்டிருப்பாள்.

தாயிடம் உண்மையை மறைத்தது...நான் செய்த முதல் தவறு.

வருஷ இறுதியின்போது லீவுக்கு வீட்டிற்கு மனோகரன் வந்திருந்தார். அவருக்குப் பொதுவாக கூச்சம் அதிகம். அப்பா விடம் துணிவாகப் பேச அச்சம். ஆனால் நான் வற்புறுத்தி யிருக்க வேண்டும்.

"வேறு இடத்தில் எனக்கு மாப்பிள்ளை பார்க்கிறார்கள் மோசம் போய்விடாதீங்க" என்று அவரைத் தூண்டி விட்டு துணிவை ஊட்டி அவரே அப்பாவைக் கேட்க உற்சாகப் படுத்தியிருக்க வேண்டும். நான் மௌனமாக இருந்து விட்டது மாபெரும் தவறு.

யானை தன் தலையில் தானே மண்ணை வாரிப் போட்டுக் கொள்ளும் என்பார்கள். அதுபோல நானே என் வாழ்வை அழித்துக்கொண்டேனே... அதைவிட முட்டாள் தனம் வேறு உண்டா? முன் பின் தெரியாத நளினியின் கடிதத்தைப் பார்த்துவிட்டு நான் எடுத்த முடிவு எத்தனை பெரிய தவறு.

மாமா மனோகர் சென்னையில் படிக்கத் துவங்கிய போது அவருக்கு ராஜன் என்றதொரு நண்பன் அறிமுகமானான். ஓய்வு நாட்களில் அவன் வீட்டிற்கு மாமா சாப்பிடச் செல்வ துண்டு... அங்கேதான் அவனது சகோதரி நளினியின் அறிமுகம் ஏற்பட்டது. நளினி பி. ஏ. இறுதி ஆண்டு படித்துக் கொண்டிருந்தாள். மிகவும் சகஜமாகப் பழகினாள். வேடிக்கை யாகப் பேசினாள்... மாமா என்னைப்பற்றி அவளிடம் அதிகம் தெரிவித்து விட்டிருக்கிறார். நளினி உடனே எனக்குக் கடிதம் போட்டுவிட்டாள்.

"உன் தந்தை வசதியானவர்—நினைத்தால் உனக்கு ஒரு சுயம்வரமே நடத்தி வைக்க முடியும். நாங்கள் சாதாரணமான குடும்பத்தவர்கள். எனக்கு மனோகரை மிகவும் பிடித்து விட்டிருக்கிறது. அவரை மணக்க நான் மிகவும் விரும்பு கிறேன்...உன் காதலை எனக்காக நீ விட்டுக் கொடுக்க வேண்டும் ஒரு பணக்காரப் பெண் ஏழையை மணந்து கொண்டு நிம்மதியாக வாழ முடியாது...உன்னிடம் காதல் பிச்சை கேட்கிறேன்."

நளினி மிகவும் கெட்டிக்காரி—கடித மூலமே என் மனதை உருக்கிவிட்டாள், மாற்றியும் விட்டாள்.



கல்யாணப் பரிசு சினிமாவைப்போல நான் காதலை நளினிக்காகத் தியாகம் செய்தேன்—முட்டாள்! எத்தனை பெரிய பிசகு செய்து விட்டேன்.

இந்தச் சமயம்தான் அப்பா வேறு இடத்தில் எனக்கு மாப்பிள்ளை பார்த்திருந்தார். என் சம்மதம் கேட்டதும்... நளினிக்கு கொடுத்த வாக்கை நினைத்துக் கொண்டு....நான் சரி என்று தலையை ஆட்டிவிட்டேன். என் தலைமேலேயே தான் நெருப்பைக் கொட்டிக் கொள்கிறேன் என்று அப்போது அறியவில்லை.

மாமனைக் காதலித்தேனே தவிர...எங்கள் காதல் வெறும் மனத்தளவில் பேச்சளவில்தான் வரம்புக்குள்ளேயே நின்ற சங்கதி. கபடமே தெரியாது... அடக்கமாக வளர்க்கப்பட்ட பெண்—உலக விவகாரமே தெரியாத பதினெட்டு வயது பருவப்பெண். அப்பா செய்து வைத்த கல்யாணத் தடபுடலில் ....கற்பனையில் உலகையே மறந்து விட்டிருந்தேன்.

ஏதோ சொர்க்கத்திற்குள் புகுவதாக நினைப்பு...பின்னர் தான் ஒரு சாக்கடையில் தள்ளப்பட்டிருக்கிறேன் என்பதை உணர்ந்தேன்.

கணவனா அவன்! கயவன்.... கிராதகன்... அரக்கன்! இன்னும் கடுமையான வார்த்தைகளால் அவனைச் சாட மனம் துடியாய்த் துடிக்கிறது. முதல் நாள் இரவின் சந்திப்பி லேயே அவன் தன் சுய உருவத்தைக் காட்டிவிட்டான்.

கல்யாணத்தின்போது என் தந்தை அவன் உறவினர் களை தக்க மாரியாதையுடன் நடத்தவில்லையாம்.

"உன் அப்பன் செய்த பிசகுக்கு உனக்கு தண்டனை கொடுக்கப் போகிறேன்..." என்று எடுத்த எடுப்பிலேயே வசைமாரி பொழிந்து என் கூந்தலைப் பிடித்துக் குலுக்கி— கன்னத்தில் ஓங்கி அறைந்து... அறையின் மூலையில் சுவற்றின்மீது ஆங்காரமாகத் தள்ளி விட்டான்... நடு நடுங்கிப்

போனேன்—அதிர்ச்சியில் ஆடிப்போய் விட்டேன். இன்பமான எதிர்பார்ப்புடன் அவரை அணுகிய எனக்கு... கன்னத்தில் அறை . அத்தோடு கல்யாணம் என்பது இவ்வளவுதான் என்று என் உணர்வுகளுக்கு ஓங்கி ஒரு உதை. அவமானமும்—துக்கமும் தாள முடியாது நான் கதவைத் திறந்து கொண்டு வெளியே ஓடி வந்து விட்டேன்.

மறுநாளே என்னை என் கணவர் தம்முடன் தமது வீட்டிற்கு அழைத்துச் சென்று விட்டார். முதல் சந்திப்பிலேயே நான் அவரை அவமானப் படுத்தியதற்கு என்னை பழிவாங்க.... தமது வீட்டில் ஒரு வேலைக்காரியாக ஒதுக்கி வைத்து... மனைவி என்ற உரிமையை வழங்க மறுத்து விட்டார். மூன்று மாதம் நான் அவருடன்.... அவர் வீட்டில் மனைவி என்ற உரிமை இல்லாது... ஒரு சாதாரண வேலைக்காரியாக... பல கொடுமைகளை அனுபவித்தேன்.

கல்யாணமாகியும் நான் தனிமையில் அவர்கள் வீட்டில் ஒரு அடிமையாக வாழ்கிறேன் என்பதை என் தந்தைக்குக் கடிதம் எழுதித் தெரிவித்திருக்க வேண்டும்—அப்படிச் செய்யாது நான் தற்கொலை முயற்சியில் இறங்கினேனே அது எத்தனை பெரிய தப்பு?

என்னை ஒதுக்கி வைத்து விட்டு கண்ட பெண்களுடன் களித்துத் திரிந்த என் கணவரின் அடாத செய்கையை தொடர்ந்து பார்த்துக் கொண்டிருக்க மனம் பொறுக்காது... தூக்க மாத்திரை பாட்டிலை வாயில் ஒரேயடியாகக் கவிழ்த்துக் கொண்டு... ஒரே மூச்சில் பல மாத்திரைகளை விழுங்கி வைத்தேன். மரணம் என்பதும் அத்தனை சுலபத்தில் நம்மை அணுகி விடுவதில்லை. அதற்கு நேரம்—காலம்—வரைமுறை எல்லாம் இருக்கின்றனவே...

கண் விழித்தபோது ஆஸ்பத்திரியில் உறவினர்கள் சூழ படுத்துக் கிடந்ததை உணர்ந்தேன்.



அப்பாவும்—அம்மாவும் என்னைக் கண்டு குலுங்கி அழுதனர். என்னைப் பெற்றதற்கு அவர்களுக்கு நான் தேடிக் கொடுத்த பெருமை தற்கொலை முயற்சி.

உடல் தேறிய பின் மீண்டும் உறவினர்கள் கூடி அறுந்து போன உறவைப் புதுப்பிக்கும் முயற்சியில்...என்னை மறுபடியும் என் கணவருடன் புக்ககத்திற்கு அனுப்பி வைத்தனர்.

இந்த முறை எனக்கு கிடைத்த வரவேற்பு?.... மாமியார் உட்பட வீட்டிலிருந்த நெருங்கிய உறவினர்கள் எல்லோருமே என்னைக் கை தொட்டு அடித்து வசைமாரி பொழியத் துவங்கினர். என் பிறந்த வீட்டில் போட்ட நகைகளை உருவிக்கொண்டு—என் சேலைகளை எடுத்துக் கொண்டு... தலைவிரி கோலமாக நின்ற எனக்கு பைத்தியம் பிடித்து விட்டது என்ற பட்டம் கட்டி விட்டனர். விஷயத்தைக் கேள்விப்பட்டு என்னைக் காண வந்த அப்பாவை ஆள் வைத்து அடித்து... அப்பப்பா அவர்கள் செய்த அவமானம்!... எட்டுப் பிறவிக்குப் போதும்... போலீஸ் பாதுகாப்புடன் நாங்கள் அங்கிருந்து புறப்பட்டு வீடு வந்து சேர்ந்தது ஊரே தெரிந்த சங்கதியாகி விட்டது.

சித்தம் கலங்கி விட்ட மனைவியுடன் வாழ முடியாது என்று காரணம் காட்டி... விவாகரத்துக் கோரி... என் கணவர்... வழக்காடினார்... இரண்டு ஆண்டு காலம்... டாக்டர்கள்... வக்கீல்கள், கோர்ட்டுகள் என்று அப்பா... அலைந்த அலைச்சலை நினைத்து... நான் இப்போது அழுகிறேன்...

மாமியார் வந்து கனிவுடன் அழைக்கிறார்களே என்று இரண்டாவது முறை மயங்கிப் போய் நான் புக்ககம் புறப்பட்டது எத்தனை பெரிய தவறு...? என் நகைகளைப் பிடுங்கிக் கொள்ள அவர்கள் செய்த சூழ்ச்சி என்று பின்னர் தானே தெரிந்தது...

பணம் இருந்தென்ன—பதவி இருந்தென்ன, தமது ஒரே அருமை மகளின் வாழ்க்கை பாழாகி விட்டதே— பட்ட மரமாக அவள் இனி தனியே நிற்கப் போகிறாளே என்ற துயரத்தைத் தாளமாட்டாது அப்பா வாயைத் துண்டால் பொத்திக் கொண்டு பின் தாழ்வாரத்து பெஞ்சியின் மேல் அமர்ந்தபடி அழுது கொண்டிருந்தார்.

ஜாதகம் பார்த்து—பொருத்தம் பார்த்து—பெரியவர் களுடன் கூடிப்பேசி வரதட்சணை—சீர்—நகைகள் என்று எல்லாம் வகை தவறாது வைத்து...ஊர் கூட்டி அமர்க்கள மாக நடத்தின திருமணமே மகளுக்கு சீராக அமையவில்லை. சிதைந்து போய் விட்டது. விவாகரத்தானவள் என்ற நிலைமை அடைந்தால் இனி... இன்னொரு சீரான வாழ்க்கை அமையவா போகிறது?...

அம்மா எனது வருங்காலத்தை நினைத்து வாய் விட்டுப் புலம்பி ன் காது கேட்க அழுது தீர்த்துக் கொண்டிருந்தாள்.

"மூன்று மாதம் ஒருத்தனுக்கு மனைவியாக பெயருக்குத் தான் வாழ்ந்தவள்... அந்த உறவே ஏற்பட்டதில்லை" என்று நான் சொன்னால் யார் நம்புவார்கள்?

ஒருவன் வேண்டாம் என்று ஒதுக்கி விவாகரத்து செய்து விட்டவளை இன்னொரு ஆண் எந்தத் துணிவில் வந்து கல்யாணம் செயதுகொள்வான்? இனி நான் ஒரு பட்ட மரந்தானா? எனக்கு வருங்காலம் என்பது இருக்கிறதா?.... என் துயரங்களின் முடிவுதான் என்ன?... இருபது வயதிற் குள்ளேயே என் வாழ்வு அஸ்த்தமனமாகி விட்டதா?.... கட்டுப்படுத்த முடியாது துக்கத்தில் நான் விசும்பிக் கொண் டிருந்தேன்... துக்க கோலம் பூண்டு விட்டிருந்த எங்கள் வீட்டு வாயில் கதவு பலமாகத் தட்டப்பட்டது.

அப்பாவோ, அம்மாவோ எழுந்து கதவைத் திறக்கமுற் படவில்லை. தட்டுகிறவர்கள் அண்டை அயலாராக இருந் தால் அவர்களை சந்தித்து பேச அப்பாவுக்கோ அம்மா வுக்கோ முகம் இல்லை...



மேலும் தொடர்ந்து கதவு இடிபடுவதைக் கேட்டு நான் எழுந்தேன். கன்னங்களைக் கோடிட்ட கண்ணீரைத் துடைத்துக் கொண்டேன்... கூந்தலை அள்ளி முடித்துக் கொண்டேன்.... வேகமாக வெளியே வந்து கதவைத் திறந் தேன். வம்புக்காரர்கள் யாராவது விஷயம் என்ன என்று கேட்க ஆவலுடன் வந்திருந்தால் சூடான பதில் கொடுத்து அனுப்ப வேண்டுமென்ற ஆத்திரம் எனக்கு.

ஆனால் என்ன ஆச்சரியம்?... கையில் சிறு பெட்டியுடன் என் மாமன் மனோகர் நினறு கொண்டிருந்தார்.

"சென்னையிலிருந்து நேரே பஸ்சில் வந்தேன். வழியில் வக்கீலுக்குப் போன் பண்ணி கேட்டுட்டு வரேன்... கமலா... முகத்தைக் கழுவி—முடியை வாரி கட்டிகிட்டு பொட்டு வச்சுக்கோ... உன்னை இப்படிப் பார்க்க எனக்கு பொறுக் கலை" என்றார்.

பேச்சுக் குரலைக் கேட்டு எழுந்து வாயிற் பக்கம் வந்தனர் என் பெற்றோர்கள்.

"நானும் கமலாவும் ஒருவரையொருவர் விரும்பறோம். இதை ஆரம்பத்திலேயே உங்ககிட்ட சொல்லியிருக்கணும். பயந்துகிட்டு நான் வாயை மூடிக்கிட்டிருந்தது என் தப்பு... கல்யாணத் தேதி வைக்கும் முன்னாலாவது உங்ககிட்ட நான் உண்மையைச் சொல்லி கல்யாணத்தை நிறுத்தியிருக்க லாம். அது பண்பு கெட்ட செய்கையாகப் படும்னு பயந்து கிட்டு அடக்கமா இருந்துட்டேன்—அதுவும் என் தவறு....

"இப்போ ஊர் என்ன சொல்லுமோ... உலகம் என்ன சொல்லுமோன்னு பயந்து மறுபடியும் தவறு செய்யக் கூடாதுன்னுதான் ஓடோடி வரேன். நான் பாஸ் செய்திட் டேன்... வேலைக்கு மனு போட்ட இடத்திலிருந்து

இண்டர்வியூ வந்தது... அதிலும் வெற்றி.... அநேகமாக எனக்கு அந்த இடத்தில் வேலை கிடைச்சுடும்... அதனால் அக்கா... மாமா... உங்க மகளை நான் கட்டிகிட்டு அவளுக்கு மறு வாழ்வு கொடுக்க விரும்புகிறேன. என் சம்பாத்தியத்திலே அவளை நான் சுகமா வச்சு காப்பாத்த முடியும் என்கிற துணிச்சலிலே கேட்கிறேன்.... மறுக்காதீங்க..."

—கேட்டுக் கொண்டே....பெட்டியை அப்பால் வைத்து விட்டு என் தந்தையின் காலில் மாமன் விழுந்து கும்பிட்டார்.

அப்பா... உணர்ச்சி வசத்தில் ஆடிப் போய் விட்டார். அப்படியே அவரைத் தூக்கிக்கொண்டு தன் மார்போடு அணைத்துக் கொண்டார். அம்மா...இப்போது ஆனந்தம் தாங்காது விக்கி விக்கி அழுகிறாள். மாமனும், மருமகனும் மார்புறத் தழுவிக்கொண்டு நின்ற அந்த நெஞ்சு நெகிழும் காட்சியிலே...கலங்கிவிட்ட என் கண்களில் புரண்டு நின்ற நீர்திரையைத் தாண்டி....என் வளமான வருங்காலத்தை நான் பார்க்கிறேன்...

பல நாளைக்குப் பிறகு நான் அழுதுகொண்டே சிரிக்கிறேன். தொடர்ந்து சிரித்துக் கொண்டு களைப்புடன் வந்திருக்கும் மாமனுக்கு அவசரமாக காப்பி தயாரிக்க உள்ளே ஓடுகிறேன்.

என்னைப் போன்ற பெண்களுக்கு மனோகர் மாமாவைப் போல நல்ல பண்பான மனிதன் மறுவாழ்வு தர முன் வருவார்கள் என்ற நம்பிக்கை....பட்ட மரம் போன்ற என் மனதில்...துளிர் விடுகிறதை உணர்கிறேன்.

□

# இருக்க ஓர் இடம்

சிண்பகம் தனது அறையின் மூலையில் சுருண்டு கொண்டிருந்தாள்.

ஏனோ கையும் காலும் சோர்ந்து போகும் அளவுக்கு உடலில் அப்படி ஒரு அசதி.

காலையில் காப்பி பலகாரம் முடிந்ததும், மாடியில் உள்ள தனது பகுதிக்குள் புகுந்து கொள்ளும் பெரிய மருமகள் சுலோசனா கீழே வரவே மாட்டாள். அவள் ஏன் கால் வலிக்க இறங்கி ஏறணும்? அவளது பங்கான அந்த விசாலமான மாதிப்பகுதிக்குள்ளே எல்லா வசதிகளும் இருந்தன. பஞ்சு மெத்தை கட்டில்கள், பிரிட்ஜ், ரேடியோ இத்யாதி.

பிரிட்ஜ் நிறைய வைத்து திணிப்பதற்குப் பெட்டி பெட்டியாக குளிர் பானங்களும்—காஷ்மீர் ஆப்பிள்களும், ஹைதராபாத் திராட்சையும் மேலே போவதை சண்பகம் கவனித்திருக்கிறாள். ஆனால் அதிலிருந்து "இந்தாங்க அத்தை!" என்று ஆசையாக ஒரு ஆப்பிளையோ... சின்ன கொத்து திராட்சையையோ கொடுக்க சுலோசனா ஒரு நாளும் முன் வந்ததில்லை. எல்லாம் அவர்கள் வயிற்றுக்கு!

அவளை மட்டும் குற்றம் சொல்வானேன். அவள் கணவன், அதான், சண்பகம் பெற்றெடுத்த மூத்த மகன் சிங்கார வேலன் மட்டும் என்ன? அம்மாவை அசட்டை செய்வதில் சளைத்தவனா?

சண்பகம் பெருமூச்செறிந்தாள். ஐந்து மக்களைப் பெற்ற வயிறு. இப்படி ஏன் பசி பசின்னு ஆலாய்ப் பறக்கிறது? அப்படித் தின்பதற்கு பணம் காசு இல்லாத இடத்திலா அவள் வாழ்க்கைப்பட்டாள்?

அவள் கணவன் பஞ்சநாதம் அந்த ஊரிலேயே பெரிய புள்ளியாக வாழ்ந்தவர். தனம் கொழிக்கும் நிலம், பணம், மளிகை வியாபாரம், ஜவுளிக்கடை, கோட்டை கோட்டை போன்ற வீடு எல்லாம் இருந்தன. ஆனால்?

“ஏம்மா! எத்தினி நேரமா இப்படி மூலையிலே சுருண்டு கிட்டு கிடப்பீங்க. காய்ச்சல் தலைவலின்னா டாக்டர் அய்யா கிட்ட காட்டிக்கக் கூடாதா?” பல வருஷங்களாக அந்த வீட்டில் ஓயாது உழைத்துவிட்டு, அதன் மூலம் உரிமையாகக் கேட்கும் வேலைக்காரி சின்னம்மா, அவளருகில் வந்து நின்றாள்.

சண்பகம், தலையைத் தூக்கி அவளைப் பார்த்தாள். படிப்பே இல்லாத சின்னம்மா. பிறரை நம்பி வாழாமல் தன் உழைப்பை நம்பி வாழும் உறுதி வாய்ந்தவள். எஜமானியம்மாளின் அவலம், அவளுக்கு நன்றாகத் தெரிந்திருந்தது போலும்.

மாடியிலிருந்து, காதைப் பிளக்கும் ஆங்கில இசை கேட்டது... சின்ன மகன் ‘பாப்’ பாடகப் பிரியன். அவனுக்கு வாய்த்த மனைவி கிராமத்து பெண் சுகுணாதான், இப்பொழுது கணவனையே தூக்கி அடிக்கிற அளவு ஆங்கில இசையில் மூழ்கி எழுந்திருக்கிறாள். வீட்டில் மற்றவர்களின் காதுகளைப் பற்றியோ, ரசனை பற்றியோ அவளுக்கு சிறிதும் கவலை இல்லை!

“இந்த சுகுணா அம்மா எப்படி மாறிட்டுதும்மா?” சின்னம்மா அதிசயித்தாள்.

“புருஷன் மனம் கோணாம இருக்கத் தெரிஞ்சுகொண்டிருக்கா, புத்திசாலி!” சண்பகம் முறுவலிக்க முயன்றாள்.



“நான் சொல்றேன்னு தப்பா நினைக்காதீங்கம்மா. ஊர்ல உலகத்துல, பிள்ளைங்க இருந்தா, பெத்தவங்களுக்கு ஒரு வாய் கஞ்சி ஊத்தும்னு சொல்லுவாங்க. இங்கே... ஹூம்!”

“சின்னம்மா! அதுக்கும் குடுப்பினை வேணும்!”

“மனசுக்கு ஒரு நியாயம் வேணாமா? அஞ்சு குழந்தைங்களைப் பெத்து வளத்து பாடுபட்டீங்க. மூணு பொண்ணுங்களைக் கட்டிக் குடுத்தீங்க. ஐயாதான் கண்டிப்புக்காரரா இருந்தாரு. மவராசன்போய் சேர்ந்தாரு. இருக்கற அம்புட்டு சொத்தும் இவங்களுக்குத்தானே வச்சிட்டுருக்காரு. வயசான தாயாரைப் பார்த்துக்க இப்பிடி ஒரு பாடா?” படபடவெனப் பொழிந்தாள் அவள்.

“சின்னம்மா! சமையல் ஆள் கோவிச்சிட்டு போயிட்டாரு. அதனால, ஒரு கப் காபியை எங்கயாச்சும், வாங்கிட்டு வறியா, பணம் தாரேன்.”

சின்னம்மா பதறிப்போனாள். “இதோ ஒரு நொடியில் வரேன் அம்மா.”

கையில் கிடைத்த பாத்திரத்துடன் அவள் வெளியேறியதும், சண்பகம் மீண்டும் சுருண்டு கொண்டாள்.

சின்னம்மா சொன்னது போல ஒரு டாக்டரைப் பார்க்க வேண்டியதுதான் ஆனால் அவளை எந்தப் பிள்ளை டாக்டரிடம் அன்பும், ஆதரவுமாக அழைத்துச் செல்வான்?

சண்பகம் பெருமூச்செறிந்தாள். பதினைந்து வயதில் மணப்பெண்ணாக, அந்த வீட்டில் காலடி எடுத்து வைத்தவள் அவள். அதிகாரம் செய்யும் மாமனார், மாமியார் அடுப்படியிலேயே, உழலும் மருமகளாக வாழ நேர்ந்த அவலம்,

அது போகட்டும். புககம் என்றால், பெண் என்பவள் எல்லாவற்றையும் அனுசரித்துப் போகவேண்டும் என்பது தானே நியதி...கட்டிய கணவனின் அன்பும், ஆசையும் இருந்து விட்டால் ஆறுதலுக்கு குறையிருக்காதே என்று எண்ணினாள் அவள். அந்த எண்ணத்திலும் மண்!

கணவன் பஞ்சநாதம், சுயமாக முன்னுக்கு வந்தவர். பல லட்சங்களை ஈட்டி விட்ட அகந்தையும், அதிகாரம் செய்ய வேண்டிய ஆண்மகன் என்ற மனப் போக்கும் கொண்டிருந்தார்.

கணவனே கண்கண்ட தெய்வமாக நினைத்த சண்பகம், அவரை கண் கண்ட சிங்கமாக எண்ணி நடுங்கிய சந்தர்ப்பங்கள் பல ஏற்பட்டு விட்டிருந்தன.

"இந்த கத்தரிக்காய் துவட்டல்லை மனுஷன் தின்பானா? தூ!" என்று அவள் முகத்தில் விசிறியடிப்பார்.

"காப்பி சூடா வேணும்னா, இப்படியா கொதிக்க கொதிக்கக் குடுக்கறது" அவளுக்கு அபிஷேகம் செய்திருக்கிறார். பல நாட்கள் சாப்பாடு சரியில்லை என்று கோபித்துக் கொண்டு போயிருக்கிறார். இருப்பினும், கோபமுள்ள இடத்தில் குணம் இருக்கும் என்று பொறுமையின் உருவாக சண்பகம் வாழ்ந்தாள். முடிவு...? அவரிடம் கோபம் மட்டுமே இருந்தது. குணம்தான் இல்லை. மனைவி என்பவள் ஒரு யந்திரம் என்றுதான் நினைத்தார். மற்றப் பெண்களுடன் களியாட்டம் நடத்தினார். குழந்தைகள் பிறந்தால் சரியாகி விடும் என்று சண்பகம் எண்ணினாள். ஐந்து முறை அவள் அதே தவறை செய்தாள். மூன்று பெண்களும் இரண்டு பிள்ளைகளும் பலன்...?

வியாபாரத்தில் ஏற்றச் சரிவுகள் ஏற்படும். சரிவு வரும் போது, "தரித்திரம்! உன்னைக் கட்டிக்கிட்டதுக்கு இப்ப வியாபாரமே படுத்துட்டுது" என்று அவளை அடித்துத் துவைப்பார். ஏற்றம் வந்தால், "எல்லாம் ஐயாவோட கைராசி!" என்று பீற்றிக் கொள்வார். இந்த அடிமை வாழ்வில் கொண்டு, கொடுத்து, பெண் எடுத்து எல்லாம் ஆகிவிட்ட சமயம், அவர் மாரடைப்பால் மறைந்து போனார்.



தந்தையின் மறைவிற்குப் பின்னர் தாயிடம் பரிவு காட்ட வேண்டிய பிள்ளைகள்...எப்படி மாறிப் போனார்கள்?

மாடிப் பக்கத்தை இரு பாகமாகப் பிளக்காத குறை. பெரியவன் சிங்காரவேலு, ஊரிலுள்ள அத்தனை சுகங்களையும், தன் பகுதிக்குள் அடைக்கப் பார்த்தான்.

சின்னவன் விட்டவனா? புது சோபா செட் அண்ணன் வாங்கினால், அடுத்த விநாடியே அவன் பகுதிக்கும் அதே போல ஒரு செட் இறங்கிவிடும்.

சிங்காரவேலனுக்கு மளிகைக்கடை பொறுப்பு, சின்னவனுக்கு ஜவுளிக்கடை பொறுப்பு. மாற்றி மாற்றி இரு மருமகள்களும் போட்டி போட்டுக் கொண்டு, நகைக் கடைகள், சினிமா, டிராமா என்று ஒன்று விடாமல் ஓடிக் கொண்டிருந்தனர். வீட்டு நிர்வாகம்...?

அதற்காக ஒரு சமையல் ஆள் இருந்தான். ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்கு எளிது. மருமகள்களின் போட்டி மனப்பான்மையில், அகப்பட்டதை சுருட்டிக் கொண்டு அவன் ஓடி விட்டான், பிறகு வேறு ஒருத்தன்...

சமையல் இல்லாவிட்டால் என்ன? ஓட்டல் எதற்கு இருக்கிறது? மாடியறைகளில் மொஸையிக் தரை, பீரோ, கட்டில்... எல்லா அலங்காரங்களும் இருந்தன.

கீழே பழைய சிமெண்ட் தரை, பழைய அம்மா அலங்கோலமாகக் கேட்பாரற்றுக் கிடந்தாள்.

"இத்தனை நாள் நான்தானே அத்தையைப் பார்த்துக் கிட்டேன். உங்க தம்பி சம்சாரம் கவனிக்கட்டுமே!" பெரிய மருமகள் முணுமுணுத்தாள் கணவனிடம்.

"என்னால் முடியாது. மூணு பொணுணுங்க இருக்காங் களே, போகட்டுமே" சிறியவள் முகத்தைக் கடுத்துக் கொண்டாள்.

பிள்ளைகளைப் பெற்றுவிட்டு, பெண்கள் வீட்டில் போய் இருக்க முடியுமா?

"ஒரே இடத்தில் இருந்தா வெறுத்துப் போகும்மா கொஞ்சம், கொஞ்சம் மாத்தமா இருந்திட்டு வரது" என்றான் சிங்காரவேலன்.

சணபகம், அதையும் செய்து பார்த்துவிட்டாளே. பெரியவளைக் கொடுத்த இடத்தில் கழுத்து மட்டும் சம்சாரம், மாமி, நாத்தி, மைத்துனர் என்ற கும்பலில் அவள் வேறா? திரும்பி விட்டாள்.

அடுத்தவளின் கணவன் ஒரு மாதிரி. பேசவே மாட்டான். பேசினால்...? "பிள்ளைங்க வீட்லதான் பெத்தவ இருக்க ணும்" வாழைப் பழத்தில் ஊசி ஏற்றுவான்.

கடைக்குட்டி மகள், குழந்தை குட்டிகள் பெருகிவிட்ட குடும்பத் தலைவி. கணவனுக்குத் தெரியாமல் அம்மா கையில், ஐந்தோ, பத்தோ கொடுத்து தன் ஆழ்ந்த அன்பைத் தெரிவிக்கத்தான் அவளால் முடிந்தது.

"அம்மா? இந்தாங்க" காப்பியுடன் வந்தாள் சின்னம்மா. ஆவலுடன் அதைப் பருகிய சண்பகம் ஒரு முடிவிற்கு வந்து விட்டிருந்தாள்.

மறுநாள் அவளைப் பரிசோதித்த டாக்டர் அவளைப் பார்த்துப் புன்னகைத்தார். "பணக்காரங்களுக்கு வர



வேண்டிய நோய்தான் வந்திருக்கு. 'டயபிடீஸ்' நோய். உங்களுக்கு என்னம்மா...வசதி இருக்கு. வைத்தியம் செஞ்சுக் கலாமே!" என்றார்.

சண்பகம், தன் மனதினுள் பொங்கிய கசப்பை விழுங்கிக் கொண்டாள். பல லட்சத்திற்கு அவள் வெறும் பெயருக்குத் தான் அதிபதி என்ற உண்மை அவருக்கு எப்படித் தெரியும்?

டாக்டர் எழுதித் தந்த சீட்டை, சிங்காரவேலன் பார்த் தான். "வேறே வேலை இல்லே இந்த டாக்டருக்கு. பணம் இருக்கறவன்னு தெரிஞ்சா போதுமே" சீறினான்.

சின்னவன் காதிலேயே போட்டுக் கொள்ளவில்லை சண்பகத்தின் பெற்ற வயிறு கொதித்தது. பத்து மாதம் சுமந்து பெற்ற தாய் அவள். இரவு பகல் பாராமல் ஓயாத இயந்திரமாக உழைத்தவள். தன் குழந்தைகள் என்று ஆசை, ஆசையாக கண்ணும் கருத்துமாகப் பாடுபட்டவள். இப்போது, அந்த தாய் என்ற இயந்திரத்திற்கு இடம் இல்லை, மனம் புண்ணாகிப் போனது.

திடீரென, சண்பகத்திற்கு அந்த யோசனை உதித்தது அன்று ஒரு நாள், சின்னம்மா, எவருக்கும் தெரியாமல் வாங்கி வந்த ரொட்டித் துண்டை சுற்றியிருந்த, தினசரித்தாளில் வந்திருந்த செய்தி.... "முதியோர் இல்லம்" திறப்பு விழா. அது பற்றிய விவரங்கள், யாவற்றையும் அறிந்து வைத்திருந் தாள்...ஏன் இப்படி செய்தால் என்ன?

பெரிய மகள் சென்னையில்தான் இருக்கிறாள். மெதுவாகப் புறப்பட்டுப் போய்விட்டு, தன் கையிலும், கழுத்திலும் இருக்கிற நகைகளை எவருக்கும் தெரியாமல் பணமாக்கிக் கொண்டு... "முதியோர் இல்லத்" தலைவியை சந்தித்தால் என்ன?

சண்பகம் நாட்களை வீணடிக்கவில்லை. அதற்குத் தகுந்தாற்போல், அவளது காலில் ஒரு புண் ஆறாத ரணமாக இருந்தது.

"பட்டணத்துல டாக்டர் கிட்ட காட்டிட்டா தேவலை பெரியவகிட்ட போறேன்" கிளம்பி விட்டாள். சின்னம்மா விடம் மட்டும் அன்பாக விடைபெற்றாள்.

தாயின் திட்டத்தை, பெரிய மகள் ஏற்றுக்கொள்ள மறுத்துப் பிடிவாதம் பிடித்தாள். "கூடாதும்மா! நாங்க இத்தனை பேர் இருக்கோம். நீங்க அனாதை மாதிரி இருக்க இடம் இல்லாம அங்க போய் கடைசி காலத்தைக் கழிக்கிற தாவது. மேலும், யாருமே இல்லாத அனாதைங்களைத் தான் அவங்க வச்சுக் கொள்வாங்களாம்."

சண்பகம் விடவில்லை. முதியோர் இல்லத்தலைவி ஞானம்பாளை சந்தித்தாள். கண்களில் கண்ணீர் திரை யிட்டது. தன் கதையைப் பூராவும் சொன்னாள்.

"தயவு செஞ்சு என் வேண்டுகோளை மறுக்காதீங்க. என் நகைகளை வித்து பத்தாயிரம் ரூபாய் நன்கொடையா இந்த இல்லத்திற்குக் கொண்டு வந்திருக்கேன். எனக்கு இங்கே இருக்க ஒரு இடம் மட்டும் குடுத்திடுங்கம்மா. என்னால ஆன வேலையை நான் செய்வேன்."

தலைவி தயங்கினாள். "இங்கே ஆதரவற்றவங்களுக்கு மட்டும்தான், இடம் கொடுக்கறதுன்னு கொள்கை வச்சிருக்கோம்."

சண்பகம் வறட்சியாகச் சிரித்தாள்.

"உண்மைதான். அந்த வகையில் நானும் எல்லாம் இருந்தும் ஒருத்தருக்கும் வேண்டாததினால் ஆதரவு அற்றவள் தான். இதுக்குக் காரணம் நம்ப நாட்டிலே பெண்கள் பிறந்ததும் பெத்தவங்களுக்கு சுமைன்னு வளர்க்கிறாங்க. பிறகு கணவன்—பிறகு பிள்ளைங்கன்னு அவளை வெறும் பாரமாகவே மதிக்கிறதுனாலே அவளுக்குன்னு ஒரு தகுதியே இல்லாம போயிடுது. இப்ப என் கதியும் அதுதாம்மா. பிள்ளை பெறுவதும், வளர்ப்பதும், கணவனுக்கு மனைவியா வாழ றதும், சமைக்கறதுமா வெறும் யந்திரமா வாழ்ந்துட்டேன். இந்த யந்திரம் இப்போ பழுதடைஞ்சி போச்சு. எவருக்குமே பயன்படாம போயிட்டது. ஓட்டை உடைசல் சாமான் களைப் போட்டு வைக்கிறதுபோல ஒரு இடம் தந்து உதவினா புண்ணியமா இருக்கும். உங்களைக் கையெடுத்துக் கும்பிட றேன் அம்மா..." —தழுதழுத்த குரலில் கூறிய சண்பகம் தன் இரு கரங்களையும் கூப்பியபடி விம்மி அழுதாள்.



தலைவியின் மனம் பாகாய் கரைந்தது.

"கவலைப்படாதீங்க அம்மா. உங்க நிலமை எனக்கு புரிகிறது. நன்றிகெட்ட பிள்ளைகளின் செய்கையால் ஒரு தாயின் மனம் புண்பட்டு அவளது உணர்வுகள் ஊமையாகிப் போய் விடுகிறது. இது ஊனமுற்றோருக்கு மறுவாழ்வு தரும் பணியில் உலகமே ஈடுபட்டிருக்கும் ஆண்டு. உங்கள் உள்ளத் தில் ஏற்பட்டிருக்கும் ஊனத்திற்கு... மறுவாழ்வு உண்டு. எங்கள் கொள்கைகளை தளர்த்திக்கிறோம். இன்னிக் காலை யிலே ஆறாம் எண் அறையில் இருந்த வயதானவங்க இறந் திட்டாங்க. உங்களுக்கு மறுப்பு இல்லேன்னா அந்த அறையை..."

உணர்ச்சி வசப்பட்ட சண்பகம் தலைவியின் கையை கெட்டியாகப் பற்றிக் கொண்டாள்.

"அம்மா! உசிரோட இருந்து எனக்கு இடம் கொடுக்க மறுத்த என் பிள்ளைகளைவிட செத்துப்போய் எனக்காக இடம் ஒழிச்சுக் கொடுக்கிறாங்களே... அவங்களை நான் தெய்வமா நினைக்கிறேன். எனக்கு 'ஆறாம் நம்பர் அறை யையே கொடுங்கோம்மா" என்றாள் உறுதியுடன்.

"உற்றார் யார் உளரோ? உயிர் கொண்டு போம் பொழுது குற்றாலத்துறை கூத்தனல்லா நமக்குற்றார் யார் உளரோ!"

ஆறாம் எண் அறையில் இருந்தவளின் ஆன்மா சாந்தி அடைய அந்த இல்லத்திலிருந்த மற்றவர்கள் தோத்திரம் இசைப்பது கேட்டது.

உண்மைதான்! இந்த உலகிற்குத் தனியாகதான் வந்தோம், தனியாகத்தான் போகப் போகிறோம். உறவு என்ற போலிக் கூட்டத்தைப் பிரிந்து இப்படி ஒரு இல்லத்திற்கு வந்து மற்றவர்களுடன் வாழ தயக்கமேன். அவளை ஒத்த பெண்கள் இப்படித்தான் செய்ய வேண்டும்... எண்ணியபடியே அந்த பிரார்த்தனையில் அவளும் கலந்து கொண்டாள்.

□

# மீண்ட சொர்க்கம்

என் அலுவலகத்திலேயே நான் அதிகமாக பெண் ஊழியர்களுடன் தேவைக்கு மீறி பேச்சு வைத்துக் கொள்வதில்லை.

பெண்கள் நிழலே தன்மேல் படக்கூடாது என்று இமய மலைக்கு ஓடி விடும் துறவியல்ல நான். அழகான பெண்களைக் கண்டால், ஒரு தடவைக்கு இரண்டு தடவை திரும்பிப் பார்க்கும் சராசரி மனிதன் தான். ஆனால் குடும்பம் என்ற பந்தத்தில் அகப்பட்டுக்கொண்டதால், கண்ணியமாகவும்—ஒழுக்கத்துடனும் வாழவேண்டும் என்ற பொறுப்புணர்வு உடையவன்.

என் அலுவலகத்தில் கணக்குப் பகுதிக்கு நான் தலைவன். பல கணக்கர்கள், தட்டெழுத்துக்காரர்கள் எல்லாரும் என் அதிகாரத்தின் கீழ் பணி புரிபவர்கள். அவர்களில் சிலபெண்களும் உண்டு.

புதிதாக பம்பாய் கிளையிலிருந்து எங்கள் அலுவலகத்திற்கு மாற்றலாகி வந்த ரேவதி ஒரு கணக்கர்...அந்த செதுக்கி வைத்த மூக்கும், உதடும்... ஏயப்பா...! கோதுமை நிறத்தில் சீரான ஒப்பனையில், மிக அழகாகவே இருப்பாள். வண்ண வண்ணசேலை கட்டி, வண்ணத்து பூச்சியாக அவள் வருவதைக் கண்டு, எங்கள் அலுவலத்து ஆண்களில் பலர்

மனது 'படக்' படக்கென ரகசியமாக துடிக்கும். அதே அனுபவம், அடியேனுக்கும் சில நேரங்களில் ஏற்பட்டதுண்டு!

பேச்சிலும் அவள் சாமர்த்தியக்காரி. நான் மட்டும், கொள்கை, குடும்பம் என்ற காரணம் இல்லையென்றால்... வந்த முதல் ஆண்டே சரஸாவை மணந்து கொண்டிராவிட்டால்... கட்டாயம் ரேவதியின் கழுத்தில் மாலையிட்டிருப்பேன்.

மேனகையிடம் விஸ்வாமித்திரன் ஏன் தடுமாறிப் போனார் என்பது எனக்கு ரேவதியைப் பார்த்தது முதல் விளங்கி விட்டது. அப்படி ஒரு மனங்கவர் தோற்றம். உணர்வுகளைச் சுண்டிவிடும் பேச்சு...ரேவதியிடம் மனம் தடுமாறுவதில் தவறு என்ன?

ஆனாலும், நான் ஒரு உண்மையான, மானமுள்ள மரியாதையுள்ள கணவனல்லவா? எச்சரிக்கையாக எந்த விதத் தவறும் நேர்ந்து விடக்கூடாது என்று என் கடன் ஆபீஸ் பணி செய்து கிடப்பதே என்று இருந்தேன். ஆனால், இத்தனை உத்தமனான கணவனைப் பற்றி என் மனைவி அறிந்தாளா? அறியத்தான் மனப்பக்குவம் இருந்ததா?

வேலைக்குக் கிளம்பும் சமயம், என்னிடம் 'சள்'ளென்று எரிந்து விழுவாள். சரி. வீடு திரும்பும் சமயம் களைத்து வரும் எனக்கு சூடாக ஒரு தம்ளர் காப்பி... ஊஹூம், சூடாக வார்த்தைகள் வரும். இல்லை என்றால் அவளுக்குத் தலைவலி வந்துவிடும்.

பல சமயங்களில் என் மீது காட்ட வேண்டிய கோபத்தை, பாவம், பச்சைக் குழந்தைகள் முதுகின் மீது காட்டுவாள். அவர்களது அலறல் சங்கீதம் என்னை வீட்டை விட்டு ஓட, ஓட விரட்டிவிடும்.

அன்று காலையும் வழக்கமான போர்க்களக் கோலத்தோடு சரஸா என்னை ஆபீஸ் அனுப்பி வைத்தாள். எனக்கு ஒரே ஆத்திரம்.



பெண்களின் துயருக்கெல்லாம் ஆண்களே காரணம் என்று சில கதை ஆசிரியர்கள் எழுதுவதைப் படிக்கும்போது.... எரிச்சல் பற்றிக்கொள்ளும். என் துன்பம், வாழ்வில் நான்படும் அவஸ்தைகள் எல்லாவற்றிற்கும் ஒரு பெண்தான் காரணம். பெண் படுத்தும்பாடு என்று என்னைப்போலத் தவிக்கும் ஆண்களின் அவல நிலையை ஏன், இதே கதாசிரியர்கள் படம் பிடித்துக் காட்டக் கூடாது?

எனக்கு வாய்த்த மனைவி முரட்டுக் குணம் கொண்டவள். அவள் அக்காவிற்கு, வரதட்சிணை, சீர் செனத்தி என்று அவள் தகப்பனார் செலவழித்துத் திருமணம் செய்து கை சளைத்துப் போயிருந்தார். வரதட்சிணை வாங்காத கொள்கைக்காரன் என்றிருந்த அசடு நான் வலியப் போய், அவரது நல்ல காலத்திற்குச் சிக்கிக் கொண்டேன்.

கல்யாணச் செலவும், என்னுடையது. நகைகளும் நானே போட்டது என்ற மகத்தான பெருமையில் சரஸாவை மனைவியாக்சிக் கொண்டு மகிழ்ந்தேன். இப்படிப்பட்ட உயர்ந்த கொள்கையுள்ள அன்பான கணவன் வாய்த்தாரே என்று அவளும் நன்றியுடன் இருப்பாள் என எதிர்பார்த்தேன். அத்தனையும் நாசம்.

முதல் இரண்டு மாசங்கள், தன் முரட்டுக் குணத்தைக் காட்டாமல் இருந்த ஸரஸா... அப்பப்பா... "சும்மா இருக்கியா சொரூபத்தைக் காட்டவா?" என்ற முறையில் பத்ரகாளியாக மாறினாள்.

இப்படிப்பட்ட தாம்பத்தியத்தில் நான் செய்த அசட்டுத் தவறுகள், ஐந்து குழந்தைகள். என்ன செய்வது? நடுத்தர வர்க்கத்து குடும்பத்தில், "இரண்டுக்கு மேல் வேண்டவே வேண்டாம்" என்பது எனக்கும் தெரிந்திருந்தது. ஆனால், பொறுப்புள்ள மனிதனாக, அறுவை சிகிச்சை முடித்துக் கொள்ளுமுன் அடுக்கடுக்காக ஐந்து புத்திர செல்வங்கள் தோன்றி விட்டன.

குடும்பக் கட்டுப்பாடு செய்து விட்டால் போதுமா? குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டாமா? பீடி, சிகரெட் போன்ற கெட்ட பழக்கம் எதுவும் என்னிடம் கிடையாது. வீடு விட்டால் ஆபீஸ், ஆபீஸ் விட்டால் வீடு... என்று வாழ்ந்தேன்.

பிறந்தநாள், பண்டிகை என்று வந்தால் சரஸா, குழந்தைகள் என்று அவர்களுக்கு துணிமணிகள் வாங்கத் தவற மாட்டேன். மணநாள் கொண்டாடுவேன், பொங்கல் விருந்தும் நன்றாகக் கொண்டாடுவேன். வீட்டுச் செலவுக்கு மனைவி கையில் தாராளமாகப் பணம் கொடுப்பேன். எனக்குத் திடீரென ஏதேனும் ஆகிவிட்டால்...என் குடும்பத்தைக் காப்பாற்ற ஆயுள் இன்ஷியூரன்ஸ் எடுத்திருக்கிறேன். குழந்தைகளின் வருங்காலப் படிப்புக்கும், சிறு சேமிப்புத் திட்டத்திலும் பங்கு கொண்டிருக்கிறேன்.

இவ்வாறு உழைத்து ஓடாகிவிட்டு, ஸ்கூட்டரிலே வீடு திரும்பி, அதை நடையில் தூக்கி வைத்துவிட்டு, "அப்பாடா!" என்று வந்து விழுந்தால்...? அதை ஏன் கேட்கிறீர்கள்...என் வயிற்றெரிச்சலை...

அழுக்குப் புடவையும், பரட்டைத் தலையுமாக நிற்கும் சரஸாவிடம்...நான் வாங்கி வந்த மல்லிகைப் பூவை நீட்டும் போது...எத்தனை ஒரு சிடுசிடுப்பு?

"ஆமா...இது ஒண்ணுதான் குறைச்சல். இந்த பிசாசுகளோட போராடவே நேரம் பத்தலை...உக்கும்"

"பாவம் குழந்தைங்க" மென்று விழுங்குவேன்.

"அது மட்டுமா? வீட்டு வேலை...முதுகு பிளந்து போகுது" நெருப்பு வீசும் வார்த்தைகளால் சுடுவாள். 'சீ' என்று ஆகிவிடும் எனக்கு.



அன்றும், விடாப்பிடியாக, கதம்ப சரத்துடன் வீடு திரும்பினேன்.

"இந்தா! முதல்ல முகத்தைக் கழுவி, பொட்டு வச்சு, தலை சீவி, இந்த பூவை வச்சிட்டு வா" அருமையாகச் சொன்னேன்.

வியர்வை வழியும் முகமும், அலங்கோலமான தலையுமாக, கசங்கிய சேலையுடன் நின்ற என் அருமை மனைவி வெறித்துப் பார்த்தாள்.

முன்னறையில் நான் அழகுபடுத்த போட்ட மொஸயிக் தரையில் என் ஆறுமாத வாரிசு ரஜினி, சிறுநீர் கழித்து விட்டு அதன் மீது உழன்று கொண்டு கிடந்தது.

இரண்டு வயது மகள் வளர்மதி...நான் பார்த்துப் பார்த்து வாங்கிய சோபாவின் மீது மண் காலுடன் ஏறி, 'தொம்' 'தொம்' என நடனமாடிக் கொண்டிருந்தாள்.

ஆறுவயது மகன் அருண், வீட்டின் மூத்த மகன் சுவரிலே, தனது ஓவியத் திறமையின் கைவரிசையைக் காட்டிக் கொண்டிருந்தான்.

வேலை பார்க்குமிடத்தில் தவணை முறையில் கடன் வாங்கி நான் கட்டிய வீடு. சுவருக்கு சாயம் அடிக்க எத்தனை பணம் பிடித்தது...? எப்படியெல்லாம் திண்டாடினேன் என்பது எனக்குத் தானே தெரியும்?

"சரஸா!" அடக்கமாட்டாத சினத்துடன் வீரிட்டேன்.

"எதுக்குக் கூப்பாடு போடுறீங்க?" அலங்கோலமான என் அருமை மனைவி பதிலுக்குக் கத்தினாள்.

அதற்கு மேல் என் பொறுமையும், பொறுப்பும் உச்ச வரம்பை தாண்டிவிட்டன. அணையை உடைத்துவரும் வெள்ளமெனப் பொங்கி வழிந்தது கோபம்.

"இதென்ன குடித்தனமா? இல்லே..."

பதில் சொல்லாமல் உள்ளே புயல் வேகத்தில் பாய்ந்தாள் சரஸா. அவ்வளவே.... பிறகு பாத்திரங்கள் உருண்டன பளார் பளார் என குழந்தைகள் முதுகில் இடிகள் இடித்தன. தரையில் கிடந்த குழந்தையை அலாக்காகத் தூக்கி குழாயடியில் பச்சை நீரில் 'ஜோ' வெனக் குளிப்பாட்டினாள்.

சாப்பிடும் சமையல பாத்திரங்கள் 'நங்' கென்ற ஓசையுடன், தரையில் அமர்ந்தன. கைகேயி போன்ற கோபத்துடன் வேறு எதையும் கவனிக்காமல், படுக்கையறைத் தரைமீது குப்புறப் படுத்துக் குலுங்கி அழுதாள் சரஸா.

என் கோழை மனம் வழக்கம் போல் 'ஜகா' வாங்கியது. மெல்ல, அவளருகில் சென்று 'சரஸா' எனக் குழைந்தபடி தோளைத் தொட்டேன். அடுத்த விநாடி மின் விசையால் தாக்கப்பட்டவள் போல்... துள்ளி எழுந்தாள்.

"நான் குடித்தனம் செய்யலை, தடித்தனம் செய்யறேன். இனிமே நீங்க பெத்த செல்வங்களை நீங்களே பார்த்துக் கொள்ளுங்க. நான் என் கைக்குழந்தையோட பிறந்த வீடு போகிறேன்" பயமுறுத்தலுடன் ஒப்பாரி வைத்தாள்.

என் தலையெழுத்தை நொந்துகொண்டு, குழந்தைகளை கவனித்துவிட்டு, தூங்கப் போனேன். மறுநாள் வழக்கம் போல் இடி, மழை, மின்னல் எல்லாமே என் இல்லற வானில் தோன்றின.

ஆபீஸ் புறப்படும் அவசரம், கோபம், யாவுமாகச் சேர்ந்து, "எங்கேயாவது ஒழிஞ்சு போ. எனக்கு நிம்மதியா வாழணும்." வெடித்துவிட்டுக் கிளம்பி விட்டேன்.

மாலை வீடு திரும்பியவனுக்குப் பெருத்த அதிர்ச்சி. எங்கள் வீட்டு வேலை செய்யும் கிழவி மருதாயியும் நான்கு குழந்தைகளும், பரிதாபமாக விழித்தபடி முன்னறையில் உட்கார்ந்திருந்தனர்.



"தம்பி! அம்மா கோவிச்சிட்டு கைக்குழந்தையோட ஊருக்குப் புறப்பட்டுப் போயிட்டாங்க."

"ஐயையோ!"

"கவலைப்படாதிங்க. புருஷன் பெண்சாதிக்குள்ள இதெல்லாம் சகஜம். அவங்க தானே திரும்பி வருவாங்க. அதுவரை குழந்தைகளை நான் பார்த்துக்கறேன்" மருதாயி அபயம் அளித்தாள்.

நாட்கள் நகர்ந்தன. சரஸா... வீம்புக்காரி... சப்தமே இல்லை அவளிடமிருந்து. அன்று வெறுப்புடன் ஆபிசிற்குப் போனேன்.

"சார்" தேன் குரல் என் காதைத் தழுவியது. திரும்பினால் ரேவதி! முன்னைவிட அழகாக ஒயிலாக சிரிப்பாக... என் மனமும் தடுமாற ஆரம்பித்தது.

பற்கள் பளிச்சிட, பவள உதடுகள் புன்னகை நெளிய என் உணர்வில் நெருப்பை அள்ளிப் போட்டபடி, என் அருகில் வந்து நின்றாள். ஏதாவது பேச வேணுமே!

"ஒருதலை ராகம் பார்த்துட்டியா ரேவதி!"

"இல்லே சார்! எனககு யாராச்சும் கூட துணையா வந்தா..."

"ஏன் நானே வரவா?" இளித்தேன.

"உண்மையாகவா?" அவள் குறும்பாகப் பார்த்தாள்.

காசிக்குப் போயும், சனீஸ்வரன் விடாத கதைதான். நானே எனது ஏகபத்தினி விரதத்திலிருந்து சிறிது வழுவி, சினிமா பார்க்க போனால்... அங்கே என் நெருங்கிய நண்பன் சந்திரனும் அவன் மனைவியும் வந்து தொலைக்க வேணுமா?

இடைவேளையில் இருப்புக் கொள்ளாமல் எழுந்து வெளியே குற்றவாளிபோல குறுகுறுக்க நின்ற என்னை நண்டு பிடி போட்டு நிறுத்தினான் சந்திரன்.

"இது உனக்கே நல்லா இருக்காடா? அண்ணக்குத் துரோகம் செய்ய நினைக்கறே! நீ செய்யற வேலையா இது?" அடிக்குரலில் பற்களைக் கடித்தான்.

நான் ஆத்திரத்துடன் என் மனைவி படுத்திய பாட்டை கொட்டித் தீர்த்தேன்.

"ஒரு தவறை சீராக்க இன்னொரு தவறிலே போய் மாட்டிக்கப் பாக்கற முட்டாளாடா நீ! இந்த ரேவதி பலே ஆள்னு உனக்குத் தெரியாது. பம்பாயில எத்தனை பேரை ஏமாத்தி, அவங்க குடும்பத்தையே தெருவிலே நிறுத்தியிருக்கான்னு எனக்குத் தெரியும். முதல்ல அவ பழக்கத்தை வெட்டிக்கோ."

"என் மனைவி..."

"அடேய் முட்டாள் தோழா! நீ ஷேக்ஸ்பியரின் "டேமிங் ஆப் தி ஷ்ரு" படிச்சிருக்கியா?"

"உம், படிச்சிருக்கேன், அடங்காப்பிடாரியை அடக்கி ஆண்ட கதைதானே."

"உன் மனைவிக்கு, சரியான பாடம் நான் கற்பிக்கிறேன்."

"எப்படி?"

"என் மனைவி கிட்ட சொல்லி ஒரு கடிதம். "உன் கணவன் ரேவதி என்ற ஆபீஸ் பெண்ணுடன் சுற்றோ சுற்று என்று சுற்றுகிறார். இருவரும் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறார்களாம். உன்னை விவாகரத்து செய்வார் போல இருக்கிறது! நீயும் உன் குழந்தைகளும் அம்போ! "பிறகு பாரேன்." தியேட்டரில் அதற்குமேல் நான் நிற்கவில்லை.

ஞாயிற்றுக்கிழமை தினத்தாளில் மூழ்கியிருந்தேன். வாயிலில் 'டாக்சி' நின்ற ஓசை கேட்டது.



என் மாமனார் பாவம்! பயணக் களைப்பில் தள்ளாடிய படி இறங்க, பின்னால் என் மனைவியும், கைக் குழந்தையும்...!

"எங்க வந்தீங்க!" முறைத்தேன் நான்.

"மாப்பிள்ளை! சரஸாவை கோவிக்காதீங்க. ஏதோ அறியாம தவறு நடந்திட்டது. அவளை ஏத்துக் கொண்டு" பேசமுடியாமல் குரல் தழதழத்தது.

எனக்கு சிரிப்புத் தாங்க முடியவில்லை. கெஞ்சினால் மிஞ்சுவதும், மிஞ்சினால் கெஞ்சுவதுமாக? இருப்பினும் சிரிப்பை அடக்கியபடி மிடுக்காக, "சரி! சரி!" என்றேன்.

சரஸா என் அறைக்குள் வந்தாள். "என்னை மன்னிச்சுடுங்க. இனிமேல... நான்..." அவள் ஓவென்று அழுதாள்.

இளகிய மனதை இழுத்துப் பிடித்தேன். "பர்த்தாவிற்கு ஏற்ற பதிவிரதை இல்லாட்டி கூறாமல் சந்நியாசம் கொள்"னு சொன்னாங்க. நான் இந்தக் காலத்து ஆசாமி. சந்நியாசம் வாங்க மாட்டேன். இன்னொரு சம்சாரம் வாங்குவேன், நினைவிருக்கட்டும்" மிரட்டினேன்.

அதே சமயம் என் மனதினுள் இரக்கம் மேலிட்டது. சரிசமமாக பாவித்து சகல உரிமைகளையும் தந்தபோது அடிபணியாத என் அசட்டு சரஸா, இப்போது எள் என்றால் எண்ணெயாக நிற்கிறாள் என் முன்.

மாலை நேரத்துக் களிப்பும், மன உல்லாச வாழ்வும் இப்போது எனக்குக் கிடைத்து விட்டன. இருந்தும் என் மனதில் அந்த உறுத்தல்... அதை அவளிடம் சொல்லத்தான் போகிறேன். இப்போதல்ல.... பேரன் பேத்தி எடுத்த பின்னர் ஒருநாள்... அவளை எப்படி வழிக்குக் கொணர்ந்தேன்... எப்படி வாழ்வில் மீண்ட சொர்க்கம் ஏற்பட்டது என்று!

□

# மெல்ல மெல்ல மற!

அன்று ஞாயிற்றுக் கிழமை. புறநகர் பகுதியில், பள்ளிக் கூடக் கட்டிடத்தில் காலை பத்து மணிக்கு மேல் ஆரம்பித்திருந்த மருத்துவ முகாமுக்கு கோகிலாவும் போய் இருந்தாள்.

பஸ் பிடித்து வீடு திரும்புவதற்குள் உச்சிப் பொழுதாகி விட்டிருந்தது. அவர்களுடன் வசித்த மாமனார், மாமியார், கோடையைக் கழிக்க, பங்களூரில் உள்ள சின்ன மகன் வீட்டிற்குப் போயிருந்தனர். வீட்டில் அவள் கணவன் கமல நாதனும் குழந்தைகளும்தான். சமையலை முடித்துவிட்டுத் தான் கிளம்பினாள்.

ஞாயிற்றுக் கிழமைகளில் அவள் கணவன் வீட்டில்தான் இருப்பான். குடும்பத்துடன், விடுமுறை நாளை இன்பமாகக் கழிக்க விரும்பும் ஒரு நல்ல கணவன் அவன். ஆனாலும் அவனுக்கு ஞாபக மறதி உண்டு. வாயிற் கதவைத் திறந்து வைத்துக் கொண்டு, குழந்தைகளுக்கு கதை சொல்லியபடி ஈஸிசேரில் சாய்ந்து, அப்படியே தூங்கிவிட்டால்.... எவனாவது உள்ளே புகுந்து...அதற்கு மேல் திகில் அவளை சிந்திக்க விடவில்லை.

வேகமாகப் பஸ்ஸைப் பிடித்து வீட்டு வாயிலுக்கு வந்தவள், உட்புறம் தாளிடப்பட்டிருந்த கதவைக் கண்டு நிம்மதிப் பெருமூச்செறிந்தாள்.



கதவைத் தட்டியதும், அருணா ஓடி வந்து கதவைத் திறந்தாள். "வந்துட்டிங்களா அம்மா. எங்களுக்கு ஒரே பசி. அப்பா சாப்பாடு போட்டாரு. முரனிப் புயலுக்குக்கூட ஊட்டிவிட்டாரு. அப்புறம், ஒரு கதை சொன்னாரு. ரொம்ப வேடிக்கையா இருந்துச்சு. சிரிச்சு சிரிச்சு...வலிறே வலிச்சிட்டுது" ஓடிவந்து தாயைத் தழுவிக் கொண்டாள் மகள். அவள் முடிமீது சிகரெட் மணம்?

கோகிலாவின் முகம் சுருங்கியது. அவள் கணவனுக்கு; குழந்தைகள் மேல் உயிர். குடும்பத்தில் அளவு கடந்த பாசம் உள்ளவன். ஏன்! கோகிலா மீதும் திருமணமாகி எட்டு ஆண்டுகள் ஆகியும், உயிரையே வைத்திருப்பவன். இன்னமும் அவளுக்குப் பூ வாங்கி வராமல் வீடு திரும்ப மாட்டான். பொங்கல், புத்தாண்டு, பிறந்த நாள் என்று மகிழ்ச்சியுடன் கொண்டாடுவான். பெரியவர்களிடம் மரியாதை காட்டுவான். ஸ்கூட்டர், டி.வி., ரேடியோ, சோபாசெட் என்ற வசதியான வாழ்க்கை. ஆயினும், இத்தனை நிறைவுகளிடையே ஒரு குறை...வைத்து விட்டானே!

புகை போக்கி போல, சதா...சங்கிலித் தொடராக புகை பிடிக்கும் ஒரு கெட்ட குணம் அவனுக்கு இருந்தது. அவளது வருங்காலத்தை பயமுறுத்திக் கொண்டிருந்தது.

உள்ளே நுழைந்தவள், முன்னறை மேஜை மீதிருந்த கண்ணாடிக் கிண்ணத்தைப் பார்த்தாள். பொசுக்கி, நசுக்கிப் போட்ட சிகரெட் துண்டுகள்...நிறைந்திருந்தன. பற்களைக் கடித்துக் கொண்டாள்.

"அம்மா ஜாலியா வெளியே போய்ட்டாங்க. அடியேன் அவங்க வரவுக்காக சாப்பிடாம உக்காந்திருக்கேன்" கமல நாதன் சிரித்தான்; அருகில் நெருங்கி வந்து...

கன்னத்திலே வந்து படிந்த மூச்சுக் காற்றில் சிகரெட் நெடி. அவளது எரிச்சல் பன்மடங்காயிற்று. "இந்த எழவு

புடிச்ச சிகரெட்டை எப்பத் தொலைச்சுத் தலைமுழுகப் போறீங்க" என்று உரத்துக் கூப்பாடு போட வேண்டும் போல் துடித்தது மனம்.

சாப்பிடும் சமயம், வாதம் செய்வது அவள் பழக்கமல்ல. கடுமையாக உழைக்கிற கணவன்—அந்த உழைப்பின் பயனாக உண்பது ஒரு பிடிசோறு. அதை அமைதியாக சாப்பிடட்டுமே என்ற எண்ணம்தான் காரணம்.

குழந்தைகளை முன்னறையில் விளையாட விட்டுவிட்டு, சாப்பாட்டை முடித்தாள் கோகிலா. அவன் திருப்தியுடன் அறையின் கட்டிலில் சாய்ந்து கொண்டான். சாத்துக்குடிப் பழத்தை சுளைகளாக ஒரு தட்டில் பரப்பி எடுத்துக்கொண்டு உள்ளே நுழைந்தாள்.

"டாக்டரம்மா என்ன சொன்னாங்க? விழுந்தடிச்சுக் கொண்டு ஓடினாயே" உல்லாசமாக சிரித்தான் கணவன்.

தகுந்த சமயம் என்று அவள் ஆரம்பித்தாள். "என்னைப் பரிசோதிச்சிட்டு, உடம்பிலே கோளாறு இல்லேன்னுட்டாங்க. சாதாரணமா பெண்களுக்கு இருபத்தஞ்சு வயசுல இருந்து ஐம்பத்தஞ்சு வயசு வரை, மார்பில புத்துநோய் வரலாம்னு சொன்னாங்க. அதை ஆரம்பத்திலியே கவனிச்சா, குணப்படுத்திடலாமாம்."

"உனக்கு ஒண்ணுமில்லேன்னு தெரிஞ்சிட்டுதில்லியா" கேலி செய்தான்.

"சாதாரண வியாதியா அது. அப்படி அசட்டையா இருக்க. அ! அவங்க கூட ஒரு புத்தகம் குடுத்தாங்க. "உங்க கணவர் புகை பிடிப்பாரான்னு" கேட்டுட்டு குடுத்தாங்க, இதோ பாருங்க" புத்தகத்தை அவன் முன் நீட்டினாள் சாமர்த்தியமாக.

"புகை —உங்களுக்குப் பகை! பேஷ்? இதை நீயே படிச்சுக் காட்டு" கமலநாதன் முகத்தில் புன்னகை மறையத் துவங்கியது.



"தென் அமெரிக்காவிலுள்ள பிரேசிலில் முதலில் ஆரம்பிச்சு—ஸ்பெயின் வழியா பிரிட்டனுக்கு வந்து பிறகு உலகம் முழுசும் பரவிட்டதாம் இந்த புகை பிடிக்கிற பழக்கம்.

புகை பிடிக்கிறவங்களுக்கு நூத்துக்கு இருபத்தஞ்சு பேருக்காவது சுவாசப்பையில புத்துநோய் வருதாம். புகை பிடிப்பதால் ரத்தக்குழல் சுருங்கிப் போகும். மாரடைப்பு வருவதற்கு வழியாகிறதாம். அது மட்டுமல்ல. இத்தோடு சங்கிலித் தொடராக, சளி, சுரம், வாய் ஓயாத இருமல், எரிச்சல், கைகளில் நடுக்கம், தூக்கமின்மை, பசியின்மை...இப்படி பல தொல்லைகள் ஏற்படுகின்றனவாம்."

"நிறுத்து! நிறுத்து! நான்தான் 'பில்டர்'டிப் சிகரெட் பிடிக்கறேனே. அதிலே, புத்துநோய் கொடுக்கும் விஷப் பொருள் வடிகட்டப்பட்டு விடுதே?" சொல்லியபடி அருகிலிருந்த சிகரெட் பெட்டியைக் கையிலெடுத்தான் அவன்.

"பில்டர்டிப்' சிகரெட் குடிச்சா...அவங்களுக்கும் புத்து நோய் மெல்ல வரும்னு, டாக்டரும் சொன்னாங்க."

"இதோ பாரு கோகிலா! இந்த பழக்கத்தை ஆனமட்டும் நிறுத்தப் பார்த்தேன். பாக்கைத் 'தின்னு மாத்தனும்னு முயற்சி செஞ்சேன். பாக்குத் தின்னா வாயிலே புத்துநோய் வரும்னாங்க. சரி! காப்பியைக் குடிச்சுப் பார்க்கலாம்னு பார்த்தேன். அது இருதயத்துக்கு கெடுதல்னாங்க. எதில இல்லே நோய்கள்? ஏதாவது வந்து தொலையட்டும் போ. ஏதாச்சும் நீ பேச்சு எடுத்தே...நான் மகா பொல்லாதவனா ஆயிடுவேன். ஆமாம்!" உரக்கக் கத்தினான் கமலநாதன்.

கணவன் மனைவி உறவுக்கே கத்தரிக்கோல் போடும் அளவிற்கு சிகரெட் இடையே புகுந்துவிட்டது குறித்து கோகிலாவிற்கு அழுகையே வந்துவிட்டது. அவன் ஆத்திரத்துடன் சிகரெட்டைப் புகைக்கத் துவங்கவே பின்,

பக்கத் தோட்டக் கதவைத் திறந்துகொண்டு வராந்தாவில் உட்கார்ந்து விட்டாள். குழந்தைகளுக்கு அப்பா, அம்மா சண்டை தெரிவானேன்? அதே சமயம் தாங்க முடியாத அழுகையால் உடல் குலுங்கியது.

கல்யாணமான புதிதில் அவள் கணவனது புகைப் பழக்கத்தைக் கண்டிக்க ஆரம்பித்தாள். அப்போதும் தர்க்கம் தான்.

ஒரு முறை அவர்கள் இருவரும் திருப்பதிக்கு போக நேர்ந்தது. சரியான கிராமம் ஒன்றின் சாலை ஓரத்து நிழலில் பஸ் நின்றது.

"அதோ பார்!" வேடிக்கையாக அவள் தோளில் இடித் தான் கமலநாதன்.

மொட்டைத் தலையும், முரட்டுச் சேலையுமான கிராமத்து பெண் ஒருத்தி வாயில் புகையும் சுருட்டுடன் போய்க் கொண்டிருந்தாள்!

"நல்லா இருக்கு. பொம்பிளைங்களும் இப்படி ஆரம் பிச்சா... உருப்பட்டா போலத்தான்" சினந்தாள் கோகிலா.

"ஏன் நம்ம ஊர்லயும், கிளப்—அது இதுன்னு, மேல் மட்டத்தில் இருக்கிற பெண்களும் சிகரெட் பிடிக்கறாங்க தெரியுமா? நான் மட்டும் ஏதோ தப்பு செய்யறது போல பேசறியே?"

"தப்புக் காரியத்துக்குக் கட்சி சேக்கறீங்களோ?" அடிக் குரலில் உறுமினாள் அவள். "முதல்ல உடம்பு கெடும் செலவு வேற..." அவள் முடிக்கு முன், பஸ்ஸை விட்டு இறங்கி சிகரெட்டைப் பிடித்து முடித்து விட்டுத்தான் பஸ் ஏறினான் கமலநாதன். அவ்வளவு வீம்பு!

குடிபோல இதுவும் அறிவையும் உடம்பையும் கெடுக்கும் ஆகாத பழக்கம். "ஒருநாள் சிகரெட் பிடிக்காட்டா இவர்



எப்படி எரிஞ்சு விழறார். எப்படியெல்லாம் சண்டை போடுவார்? ஆண்டவா! நீ தான் எப்படியாவது இவரைத் திருத்தணும்" எனப் பலமுறை கடவுளை வேண்டிக் கொள்வாள்.

"எப்படியாவது இந்தப் பழக்கம் தொலையட்டும் ஏழுமலையப்பா! உன் சந்நிதியிலே, என் உடம்பைப் போட்டு உருண்டு புரண்டு வந்து காணிக்கை செலுத்தறேன்" கண்ணீருடன் வேண்டிக் கொண்டாள்.

எத்தனையோ எடுத்துச் சொல்லியும், கெஞ்சியும் வழிக்கு வரவில்லையே என்று வேதனையில் உழன்று கொண்டிருந் தாள் கோகிலா.

ஒருநாள் ஆபீசிலிருந்து அவசரமாகத் திரும்பி வந்தவன் "கோகிலா! உடனே குழந்தைகளை உன் சிநேகிதி வீட்ல விட்டுட்டு, வீட்டைப் பூட்டிகிட்டு புறப்படு" என்றான். அவன் முகம் கலவரமடைந்திருந்தது.

"என்னங்க" பதறினாள் அவள்.

"நர்மதா நர்சிங் ஹோமில், என் சிநேகிதன் ராமலிங்கத்தை, ரொம்ப உடம்புக்கு முடியாம சேத்திருக் காங்களாம்."

"என்னது?"

சென்னையில் வேலை பார்த்த போது... ராமலிங்கம் குடும்பத்துடன் நெருங்கிய பழக்கம் உண்டு. கமலநாதனும் ராமலிங்கமும் ஒரே ஊரில் பிறந்து, வளர்ந்து, படித்து பட்டம் பெற்றவர்கள். வேலை தேடும் போது அவன் பம்பாய் புறப்பட்டு போனான். ஒரே ஆண்டில்தான் திருமணமும் நடைபெற்றது. ராமலிங்கத்தின் மனைவி சியாமளா மிக நல்ல பெண். அடிக்கடி ராமலிங்கம் கடிதம் எழுதுவாரே?

"புறப்படு... அவனுக்கு ஆச்சு போச்சுன்னு ஆயிட்டு தாம்" பரபரப்புடன் செயல்பட்டான்.

டாக்சி பிடித்து நர்சிங் ஹோமில் அவனது அறைக்குப் போனதும் பெருத்த அதிர்ச்சி அவர்களுக்கு.

வாட்டசாட்டமாக ஜம்மென்று இருந்த ஆருயிர் நண்பன் ராகலிங்கமா அது! தன் நினைவின்றி, பிடியில் அடங்கி விடுபவன் போல, எலும்புக் கூடாக...கட்டிலின் மேல் கிடந்தான். மூக்கில் ரப்பர் குழாய். உகமடக்கில் ஊசியுடன் இன்னொரு குழாய். அருகில் இரும்புக் கம்பத்திலே தலை கீழாக தொங்கிய குளுகோஸ் திரவம்... சொட்டு சொட்டாக உள்ளே இறங்கிக் கொண்டிருந்தது. சுற்றிலும் உறவினர்கள், கண்களில் கண்ணீரும் நெஞ்சில் வேதனையுமாக...

சியாமளாவைப் பார்த்ததும் அடி வயிற்றை ஏதோ ஒன்று சுருட்டிப் பிடித்தது கோகிலாவிற்கு.

"என்ன ஆச்சுங்க" கமலநாதன் மெதுவாகக் கேட்டான். ஜாடை செய்து அவர்களிருவரையும் அறைக்கு வெளியே அழைத்து வந்தாள் சியாமளா.

"எத்தனையோ சொல்லிப் போராடிப் பார்த்தேங்க, பிடிவாதமா புகை பிடிக்கற பழக்கம்... எப்பிடி கொண்டு வந்து விட்டுடுச்சு பாருங்க. ஒரு நாளைக்கு மூணு டப்பா சிகரெட் ஓயாம பிடிப்பாரு. ஓயாத இருமல். அதை அசட்டையா விட்டாரு. வாய் ஓயாம இரும ஆரம்பிச்சதும் டாக்டர் கிட்ட காட்டி, 'எக்ஸ்ரே' அது இதுன்னு பணம் தண்ணியா செலவாச்சு. குணம் தான் இல்லே கடைசியிலே சுவாசப்பையில புத்து நோய் வந்ததா கண்டு பிடிச்சாங்க. எப்படியாச்சும் குணப்படுத்திடுங்கன்னு டாக்டர் கால்ல விழுந்து கெஞ்சினேன். ஆனா... ஆரம்பத்திலியே சிகிச்சைக்கு வந்திருந்தா ஏதாவது செய்திருக்க முடியும். அதுவும் பூரண குணமாக்கிடுவோம்னு சொல்ல முடியாது. சுவாசப் பையி



லிருந்து புத்து நோய் கட்டியை அறுத்து எடுத்த பிறகு ஒரு அஞ்சு அல்லது ஆறு வருஷம் தான் நோயாளி வாழ முடியும். இவர் நல்லாவே தமது ஆரோக்கியத்தைப் பாழடிச்சுட்டிருக் கார்ன்னு சொல்லிட்டாரு. என் மனசு கேக்கலே.... பல டாக்டர்கள், கோயில் குளம்னு அலையறேன் பலன்...? இப்போ நீங்க பார்க்கறீங்களே" சேலைத் தலைப்பை வாயில அடைத்தபடி குமுறினாள் அவள்.

கமலநாதன் முகத்தில் முதல் முதலாகப் பயம் நிழலாடி யது. அன்று இரவே, ராமலிங்கத்தின் கதை முடிந்து விட்டது. அதில் அவன் நடுங்கி விட்டான்.

நண்பனின் இறுதிச் சடங்கு முடிந்த பிறகு, சில நாட்கள் கழித்து சியாமளாவைப் பார்த்து ஆறுதல் கூறச் சென்றனர் கோகிலாவும், கமலநாதனும்.

சுவரில் ராமலிங்கம் போட்டோவில் இருந்தபடி எப்படிப் பார்த்தான். அவன் மனைவியோ....? வெறும் கழுத்தும், வெறிச்சோடிய நெற்றியுமாக "வாங்க. உட்காருங்க" என்று வரவேற்றாள். கமலநாதன் மனம் 'திக்' கென்று ஆகி விட்டது.

சோகமே உருவாக நின்ற அவளை ஒட்டியபடி நின்ற குழந்தைகள், "அப்பா எப்பம்மா வருவாரு" என்று கேட்ட போது அவனது அடிவயிற்றில் பகீரென்ற உணர்வு.

சிறிது நேரம் ஆறுதல் சொல்லிவிட்டு மனைவியுடன் வீடு திரும்பிய கமலநாதன், வழியில் மறக்காமல் நாலு முழம் மல்லிகைப் பூவை வாங்கி வந்தான்.

வீடு வந்ததும், முதல் வேலையாக மனைவியிடம் பூவைக் கொடுத்தவன் கண்கள் கலங்கின.

"கோகிலா! பூவை தலை நிறைய வச்சுக்கொள்ளு எப்பவும். பொட்டும் பூவுமா, சந்தோஷமா நீ இருக்கணும்" என்றான். கோகிலா திகைப்புடன் கணவனைப் பார்த்தாள்.

"ராமலிங்கத்தின் மரணம் அவன் குடும்பத்தை எப்படி பாதிச்சுட்டுதுன்னு என் மனசு ரொம்ப துடிச்சுப் போயிட்டுது கோகிலா! இனிமே, இந்த சிகரெட் பழக்கத்தைவிட முயற்சி செய்றேன்! ஆனா நான் ஒரு சராசரி மனிதன். கொஞ்சம் கொஞ்சமா விட முயற்சி செய்றேன். ஏன்னா, சியாமளா போல, உன்னையும் குழந்தைகளையும் நிறுத்திட்டு, நோயில கஷ்டப்பட்டு சாக நான் விரும்பலை" தழுதழுத்தது அவன் குரல்.

அவன் வாயைப் பொத்தினாள் அவள்.

"அப்படி சொல்லாதீங்க. இந்த பழக்கத்தை திடீரென விடறது சிரமம்தான். ஒப்புக்கறேன். ஆனா மெல்ல, மெல்ல மறக்க முயற்சி செய்யுங்க. நானும் உதவி செய்றேன்" என்றாள் உணர்ச்சி வசப்பட்டவளாக.

"நானும் ஒத்துழைக்கிறேன். சிகரெட் பிடிக்கணும்னு தோணிச்சா, தண்ணீரை மொண்டு கப, கபன்னு வயிறு நிறைய குடிச்சிடறேன். தேகப் பயிற்சி செய்யறேன். காப்பி சாப்பிட்டதும் சிகரெட் பிடிக்கணும்னு தோணுதா... வேண்டாம் 'டீ' சாப்பிடறேன். என் கைக்கு சதா வேறு நல்ல வேலை கொடுக்கறேன். குழந்தைகளுக்கு பாடம் சொல்லித் தரேன். எழுதறேன். அவங்களோட விளையாடறேன். ஓய்வு நேரத்தில் தோட்டம் கொத்தறேன். ஆபீஸில், மும்முரமா வேலையில் ஈடுபடறேன். இடைவேளையிலும், என் கவனத்தை புத்தகம் படிக்கவோ, அல்லது ஸ்ரீ ராமஜெயம் எழுதவோ முயற்சி செய்வேன். போதுமா? எப்படியாவது இந்த சிகரெட் அசுரனின் பிடிகளிலேருந்து என்னை மெல்ல விடுவிச்சுடு கோகிலா!" கெஞ்சினான் அவன்.



"அதுதானே என் முதல் பணி. சிகரெட் கிடைக்கலைன்னு கோபமா வந்தா, என் கன்னத்திலே ஓங்கி ஒரு அறை குடுங்க...எரிச்சல் குறைஞ்சிடும்" உற்சாகமாகக் கூறினாள் கோகிலா.

"ஐயையோ! இந்தப்பட்டு கன்னத்திலா! ஊஹூம் என் நண்பனின் மரணம் கொடுத்த அடி, என் மனசிலே விழுந்திட்டதே....அதுவே போதும்."

"ஆண்டவா! அதிர்ச்சி உருவத்திலே எங்களுக்குத் துணை புரிஞ்சியாப்பா" மனதினுள் நன்றி கூறியபடி கோகிலா உட்பக்கம் சென்றாள்.

அவர்கள் இனி தீவிரமாக முயல்வார்கள். கமலநாதன் புகை மூட்டத்திலிருந்து விடுபட்டு, ஒரு ஆரோக்கியமான மனிதனாக, நீண்டகாலம், பூவும் பொட்டுமாக கோகிலாவுடன் வாழ்வான். பேரன், பேத்திகள் எடுத்து பல்லாண்டு இன்பமாக வாழ்வான். இது உறுதி!

□

# வாழ்க்கை வாழ்வதற்கே

கடற்கரையில் மணல் மீது அவர்களிருவரும் அமர்ந்து கொண்டனர். மாலை மஞ்சள் வெயில் மங்கத் தொடங்கி விட்டிருந்தது. சில்லென்று கடல் காற்று மல்லிகைப் பூவின் மணத்தை வாரி முகத்திலே வீசியதும் சரவணன் திரும்பிப் பார்த்தார். பூக்காரப் பையன் "மல்லிப்பூ! கதம்பம்! என்று கத்திக் கொண்டு மணல் மீது இங்குமங்கும் ஓடிக்கொண்டிருந்தான்.

மனைவி சரோஜாவுக்கு ஒரு முழம் கதம்பம் வாங்க அந்தப் பையனைக் கைதட்டிக் கூப்பிட எழுந்த ஆவலை அடக்கிக் கொண்டார்.

நோயுற்றவன் போல பொலிவிழந்த முகத்துடன் எதிரே உட்கார்ந்திருந்த மகன் அருணைப் பார்த்து அவர் உள்ளம் மிகவும் வேதனைப் பட்டது. சில நாட்களாக அவன் எதிலும் நாட்டமின்றி, எங்கேயோ பார்வையாக, பித்துப் பிடித்தவன் போல தவிப்பதைக் கண்டு தந்தைக்கு மிகவும் கவலையாகத் தானிருந்தது.

"அருண்!" —அன்போடு தந்தை அழைத்தார்.

'உம்!' —கனவினின்று விழித்தவன் போல மிரட்சியுடன் மகன் அவரைப் பார்த்தான்.

"முந்தாநாள் உன் கம்பெனி மானேஜரை சந்தித்தேன். அவர் சொன்னார், நீ போன வாரம் மூணுநாள் உடம்புக்கு



முடியலைன்னு லீவு போட்டு விட்டிருந்தியாம். நேத்து பகல் கூட தல்லவலின்னு விடுப்பு வாங்கிகிட்டு கிளம்பிட்டியாம்... உன் உடம்புக்கு என்னன்னு என்கிட்டே விசாரிச்சார். நீ இப்போவெல்லாம் வேலையில் ரொம்ப சிரத்தை காட்டறதில்லைன்னு வேறு அலுத்துக்கொண்டார். ஆமாம் நானும் கேட்கணும்தான் இருந்தேன். நேத்து தலைவலின்னு அலுவலகத்தைவிட்டு கிளம்பினவன்—வீட்டுக்கு இரவு ரொம்ப நேரம் கழிச்சுத்தானே வந்தே? உங்கம்மா ரொம்ப கவலைப்படுகிறாள். காலையில் எங்கிட்ட சொன்னாள். நீ கொஞ்ச நாளா ராத்திரி வழக்கமா சாப்பிடுகிற பாலை தொடறதே இல்லையாம். வற்புறுத்திக் கேட்டா வேண்டாம்னு சீறி விழறயாம். நேத்து ராத்திரி நான் கூட கவனிச்சேன். உன் அறையிலே விளக்கு எரிஞ்சிக் கிட்டிருந்தது ஒரு புத்தகத்தை பிரிச்சு வச்சுக்கிட்டு சுவத்தைப் பார்த்துக் கொண்டு வெகுநேரம் உட்கார்ந்திருந்தே...!"

"அப்பா!" —மகன் துயரத்துடன் பெருமூச்சு விட்டபடி மணல்மீது விரல்களால் கோடிட்டுக் கொண்டிருந்தான்.

"அந்தப் பெண் லீலாவுக்குக் கல்யாணமாகப் போவுதுன்னு தெரிஞ்ச நாளிலிருந்து நீ இப்படி மாறிப் போயிட்டே இல்லையா?"

"அப்பா..." —மகன் வியப்புடன் நிமிர்ந்தான். பல இரவு தூக்கமில்லாததால் சிவந்து போன கண்கள் ஈரத்தில் பளபளத்தன.

"லீலாவைப் பத்தி உங்களுக்கு எப்படித் தெரியும்?..." பேசமுடியாது துயரத்தில் அவன் குரல் உடைந்தது.

"உன்னுடைய கடிதங்களை திறந்து பார்க்கிற மட்டமான புத்தி எனக்கு கிடையாதுன்னு தெரியுமில்லையா? உன்னை சின்ன வயசிலே என் தோள்மேலே சாத்திகிட்டு உன் முதுகை தட்டி தூங்க வைக்க மொட்டை

மாடியிலே மேலும் கீழும் நடந்தபோதும், பள்ளிக்கூடத்திலிருந்து வந்ததும் ஓடி வந்து என் மடியில் ஏறி உட்கார்ந்துகிட்டு கதை சொல்லுன்னு நீ கெஞ்சினபோதும்—நான் உனக்கு தந்தை—நீ எனக்கு குழந்தை என்ற உறவில் வாழ்ந்தோம். கல்லூரி மாணவனாகிப் போன பின்பு நீ என்னோடு வீட்டு வாசல் வராந்தாவிலே உட்கார்ந்துகிட்டு அரசியலிலிருந்து அம்மாவின் சமையல்வரை வேடிக்கையாகப் பேசி சிரிச்ச காலத்திலிருந்து...அந்த உறவு மாறிப் போச்சு... தோளுக்கு மேலே வளர்ந்துட்ட உன்னை என் இனிய தோழனாகப் பாவித்து...உன் உணர்வுகள், கொள்கைகள்—எல்லாத்துக்கும் மதிப்புக்கொடுத்து நடத்திகிட்டு வரேன், இல்லையா?''

''ஆமாம் அப்பா! உங்ககிட்ட பேசும்போது ஒரு தந்தையிடம் மகன் பேசுகிற உணர்வு எனக்கு ஏற்படறதில்லை.. ஒரு அண்ணன்கிட்ட சகஜமாகப் பேசுகிறது போல ஒரு துணிவும்-உரிமையும் மனநிறைவும் ஏற்படறது. ஒப்புக்கிறேன்...''

''அதனால் தான் மனம் விட்டுப்பேச இங்கே கடற்கரைக்கு உன்னைக் கூட்டிக்கிட்டு வந்திருக்கேன்...''

''நான் சொல்றேன் அப்பா! எங்க கம்பெனி எதிரே இருக்கிற சிறப்பு அங்காடியிலேதான் லீலா வேலை செய்துகிட்டிருந்தா. சந்திப்பு ஏற்பட்டது...தொடர்ந்து காதலும் ஏற்பட்டது. திருமணம் செஞ்சுக்க விரும்பினேன். உங்ககிட்ட சொல்லணும்னுதான் நினைச்சேன். அதுக்குள்ளே அவ அப்பா அவளுக்கு வேறே ஒரு இடத்திலே நிச்சயம் பண்ணிட்டார்'' மேலே பேச முடியாது அருண் திணறினான்.

''அவளுக்கு அவ அப்பாவிடம் உண்மை நிலையை எடுத்துச் சொல்ல பயம். கல்யாணத்துக்கு ஒத்துக்கொண்டுவிட்டாள், எனக்கு தெரியும்!''



அருண் திடுக்கிட்டு தன் தந்தையின் முகத்தைப் பார்த்தான்.

''உங்களுக்குத் தெரியுமா? நான் லீலாவைப்பத்தி யார்கிட்டேயும் மூச்சுவிட்டதில்லையே?''

''ஒரு மாசத்துக்கு முன்னால் ஒருநாள் மாலை நீ வரதுக்கு முந்தியே நான் வீட்டுக்கு வந்துட்டேன். முன்னறைக்குள் நுழையறதுக்குள்ளாகவே தொலைபேசி அடிச்சது. அவசரமா எடுத்தேன். நான் ஹலோ என்றதும் அந்த பெண் படபடன்னு பேசி விட்டா. தந்தைக்கும் மகனுக்கும் குரல் ஏறக்குறைய ஒரே மாதிரி இருப்பது அதிசயமில்லையே...என்னை நீன்னு நினைச்சுகிட்டா. ''அருண்! நான் தான் லீலா பேசறேன். என்னை நீங்க மன்னிச்சுக்கணும். ஒரு வருஷமா நாம நெருங்கிப் பழகினோம். ஒருவரையொருவர் நேசித்தோம். ஆனால் நம் காதல் கைகூடாத சங்கதியாகிவிட்டது. என் அப்பா எனக்கு வேறு இடத்திலே திருமணம் செய்ய நிச்சயம் பண்ணிட்டார். என்னாலே எதிர்ப்பு தெரிவிக்க முடியலை—ஒத்துக்கிட்டேன். மேலும் என் வருங்காலக் கணவர் என் முறை மாப்பிள்ளை. திருமண பத்திரிகையை அலுவலக முகவரிக்கு அனுப்பி வைக்கிறேன். நான் எங்கே வாழ்ந்தாலும் நல்லா இருக்கணும்னு வாழ்த்துங்க!''—ஒரே மூச்சாக முடித்தாள்.

ஒரு கணம் நான் அசந்துபோய் நின்னுட்டான். பிறகு சமாளித்தேன். 'என் நல்வாழ்த்துக்கள் உனக்கு எப்பவும் உண்டு' தணிவான குரலில் சொல்லிவிட்டு சட்டென்று தொலைபேசியை வச்சுட்டேன்.

''யார் அது?...'' அம்மா சமையலறையிலிருந்து கேட்டாள். ''என்னமோ போல இருக்கீங்களே? என்ன நடந்தது?'' அம்மா என் தோளைப் பிடித்துப் பலமுறை உலுக்கின பிறகுதான் உலக நினைப்பு வந்தது. உன்

மனப்போராட்டம், அதிர்ச்சி, துயரம், வேதனை எல்லாத்தையும் அந்த ஒரு சில நிமிஷங்களில் நான் பூரணமாக அனுபவிச்சுட்டேன்.''

''அப்பா! உங்களுக்கு உண்மை தெரிஞ்சுமா நீங்க பேசாம இருந்திங்க?...''

''இந்த அதிர்ச்சியிலிருந்து நீயே விடுபட்டு நிமிர்ந்து மனிதனாக செயல் படணும்னு நான் ஒண்ணையும் கண்டுக்கலை.. ஆனால் நீ தூங்காம, சாப்பிடாம, ஒண்ணிலும் பிடிப்பு இல்லாம, இந்த காதல் தோல்வியைத் தாங்க முடியாது தவிக்கிறதைப் பார்த்துகிட்டு சும்மா இருக்க முடியலை—உன்னோட வெளிப்படையா பேசத்தான் இங்கே கூட்டிகிட்டு வந்திருக்கேன்...''

''அப்பா! லீலாவை நான் உயிருக்குயிரா நேசிச்சேன். இந்த தோல்வியை என்னால தாங்கிக்க முடியலை...'' மகன் அரற்றினான்.

''யார் சொன்னது?... கொஞ்ச நாளிலே இதை மறந்துடுவே. மனதில் அமைதி ஏற்படும்.''

''உங்களுக்கு எப்படி விவரிக்கறதுன்னே புரியலை. அவ மேலே நான் கொண்ட காதல் என் ரத்தத்திலே ஊறிப் போய்...ஒரு வியாதி போல....'' மகன் முடிப்பதற்குள் சரவணன் குறுக்கிட்டார்.

''அப்படித்தான் இருக்கும்—வானமே இடிஞ்சு விழுந்துட்டதுபோலவும்...காலடியிலிருக்கிற பூமி நழுவிகிட்டு நாம் எங்கேயோ பாதாளத்திலே போய்விழறது போலவும், பால் குடிக்கக் கசப்பது போலவும், படுக்கை முள்ளாகி விட்டது போலவும் இருக்கும்.''

''ரொம்ப அனுபவிச்சது போல சொல்றீங்களே அப்பா! இந்த துயரத்தின் ஆழத்தை புரிஞ்சு கொண்டா...''

''நான் ரொம்ப புரிஞ்சு கொண்டவன்—அனுபவப்பட்டவன். அதனாலேதான் சொல்றேன்.''



அருண் திகைப்பும், வியப்புமாகத் தந்தையின் முகத்தைப் பார்த்தான். "என்னப்பா சொல்றீங்க?"

"உண்மையைத்தான் சொல்றேன். உன் வயதில் எனக்கும் காதல் ஏற்பட்டது. ஆனால் அது மிகவும் விபரீதமானதொரு துயர அனுபவம். நாங்க குடியிருந்த வீட்டுக்கெதிரில் அப்பா—அம்மா—மகள் என்றதொரு சிறு குடும்பம் வசித்துக் கொண்டிருந்தது.

அந்த பெண் சாரதாவுக்கு அப்போது பதினெட்டு வயது. பார்க்க அழகாக இருந்தாள்—நான் படித்த கல்லூரியில் பி.ஏ. முதல் ஆண்டு படித்துக் கொண்டிருந்தாள். எதிர் வீட்டு அம்மாவுடன் என் தாய் விரைவில் சிநேகிதமாகி விட்டாங்க. ஆனால் கட்டுமீசையும்—கடுமை தெரிச்ச முகமுமாக வாட்டசாட்டமா தெரிஞ்ச அந்த பெண்ணின் அப்பாவைக் கண்டு நான் பயந்து போனேன். அதனால் ஆசையிருந்தும் அந்தப் பெண்ணோட நான் பேச முற்பட்டதில்லை. ஒருவரையொருவர் சும்மா பார்த்துக்கொள்வோம். ஒரு நாள் அந்த வாய்ப்பும் எனக்கு கிட்டியது. அவள் பஸ்ஸில் ஏறி உட்கார்ந்தாள்—கண்டக்டர் காசு கேட்டபோது கலவரத்துடன் விழித்தாள். மணிபர்சை வீட்டில் வச்சுட்டு மறந்து விட்டிருந்தாள். இது தான் சமயம்னு நான் துணிவுடன் அவளுக்கும் சேர்த்து இரண்டு டிக்கெட் வாங்கினேன். பஸ்ஸை விட்டு இறங்குமுன் அவள் முறுவலித்துவிட்டு ரொம்ப நன்றி என்றாள்...அந்த குரல் தேனாக காதில் இனித்தது. அதற்குப் பிறகு...மெல்ல பேச ஆரம்பித்தோம். பல இடங்களில் திருட்டுத்தனமாக சந்தித்துக் கொண்டோம். ஐஸ்கிரீம் வாங்கி சாப்பிட்டோம் — சினிமாவுக்குப் போனோம்—கடற்கரை—கடைத் தெரு—சுற்றுலாப் பொருட்காட்சி என்று பல இடங்களில் சுற்றினோம். எங்கள் கருத்துக்களை பரிமாறிக் கொண்டோம்...காதலித்தோம்..."

"அவளுக்கு அத்தை மகன் ஒருத்தன் முறை மாப்பிள்ளை, மாலையுடன் காத்திருந்தான். ஆனால் என்னைத்

தான் திருமணம் செய்துகொள்ள அவள் விரும்பினாள். நானும் ரொம்ப விரும்பினேன்...

நான் கல்லூரி நாட்களில் கவிதை புனைவது வழக்கம்' ஒரு பெரிய கவிஞனாகிவிட வேண்டுமென்ற ஆவல்...

"புன்னகைக்கும் புது நிலவே உன்னைத்தான் புது உலகம் காணத் தேடுகிறேன்'' என்று என்னென்னவோ எழுதி அவளுக்கு அனுப்பிக்கொண்டிருந்தேன்.

கவிஞன்-காதலன்—பைத்தியக்காரன் மூவரும் ஒரு இனம் —ஏன் எனில் மூவரின் எண்ணங்களும் கொதித்துக் கொண்டிருக்கின்றன என்கிறார் ஷேக்ஸ்பியர், உண்மைதான். நான் அப்போது அப்படி ஒரு பித்தனாக இருந்தேன். அவளும் என் கவிதைகளை மிகவும் ரசித்தாள். தோட்டத்திலிருந்து ரோஜா மலர் ஒன்றை அவளுக்குப் பரிசாக ஒருநாள் அளித்தேன். அவள் எனக்கு ஒரு கைக்குட்டையை பரிசாகத் தந்தாள். அதில் ஒரு மூலையில் ரோஜா மலர் கொத்து வடிவத்தில் பூ வேலை செய்திருந்தாள்.

"அழகாக பூ வேலை செய்கிறாயே...'' புகழ்ந்தேன் நான்.

"நீ என் ராஜா—நான் உன் ரோஜா. அதுக்காகத்தான் இந்தப் பரிசு''—சொல்லிவிட்டு அவள் சிரித்தாள்...நான் சொக்கிப் போனேன். என்னைவிட பாக்கியசாலி உலகில் யாருமில்லை என்று நினைத்தேன். அந்த ஆண்டு தேர்வில் இருவருமே தோல்வியுற்றோம். படித்தால்தானே வெற்றி பெற? அவளை அவர்கள் பெற்றோர்கள் மேலே படிக்க அனுப்பாது வீட்டிலே நிறுத்திக்கொண்டுவிட்டார் கள் நான் மறுபடியும் படித்து தேர்வு எழுதி முடித்தேன். எங்கள் காதல் கடிதம் மூலம் தொடர்ந்து கொண்டிருந்தது. அந்த சமயம் என் தாத்தா நோய்வாய்ப்பட்டு மிகவும் அபாயகர நிலையிலிருப்பதாகத் தந்தி வந்தது. அம்மா என்னை துணைக்கு அழைத்துக் கொண்டு கிராமத்துக்கு புறப்பட்டு



விட்டாங்க. அந்த அவசரத்திலும் நான் அவளை இரகசியமாகச் சந்தித்து விடைபெற்றுக் கொண்டேன்!

"போய் வாங்க....உங்கள் வரவுக்காக வழிமேல் விழியாகக் காத்திருப்பேன்...'' என்று அவள் உறுதி கூறினாள்.

நாங்கள் போன மறுநாளே தாத்தா காலமாகிவிட்டார். இறுதிச் சடங்குகள் முடிந்து . நான் அம்மாவை வற்புறுத்தி பட்டணத்துக்கு கிளம்புவதற்குள் ஒரு மாத காலமாகி விட்டது...அந்த குறுகிய காலத்துக்குள் நான் அவளை நினைத்து தவித்த தவிப்பு? ரயிலை விட்டிறங்கி பஸ் பிடித்து வந்தோம். நிலையத்தில் இறங்கி எங்கள் தெருவை நோக்கி நடந்தபோது வழியில் எதிரே ஒரு பிண ஊர்வலம் வந்து கொண்டிருந்தது. தயக்கமாக ஒரு புறம் நின்றோம்...

தெருவில் யார் இறந்து போனாங்க?.... அறியும் ஆவலுடன் உற்றுப் பார்த்த எனக்கு ஒரு பெரும் அதிர்ச்சி.

கழுத்தில் மாலையுடன் மணப்பந்தலில் என் அருகில் அமர்ந்திருக்க வேண்டிய சாரதா...மாலைகளணிந்து பிணமாகத் தன் இறுதியாத்திரை ஊர்வலமாக இடுகாட்டை நோக்கிப் போய்க் கொண்டிருந்தாள்.

பேய் அறைந்துவிட்டது போன்றதொரு திகிலில் நான் வீடு வந்து படுத்தவன்...காய்ச்சலும் ஜன்னியுமாக பத்துநாள் படுக்கையாகி விட்டேன். உடம்பு தேறியதும் என்னைப் பார்க்க வந்த நண்பன் சுந்தர் சொல்லித்தான் சங்கதி பூராவும் தெரிந்து கொண்டேன்.

தன் சகோதரியிடம் சாரதா விட்டுப் போயிருந்த ஒரு கடிதத்தையும் புத்தகத்தையும் சுந்தர் என்னிடம் கொடுத்தான்.

எங்களது காதல் விவகாரம் அவள் தந்தைக்கு எப்படியோ எட்டிவிட்டது. நான் எழுதிய கடிதம் ஒன்று அவர் கைக்குக் கிட்டியது. கோபம் தாங்கமுடியாது மகளை அடித்து

நெருக்கிவிட்டார். உடனடியாக அவளுக்கும் அத்தை மகனுக்கும் திருமணத்தை முடிக்க தன் சகோதரி குடும்பத்தை ஊரிலிருந்து வரவழைத்தார். விரைவாக நிச்சயதார்த்தத்தை முடித்து கல்யாண தேதியும் குறித்து விட்டார். வெளியே எங்கும் போகாது சாரதாவை பலத்த பாதுகாப்பில் வைத்திருந்தார்....

நானும் ஊரில் இல்லை. கல்யாண நாளும் நெருங்கிக் கொண்டு வந்தது...தந்தையை எதிர்க்க முடியவில்லை. சிக்கலை தவிர்க்கத் தெரியாது விஷம் குடித்து தற்கொலை செய்து கொண்டு விட்டாள்.

உண்மை தெரிந்ததும் என் மனம் என்ன பாடுபட்டிருக்குமென்று நினைக்கிறே? ஒரு பெண் என்மேல் கொண்ட காதலால் தற்கொலை செய்து கொண்டு விட்டாளே? எனக்கு இது ஒரு பேரிடியாக இருந்தது. கடிதத்தை மெல்ல திறந்து படித்தேன்...

"அன்பரே! விடைபெற்றுக் கொள்கிறேன். நீங்கள் ஒரு கவியாயிற்றே, இந்த வரிகளை நிறைவுபடுத்திக்கொண்டு அமைதியாக இருங்கள்."

"சென்றது மீளாது—சென்றதை நினைத்து உழலாதே—இன்று புதிதாய் பிறந்ததாக எண்ணிக்கொள்."

—உங்கள் சாரதா.

'உயிருக்கு அப்பால்' என்ற தலைப்பு கொண்ட அந்த புத்தகத்தை நான் திறந்துகூடப் பார்க்கவில்லை. என் உயிருக்கு அப்பால் போய்விட்ட அவள் நினைவில் நான் மருகிக் கொண்டிருந்தேன்..."

தந்தையின் கடந்த கால வாழ்வில் ஏற்பட்ட துயர நிகழ்ச்சியை வியப்புடன் கேட்டுக்கொண்டிருந்த அருண் விழித்துக் கொண்டவன் போலக் கேட்டான்.



"பிறகு என்ன நடந்தது அப்பா?..."

"என்ன நடந்தது? ஒரு ஆண்டுக்கு பிறகு எனக்கு வேலை கிடைத்தது. பெற்றோர்களாக பார்த்து அம்மா சரோஜாவை எனக்கு கட்டிவச்சாங்க...நீ பிறந்தாய்...தங்கச்சிகள் பிறந்தாங்க...!"

"அந்த சாரதாவை நீங்க அவ்வளவு சுலபமாகவா மறந்து போனீங்க?"

"காலம் இருக்கிறதே—அது ஒரு அபூர்வ மருந்து. எப்பேர்ப்பட்ட துயர நிகழ்ச்சிகளில் ஏற்பட்ட மனப் புண்ணையும் விரைவில் குணப்படுத்தி ... சம்பவங்களை மறக்கச் செய்திடும். ஆரம்பத்தில் கடமைக்காக உன் அம்மாவுடன் கணவனாக வாழ்ந்தேன்....பின்னர் தானே என் மனதில் அவள் மீது அன்பு வளரத் தொடங்கியது...நேத்து நீ பார்த்தியே. தோட்டத்திலே ஒரு கல் இடறி அம்மா காலில் ரத்தம் வந்தபோது நான் எப்படிப் பதறிப் போய் மருந்தும் பஞ்சும் எடுத்துகிட்டு ஓடி வந்தேன்! அவளுக்கு ஒரு துன்பம் என்றால் என் மனம் துடிச்சுப் போறது...அத்தனை ஒரு பாசம் உங்கம்மா மேலே எனக்கு ஏற்பட்டு இருக்கு... காதலித்துக் கல்யாணம் செய்துகிட்டாதான் வாழ்க்கை சிறப்பா அமையும் என்கிறதில்லை...கல்யாணமான பின்பு தம்பதியரிடையே காதல் மலர முடியும். அதுக்கு எங்கள் வாழ்க்கையே ஒரு சான்று...புரிஞ்சுக்கோ. கடந்த கால நிகழ்ச்சிகளை காலப்போக்கில் மறந்துவிட முடியும்... ஆணுக்கும் பெண்ணுக்கும் வாழ்க்கை...வாழ்வதற்குத்தான் அளிக்கப்பட்டிருக்கிறது...அதை முடித்துக் கொள்ள அல்ல. மேலும் நமக்கு கடமைகள் இருக்கே அதை நினைச்சுப் பார்க்கணும். உன் சம்பளத்தை எதிர்பார்த்துதான் கம்பெனியில் கடன் வாங்கி வீடு கட்டி இருக்கேன்—தங்கச்சிகள் கல்யாணத்துக்கும் நீ தான் உதவணும்.... உன்னை என் உயிர் நண்பனாக நான் நினைச்சு உதவிகளுக்காக காத்திருக்கும் போது... நீ கோழையாகி...மனம் தளரலாமா?...இருட்டிப் போகுது. வீட்டுக்குப் போகலாம் எழுந்திரு...!"—மகனது

கரத்தைப்பற்றி சரவணன் அவனைப் பிடித்து தூக்கி நிறுத்தினார்.

"மல்லிப்பூ! இப்படி வா!" என்று பூக்கார பையனை கூவியழைத்து மனைவிக்கு ஒரு முழம் பூ வாங்கிக் கொண்டார்.

தகப்பனும் மகனும் சாலையில் நிறுத்தியிருந்த ஸ்கூட்டரை நோக்கி நடந்தனர்.

அவனுக்கு லீலா தந்தது வெறும் ஏமாற்றம்—ஆனால் அப்பாவுக்கு சாரதா தந்தது பெருத்த அதிர்ச்சி.

அத்தனை பெரிய துயரத்திலிருந்து அப்பா நிமிர்ந்து கொண்டு நன்றாக வாழத் தெரிந்து கொண்டு விட்டபோது.... அவனால் காதல் ஏமாற்றத்தை உதறிவிட்டு வாழவா முடியாது...? பொறுமையும், காலமும் அவனுக்கு உதவப் போகின்றன... அவனும் பெற்றோர்கள் தேர்ந்தெடுத்த ஒரு பெண்ணை மணந்து... அவளுடன் அன்பாக பிள்ளை குட்டி களுடன் வாழப் போகிறான்... அவனும் மனைவிக்கு மறக்காது தினமும் பூ வாங்கிக் கொண்டு போகப் போகிறான்...

மனம் லேசாகிப் போன உணர்வில் அருணின் முகத்தில் புன்னகையும் கண்களில் வருங்காலத்துக் கனவுகளும் தெரிந்தன.

□

# துணையின் நிழல்

அலுவலகத்திலிருந்து தினமும் ஆஸ்பத்திரிக்குப் போய் அப்பாவைப் பார்த்துவிட்டுப் பின்னர்தான் வீடு திரும்ப வேண்டும். கடந்த மூன்று மாத காலமாக சியாமளாவிற்கு ஒரே அலைச்சல். மரத்தின் மீது ஏறி மாங்காய் பறிக்கப் போன அப்பா.... கிளை முறிந்து கீழே விழுந்து பலத்த அடியுடன்... எலும்பு முறிவுகளுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

ஆரம்பத்தில் அவர் பிழைப்பதே அரிது என்று எண்ணும் படி நிலைமை மோசமாக இருந்தது. ஆனால், அதிசயமாக அப்பா பிழைத்து விட்டார். காயங்கள் ஆறி, எலும்பு முறிவு கூடி அவர் வீடு திரும்ப சில மாதங்கள் ஆகும் என்பதை அறிந்தபோது அவளுக்கு அதிர்ச்சியாகவே இருந்தது. ஏனெனில், அவர்களது குடும்பம் முழுதும் அப்பாவின் சம்பளத்தையல்லவா எதிர்பார்த்து வாழ்ந்து கொண்டிருந்தது.

அப்பா சதாசிவம் தனியார் கம்பெனி ஒன்றில் வேலை செய்து ஓய்வு பெற்றவர்.... கிடைத்த ஓய்வு நிதி முழுவதையும் மூத்த மகள் அமிர்தாவின் கல்யாணத்திற்கு செலவழித்து விட்டார். நகரத்து துணிக்கடை ஒன்றில் கிடைத்த கணக்கர் வேலையில் தற்காலிகமாக ஓட்டிக் கொண்டிருந்தார். இப்போது அந்த வேலையும் போய் விட்டதில் அவர்கள் குடும்பம் பட்டினியில் சாகும் நிலைக்கு வந்துவிட்டிருந்தது. அம்மா மேலிருந்த ஒரே ஒரு சங்கிலியும் அடகுக் கடைக்குப் போயாகிவிட்டது.

வெள்ளித்தட்டு, டம்ளர்கள் மெதுவாகக் கரைந்தன. பின்னர் வெந்நீர் தவலையிலிருந்து... செப்புக்குடம்வரை கடைக்குப் போய் காசாக மாறி வீட்டுக்கு வந்தன. பகாசுரனைப் போல, பட்டினிப் பட்டாளமாக, குடும்பம் விழுங்க ஆரம்பித்தது.

"அடகு வைக்கவும், விற்கவும்... இனி என்ன இருக்கிறது?" என்றதொரு பயங்கர நிலை வந்தபோதுதான் சியாமளாவிற்கு அந்த யோசனை வந்தது. அக்கா அமிர்தம் கணவனுடன் புறநகர் பகுதியிலே மிகவும் வசதியாக ஸ்கூட்டர், சொந்த வீடு என்று வாழ்கிறாளே—அப்பா அவள் திருமணத்திற்கு எத்தனை செலவழித்தார்? அதனால் இப்போது ஏதாவது பிறந்த வீட்டிற்கு உதவி செய்யக் கூடாதா? கேட்டுப் பார்த்தால்...?

அம்மாவின் பேச்சைக் கேட்காது அவள் ஒருநாள் காலை அக்கா வீட்டிற்குப் பஸ் பிடித்துப் போய்ச் சேர்ந்தாள்.

அடிபட்டு ஆஸ்பத்திரியில் கிடக்கும் அப்பாவை ஒரு தடவை கணவனுடன் ஸ்கூட்டரில் வந்து பார்த்துவிட்டுப் போனதுதான்-பிறகு ஆஸ்பத்திரிக்கு வரவோ, பிறந்த வீட்டிற்கு வந்து விசாரிக்கவோ பொழுது இருக்கவில்லை—இரண்டு முறை கார்டுகள் போட்டு விசாரித்தாள். பின்னர் அதுவும் நின்று போயிருந்தது.

தங்கையைக் கண்டு அக்கா முகம் மாறிப்போனாள். முன்பெல்லாம் பிறந்த வீட்டார்களைக் கண்டால் முகம் மலர்ந்து போய்விடும் அக்கா, இன்று பேயைக் கண்டவள் போலப் பொலிவிழந்து போனாள்.

"என்ன இப்படிக் காலை வேளையில்—தன்னந்தனியா வயசுப் பெண் புறப்பட்டு வந்திருக்கா..." கடுமையாகக் கேட்டாள்.



அதே வயசுப் பெண், இப்போது ஒரு அலுவலகத்தில் தட்டெழுத்தராகப் பணிபுரிந்து கொண்டு மூன்று மாதமாக குடும்பத்தைக் கழுதையாக சுமக்கிறாள். அப்போது அந்தக் கேள்வியைக் கேட்கத் தோன்றவில்லை அக்காவிற்கு.

"இருநூறு ரூபாய் கடனாகக் குடுத்து உதவினால் நல்லாயிருக்கும்னு கேட்க வந்தேன்..." தங்கை மெல்லிய குரலில் கேட்டதுந்தான் தாமதம். அக்கா அமிர்தா சீறினாள்.

"கொண்டு குடுத்து சம்பந்தம் செஞ்ச வீட்டிலே பச்சைத் தண்ணீ கூடக் குடிக்கமாட்டாங்க. எங்க புகுந்த வீட்டு மனுஷங்க. அப்படி மானம் மரியாதை உள்ளவங்க எந்தத் துணிச்சல்லே...பெண்ணைக் குடுத்த இடத்திலே பணம் வாங்கிட்டுவரச் சொல்லி அம்மா உன்னை அனுப்பிச்சாங்க...? என் கணவர், மாமியார் காதில் பட்டால் அவங்க மூஞ்சிலே தான் முழிக்க முடியுமா? வெட்கக்கேடு...!" வந்தவளை உட்காரச் சொல்லக்கூட மனமின்றி உடனடியாக விரட்டி விட்டாள்.

கல்யாணமாகி புக்ககம் போனதும் பெண்களுக்குப் பிறந்த வீட்டைப் பற்றின பொறுப்பு போய் விடுகிறதாமே? என்ன அநியாயம்?

அதே நிலை அக்காவின் புக்ககத்து மனிதர்கள் யாருக்காவது வந்திருந்தால்....அக்காவும், அத்தானும் உதவ மாட்டார்களா?

துயரமும் கோபமுமாகத்தான் வெறும் கையுடன் வீடு திரும்பினாள். அன்று அவர்கள் வீட்டிலிருந்த பித்தளை அண்டாவை கடையில் விற்றுத்தான்...சமையலுக்கு அரிசி வாங்க வேண்டிய வறுமையான நிலை.

இத்தனை துன்பங்களிடையே ஒரே ஒரு அதிசயம். அவளுக்கு பலத்த சிபாரிசுகள் ஏதுமின்றி அவள் தகுதி

ஒன்றிற்காகவே, தட்டெழுத்தர் வேலை கிடைத்துவிட்டது. மாதம் முன்னூறு ரூபாய்கள் சம்பளம்—அதில் வீட்டு வாடகை போக, இரண்டு தம்பிகளும், அவளும், அம்மாவும் செத்தோம் பிழைத்தோம் என்ற பற்றாக்குறையில் வாழ்வைப் பிடித்துத் தள்ள வேண்டியிருந்தது.

தம்பிகளில் மூத்தவன் பிளஸ் டூ. இளையவன் பத்தாவது வகுப்பில். குடும்பத்தில் இப்போது அவள்தான் மூத்தவள். மகனாக இருந்தால் என்ன? மகளாக இருந்தால் என்ன? அவள்தானே அவர்களை ஆதரிக்க வேண்டியவள்? கடமை உணர்ச்சியின் உந்தலில், அவள் குடும்பத்தின் சுமையைத் தன் இளம் தோள்களின் மீது துணிவுடன் தானே ஏற்றுக் கொண்டு விட்டிருந்தாள்.

அன்று வீடு திரும்பும் போது இருட்டி விட்டது. அவளது அப்பா இன்னும் சில நாட்களாவது ஆஸ்பத்திரியில் இருக்க வேண்டும் என வைத்தியர்கள் சொல்லி விட்டதைக் கேட்டு கலங்கிவிட்டிருந்தாள் அவள்.

பஸ் நிலையத்திலிருந்து வீடு நோக்கி நடந்தவள் மனதில் பெரும் குமைச்சல். தெரு விளக்குகள் அப்போதுதான் எரியத் துவங்கின.

யாரது பின்னால்? அரண்டு போனாள் அவள். நிழல் போல் அவளைத் தொடர்வது யார்....? வீடு மிக அருகில் வந்துவிட்டதில் சிறிது பயம் தெளிந்தது. "யாரது?" அதட்டியபடியே திரும்பினாள்.

தெரு விளக்கின் வெளிச்சத்தில் நின்ற அந்த இளை ஞனை அவள் இதற்கு முன் பார்த்ததில்லையே?

"உங்க எதிர்வீட்டு மாடியிலே நேத்துதான் குடிவந்தேன். வேலை முடிஞ்சதும் ஹோட்டல்லே சாப்பிட்டுட்டு வீட்டுக்கு வந்துகிட்டிருக்கேன். என் பெயர் சேகர்."



சட்டென வெளிப்படையாகப் பேசியது...களையான அந்த முகத்திலே நிழலாடிய புன்முறுவல்... எல்லாமே பார்த்த அளவில் மனதில் பதிந்துவிட்டன அவளுக்கு.

அதற்குப் பின்னர்...அவனைப் பற்றிய நினைப்பு நீண்டு தொடர்ந்தது. அலுவலகத்தில்—பஸ் பயணத்தில், ஆஸ்பத் திரியில், அப்பாவைப் பார்க்கப் போன இடத்தில்... எங்கும் அவனது புன்னகை பூத்த முகம், சிந்தனையை நிறைத்துக் கொண்டு குழம்பியது.

ஒரு நாள் பஸ் நிலையத்தில் அருகே நின்ற அவன் வலிய பேச்சுக் கொடுத்தான்.

"நீங்களும் இந்த நேரத்தில் தான் ஆபீஸுக்குப் புறப் படறீங்களா?"

அவள் தலையை ஆட்டினாள். அதன் பிறகு அவனும் அதே நேரத்தில் அவளோடு பஸ்ஸில் வேலைக்குப் புறப் பட்டான். கூடவே துணையாக அலுவலகம் வரை வந்தான். மெல்ல, மெல்ல... சில மாதங்களில் காதலாக அது வளர்ந்தது.

அப்பா ஆஸ்பத்திரியிலிருந்து வீடு திரும்பி விட்டார். ஆனால் ஊன்றுகோல் உதவியின்றி நடக்க முடியாமல் போயிற்று. வேலைக்குப் போக முடியாத அப்பாவும், இப்போது ஒரு பொறுப்பாகிப் போனார்.

உயிருக்குயிராக அவளை நேசிப்பதாக சேகர் கூறினான். அவளைத் திருமணமும் செய்ய விரும்பி பலமுறை தன் ஆசையை வெளிப்படுத்தி, அனுமதி கோரினான்.

"தம்பிகள் படிப்பு முடியட்டும். அவர்களுக்கு நல்ல வேலை கிடைக்கட்டும். பிறகுதான் கல்யாணம்" என்ற திட முடிவோடு, இரண்டு வருடங்களைத் தள்ளிவிட்டாள் அவள்.

தம்பிகளின் படிப்பு முடிந்து, நல்ல வேலையும் கிடைத்தாகி விட்டது. சேகர் வற்புறுத்தவே, மெல்ல அம்மாவிடம் எடுத்துச் சொன்னாள்.

மூத்தவளுக்கு விமரிசையாக திருமணம் நடத்திய அப்பா, இப்போது இளையவளின் திருமணத்திற்குக் கடுமையான எதிர்ப்புத் தெரிவித்தார். 'பொன்முட்டையிடும் வாத்தை, கல்யாணம் என்ற பெயரில் பலி இட்டுவிட முடியுமா?'

''இப்பத்தானே தம்பிகள் வேலைக்குச் சேர்ந்திருக்கானுங்க. நீ சம்பாதிச்சாத்தானே குடும்பம் வசதியா, கடனில்லாம நடக்கும்'' அப்பா கூப்பாடு போட்டார். காதல் திருமண விவகாரம் கலகலத்துப் போயிற்று.

நாட்கள் பல நகர்ந்தன. ''உனக்கு சத்தியம் செஞ்சு தறேன். நீ வேலை செஞ்சு தேய வேண்டாம். வீட்டைக் கவனிச்சுக்கிட்டா போதும். உன் குடும்பத்தையும் சேத்து நான் கவனிக்கிறேன்'' பலமுறை சேகர் அவளை இரகசியமாகச் சந்தித்து உறுதி கூறினான்.

சியாமளா மயங்கிப் போனாள். ஒருநாள் காலை வேலைக்குப் போவதாகக் கூறிவிட்டு, கட்டிய புடவையுடன் கிளம்பி விட்டாள்.

ஊரார் 'ஓடிவிட்டாள்' என்றுதான் சொன்னார்கள். ஆனால் அவள் நிதானமாக நடந்து சென்று அவனுடன் அருகே இருந்த கோவில் ஒன்றில், ஆண்டவன் சாட்சியாக மாலையணிந்து மஞ்சள் கயிற்றைக் கட்டிக் கொண்டு சேகரின் மனைவியாகி விட்டாள்.

நகரத்தில் வேறு ஒரு பகுதியில் அவர்கள் வாழ்க்கை துவங்கியது. சேகர் அவளை அன்பாகவும், மகிழ்ச்சியாகவும் வைத்திருந்தான். மகளின் துரோகமான செயலுக்காக அவளைத் திரும்பிப் பாராமல் இருந்தனர் பெற்றோர்கள். அப்படிப்பட்டவர்களா, மகளது உதவியை



எதிர்பார்க்கப் போகிறார்கள்? அவளும் கணவனது வாக்குறுதியைப்பற்றி நினைவுபடுத்தாமல் அசட்டையாக இருந்தாள்.

கரதலன் சேகர், கணவனாக வாழத் துவங்கிய பின்னர் அவனது சுய உருவம் மெதுவாக வெளிப்படத் தொடங்கியது. முதல் ஆண்டில் ஒரு பெண், அடுத்த ஆண்டில் ஒரு ஆண் என்று குடும்பம் அதிகரிக்கவே, சேகர் மாறலானான்.

வீட்டுச் செலவைப்பற்றி அவள் வாய் திறந்தால் எரிந்து விழுந்தான். இரவில் குழந்தைகளின் அழுகையால் தூக்கம் கெடுவதாகக் குறை கூறினான். மெதுவாக வீட்டிற்கு நேரம் கழித்து வர ஆரம்பித்தான். நாளடைவில் அவளுக்கு உண்மை தெரிந்துவிட்டது.

அலுவலகத்தில் வேலை பார்க்கும் புஷ்பா என்ற பெண்ணுடன் தொடர்பு கொண்டிருக்கிறான். அது மட்டுமல்ல... இதேபோல் வேறு சில பெண்களுடைய நட்பும் அவனுக்கு உண்டு. கூடவே மதுப் பழக்கமும் உண்டு.

மனம் கொதித்துப் போன சியாமளா, கணவனைக் கண்டித்தாள். கிடைத்தது, உதை. ஆறு வருட காலப் போராட்டத்தில், இந்த சித்ரவதையைத் தாளாது ஒரு நாள் அவள் ஆத்திரத்தில் அவனிடம் வெடித்தாள்.

''அந்தப் புஷ்பாவை விட்டு ஒழிச்சிட்டு, நல்லபடியாக ஒரு கணவனா வாழப் போறீங்களா இல்லையா?''

குடித்துவிட்டு வந்த சேகருக்கு கோபம் மண்டைக்கு ஏறிவிட்டது.

''இல்லாட்டி என்ன செய்திடுவே? நீ மட்டும் என்ன கட்டின பெண்டாட்டியோ?''

அவள் அதிர்ந்து போனாள். "ஐயைய்யோ! அநியாயமா பேசாதீங்க. ரெண்டு குழந்தைகளுக்கு அப்பா. என் கழுத்தில கட்டின தாலி இதோ" அழுதாள்.

"சே! வாயை மூடு. அப்பன் ஆத்தாவுக்குத் தெரியாம எங்கூட ஓடிவந்த கழுதை! மஞ்சக்கயிற்றைக் கட்டி மாட்டை இழுத்திட்டு வராப்பல வந்தேன். கோவில்ல மாலை மாத்திட்டா அது கல்யாணமாயிடுமா? சட்டப்படி நீ என் மனைவி இல்லே. எந்தக் கோர்ட்டு ஏறினாலும் அது செல்லாது. நீ...என்னோட வைப்பு..."

அவளது எண் சாண் உடம்பும் ஒரு சாணாகக் குறுகியது. அவமானமும் ஆத்திரமுமாக, "என்ன சொன்னீங்க உங்க நாக்கு..." பேச முடியாமல் தடுமாறினாள்.

"பெரிய பத்தினி...சர்த்தான் ஒழிஞ்சு போடி!" ஆங்காரமாக அவளை ஒரே எட்டில் தள்ளிவிட்டு வெளியேறினான்.

வாசற்படி நிலையருகில் மடாரென விழுந்தவள், அழுதபடி எழுந்தாள். நெற்றியில் காயம். ரத்தம் கொட்டிக் கொண்டிருந்ததை உணர்ந்தாள். கலவரத்துடன் அழுது கொண்டிருந்த குழந்தைகளை சமாதானப்படுத்தியவள், சிறிது நேரம் விசும்பிக் கொண்டிருந்தாள்.

அருகிலிருந்த, டாக்டரிடம், நெற்றிக்காயத்திற்கு கட்டுப் போட்டுக் கொண்டவள், குழந்தைகளுடன் மெதுவாக தெருவில் இறங்கி நடந்தாள். இப்போது எங்கே போவது? எப்படி வாழ்வது? இரண்டு குழந்தைகளுடன் அவள் என்ன செய்வாள்?

அலை பாயும் மனதுடன், கண்களைத் துடைத்தபடி நடந்தவளின் காதில் அந்தக் குரல்...பழக்கமான குரல்... "அக்கா!"



அன்பும், கனிவும் நிறைந்த பாசக் குரல். திகைப்புடன் திரும்பியவள் பின்னால் அவளது பெரிய தம்பி வந்து கொண்டிருந்தான்.

"மனதினுள் 'ஓ'வென்று பொங்கிய துக்கத்தை அடக்கியபடி, "நல்லா வளந்திட்டியே தம்பி" என்றாள் ஆசை பொங்கும் குரலில்.

"ஹூம். நான் நல்லா வளர்ந்திட்டேன். ஆனா... நீதான் நல்லா வாழலேன்னு விளங்குது அக்கா?" அடிக் குரலில் கூறினான் அவன். "தம்பி! நீ என்ன சொல்றேப்பா" தெரு ஓரமாக ஒரு மரத்தடியில் நின்றார்கள் இருவரும்.

"அக்கா! எனக்கு எல்லாம் தெரியும். இப்ப நான் உன் உழைப்பால வளர்ந்த குட்டித் தம்பி இல்லேக்கா. உன் உழைப்பால் வளர்ந்து, பெரியவனாகிட்ட தம்பி. அக்கா, இதபாரு, இனிமேல நீ கஷ்டப்படத் தேவையில்லேக்கா. புறப்படு எங்கூட" என்றான் உணர்ச்சி வசப்பட்டவனாக. "இல்லே தம்பி! நான் தெரியாம ஒருத்தனை நம்பி மோசம் போனேன். இனிமே வீடு திரும்பினாலும் அப்பா அம்மா என்னை ஏத்துக்க மாட்டாங்க...என்னை இப்படியே விட்டு விட்டு போ...நான் எங்கேயாச்சும் போய்" பேச முடியாது கண்ணீருடன் திணறினாள்.

"நம்பினவங்களை நட்டாத்திலே விடறவன் மனுஷன் இல்லே...அக்கா! ஒரு தடவை தப்பு நடந்திட்டா அதை திருத்திக்கிட்டு வாழறதுதான் புத்திசாலித்தனம். நான் தான் வீட்டுக்கு பெரியவன் இப்போ... எடுத்துச் சொன்னா அப்பா அம்மா எல்லோரும் என் பேச்சைக் கேட்பாங்க. என்ன இருந்தாலும் நீங்க அவங்க குழந்தை யில்லையா?...தான் ஆடாட்டாலும் சதை ஆடும் அக்கா! அப்போ நீங்க உங்க உடம்பைத் தேச்சுகிட்டு ஓடாக உழைச்சுப் போட்டீங்க...உங்க இளமையை பலி கொடுத்து

எங்களை வாழ வச்சிங்க... அதனால அந்த நன்றிக்கு இப்போ என் சகோதரியைக் காப்பாத்துறது என் கடமை. புறப்படுங்க குழந்தைகளோட—இப்பவே—இப்படியே—" என்றான் கம்பீரமாக.

சியாமளா கண்களைத் துடைத்துக் கொண்டாள்: "ஆமாம்! அதுதான் சரி. அவள் இப்போது உடனடியாக் தம்பியின் துணையெனும் நிழலில் ஒண்டிக்கொள்ளப் போகிறாள். பின்னர் மறுபடி வேலை தேட முயலப் போகிறாள்...வேலை கிடைத்ததும் தம்பி எனும் துணை நிழலில் ஒண்டியபடி... பொருளாதார சுதந்திரத்துடன் தன் இரு குழந்தைகளையும் வளர்க்கப் போகிறாள்..."

தன்னுள்ளே ஏற்பட்ட இந்தத் தீர்மானத்துடன் அவள் தம்பியுடன் நடந்தாள்.

□

# தம்பி எனும் கருநாகம்!

மருந்து தயாரிப்புக் கம்பெனி ஒன்றில் எனக்கு வேலை. தமிழ்நாட்டில் ஒரு பகுதி முழுவதிலும் சுற்றுப்பயணம் செய்து வைத்தியர்களையும் மருந்துக் கடைக்காரர்களையும் சந்தித்து எங்கள் தயாரிப்புக்கு நேர்முக விளம்பரம் தந்து விற்பனையை அதிகரிக்கச் செய்ய வேண்டிய பொறுப்பு என்னுடையது.

ஆரம்பத்தில் இந்தச் சுற்றுப் பயணங்கள் சுவையாக இருந்தன—பின்னர் அலுப்பாகிப் போயின. சில சமயங்களில் மனைவியையும்—குழந்தைகளையும் நாள் கணக்கில் நகரத்தில் தனியே விட்டு விட்டு, நான் வேலை நிமித்தம் கிராமம்—நகரங்கள் என்று சுற்றிக் கொண்டிருப்பேன். அப்பொழுதெல்லாம் மனைவி மங்களம்—மூத்த மகள் செல்வி—இளையவள் ராதா—கடைக்குட்டி கண்ணன் எல்லோரையும் நினைத்து நான் சஞ்சலப் படுவதுண்டு.

வளர்கின்ற பருவத்துக் குழந்தைகளைப் பிரிந்து—இள மனைவியைத் தனிமையில் தவிக்கவிட்டு இப்படி ஊர் சுற்றிக் கொண்டு வேலைக்காக அலைகிறேனே... என் குடும்பத்திற்கு என் கடமைகளை நான் சரிவர ஆற்றாது அவர்களைப் புறக்கணிக்கிறேனே . நியாயமா? குற்ற உணர்வில் தவித்துப் போகிறேன். என்ன செய்வது... அப்படி என் வயிற்றுப் பிழைப்பு. இத்தனைக்கும் என் மனைவி மங்களா வாய் திறந்து ஒரு நாள் கூட குறைப்பட்டுக் கொண்டவள் அல்ல.

"அப்பா! எப்போ திரும்பி வருவார்—இந்த வாட்டியும் ஒரு மாசமாகுமா?" குழந்தை ராதா கேட்டுவிட்டால் அவள் மெலிதாகச் சிரிப்பாள்.

"அப்பா இப்படி அலைஞ்சு திரிஞ்சு உழைக்கிறதாலே தானே நீ நல்ல துணி போட்டுகிட்டு... நல்லா சாப்பிட்டுட்டு. பள்ளிக்கூடம் போகமுடிகிறது...? சீக்கிரம் வந்துடுவார்..." குழந்தையைச் சமாதானப் படுத்துவாள்.

மாலை மங்கும் நேரம், மங்களத்தின் அடக்கத்தையும் —பொறுமையையும்... நினைத்துப் பூரித்தவனாக மெல்ல நான் அந்த கிராமத்தின் வயல் ஓரமாக நடந்து கொண் டிருந்தேன். அந்தக் கிராமத்தில் மிகவும் பிரபலமாக தொழில் நடத்திக் கொண்டிருந்த வைத்தியரையும்— கடைத் தெருவி லிருந்த மருந்துக் கடைக்காரரையும் மறு நாள் நான் சந்திக்க வேண்டும் என்பது என் பயணத்தின் ஒரு அங்கம்.

என் நண்பன் ரவியின் பெற்றோர்கள் வசித்த வீட்டில் இரவு தங்கிக் கொள்ள ஏற்பாடு செய்திருந்தேன். என் சுற்றுப் பயணங்களின் போது அந்தக் கிராமத்தில் நான் ஒரு சில நாட்கள் ஓய்வுக்காக முகாமிடுவதும் வழக்கம். நெடுஞ் சாலையிலிருந்து குறுக்குப் பாதை வழியே கிராமத்திற்குள் செல்ல வேண்டுமானால் சில கிலோ மீட்டர் நடக்க வேண்டும்—வரப்புகளிடையே நடந்து களந்து மேட்டிற்கு வந்து.... ஒரு பள்ளத்தில் இறங்கி— ஒரு சிறு மேட்டைக் கடந்து விட்டால், கிராமத்தைச் சீக்கிரம் அடைந்து விடலாம். வீட்டைப் பற்றிய சிந்தனையுடன் களந்து மேட்டில் மெல்ல நடந்தேன்.

பக்கத்திலே பரவிக்கிடந்த வைக்கோல் மீது சலசல வென்ற தொரு சப்தம். திரும்பிப் பார்த்தவன் கால்கள் களிமண்ணாகி விட்டதுபோல் பயந்து நடுங்கி அயர்ந்து போய் நின்றுவிட்டேன். படத்தை விரித்துக் கொண்டு என் பக்கம் திரும்பி ஒரு அடி தூரத்தில் நின்றது ஒரு கருநாகம்....



உடல் முழுவதும் வியர்த்துக் கொட்டியது... திகிலில் நெஞ்சு வறண்டுபோனது··· மூச்சு முட்டியது...மங்களமும் குழந்தைகளும் மனக்கண் முன் வந்து போனார்கள்.

"ஐயோ! என்ன செய்வேன்..." மனம் அலறியது.

நான் செய்த புண்ணியமாக்கத்தானிருக்க வேண்டும்... அந்தக் கருநாகம் என்ன நினைத்ததோ... சட்டென்று படத்தை கீழே போட்டு.. சரசரவென்று வேறு ஒரு திக்கில் நழுவி.. தொலை தூரத்திலிருந்த ஒரு புதருக்குள் மறைந்து விட்டது.

இது ஒரு பயங்கர அனுபவந்தான்! ஆனாலும் கிரா மத்தை மெல்ல அடைந்து என் நண்பனின் பெற்றோர்களது வீட்டு வாயில் திண்ணையில் வந்து உட்கார்ந்த பின்னரும் நெஞ்சு படபடப்பு அடங்கவேயில்லை. என் நினைவில் அந்தக் கருநாகம் என் தம்பியாக நிழலாடிக் கொண் டிருந்தது.

குடும்பத்தில் மூத்த பிள்ளை என்று சுமைதாங்கியாகி... மூன்று பெண், இரண்டு பிள்ளை... பெற்றோர் என்று எழுவர் அடங்கிய குடும்பத்தைப் பராமரிக்கும் பொறுப்பை சிறுவயதிலே ஏற்றுக்கொண்டவன். ஊர் முழுவதும் மருந்துப் பையுடன் திரியும் இந்த அலைச்சல் வேலையை அப்பொழுதே தேடிக் கொண்டேன். ஆரம்பத்தில் குறைந்த சம்பளம். தம்பியைப் படிக்க வைத்து... ஒரு பெரிய வேலையில் அமர்த்தி— தங்களைக் கட்டிக் கொடுத்து— பெற்றோர் களைப் பொறுப்புடன் கவனித்துக் குடும்பத்தைக் காக்கும் தலைவனாக என் இளமை உற்சாகம்... தேவை எல்லாவற் றையும் பலிகொடுத்துக் கொண்டேன். பலன்?

தங்கைகளின் கல்யாணம் முடியட்டும்—தம்பி ஒரு நிலைக்கு வரட்டும் என்று என் மனதில் வளர்த்துக் கொண் டிருந்த ஆசைகளை அடக்கிக் கொண்டிருந்த எனக்குக் கிடைத்த பரிசு... பேரதிர்ச்சி.

சிறு வயது முதற்கொண்டு என் அத்தை மகள் எனக்கு என்ற எண்ணத்துடனேயே வளர்க்கப்பட்டவள். பருவப் பெண்ணாக, அழகும்—செழுமையுமாக வளர்ந்து நின்ற அவளைக் கண்டு என் மனம் பெருமையால் பூரித்தது—ஆசையில் அலைபாய்ந்தது.... அவள்மேல் கரைகாணாக் காதல் தானே உருவாகியது... அவளும் என்னைப் பார்த்த போதெல்லாம் புன்னகைத்து என் உணர்வுகளுக்கு உற்சாகம் தந்துகொண்டிருந்தாள்

என் தம்பி படித்து பட்டம் பெற்ற கையோடு பெரிய தொரு வேலையும் தேடிக் கொண்டு விட்டான்...

அடுத்தபடியாக அவன் செய்த வேலை... தனக்காகத் தன் தேவைகளைத் தியாகம் செய்து கொண்டு வாழ்ந்த அண்ணனுக்குக் கொடுத்த பலத்த அதிர்ச்சி. காட்டுப் பக்கம் வாழ்ந்த கருநாகம் கூட என்னைக் கண்டு இரங்கி வேறு திக்கில் சென்றுவிட்டது.

ஆனால் என் தம்பி... அந்தக் கருநாகத்தை விடக் கொடுமையாக என் ஆனந்தத்தைப் பலிவாங்கிவிட்டான். மகிழ்ச்சிக்கு சமாதி கட்டிவிட்டான்.

ஒரு சுற்றுப் பயணத்தின்போது நான் திரும்பி வருவதற்குள் அவனுக்கும் என் அத்தை மகளுக்கும் கல்யாணம் நிச்சயமாகிவிட்டிருந்தது... நான் வந்த சில நாளில் இனிதே நடந்தேறி முடிந்துவிட்டது.

அண்ணன் ஆசைப்பட்ட அத்தை மகளைத் தம்பி தன் மனைவியாக்கிக் கொண்டு விட்டான்!

"அப்பா இதைப் பற்றி மறுப்புத் தெரிவிக்கவில்லை—ரெண்டுபேரும் ஆசைப்பட்டார்கள்... கட்டி வச்சுட்டேன்" ஒருமையாகப் பேசினார்.

"படிச்சவன்-நல்ல வேலையிலிருக்கான்னு பெண்ணைக் கொடுக்க சம்மதிச்சால்... நாங்க என்ன செய்ய?"



இது அம்மா எனக்குச் சொன்ன சமாதானம்.

என்னைப் பார்த்துக் கள்ளத்தனமாகப் புன்னகைத்தது வெறும் கள்ளப் புன்னகை என்று நிரூபித்தவள்போல அத்தை மகள்...என்னைவிட்டு என் தம்பி கையைப் பிடித்த அதிர்ச்சியைத் தாங்க முடியாது... நான் பித்துப் பிடித்தவனாகி... ஊர் ஊராக அலைந்து கொண்டிருந்தேன்—வருஷங்கள் இரண்டு கடந்தன.

ஒரு சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்டு ஊர் திரும்பியபோது எனக்கு இன்னொரு அதிர்ச்சி காத்திருந்தது.

அப்பாவும், அம்மாவும் கணிசமான வரதட்சணையைப் பெற்றுக் கொண்டு எனக்காகக் கல்யாணத்திற்கு முடிவு செய்து அழைப்பிதழ் அச்சிட்டு விநியோகித்து விட்டிருந்தனர்.

நான் ஊர் திரும்ப வேண்டியது—மணப் பந்தலில் உட்கார்ந்து அவள் கழுத்தில் தாலியைக் கட்ட வேண்டியது என்ற நிலை.

வரதட்சணையை வெறுப்பவன்—இந்த முடிவை ஏற்க மறுத்துப் புரட்சி செய்தேன். எங்கள் வீட்டிலும்—மணப் பெண் வீட்டிலும் உண்மை தெரிந்ததும் ஒரே குழப்பம். முடிவில் நான் விட்டுக்கொடுக்க நேர்ந்தது.

என் மறுப்பால் வீணாக ஒரு பெண்ணின் வாழ்வு கெட்டுப் போகும் என்று அஞ்சி மங்களாவை மணந்து கொண்டேன்.

ஆனால் எங்களை என் பெற்றோர்களும் தம்பியும் நிம்மதியாக வாழ விட்டார்களா?...

நான் வேலை காரண' வெளியூர் சென்றபோதெல்லாம் மங்களாவை தாயும்—தம்பி மனைவியும் இம்சித்தனர். இளைய ருமகளைப் போல... நிறைந்த

வரிசையுடன் அவள் வரவில்லை என்று குறை கூறி அவமதி தனர்.

முதல் குழந்தையைப் பெற்றதும் புக்ககம் திரும்பிய மங்களாவைச் சீர் முழுவதும் பெற்றுக்கொண்டு வந்தால் ஒழிய திரும்பக்கூடாது என்று பிறந்த வீட்டிற்கு விரட்டி யடித்துக் கொடுமை செய்தனர். நானும் என் மனைவியும் பொறுமையாக இருந்து பார்த்தோம். மூன்று குழந்தை களுக்குத் தாயான பின்பும் மங்களாவை அவர்கள் தங்கள் வீட்டுப் பெண்ணாக ஏற்க விரும்பாது வெறுத்தனர்.

அவளை விவாகரத்து செய்துவிட்டு வேறு பணக்கார இடத்தில் நான் பெண் எடுத்து மணமுடித்துக் கொள்ள வேண்டும் என்று என் குடும்பம் என்னை வற்புறுத்தியபோது திடுக்கிட்டேன்...ஆத்திரத்துடன் பேசி மறுத்தேன். என் மனைவி மீது இல்லாத பழியெல்லாம் சுமத்தி அவளது நடத்தையில் மாசு கற்பித்து என் சந்தேகத்தை...தூண்ட முயன்றான் என் தம்பி எனும் கருநாகம்.

அதற்கு மேல் என் பொறுமை எல்லையைத் தாண்டி விட்டது...குடும்பத்துடன் மனத்தாங்கல் பட்டுக்கொண்டு தனிக்குடித்தனம் செய்யப் பட்டணத்திற்கு வந்துவிட்டேன்.

அவர்கள் சொற்படி நான் கேட்காவிடில் எனக்குச் சொத்தில் பங்கு கிடையாது என்று அப்பா ஆவேசமாக முழங்கினார்.

அவர்கள் சொற்படி கேட்டு மூன்று குழந்தைகளையும் ஒரு நல்ல மனைவியையும் நடுத்தெருவில் நிறுத்திவிட்டு பாவத்தில் பங்கு கொள்ள நான் ஆசைப்படவில்லை என்று பதிலுக்கு நானும் கத்திவிட்டுதான் பிரிந்தேன்.

மாத முழுவதும் அலைகிறேன், வீடு வந்து சேரும்போது என் மனைவி வழிமேல் விழி வைத்துக்கொண்டு என் வர விற்காக அன்போடு காத்திருப்பதை உணர்ந்த போதெல் லாம் நான் பெருமையில் பூரித்துப் போகிறேன். ஒரு அன்



பான மனைவிக்கு ஈடு இணை வேறு ஏதேனும் இவ்வுலகில் உண்டா?

"என்ன தம்பி! வாசல் திண்ணையிலேயே உட்கார்ந் திட்டே? இன்னிக்கு நீ வருவேன்னு ரவி கடிதம் போட்டிருந் தான்-சமைச்சுத் தயாரா வச்சிருக்கேன். கை கால் கழுவி முதல்லே தாகத்துக்கு எதாச்சும் சாப்பிடு."

அன்புடன் ரவி தாயார் என்னை வரவேற்றார்கள்.

"கணேசு தம்பியா! வாப்பா வா...உனக்கு நாலு நாள் முன்னாலேயே ஒரு கடிதாசி வந்திருக்கு..." சொல்லிக் கொண்டே என் நண்பனின் தந்தை என்னை உள்ளே அழைத்துச் சென்றார்.

கை கால்களைக் கழுவிக் கொண்டு—முகத்தை குளிர்ந்த நீரில் பன்முறைக் கழுவி அந்த அதிர்ச்சியை உதறிவிட்டு... அவர் கொடுத்த கடிதத்தை ஆவலுடன் பிரித்தேன். எனது சுற்றுப்பயணத்தின்போது கட்டாயம் ஒரு சில நாள் நான் ஓய்வாக இருந்துவிட்டுத் திரும்புவேன் என்பதை மங்களா அறிவாள்—ஒவ்வொரு முறையும் அவள்...அவர்கள் வீட்டு முகவரிக்கு முன்னதாகவே கடிதம் எழுதுவது வழக்கம். அந்தக் கடிதம் மங்களா எழுதியதுதான்.

'வழக்கம்போல இந்தக் கடிதத்தை உங்கள் நண்பரின் பெற்றோர்களது முகவரிக்கு எழுதுகிறேன். வேலை அதிக மாக இருந்தாலும்—வெய்யிலில் குடையில்லாது அதிகம் அலையாதீர்கள். உடம்பைக் கவனித்துக் கொள்ளுங்கள்; இரவு படுக்கப் போகுமுன் மறக்காது ஓட்டலிலாவது ஒரு தம்ளர் பால் வாங்கி சாப்பிட்டுவிட்டுத் தூங்குங்கள். ரவி அப்பாவின் வீட்டில் ஓய்வாகத் தங்கியிருக்கும்போது எண்ணை தேய்ச்சு முழுக மறக்காதீர்கள். இந்த வெய்யிலில் உடம்பு சூடாகி விட்டிருக்கும்...குழந்தைகளுக்குச் சதா உங்கள் நினைப்புத்தான். நீங்க ஊரிலிருந்து கிளம்பி ஒரு

மாதமாகிறதல்லவா? வீடு திரும்பும் நாள் நெருங்கிவிட்ட தாலோ என்னவோ வாயில் அழைப்பு மணியைக் காய்கறி விற்பவர் அழுத்தினால் கூட நீங்கள்தான் வந்துவிட்டீர்கள் என நினைத்து நான் வாயிலுக்குப் பறந்தோடுகிறேன்... எனக்கும் பிள்ளைகளுக்கும் பரிசுகள் என்று ஏதாவது வாங்கி மூட்டை சுமக்காதீர்கள்—நீங்கள் பத்திரமாக உடம்பு சுகமாகத் திரும்பி வந்தால் அதுவே எங்களுக்குப் பெரிய பரிசு... உங்கள் மங்களா.'

நெஞ்சில் பூரிப்பும்...அதே சமயம் பிரிவினால் ஏற்பட்ட ஆதங்கமுமாகக் கடிதத்தை மீண்டும் படிக்கிறேன்.

"தம்பி! நானே சொல்லணும்னு இருக்கேன். இந்த வேலையில் மாற்றம் ஏதாவது கிடையாதா...? பட்டணத் திலும்—அதைச் சுத்திலும் உள்ள பகுதிக்கு உன்னை மாத்தி விடும்படி நீ ஏன் கம்பெனி மானேஜரைக் கேட்கக் கூடாது? அங்கேயும் மருந்துக் கடைகள்—ஆஸ்பத்திரிகள் டாக்டர்கள் இருக்காங்களே .." ரவியின் அப்பா பேசினார்.

என் மனமும் அதைத்தான் அதுசமயம் சிந்தித்துக் கொண்டிருந்தது.

இத்தனை ஆண்டுகளாக வெளிப்புறப் பகுதிகளுக்கு நான் சுற்றுப் பயணம் செய்து மருந்து விற்பனை அதிகரிப்பு செய்ய உழைத்துவிட்டேன்.

இப்போது என் நிறுவனம் எனக்கு நகரமும்—புறவெளிப் பகுதிகளையும் தந்து...என்னை சென்னையிலேயே என் குடும்பத்துடன் வாழ அனுமதிக்க வேண்டும். கேட்டால் கட்டாயம்...அப்படி மாற்றித் தருவார்கள்...முயலப் போகிறேன்...அதற்குப் பின்னர்...என் மனைவி மக்களைப் பிரிந்து வாழும் இந்த அலைச்சல் வாழ்க்கைக்கு ஒரு முற்றுப் புள்ளி.



வளர்கின்ற பருவத்துக் குழந்தைகளுக்கு தகப்பனான நான் அருகில் இருக்க வேண்டியது மிகவும் அவசியம்.

இளம் மனைவிக்கு... துணைவனாக... அருகில் இருக்க வேண்டாமா?

மங்களம் எத்தனைக் காலம் இந்தப் பிரிவுத் துன்பத் தைத்தாங்குவாள்...

முதல் வேலையாக... நகரத்திற்குத் திரும்பியதும் மாற்றல் வேண்டி விண்ணப்பித்துக் கொள்ளப்போகிறேன்.... என் குடும்பத்துடன் பிரியாது வாழ முயலப் போகிறேன்... மகிழ்ச்சியோடு நான் கடிதத்தை மடித்துச் சட்டைப்பையில் வைத்துக் கொள்கிறேன்.

"என்ன தப்பி! நான் சொன்னது..." ரவியின் அப்பா கேட்கிறார்.

"நீங்கள் சொன்னது சரி... அப்படித்தான் செய்யப் போகிறேன்..."

நான் வாய் விட்டுச்... சிரிக்கிறேன்... மனம் லேசாகி விட்ட இனிய உணர்வில் வருங்காலம் ஒளிமயமாகத் தெரிகிறது.

□

# குருவி சொன்னது!

அடுப்பில் பாலை வைத்துவிட்டு.... மேடையருகே காத்துக் கொண்டிருந்தபோது மாமியாரின் உரத்த குரல், முன்னறையிலிருந்து என்னைக் கூப்பிட்டது.

அலுவலகம் போக அவசரப்பட்ட கணவர் குளியலறை யிலிருந்து வந்தவர் "என் துணுமணிகளை எடுத்து வச்சிருக்கியா!" அதட்டியபடி, உடை மாற்ற இடையில் சுற்றிய ஈரத்துவாலையுடன் எங்கள் அறைப் பக்கம் ஓடிக் கொண்டிருந்தார்.

பள்ளிக்கூடத்திற்குச் செல்ல ஆயத்தமாகிக் கொண் டிருந்த குட்டி மைத்துனர்கள் இருவரும்.... "அண்ணி! காப்பி பலகாரம் தயாராகலையா? நேரமாகுதே?" மிரட்ட லாகக் குரல் கொடுத்தனர்.

"காலையிலே எழுந்தா... பல் துலக்கினோம் ஒரு வாய் காப்பி குடிச்சோம்னு கிடையாது. இந்த வீட்ல என்ன மாதிரிப் பொண்ணு, மச, மசன்னுகிட்டு...?" மாமனார் வாசல் வராந்தாவிலே நாளேடு ஒன்றைப் புரட்டியபடி எரிச்சலில் பலமாக முணுமுணுத்தார்.

இப்படிப் பலபேருக்கும் யந்திரமாகச் சுழன்று பம்பரம் போல் இயங்கி அடிபணியும் ஓர் கொத்தடிமை நான்— அதாவது மருமகள் என்று இவர்கள் வீட்டில் நுழைந்து மூன்றுமாத காலத்திலே எனக்கு ஏற்பட்ட அவலநிலை!



வீட்டு வேலைக்காரிகூட, சம்பளத்திற்கு உழைப்பவள் தான். காலை, மாலை என்று மணிக் கணக்கில்தான் வேலை செய்வாள். என்ன சாப்பிடக் கிடைக்கும் என்று கேட்கும் உரிமை, நியாயம் எல்லாம் அவளுக்கு உண்டு. ஆனால், கழுத்திலே தொங்கிய மஞ்சள் கயிற்றால். மாட்டை இழுத்து வருவதுபோல், என்னை இழுத்து வந்து இங்கே அடிமைப் படுத்தி இருக்கிறார்களே.... இது, சம்பளமில்லாத ஒரு வேலைக்காரியின் நிலை என்று இப்போதல்லவா விளங்கு கிறது.

வேலைக்காரி என்றா சொன்னேன்... சே! சே! தவறு, நாள் முழுவதும் உழைக்கும் ஒரு யந்திரம். ஏனெனில் யந்திரம், வாய் திறந்து பேசாது, சாப்பிடாது. நின்ற இடத்தி லேயே நிற்கும். சொன்னதைச் செய்யும். அதுதான் நான்.

"என் ஆபீஸ் பையை எங்கே வச்சே? எடுத்துக் குடு' கணவரின் சீற்றத்தைக் கண்டு பயந்து அப்படியே அவர் பின்னால் ஓடினேன். பையை எடுத்து அவரிடம் கொடுத்து விட்டுத் திரும்புவதற்குள் அடுப்பில் இருந்த பால் பொங்கி வழிந்து விட்டிருந்தது. அதன் தீய்ந்து போன மணம் என் மாமியாரின் மூக்கிற்குத் தப்புமா?

ஆவேசமாக அடுப்பருகில் ஓடி வந்தவர். "அடிப்பாவி! பாலைப் பொங்க விட்டுப்பிட்டு, அதுக்குள்ளாற அவன்கூட என்ன கும்மாளம்னு கேக்கறேன்" உறுமினார்.

பாலைக் கீழே இறக்கி வைத்தவரின் கையில் பாத்திரத் துடன் சூடு பற்றவே, ஆத்திரம் தாள முடியாது ஓங்கி என் கன்னத்தில் ஒரு அறை விட்டார்.

என் பற்கள் எல்லாம் ஆடிப் போகுமளவுக்குப் பலமான அறை, 'அம்மா!' என்று அழுகையில் அலறினேன்.

"வாயை மூடு! இப்ப உன்னை எங்கம்மா கொன்னு புட்டாடப்பல கத்தினாயோ... நானும் என் பங்கைக் குடுக்க வேண்டியிருக்கும்'' மனைவிக்காகப் பரிந்து பேச வேண்டிய என் கணவர் பற்களைக் கடித்து அரக்கனைப் போல உருட்டி விழித்தபடி அம்மாவின் அருகில் வந்தார்.

"ஏதாச்சும் வீட்டு வேலையில கருத்து இருந்தால் தானே? நேத்து ஒரு கண்ணாடி டம்ளரை உடைச்சே, அதுக்கு முன்னே, பிளாஸ்டிக் வாளியைத் தண்ணியோட போட்டு உடைச்சி விரிசலாக்கினே. நீ என்ன மருமகளோ... எங்களுக்குன்னு வந்து வாச்சிருக்கே. பொறுப்பு இல்லாத துப்பு கெட்ட ஜென்மம்'' காப்பி கிடைக்காத கோபத்தில் மாமனார் தன் பங்காகக் கத்தினார்.

"பிறந்த வீட்டைப் பத்தின நினைப்பு வந்துட்டதாக்கும் அண்ணிக்கு?'' குட்டி மைத்துனர்கள் 'களுக்'கென்று சிரித்தனர்.

"அப்ப...பிறந்த வீட்டோடயே கிடந்திருக்கணும். இங்கே எதுக்கு வந்து நம்ம கழுத்தை அறுக்கணும்'' மாமியார் கொடூரமாகக் கூறியபடி, என்னை அப்பால் தள்ளிவிட்டு, மட மட வெனக் காப்பியைக் கலந்தார். நான் தயாரித்து வைத்திருந்த காலைப் பலகாரத்தையும், காப்பியையும், தன் பரிவாரங்களுக்குப் பகிர்ந்தளித்து விட்டு தானும் ஒரே வாயில் முடித்துக்கொண்டு சமையல் அறையிலிருந்து வெளியேறிவிட்டார்.

பண்ணினவளுக்குப் பானைஎன்ற கதைதான், எனக்குத் தேய்த்துக் கழுவ இட்டலிப் பானையும், காலியான காப்பி தம்ளர்களும்தான் இருந்தன.

பாலைப் பொங்கவிட்டு பணத்தை விரயமாக்கியதற்காக என்னை மாமியார் பட்டினி போட்டுத் தண்டித்தார். இப்படிப்பட்ட தண்டனைகள் - அடி - உதை - வசவுகள் என்று எத்தனையோ விதமான அவமானங்களை இந்த மூன்று மாத வாழ்வில் நான் அனுபவித்தாகிவிட்டது.



கழுத்திலே தங்கச் சங்கிலியும் இடையே சரிகைப் பட்டும் முகத்தில் பெரிய குங்குமப் பொட்டுமாக மணவறையில் என் திருமணத்தின்போது வளையவந்த மாமியாரா இவர்கள்? என்னைக் கடைக் கண்ணால் பார்த்துக் கள்ளச் சிரிப்புச் சிரித்து மனதிலே இன்ப பரவசமூட்டிய மணமகன்... இப்போது ஒரு முரட்டுத்தனமான கணவனாக மாறியது எவ்விதம்?

"போதும்மா... மத்த பெரியவங்களுக்கு வணக்கம் செய்து ஆசி வாங்கிக்கோ...'' வாய் நிறைய என்னை அருமையுடன் வாழ்த்திய அந்தப் பெரியவர், மாமனார் என்ற அதிகாரபீடத்தில் ஏறியதும் ஏன் இப்படி சீறுகிறார்?

என் தந்தை கொடுத்த மூவாயிரம் ரூபாய் வரதட்சிணைப் பணத்துக்காக... கேவலம்... இப்படி ஒரு நடிப்பா... இப்படி ஒரு ஆட்ட பாட்டமா போட்டார்கள்...? இவர்களெல்லாம் மனிதர்களா? சிங்கம், புலிக் கூட்டத்தின் இடையே சிக்கிவிட்ட மான்குட்டியாக... ஐயோ...நான் படும் பாடு.

அடிவயிற்றை வேதனை சுருட்டியது. கண்களில் நீர் பெருகப் பின்பக்கம் ஓடினேன். தலையைச்சுற்றி மயக்கமாக வந்தது. வயிற்றைப் புரட்டி வாந்தியே வந்து விட்டது. கழுகுபோல் பின்னாலேயே வந்த மாமியார் திகைப்புடன் விழித்தார்.

"இப்ப இதுக்கு அவசரமாயிட்டுதா? வீட்டுக்கு வந்து மூணு மாசம் கூட ஆகலை... அதுக்குள்ள குழந்தை... ஹூம்! இனிமே, மசக்கை, மயக்கம்னு நீ படுத்கிட்டா வீட்டு வேலையை யார் செய்யறது?'' கூவினார்.

எனக்குத் துக்கம் தாள முடியவில்லை. திருமணமான தன் மகள், தாய்மை அடைந்ததைக் கேட்டுப் பெற்றவள் பூரித்துப் போவாளே!

"எங்கப்பாவுக்குக் கடுதாசி போட்டு..." முடிக்கும்முன் மாமியார் கரகரவென என்னை உள்ளே இழுத்து வந்தார்.

"கல்யாணம் ஆனவுடனே உன் புருஷன் மூலமா சுண்டிச்சுப் பேசி இருக்கோம் இல்லையா? உன் பிறந்த வீட்டை மறந்துடணும்னு... இப்பக் கடுதாசி போட்டு உன் பிறந்த வீட்டுச் சொத்தை உங்கப்பன் கிட்ட அனுப்பச் சொல்லப் போறியாக்கும்?" இடித்தாள்.

அன்றிரவு வீடு திரும்பிய கணவரும், தன் பங்கு சோடை போகாமல், தவறு என்னுடையதே போன்று நடந்து கொண்டார்.

"இருக்கற செலவு பத்தாதுன்னு இது ஒண்ணுதான் குறைச்சல்..."

சினிமா கதாநாயகன், கதாநாயகி மாங்காய் கேட்டதும் அவள் தாய்மையடைந்ததை எண்ணி ஆனந்தமாகத் துள்ளிக் குதித்துப் பாடுவானே...? அதெல்லாம் வெள்ளித் திரையில்... என் வாழ்வில் வசவுகள்தான் பாட்டுகள், பரிசுகள்!

அடுத்த வீட்டில், எங்கள் ஊர்ப் பெண்தான் மருமகளாக வந்திருந்தாள். கொள்ளைப்புறக் கிணற்றடியில் பாத்திரங் களைத் துலக்க வரும்போது இருவரும் சந்தித்துப் புன்னகை புரிவதோடு சரி, இருவீட்டின் குறுக்கே எழுப்பி இருந்த இடைச்சுவர் அந்த இடத்தில் தாழ்வாக இருந்ததால் அது மட்டும்தான் முடிந்தது.

கோவில், குளம் போகக்கூடாது. யாரிடமும் பேசக் கூடாது என்று உத்திரவானதால் அவளிடமும் என் மனதைத் திறந்து பேசமுடியாமல் போயிற்று—அவளது மாமியார் மிக அருமையானவள். மருமகளைப் பெண்ணைப் போல் கருதுபவள்.

என் உள்ளத்தில் லேசான பொறாமை. பக்கத்து வீட்டில் வாழ்க்கைப் பட்டிருக்கும் எங்கள் ஊர்ப்பெண்ணுக்கு



அதிர்ஷ்டமான வாழ்வு. எனக்கு...? தப்பித் தவறி அவளிடம் பேச்சுக்கொடுக்க முனைந்தால், "என்னைப் பத்தி அவகிட்ட வத்திவைக்கப் பார்க்கிறியா?" என்று மாமியார் பின்னாலேயே கண்காணிப்பார். அப்படி ஒரு சிறைக் கைதி வாழ்வு எனக்கு...?

அன்று வீடு திரும்பின என் கணவர் கோபமாகக் காணப் பட்டார். அம்மாவும், பிள்ளையும், அப்பாவுமாக கசமுசவாகப் பேசி சண்டையிட்டனர்.

"ஒரு கால் கட்டுப்போட்டாலாவது சரியாகிடுவேன்னு நினைச்சேன். இப்படி கல்லைத் தூக்கிப் போடறியே" அடிக் குரலில் அரற்றினார் மாமியார். வார்த்தைகள் தடித்த போதுதான் எனக்கு ஒரு பயங்கரமான, திடுக்கிடும் உண்மை தெரிய வந்தது.

என் கணவர் ஏற்கனவே ஒரு பெணணுடன் தொடர்பு கொண்டு குடும்பம் நடத்துகிறார். அவளைப் பதிவுத் திருமணம் செய்து கொண்டு விட்டதால் பிரிய முடியாதாம்! அப்படியானால் என் நிலை என்ன?

ஒரு புழுவுக்கும் இது போன்ற நிலையில் துணிச்சல் ஏற்படுமல்லவா? எனக்கு ஏற்பட்டது. தாள முடியாத கொடுமையைப் பொறுக்கலாம். ஆனால் உரிமை இல்லாத அடிமை வாழ்வை எவள் பொறுத்துக் கொள்வாள்?

"ஏன் இப்படி ஒரு அக்கிரமம் செய்தீர்கள்? இது உங்களுக்கு நியாயமாகத் தெரியுதா?" என்று என் கணவரிடமே கேட்டபோது, கிடைத்தது அடிகள்.

"அப்படித்தான் செய்வேன், நீ என் வைப்பு, இஷ்டம் இருந்தால் இரு. இல்லை... உங்கப்பன் வீட்டுக்குப் போ."

முடிவில், அடியும் திட்டுமாகப் பிறந்த வீட்டிற்குப் புலவந்தமாக ரயிலேற்றி அனுப்பிவிடப்பட்டேன். வீடு திரும்பிய மகளைக் கண்டதும் 'ஓ'வென்று என்னைப் பெற்றவர்கள்

அலறித் துடிக்க நான் கதற, வெகுநேரம் துயரம் அடங்காமல் அழுதுகொண்டே இருந்தோம்.

என் தகப்பனார், நன்றாக சிந்தித்தார். என் நிலை என்ன? நான் எஸ். எஸ். எல். சி. தேறியவள். டெலிபோன் ஆபரேட்டர் கோர்ஸிலும் தேறியவள். இனி பிறக்கப்போகும் ஒரு குழந்தைக்கு தாய். ஆனால் சட்டபடி மனைவியல்ல.

நல்ல வக்கீலைக் கலந்து, என் கணவருக்கு ஒரு நோட்டீஸ் விட்டார். பதில் நோட்டீஸ் வரும் என்று காத்திருக்கும் வேளையில்...வந்தது...யாருமல்ல... என் கணவர் தாம்!

"மாமா! 'கோர்ட்' அது இதுன்னு போகவேணாம். உங்க பெண்ணையும் வாழ வைக்கிறது என் பொறுப்பு...." என்று காலில் விழாத குறையாக மன்றாடினார்.

"நம் பெண்ணுக்கு எப்படியாவது வாழ்வு இருந்தால் சரி" என்று பலவிதமான யோசனைகளுக்குப் பிறகு முடிவெடுத்தார் அப்பா. ஒப்புதல் தெரிவித்து அவருடன் ரயிலேற்றி வைத்தார்.

பாதி வழியில் ஒரு ஸ்டேஷனில் என்னையும் இறக்கி, தானும் இறங்கிய என் கணவர் "இதப்பாரு! உன்னை நான் வீட்டுக்கு அழைச்சுப் போக முடியாது. உங்கப்பன் கேஸ் போட்டா, எனக்குப் பணம் செலவுன்னு சும்மா ஒரு நாடகம் போட்டேன். அவள்தான் என் மனைவி. நீ வந்தே... பிறகு என்ன நடக்கும்னு சொல்ல முடியாது." பயமுறுத்தலுடன் முடித்தார்.

அழுகையும், ஆததிரமுமாக மீண்டும் பிறந்த வீடு திரும்பினேன். அப்பா குமுறினார். கொதித்தார். மருமகப் பிள்ளை வீட்டை பூண்டோடு அழிப்பதாகக் கங்கணம் கட்டிக்கொண்டார். வக்கீலிடம் ஓடினார்.



"சட்டப்படி உங்கள் மகள் மனைவியல்ல, வேறுவிதமாக கேஸ் தொடுத்து எடுத்தால் ஏகப்பட்ட செலவாகும். விடுங்கள். மேற்கொண்டு, உமது மகளின் எதிர்காலத்தை நல்ல முறையில் வழிப்படுத்தப் பாடுபடுங்கள்" என்று வக்கீல் கூறிவிட்டார். எனக்குப் பெண் குழந்தை பிறந்தது. மீண்டும் எனக்கு மறுவாழ்வு தேட என் தகப்பனார் பிடிவாதமாக முனைந்தார். ஆனால் நானோ...?

ஒரு முறை பட்டது போதாதா? பட்டதினிப்போதும் பட முடியாதினித் துயரம்... இனி ஒரு குழந்தைக்குத் தாயான என்னை, வேறு ஒருத்தன் மணந்துகொள்ள முன் வருவானா? வந்தாலும் நல்லவனாக இருப்பானா...? ஊஹூம்! நான் வேலைக்கு முயற்சித்து, என் மகளை வளர்த்து அவளுக்குத் தாயாக வாழ்வது என்ற முடிவிற்கு வந்துவிட்டேன்.

என் பாட்டியின் அக்கா; சிறுவயதிலேயே விதவை ஆனவர்கள். என் மீது பாசமும் பரிவும் கொண்டவர்கள். என்னிடம் ஆறுதலாகக் கூறினார்கள்.

"நடந்தது நடந்திட்டது. என்னைப்பாரு, நானாவது படிக்காதவ. நீ படிச்ச பொண்ணு. ஒரு வேலை தேடிக் கொள்ளு. தன் கையே தனக்கு உதவின்னு உனக்கு சின்னக் குழந்தையில, கதை சொல்லுவேனே நினைப்பிருக்கா, அதை நினைவிலே வச்சுக்க, உன்னால வாழ முடியும்னு வாழ்ந்து காட்டு" என்றார்.

ஒரு வயல் அறுவடைக்கு காத்திருந்த சமயம், அங்கே ஒரு குருவிக் குடும்பம் வசித்தது. நிலத்தின் சொந்தக்காரன் மகனுடன் வந்து, "நாளைக்கு ஆட்கள் வருவார்கள் அறுவடையை முடிக்கணும்" என்றான்.

அம்மா குருவியிடம் குட்டிக்குருவி கேட்டது. "நாமெல்லாம் எங்கே போவோம்மா!"

"இப்ப இல்லை கண்ணே" அம்மா குருவி பதிலளித்தது.

இரண்டு நாட்கள் கழித்து மீண்டும் தகப்பனும் மகனும் வந்தனர்.

"ஆட்களை நம்பிப் பலனில்லை, நாளைக்கு நாமே அறுவடையை முடித்துவிட வேண்டியதுதான்."

அம்மா குருவி, குழந்தைக் குருவிகளிடம் சொன்னது. "தன் கையே தனக்கு உதவின்னு நிலச் சொந்தக்காரன் கிளம்பிட்டான். இனி நாமும் வேறு இடம் பார்க்க வேண்டியதுதான்" கூட்டைக் கலைத்துக் கொண்டு கிளம்பி விட்டது குருவி.

ஆம்! நானும், என் கையே உதவியாக, வேலைகளுக்கு விண்ணப்பித்து கொள்வேன். பாடுபட்டு என் மகனை வளர்ப்பேன்; ஒரு சமயம், என் நிலையை உணர்ந்து, என்னை மணந்து கொள்ள எவரேனும் முன் வந்தால் நல்லது. இல்லையேல், முழுமூச்சுடன் இப்படியே வாழ்ந்து நல்லதொரு தாயாக இருப்பேன்.

□

# கணவன் என்ற கல்

காலை வேளை அவசரம்.. வழக்கம் போல் வீடு இரண்டு பட்டுக் கொண்டிருந்தது.

பிளஸ் ஒன்றில் படிக்கும் என் மகன் ரவி, டியூஷனுக்குப் போக அவசரமாகத்தயாராகிக் கொண்டிருந்தான். அலுவலகத் திற்குப் போகக் கணவருக்கு கார் வருவதற்குள் அவரது பகல் டிபனைக் கட்டித் தயாராக மேஜை மீது வைத்தேன்... கான்வென்ட்டுக்குக் கிளம்ப சீருடையில் தயாராகிக் கொண் டிருந்தாள் மகள் ஷீலா. வீட்டின் மற்றொரு பகுதியிலிருந்து மீன் வறுபடும் வீச்சம் மூக்கைத் துளைத்தது.

முகத்தை சுளித்தபடி, மகளின் பின்னலை முடிந்து, ரிப்பனை நுனியில் கட்டி சுருக்கிய என்னை நிமிர்ந்து பார்த்த மகன் முறுவலித்தான்.

"அம்மா! இதுபோல சந்தர்ப்பங்கள், சங்கடங்கள் எல்லாத்தையும் அனுபவிக்க நேரும்னு நீங்க யோசிச்சுப் பார்த்ததே இல்லியா?"

திடுக்கிட்டேன் நான். தோளுக்கு மேல் வளர்ந்துவிட்ட பிள்ளை. அரசியலிலிருந்து அடுப்பங்கரை விஷயம் வரை அலசத் தெரிந்து கொண்டுவிட்ட ஆண் சிங்கம்! அவனை நான் இன்னமும் குழந்தையாகவே நினைத்துக் கொண்டி ருப்பது என்ன முட்டாள்தனம்!

"நீங்க செய்த தவறை நான் ஒருக்காலும் செய்யற தில்லைன்னு இப்பவே எம் மனசில ஒரு தீர்மானம் செய்து வச்சிருக்கேன்" ஷீலா கூறியதும் என் தலையில் சம்மட்டியால் யாரோ அடித்தது போல ஒரு வேதனை...

மற்றவர்கள் இடித்துக் காட்டியபோதெல்லாம் என்னால் பொறுத்துக் கொள்ள முடிந்தது. ஆனால் நான் பெற்ற செல்வங்களே.... என் குற்றங்களை சுட்டிக் காட்டிய பொழுது என்னால் பொறுத்துக் கொள்ள முடியவில்லையே?

"என்னம்மா ஷீலா சொல்லறே?" புரியாதது போல் கேட்டு கொண்டு, எனக்கும், குழந்தைகளுக்கும் தயாராக் வைத்திருந்த இடைவேளை பலகாரமான உப்புமாவை, மூன்று டப்பாக்களில் அடைக்கத் துவங்கினேன்.

"காதல் என்றோ, பணக்காரன், பதவியில் இருக்கிறவன் என்றோ மயங்கிப் போய்... ஏற்கெனவே மனைவி குழந்தைங் கன்னு இருக்கற "ரெடிமேட்" குடும்பக்காரரோட ரெண்டா வது மனைவியா வாழ்க்கைப்படவே மாட்டேன்... சத்தியமா...!" உக்கிரமான குரலில் கண்ணும் முகமும் சிவக்கக் கூறினாள் ஷீலா.

என் உடல் அவமானத்தால் கூசிப் போயிற்று.

"முதல் சம்சாரம் உயிரோட இருக்கறச்சே இரண்டா டாவதா வந்தவங்க, மனைவி என்கிற ஸ்தானத்தை எப்படி அடைய முடியும்? சட்டத்திலேயே இடமில்லையே... அப்படி இரண்டாவதா வந்தாலும் அவங்களை சமூகம் 'மனைவி'ன்னு மதிக்காது. சட்டமும் சட்டை செய்யாது. "வைப்பு"ன்னு தான் சொல்லும்" ரவி படபடத்தான்.

"தெய்வமே! என் உயிர் போய்விடாதா?" என் உள்ளம் அழுதது. வீட்டில் நடக்கும் அத்தனை விஷயங்களைப் பார்த்துக் கேட்டு, அனுபவப்பட்டுவிட்ட என் குழந்தைகள்... அவர்கள் வெளி உலக அறிவு... வயதுக்கு மீறிய விவேகத்தின்



கூர்மை... எல்லாம் சேர்ந்து விட்டிருக்கிறது. மேலும் இந்தக் காலத்து வளர்ந்து வரும் இளைய தலைமுறையாயிற்றே! புத்தகங்களும் பத்திரிக்கையும் அவர்கள் புரிந்து கொள்ளாத விஷயங்களைக்கூட பத்தி பத்தியாக விளக்கமாக, பளிச் சென்று தெரிவித்து விடுகின்றனவே? திரைப்படங்கள் மட்டும் விதி விலக்கா?

இருப்பினும் "ரவி! என்ன பேச்சு இது?" அடுத்தப் பகுதி யில் முதல் மனைவி, குழந்தைகளுடன் இருக்கும் என் கணவர் காதில் படாத வண்ணம் அடிக்குரலில் அதட்டினேன் நான்.

"சொல்ல வேணாம்னுதான் நினைச்சேன். ஆனால் உண்மையை சொல்லிடறது நல்லதுன்னு தோணுது.... முந்தா நாள், பெரியம்மா மகன் (என் சக்களத்தி மகன்) எங்கிட்ட வம்புக்கு வந்தான். ஐயா வக்கீலுக்கும் படிக்க ஆரம்பிச்சிருக் காரே! சட்டத்தையே கரைச்சுக் குடிச்சுட்ட மாதிரி, பேசினான்."

என் நெஞ்சு படபடத்தது. "என்ன சொன்னான்?"

"நீ எனக்கு தம்பியுமில்லே. நான் உனக்கு அண்ணனு மில்லே. தெரிஞ்சுக்கோ. அப்பா காலம் வரைதான் இந்த உறவு... பிறகு... மிஸ்டர் லோகநாதனின் வைப்பின் மகன்" கேலியா குத்தினான். "வாயை மூடு"ன்னு சீறினேன்.

"உங்கம்மா, எங்கப்பனை மயக்கி, இந்த வீட்ல வந்து ஒட்டிக் கிட்டவ... சரிதான் போடா"ன்னு அவன் சொன னப்போ, அப்படியே அவனைக் கழுத்தைத் திருகி" பற்களை நரநரவென்று கோபத்துடன் கடித்த ரவியின் முகம் ஆத்திரத் தால் சிவந்து போயிருந்தது.

"உங்களுக்காகப் பொறுத்துக் கொண்டேன்." மகனின் வார்த்தைகளில் நான் வேதனையால் சுருண்டு போனேன்.

"ஆண்டவா! என் குழந்தைகளுக்கு அவமானமும், கசப்பும்தான் நான் தேடித் தந்த சொத்துக்களா?" மனம் துடிக்க பதில் கூற முடியாமல் தத்தளித்தேன்.

"என்ன இங்கே, தர்க்கம்..." அதிகாரமான குரலில் அதட்டியபடி, அலுவலக உடுப்பில், கால் ஷூவுடன், சமையலறைக்குள்ளே அட்டகாசமாக நுழைந்தார் என் கணவர்.

ரவி, அவரை உறுத்துப் பார்த்தான். "மீன் நாத்தம், குடலைப் புரட்டுது" என்றான் கோபமாக.

"மீன் நல்ல புரத உணவாச்சுதே! திங்கப் பழகிக்க. உங்கம்மாக்காரி போல சுத்த சைவமா இருக்காதே!" கிண்டல் செய்த அவரை, விரோதமாகப் பார்த்தான் ரவி.

"எனக்குப் பிடிக்காததை யாரும் வற்புறுத்த முடியாது."

"ஐயா பெரியவராகிவிட்டாரோ?" கேட்டபடி அருகில் நெருங்குமுன், "வரேன் அம்மா!" என்று என்னிடம் மட்டும் கூறிவிட்டு அவசரமாக டியூஷனுக்குப் புறப்பட்டுப் போனான்.

"எனக்கும் நேரமாச்சு" ஷீலா புத்தகப்பையுடன் அண்ணன் பின்னால் ஓடிவிட்டாள்.

"குழந்தைகளை எனக்கெதிரா திருப்பிவிடற வேலை செய்யறியா?" சீறியபடி அருகே வந்தார் என் கணவர்.

நான் கசப்போடு நின்றேன். மேலும், கீழுமாக என்னைப் பார்த்த அவர் முகத்தில் ஏளனப் புன்னகை.

"இதேது புதுச்சேலை...?"

"மூணுமாசமா...நம்ப தெருக்கோடி கடையில் சீட்டுக் கட்டி வச்சிருந்தது எடுத்தேன்னு...நேத்து உங்க கிட்ட காட்டினேனே ... மறந்துட்டீங்களா?" முணுமுணுத்தேன்.



"ஆபீசிலே ஏதாச்சும் விசேஷமோன்னு நினைச்சேன். எவனாவது முக்கிய அதிகாரி வருவான்னு சொன்னியே அவனுக்குத்தான் இந்த அலங்காரமோன்னு நினைச்சேன்."

முள்ளாகக் குத்தின வார்த்தைகள். என்ன ஆணவம் இந்த மனிதருக்கு? காதல் என்று மயங்கி பெற்றோர், குடும்பத்தினர் என யாவரையும் உதறிவிட்டு எல்லோரையும் வெறுத்துக் கொண்டு, கல்யாணமாகி ஆறு குழந்தைகளுக்குத் தந்தையான இவருடன் வந்து ஒரு போலியான திருமணத்தில் உறவு அமைத்துக்கொண்ட எனக்கு...இதுவும் வேண்டும்... இன்னமும் வேண்டும்.

"எங்க சீஃப் சூப்பரவைசர் முந்தா நாளே வந்திட்டுப் போயிட்டார்னு சொன்னேனே?"

"அப்ப இன்னைக்கு எவனுக்கு இந்தத் தனி அலங்காரம்? புது சிநேகிதமா?"

"வேலைக்குக் கிளம்பப்போற சமயத்துல...கண்டபடி பேசி மனதை வேதனைப்படுத்தறீங்க ... பதினைஞ்சு வருஷமா...ஒரே வீட்ல, உங்க வாழ்க்கையில் இன்னொ ருத்தியா, உண்மையா, உழைச்சுப் போடற எனக்கு...இது தான் பரிசா?"

"நடிக்காதே? ஆபீசுக்குப் போன் செய்தப்போ நீ இடத்திலியே இல்லியாமே...உன் தலைவரோட தனியா...?"

"ஏன் இப்படி கன்னா பின்னான்னு பேசறீங்க...நான் கழிவறையில் இருந்தேன். டெலிபோன் ஆப்பரேட்டர் காதில விழற அளவுக்கு, எதுக்காக அப்படிக் கத்திப் பேசினீங்க. எனக்கு அவமானமாயிட்டுது."

"உனக்கு அப்படி ஒரு உணர்வு கூட உண்டா?" கேட்ட படி, தயாராக இருந்த டிபனை எடுத்துக் கொண்டு வெளியே சென்றார் என் கணவரான கல் இதயம் படைத்த மனிதர்.

எங்கள் பகுதியைப் பூட்டிவிட்டு ஆபீஸிற்கு ஓடினேன் நான். அன்று முழுவதும் வேலையில் மனம் ஓடாமல் புலம்பிக் கொண்டே இருந்தது. பதினைந்து ஆண்டுகளுக்கு முன், அவசரப்பட்டு நான் செய்த தவறுக்காக எத்தனை முறைகள் கண்ணீர் வடித்திருக்கிறேன். ஒருவனுக்கு ஒருத்தியாக உண்மையாக வாழ்ந்த சிரமத்தின் பலன்...?

மூத்தாள் மகன் 'வைப்பு' என்ற பட்டம் சூட்டுகிறான். கணவன் சதா சந்தேக கண்ணோடு மட்டமாகப் பார்க்கிறார். மூத்தாள் என்ற அரக்கி, என்னையும், குழந்தைகளையும் வதைக்காமல் இருக்க சேலை, ரவிக்கை என்று லஞ்சம் வேறு அளிக்கிறேன். ஆனாலும் அவள் அடிக்கடி கோள்மூட்டி என் கணவரை ஏவி விடுவதோ என் குழந்தைகளை அடிக்க வருவதோ குறைவதில்லை.

இவ்வளவிற்கும், நான் வேலை செய்து சம்பாதிப்பதில் தான் என் குடும்பம் நடக்கிறது. வீட்டை நிர்வகித்து, வெளியிலும் வேலை செய்து, கிடைத்த சம்பளத்தில் இந்த மூத்த குடும்பத்திற்கும் பங்கு வைத்து .. நான் என்ன கொத்தடிமையா? என் போன்ற படித்த, சுதந்திரமான பெண்ணிற்கு இப்படி ஒரு வாழ்வு தேவைதானா? உள்ளம் அலறித் துடித்தது. கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்தது. இந்த நரக வேதனையிலிருந்து மீளவே முடியாதா?

சவுக்கடி பட்டுப் பட்டு மரத்துப் போன அடிமைக் கைதியாக எனது நாட்கள் நகர்ந்தன. இப்போது ரவி, வைத்தியக் கல்லூரியில் சேர்ந்து படித்துக் கொண்டிருக்கிறான். ஷீலா, பி. எஸ். சி. கடைசி ஆண்டு படிக்கிறாள். "கடவுளே! என் குழந்தைகளின் வருங்காலத்தையாவது வளமாக்கிவிடு" இதே நம்பிக்கையின் உறுதியில் வருடங்களைத் தள்ளி விட்டிருந்தேன் நான்.

அன்று காலை வழக்கம் போல, புறப்படும் அவசரம்... ரவி, ஷீலா அவரவர் கல்லூரிக்கு புறப்பட்டனர்.



"என்ன பொண்ணுக்கு மேலே அம்மாக்காரி அலங்காரமா ஆபீசுக்குப் புறப்பட்டுட்டாப் போல இருக்கு?" உள்ளே வந்தார் என் கணவர்.

குழந்தைகள் பெரியவர்களாகி விட்டதை மறந்து விட்டார் அவர். என் புதுப் புடவையை முறைத்தார் கடுமையாக.

கண்ணாடி முன் தலையைச் சீவிக் கொண்டிருந்த ரவி கோபமாக அங்கே வந்தான்.

"அம்மாவுக்கு இன்னைக்கு பிறந்த நாள். உங்களுக்கு வேணா அது மறந்து போயிருக்கலாம். ஏன்னா...உங்களுக்கு இன்னொரு மனைவி இருக்காங்க" ஆனா....எங்களுக்கு ஒரே ஒரு அம்மாதானே இருக்காங்க" உறுமினான் அவன்.

"என்னடா சொன்னே?" கையை ஓங்கியபடி அருகில் பாய்ந்த அவரை ஒரே எட்டில் தாவி, கையை அழுத்திப் பிடித்தான் ரவி.

"இப்படி கை நீட்டற பழக்கத்தை இத்தோட நிறுத்தலே....அவமானப் படுவீங்கன்னு எச்சரிக்கிறேன். எங்க யாரையும் தொட்டு அடிக்கற உரிமை உங்களுக்கு இல்லேன்னு ஞாபகப்படுத்த விரும்பறேன்."

"ராஸ்க்கல்! பெத்த அப்பன்கிட்டேயே...வளர்த்த கடா மார்ல . பாஞ்ச கதையா..." கோபத்தில் தடுமாறினார் அவர்.

"இது நீங்க வளர்த்த கடா இல்லே....எங்கம்மா பத்து மாசம் சுமந்து பெத்த கடா... அவளுக்காகப் பரிஞ்சு கொண்டு யுத்தத்துக்குப் புறப்பட்டிருக்கு? ஜாக்கிரதை! நீங் களே ஆரம்பிச்சதால, நான் தொடர்ந்து கேக்கறேன்."

"என்னடா துள்ளரே?"

"அது நீங்கதான். எங்கம்மாவை வீட்டைவிட்டு உங்க பின்னாலே ஓடி வந்தவள்னு உதாசீனப்படுத்தி இருக்கீங்க. உங்க வக்கீல் மகனும், எங்கம்மா உங்களுக்கு உறவில்லைன்னு உறுதிப்படுத்திட்டான். எங்கம்மா ஒரு பொய்யான உறவுக்காக இத்தனை நாள் ஏமாந்தது போதும். நானே ஒரு முடிவுக்கு வந்துட்டேன்."

"பெரிய மனுஷரு...முடிவு எடுத்துட்டாரு!" கையை உதறிக் கொண்டார் அவர்.

"ஆமாம்! நான் பெரியவனாயிட்டேன். எங்க அம்மாவை வச்சுக் காப்பாத்த முடிவு செஞ்சுட்டேன். ஏன்னா அவங்க, உங்க மனைவியில்லே. சமுதாய வேலிக்கு அப்பால் பிறந்த குழந்தைங்க நாங்க. இனி நாங்களே வெட்டிக்கிட்டு தனியா போயிடறோம். அதுக்கு ஏற்பாடு செஞ்சுட்டேன்."

"மாலதி! இவன் உளர்றதைப் பாத்தியா?"

"அவங்ககிட்ட ஏன் கேக்கறீங்க....குளவி கொட்டற மாதிரி சதா அவர்களைத் துன்புறுத்தியது போதாது? உங்களை நானும், ஷீலாவும் விஷம்போல வெறுக்கிறோம். நாங்க பிறக்கக் காரணமாக இருந்த ஒரு கயவனை எங்கள் அப்பான்னு சொல்ல வெட்கப்படறோம். இதுக்கு மேல இங்க நின்னீங்க...நடக்கறதே...வேறயா இருக்கும்!" ஆங்காரமாகக் கத்தினான் ரவி.

தலையைத் தொங்கப் போட்டபடி என் கணவர் வெளியேறினார். கணவன் என்ற அந்தக் கல் மனிதன் போகட்டும். சீறும் சிங்கக் குட்டி போன்ற என் மகன் எனக்கு ஆதரவாக இருக்கிறான்—எனது வருங்காலத்தில் இனி அமைதி இருக்கும் என்ற நிம்மதியில் பெருமூச்சு விடுகிறேன் நான்.

□

# பத்துமாத பந்தம்

அவன் குடியிருந்த அந்த பகுதியின் முடிவில் ஒரு பள்ளிக்கூடம். காலையில் அவன் தன் கடைக்கு பத்துமணி அளவில்தான் போவது வழக்கம். கடையின் மற்றொரு கூட்டாளியான அவனது மைத்துனன் விடியற்காலையிலேயே கடையைத் திறந்து வியாபாரத்தை துவங்கி விட்டிருப்பான். சைக்கிளை மெல்ல உந்திக் கொண்டு பள்ளிக்கூடத்தருகில் வந்ததும் இறங்கி ஓரமாக சைக்கிளுடன் நின்றான் நடேசன்.

சிட்டுக் குருவிகள் போல சீருடையில் ஆண், பெண், குழந்தைகள் எல்லோரும் எதிர்புறத்து பாதையிலிருந்து தெருவைக் கடக்க முயன்று கத்தி-கூச்சலிட்டு ஆர்ப்பரித்துக் கொண்டிருந்தனர். காவல்துறை அதிகாரி அந்த வேளை நிதமும் அங்கே வந்து நின்று கையமர்த்தி போக்குவரத்தை தடைசெய்து குழந்தைகள் எதிர்பக்கமாக இருந்த பள்ளிக்குப் போக உதவுவது வழக்கம்.

அன்று அவன் கண்ட காட்சியில் ஒருகணம் மனம் அதிர்ந்து போனான். அடங்கிப் போயிருந்த பழைய நினைவுகள் குப் என்று உள்ளத்திலேயே தலைதூக்கி நிற்க அவன் கண்கள் பனித்தன. குழந்தைகள் தெருவை கடப்பதை வேடிக்கை பார்த்தபடி ஒரு ஓரமாக நின்றுவிட்டான்.

இளம்பிள்ளை வாதத்தினால் ஒரு கால் ஒடுங்கிப்போன ஆறு வயது சிறுவன் இரும்பு கம்பிகள் இணைக்கப்பட்ட பாதணியை அந்தக் காலில் அணிந்து கொண்டிருந்தான்.

"அம்மா, எனக்கு பயமா இருக்கு!" என்று கூவினான் சிறுவன்.

"இந்த பூட்சிலே நீ நடக்க பழகிக்கணும்னு டாக்டர் சொல்லியிருக்கார் இல்லையா?"

"விழுந்து விடுவேன் போல பயமா இருக்கும்மா?"

"விழமாட்டே, அம்மா கையைப் பிடிச்சுகிட்டு மெள்ள நட...எங்கே பார்க்கலாம்?"

"அம்மா! என் கால் நல்லாயிடுமா?"

"பள்ளிக்கூடத்திலிருந்து நீ வெளியே வரத்துக்குள்ளே நிதமும் வாசலில் வந்து காத்திருப்பேன்—என் கையை பிடிச்சுட்டு நடந்து நீ வீட்டுக்கு வருவே. கால் பூட்சை கழற்றிட்டு... மருந்து பூசி...தேய்ச்சு, நீவி விடுவேன் வெந்நீர் வச்சு ஒத்தடம் கொடுப்பேன்."

"நிதமும் செய்வீங்களா அம்மா?"

"செய்வேண்டா கண்ணு...மகாஞ்ச நாளில் காலு நல்லாயிடும்..."

"அண்ணன் ராமுவைப் போல நானும் ஓடி விளையாட முடியுமா அம்மா."

"நீயும் நானும் கண்ணாமூச்சி கூட விளையாடலாம் —அப்படி ஓட முடியும் உனக்கு."

நம்பிக்கை ஒளிவீச அரிசி பற்கள் தெரிய அந்த சிறுவன் மகிழ்ச்சியுடன் களுக்கென்று சிரித்தபடி அம்மாவின் கையைப் பிடித்துக் கொண்டு நடந்தான்...

அந்தத் தாய் ஒரு இளம்பெண். நெற்றி நிறைய குங்குமம்-இடையில் நூல் சேலை. கழுத்தில் தாலிச்சரடு, கையில் கண்ணாடி வளையல்கள், சாதாரண குடும்பத்தை சேர்ந்தவள்...ஊனமுற்றிருந்த போதிலும் தான் பெற்ற குழந்தை என்ற பரிவில்...அன்பையும் கருணையையும்— அள்ளித் தரத் துடிக்கும் தாய் அவள்...அந்த தாய்மையின் நிறைவிலே திருமகள் போன்ற பொலிவுடன் அவள் தென் பட்டாள்.



பிரமிப்புடன் அவளை ஏற இறங்கப் பார்த்தான் நடேசன். அவனுள் ஆயிரம் பூகம்பங்கள் தோன்றி-நெஞ்சமே பொடியாகி விட்டது போன்றதொரு திகைப்பு.

கையும் காலும் விளங்காது...நோயாளியாகி படுத்த படுக்கையாகிவிட்ட தம்பி ஆறுமுகம்...நாளடையில் பார்வை யையும் இழந்து விட்டான். வெளிவாசலுக்குப் போக வேண்டுமென்றால்கூட யாராவது அவனைத் தூக்கிச் சென்று உதவ வேண்டிய அவல நிலை.

பல்விளக்கத் தம்பியை அவன்தான் தினமும் கிணற் றடிக்கு தூக்கிச் செல்வது வழக்கம்.

"அப்படியே இரு...ஒரு வாளி தண்ணி இரைச்சு... உன்னை மெதுவா குளிப்பாட்டிவிடறேன்"

"இரு இரு...அவசரப்படாதே...பனியனைப் போட்டு— சரா்யைப் போட்டு தூக்கிட்டுப் போய் படுக்க வைக் கிறேன்."

"ஆறுமுகம் வாயைத்திற...இட்டிலி கொஞ்சம் ஊட்டி விடறேன்..."

—இப்படிப் பல பணிவிடைகள் செய்து வந்தான் தம்பிக்கு நடேசன். இருவரும் அப்பாவை சிறு வயதில் இழந்து விட்டவர்கள். அவர்களைப் போன்று அந்நிலையில் எத்தனையோ சிறுவர்கள் உலகில் இருக்கவில்லையா?... கோடி வீட்டு குப்பன் கூட சின்ன வயதில் தந்தையை இழந் தான். குப்பனுடன் ஐந்து பேர் கொண்ட குடும்பத்தை அவன் விதவைத் தாய் ஆப்பம் சுட்டு விற்று சமாளித்தாள். குப்பனும்-அவன் தம்பி சோமுவும் உயர் பள்ளியில் படித்துக் கொண்டிருந்தனர். பிள்ளைகள் தலையெடுப்பார்கள்— தங்கச்சிகளை கட்டிக் கொடுப்பார்கள்—என்ற நம்பிக்கையில் குப்பன் தாய் தன் பிள்ளைகளைக் கண்களாக பாதுகாத்து வளர்த்தாள். அடிக்கடி தன் பிள்ளைகளைப் பற்றி பெருமை யாகப் பேசினாள்.

தன் தாயும் அவ்வாறு பெருமைப்பட வேண்டும் என்று தான் நடேசனின் பிஞ்சுமனம் மிகவும் ஆசைப்பட்டது. அந்த ஆர்வத்தில்தான் தாய்க்கு சுமையாகிவிட்ட தம்பியைத் தானே கவனித்துக் கொண்டான். பெண் குழந்தையைப் போல விடியற்காலை எழுந்து நீர் குடத்தைத் துலக்கி— அம்மாவுக்கு பூந்தோட்டத்திலிருந்து குடிநீர் கொண்டு வந்து உதவினான். கிடைத்ததைச் சாப்பிட்டு விட்டு பள்ளிக்கு ஓடினான்—கருத்தோடு படித்தான். வகுப்பிலே முதல் மாண வனாக நின்றான்.

அத்தனையும் விழலுக்கிறைத்த நீராகப் பாழாகிப் போயின. ஒரு நாள் மாலை, பள்ளியிலிருந்து அவன் விரை வாகவே திரும்பிவிட்டான். தோட்டத்துக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்தவன் திடுக்கிட்டுப் போனான்.

அவர்கள் படுக்கும் அறையிலிருந்து வெளிப்பட்டார் அடுத்த வீட்டில் வாடகைக்கு இருந்த தச்சு வேலைக்காரர்... அவருக்குப் பின்னால் அம்மா....வெளிவந்தாள்...!

கலவரமும் திகைப்புமாக நின்ற பிள்ளையின் முதுகை அம்மா செல்லமாகத் தடவிக் கொடுத்தாள்.

“அலமாரி சரியா பூட்ட மாட்டேங்குது-இவர்கிட்ட காட்டி பழுது பார்க்கச் சொன்னேன்”-புன்முறுவலித்தாள்.

அவன் அதை நம்பிவிட்டான்-ஆனால் மறுநாள் காலை- நோயின் உக்கிரத்தில் படுக்கையாகிவிட்ட தம்பிக்கு காலை பலகாரம் கொடுத்தபோது...அவன் சொன்ன தகவல்... தாங்காத அதிர்ச்சியைத் தந்தது...

“உண்மையா?...நம் அம்மா இப்படியா நடந்துக் கிறாங்க...?”—அவன் நெஞ்சம் திகிலில் துடித்தது...அவ மானத்தில் உடல் சாணாகக் குறுகிப் போனது. அதுசமயம்



அம்மா பின்பக்கம் துணிகளை துவைத்துக் கொண்டிருந்தாள். வீட்டிற்குள் அவள் இல்லை என்ற துணிவில் தம்பி எல்லா வற்றையும் சொல்லிவிட்டான்.

“அண்ணா! அம்மா செய்கிறது ஒண்ணும் எனக்கு பிடிக்கலை...அந்த தச்சு வேலைக்காரர் தினமும் நம் வீட்டுக்கு நீ இல்லாத நேரத்திலே வரார். அவங்க ரெண்டு பேரும் சிரிச்சுக்கிட்டு அறைக்குள்ளே போய் கதவைச் சாத்திக் கிறாங்க...எனக்குக் கால் இல்லே-கண் இல்லே—ஆனால் மனசு இருக்கு-உணர்வுகள் இருக்கு....அம்மா தப்பு காரியம் செய்யறாங்கன்னு தவிச்சுப் போறேன்...நான் நோயாளி... உன்னைவிட வயதில் சின்னவன். நான் என்ன பண்ணு வேன்?” குமுறி அழுதான் ஆறுமுகம்.

அன்று முழுவதும் அவனுக்கு பள்ளிக் கூடத்தில் படிப்பே ஓடவில்லை.

நோயாளியாக பத்து வயதுப் பையனை வீட்டில் வைத்துக்கொண்டு பள்ளிக்கூடத்தில் படிக்கும் பதினெட்டு வயது மகனுக்கு தெரியாது அம்மா இப்படியா அசிங்கமா நடந்து கொள்வாங்க!...

கோடி வீட்டு குப்பன் தாயும் விதவைதானே?...அவங்க இப்படி தவறா நடந்துக்கலையே?...

பல பல எண்ணித் துடித்தபடி....அம்மாவிடம் அதைப் பற்றி அதட்டிக் கேட்டு விடுவதென்று முடிவுடன் வீட்டுக்குத் திரும்பியபோது....இன்னொரு...அதிர்ச்சி அவனது தாய் அந்தத் தச்சு வேலையாளுடன் புறப்பட்டு ஊரைவிட்டே போய்விட்டிருந்தாள்.

கண் தெரியாத தம்பி நடந்ததைச் சொல்லி கதறியபோது அவன் மனம் உடைந்து....தம்பியை கட்டிக்கொண்டு அழுத அழுகை...நல்ல வேளை எதிர் வீட்டுப் பாட்டி இளகிய மன முடையவள்.

"நான் குழந்தையைப் பார்த்துக்கிறேன். நீ பரீட்சை எழுதி முடி—பிறகு ஏதாச்சும் வேலை தேடிக்கலாம்" என்று ஆறுதல் கூறி உதவ முன் வந்தாள்.

தேர்வு முடிந்து வெற்றி பெற்றான்—அவன் வேலை தேடிக்கொண்டு தம்பியைக் காப்பாற்ற முனையுமுன் ஆறுமுகம் நோய் அதிகமாகி—இறந்து போனான்.

தாயும் இல்லை—தம்பியும் இல்லை. அனாதையாக நடேசன் கடைத் தெருவில் கூலியாளாக வேலை பார்த்துத் தன்னைத்தானே காப்பாற்றிக் கொள்ள முற்பட்டான்.

அந்த வாழ்விலும் அவனுக்கு ஊரார் அமைதியைக் கொடுக்கவில்லை.

"அதோ போறானே...அவன்தான் நடேசன். அவன் தாயார்...பக்கத்து வீட்டுக்காரனுடன் ஓடிவிட்டாள்."

"அந்தப் பையன் பாவம் பள்ளிக்கூடத்திலே படிச்சுக் கொண்டிருந்தான். கொழுப்பெடுத்தவள் அவன் தாய்... எவனையோ இட்டுக் கொண்டு கம்பி நீட்டிவிட்டாள்."

"நடேசன் அம்மா நடத்தை கெட்டவள்—நோயாளிக் குழந்தையைச் சாகவிட்டு விட்டு....கள்ளப் புருஷனுடன் ஓடிப்போனாள்"— வார்த்தைகள் ஈட்டிகளாகப் பாய—அதன் வேதனையை—அவமானத்தைத் தாளாது ஒரு நாள் அவன் இருந்ததையெல்லாம் எடுத்து மூட்டை கட்டிக் கொண்டு பட்டணத்துக்கு புறப்பட்டு விட்டான்...

சைக்கிளை மேலே உந்தியபடி கடைக்குப் புறப்பட்டான் நடேசன்.

அந்த ஊனமுற்ற குழந்தையைக் கண்டு...மனதில் ஏற்பட்ட நினைவுகளால் நெஞ்சு கனத்தது.

ஆனால் பட்டண வாழ்க்கை அவனுக்கு ஏமாற்றம் தரவில்லை. எழும்பூர் ரெயில் நிலையத்தருகேயிருந்த ஒரு



டீக்கடையில் ஆரம்பத்தில் எடுபிடி ஆளாகச் சேர்ந்தான். இரவும் பகலும் அயராது உழைத்தான். சிக்கனமாக வாழ்ந்தான். சிறிது பொருள் சேர்த்தான். சில ஆண்டுகளில் சொந்தமாக ஒரு டீக்கடையை அவன் சிறிது தூரத்தில் வேறு ஒரு பகுதியில் ஆரம்பித்தான்... கடை கொழித்தது... நல்ல லாபம் கிடைத்தது. பணம் தந்த தெம்பில் பழைய வேதனைகளை உதறிவிட்டு மனிதனாக நிமிர்ந்து வாழத் தலைப்பட்டான். அதற்குள் அவனுக்குத்தான் எத்தனை நண்பர்கள்? அந்த நண்பர்கள் பட்டாளத்தில் மிகவும் நெருங்கிய தோழன் வேலப்பன். அவன் தங்கை மல்லிகாவை அவன் ஒரே ஒரு முறை தான் எதேச்சையாகப் பார்த்தான்—மனதிற்கு மிகவும் பிடித்து விட்டது. நண்பனுடன் பேசி மல்லிகாவை மணந்து கொண்டு விட்டான்.

மல்லிகா வந்ததுமே அவனுக்கு வளமையான காலம் துவங்கி விட்டது. கடை வியாபாரம் அதிகமாகிவிடவே. தன் மச்சானை அதில் கூட்டாளியாக சேர்த்துக்கொண்டு.... ஆளுக்கு சில மணி நேரம் என்று உழைப்பை பகிர்ந்து கொண்டான். கடைக்கு கொஞ்ச தூரத்திலேயே வீடு எடுத்து தனிக்குடித்தனம் நடத்திக் கொண்டிருந்தான்...

மல்லிகா தையல் பயிற்சி பெற்றவள்—ஒரு தையல் யந்திரத்தை தவணை முறையில் வாங்கி வைத்துக் கொண்டு ஓய்வு நேரத்தில் அவள் அருகிலிருந்த பெண்களுக்கு தையல் வேலை செய்து... சிறிது தானும் சம்பாதிக்க ஆரம்பித்தாள். இரண்டு ஆண்டு காலத்தில் வாயில் பக்கத்தை ஒரு சிறு தையல் கடையாக மாற்றி அமைக்குமளவு அவளது தொழிலும் பெருகிவிட்டது.

கணவனும்—மனைவியும் கடுமையாக உழைத்தனர்—சிக்கனமாக வாழ்ந்தனர்—சேமித்தனர். விரைவில் அந்த பகுதியிலேயே ஒரு பழைய வீட்டை விலைக்கு வாங்கி சீர்திருத்திக் கட்டிக்கொள்ள திட்டமிட்டிருந்தனர்.

அப்பொழுதுதான் மல்லிகா அவனிடம் அந்த மகிழ்ச்சி கரமான செய்தியைச் சொன்னாள். விரைவில் அவள் தாயாகப் போவதை அறிவித்தாள். அவனுக்குத் தாங்க முடியாத மகிழ்ச்சி. ஆனாலும் இடையே தன் தாயின் நினைவு முள்ளாக நெஞ்சை தைப்பதை உணர்ந்தான். அக்கம் பக்கத்தில் வாழ்ந்த பெண்கள்— மாமனார்— மாமியார்— கணவன் :...மனைவி என்று கூட்டுக் குடும்ப மாக... ஒன்றாக வாழ்வதைக் கண்டு சஞ்சலத்தில் தவித் தான். அவன் தாய் மட்டும்...அப்படி ஒரு காரியம் செய்யா திருந்தால்... மல்லிகாவுடன்.... வயது காலத்தில் நிம்மதியும் அரவணைப்புமாக வாழ்ந்து கொண்டிருப்பாளே? ஆமாம்... அவனது அம்மா இப்போது எங்கே?... என்ன . செய்து கொண்டிருக்கிறாள்?

கண்களில் பனித்த நீரை சமாளித்துக் கொண்டு அவன் தன் கடையை கவனிக்க உள்ளே சென்றான்.

சில நாட்களுக்குப் பின்—அவன் கடைக்கு சரக்கு வாங்க... மைத்துனனிடம் கடையை ஒப்படைத்து விட்டு... நகரத்திற்கு வந்திருந்தான். தேவையான சாமான்களை வாங்கி தள்ளு வண்டியில் ஏற்றி குறிப்பிட்ட முகவரிக்கு அனுப்பிவிட்டு பஸ் பிடிக்க நிலையத்தை நோக்கி விரைந்து கொண்டிருந்தான்.

நடைபாதையில்— தொழுநோய் பிச்சைக்காரர் பக்கத் தில் பரட்டைத் தலையாக, கிழிந்த உடையில், தரையில் உட்கார்ந்து கொண்டு போவோர் வருவோரிடம் கை நீட்டி பிச்சை கேட்டுக் கொண்டிருந்தாள் ஒரு கிழவி.

“ஐயா தர்மதுரை! பத்து பைசா இருந்தா போடுப்பா... ரெண்டு நாளா பட்டினி... காய்ச்சல் வேறே.... உன்னைக் கையெடுத்துக் கும்பிடறேன்...” அந்த குரல்? திடுக்கிட்டு நடேசன் அயர்ந்து போய் நின்றான். இதயமே சுக்கலாகி விடும் போன்றதொரு திகைப்பு... பார்க்கப் பார்க்க அந்தக் கிழவியின் வறுமைக் கோலம் கண்களில் கரைந்து... இளமை



யும் வாட்ட சாட்டமுமாக தோட்டத்துக் கீரைத் தண்டைப் போல... அவன் தாய் தள தளவென்று நிற்கும் நினைவில் அரண்டு போனான்.’

சந்தேகமேயில்லை... அவள் அவன் தாய்தான்... விரைவில் கிழவியாகி வறுமைக் கோலத்தில்... நடுத்தெருவில் பிச்சை கேட்கும் அளவில்... ஐய்யய்யோ...

கொல் கொல்லென்று இருமியபடி கிழவி தன் பக்கம் நீட்டிய கரத்தில் ஒரு ரூபாய் நாணயத்தை போட்டு விட்டு ஓட்டமும் நடையுமாக பஸ் ஸில் ஏறிக் கொண்டான்.

அவன் எதையும் தன் மனைவியிடம் மறைத்ததில்லை. மல்லிகா அதிகம் படித்தவள் அல்ல .... ஆனால் அறிவுமிக்க பண்பான பெண். தன் தாயைப் பற்றிய அவலச் செய்தியை முன்னமே அவன் சொல்லியிருந்தான். நடை பாதையில் அவன் கண்ட காட்சியை மனைவிக்கு விவரித்து விட்டு வேதனையுடன் சுவற்றில் சாய்ந்து கொண்டு உட்கார்ந்து விட்டான்.

அருகில் வந்த மல்லிகா... காப்பி டம்பளரை... அவனி டம் கொடுத்து விட்டு பக்கத்தில் உட்கார்ந்து கொண்டாள்.

“உங்க மனம் படற வேதனை எனக்குப் புரிகிறது. காப்பியை குடிச்சிட்டு உடனடியா ஒரு ஆட்டோவைப் பிடிச்சு.... அங்கே போய் நடைபாதையிலே பிச்சை எடுத்து கிட்டு உட்கார்ந்திருக்கிற உங்கம்மாவை வீட்டுக்கு கூட்டியாங்க.”

“என்னை சின்ன வயசிலே.... நோயாளி தம்பியோட விட்டுவிட்டு ஓடினவளையா கூட்டிகிட்டு வரச்சொல்றே?”

“என்ன இருந்தாலும் அவங்க உங்க அம்மா... பத்து மாதம் சுமந்து உங்களுக்கு இந்த மனித உருவத்தைக் கொடுத்து உதவினவங்க... அந்த ஒரு தகுதிக்காகவே நீங்க... அவங்களை வச்சு காப்பாத்த கடமைப்பட்டிருக்

ங்க... நான் விரைவில் உங்கள் குழந்தைக்குத் தாயாகப் போகிறேன். தாய்மை என்கிற நிலை இயற்கை ஒரு பெண்ணுக்கு அளிக்கும் விசேஷஉரிமை... கிளம்புங்க சீக்கிரம்."

"மல்லிகா... நீ ரொம்ப நல்லவ..."

"உங்க குழந்தைக்கு நான் என் கடைசி காலம் வரை ஒரு நல்ல தாயாக இருப்பேன்... உங்க விஷயத்தில் உங்க அம்மா ஏதோ தவறிட்டாங்க. மறந்து மன்னிச்சுடுங்க... போய் அழைச்சிட்டு வாங்க..."

ஆனால் அவன் தாய் அவர்களுடன் வீட்டில் வந்து கூட வசிக்கும் உடல் நிலையில் இருக்கவில்லை. கடும் காய்ச்சலுடன் நடை பாதையில் கிடந்தாள். ஆஸ்பத்திரியில் அனுமதித்த இரண்டாம் நாள் இறந்து போனாள்.

உயிருடன் வீட்டுக்கு அழைத்து வர முடியாத தாயின் உடலை வீட்டிற்கு எடுத்து வந்தான் நடேசன்.

தாயின் ஈமக்கடனை நிறைவேற்றும் பொறுப்பு கடந்தவருக்கு கடக்க முடியாத ஒரு கடமை... தலையை நிமிர்த்திக் கொண்டு நெருப்புச் சட்டியுடன் நடேசன் காடு வரை துணையாக... பத்து மாதம் தன்னை சுமந்ததற்கு... கடமை ஆற்ற...தாயின் இறுதி ஊர்வலத்தின் முன் மகனாக நடந்தான்.

□

# காதலுக்குக் கிடைத்த பரிசு

படத்தின் இடைவேளை—கலர் வாங்கி சாப்பிட வெளியே சென்ற தங்கைக்காக...பெண்கள் பகுதியிலிருந்து வெளியே வராந்தாவில் நான் காத்துக்கொண்டு நின்றேன். பகல் நேர காட்சி... கொட்டகையில் ஒரே புழுக்கம்... கூட்டம், நெரிசல்... அப்பாடா! சற்று வெளியே காற்றாட நின்றால் எவ்வளவு இதமாக இருக்கிறது! மெல்ல யாரோ தொட்டதுபோல் தோன்றியது. திடுக்கிட்டுத் திரும்பினால்....

கல்லூரித் தோழி லீலா.

புன்னகையுடன் அருகில் நின்றவள்... "என்ன அதிசயம் உன்னை இங்கே இப்படி சந்திப்பேன்னு கனவில்கூட நினைக்கலை. ஆறுவருஷமாயிட்டுதில்லியா படிப்பு முடிஞ்சு போய் ம் கல்யாணமாயிட்டுது போல் இருக்கு... அவர் தானே?"

சாதாரண நூல்சேலை. காதுகளில் கவரிங்தோடு, கைகளில் பிளாஸ்டிக் வளையல், கழுத்தில் தாலிச் சரடு. ஏழ்மையின் கோலத்தில் நின்ற என்னை அவள் ஊடுருவிப் பார்ப்பதை உணர்ந்தேன். வெட்கிப் போனேன்.

அவளை கடைக் கண்ணால் மெல்ல அவளையும் அறியாமல் நோட்டம் விட்டேன். கல்யாணத்திற்குப் பிறகு உப்பிப்போயிருந்தாள்... நெற்றியிலே பெரிய குங்குமம், அதற்கு மேலே விபூதிக்கீற்று, தலை கொள்ளாத

கனகாம்பரப்பூ, கழுத்தில் தங்கத்தாலிச் சரடு... இடையிலே டெர்கோசா சேலை... பார்க்க அழகாகவே இருந்தாள்.

"உனக்கும் கல்யாணமாயிட்டுது போல தெரியுதே"

"ஆமாம்! நீ காதல் கல்யாணம் செய்துகிட்டே. எனக்கு எங்க அப்பா அம்மா பாத்து ஏற்பாடு செய்தாங்க. ஆண் ஒண்ணு, பெண் ஒண்ணு. ரெண்டு குழந்தைங்க... உனக்கு?"

"ஒரு பெண் குழந்தை... அதுக்குப் பிறகு..."

—எனக்குத் தொண்டை அடைத்துக் கொண்டது. எப்படி சொல்வேன்? அடுத்த குழந்தையை என் கணவரின் வற்புறுத்தலால், கருச்சிதைவு செய்த கதையை?

"என் நாத்தியைப் பக்கத்து ஊர்லதான் கட்டிக் குடுத்திருக்காங்க. அவளைப் பார்த்துப் போகலாம்னு வந்தோம். பொழுது போகலே, அப்படியே சினிமா பார்க்க லாம்னு புறப்பட்டு வந்திட்டோம். உன்னைப் பார்த்ததும் சந்தோஷமாயிட்டுது. உன் விலாசத்தைக் குடு. நாலு நாள் இருப்போம். உன் வீட்டுக்கும் வருவோம்" பொரிந்து கொட்டினாள் லீலா.

முகவரியைக் கொடுத்துவிட்டு, தங்கை வந்ததும், உள்ளே சென்றேன். தாங்க முடியாத ஆவலுடன், லீலா உள்ளே வந்து உட்காருவதை பார்த்தேன். அவளைத் தொடர்ந்து உயரமாக வந்த மனிதரா அவளது கணவர்? இணக்கமாக அவர்கள் இருவரும் உள்ளே வந்து அமர்ந்த பொழுது, எனது வாழ்க்கையின் அவலம் பளிச்சென்று விளக்கமாகி, என் கண் களில் நீராகப் பெருக்கெடுத்தது.

கல்லூரி நாளிலேயே காதலித்தோம். காத்திருந்து திருமணம் செய்து கொண்டோம்...ஆமாம்! ஐந்தாண்டு காலம்... எனக்குத் தந்தையில்லை—திருமணமான அக்கா தான் குடும்பத்தின் தூணாக, விதவைத் தாயையும் மற்ற



சகோதரிகளையும், வேலை பார்த்துக் கொண்டும், எங்கள் குடும்பத்தையும் பொறுப்பாகக் கவனித்தும் வந்தாள்.

"நான் பி. யூ. சி. படிக்கும் போதே, காதல் வயப்பட்டுப் போனேன். என் கணவர் அப்போது பி. ஏ. இறுதி ஆண்டில் இருந்தார். எங்கள் மனம் ஒன்றினாலும், ஜாதி குறுக்கே நின்றது. கலப்புத் திருமணத்திற்கு, இருதரப்புக் குடும்பமும் ஒத்துக்கொள்ளாது என்ற அச்சம் வேறு. ஐந்து வருடங் களுக்குப் பிறகு, முருகன் திருத்தலத்திலே, கடவுள் சாட்சி யாக, கோவில் அதிகாரிகள் மூலமாகவே திருமணம் புரிந்து கொண்டோம்-புகை படங்களும் எடுத்துக் கொண்டோம்— தேனிலவு கொண்டாடினோம்—மகிழ்ச்சிகரமான, மறக்க முடியாத நாட்களின் ஆரம்பமும், முடிவும் அதுதான்.

புக்ககத்தில் காலை மிகத் தயக்கமாக வைத்த போது தான், எப்படிப்பட்ட வரவேற்பு எனக்காகக் காத்திருந்தது என்பது புரிந்தது.

உயர்ந்த வகுப்பைச் சேர்ந்த அவர்கள் வீட்டில் தாழ்ந்த வகுப்பைச் சேர்ந்த நான்...? என் மாமியும், மற்றவர்களும் என்னைப் பார்த்துக் கத்திக் கூச்சலிட்டனர். சண்டை போட்டனர். அக்கம் பக்கமே திரண்டு வேடிக்கை பார்க்குமள விற்கு ரகளையாகி விட்டது.

"இந்தக் காலத்தில் இதுபோல கலப்புத் திருமணங்கள் சகஜமானதுதானே? இந்தப் பெண் பார்க்க அழகாக இருக் கிறாள்— படித்தவள். ஜாதி ஒரு பிரச்சனையா?" நாலுபேர் சமாதானம் செய்ய, மாமியார் அப்போதைக்கு அடங்கிப் போனார்.

பிறகு...? அப்பப்பா...! நான் பட்ட பாடு...? என்னைத் தீண்டாதவளாக ஒதுக்கிவைத்து— வீட்டில் உள்ளவர் சாப்பிட்ட பிறகே எனக்கு உணவு—நான் தொட்டதை எவரும் தொட மாட்டார்கள்...ஏழேழு பிறவி எடுத்தாலும்

இதுபோன்ற சிறுமைகள் என் எதிரிகளுக்கும் நேரக் கூடாது... அத்தனை கொடுமைகள்! நான் உயிரினும் மேலாக அவரைக் காதலித்ததற்கு கிடைத்த பரிசுகள்!

தம் இனத்திலேயே ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று தமது தாய் விரும்புவதாக, ஒரு நாள், என் கணவர் என்னிடம் கூறியபோது நான் அதிர்ந்து போனேன். அதற்கு நான் ஒப்புதல் தரவேண்டும் என்று கேட்டுக் கொண்டார். பெற்றவளின் மனம் நோகக்கூடா தல்லவா? ஆனால், அவரையே முழுதாக நம்பி கைப் பிடித்தவள். அவரது வாரிசை, கருவிலே தாங்கிய எனக்கு இந்தப் பரிசா? இவர் ஏன் இப்படி மாறிப் போனார்? தாய்மையடைந்திருக்கும் என்னிடம் இதமாகப் பேசி, அன்புடன் நடந்துகொள்ள வேண்டியவர், அதிர்ச்சி வைத்திய மல்லவா செய்கிறார்? மனம் உடைந்து போகலானேன்.

என் பக்கம் வாதாட பிறந்த வீட்டு மனிதர் எவரும் முன் வரமாட்டார்கள். காதல் கல்யாணம், நானே என் தலையில் மண்ணை வாரிப் போட்டுக் கொண்ட விவகாரம். அதனால் நானே பிடிவாதமாக மறுத்துவிட்டேன்.

ஆனால், எனக்குத் தெரியாமல், என் புக்ககத்து மனிதர்கள் என் கணவருக்கு வேறு பெண்ணை — அவர்கள் இனத்திலேயே நிச்சயித்துக் கல்யாணத் தேதியும் குறித்து விட்டார்கள். திருமணப்பத்திரிகையும் அச்சடித்து வழங்கத் துவங்கினார் என் மாமியார்.

மணப்பெண் பக்கத்துக் கிராமத்தைச் சேர்ந்தவள்... நானும் உறுதியாகச் செயல்படத் துவங்கினேன். எங்கள் திருமண சான்றிதழ், புகைப்படங்கள் முதலியவற்றை எடுத்துக் கொண்டேன். நேரே பெண் வீட்டாரை அணுகி என் நிலையைப் பற்றி முறையிட்டுக் கதறிவிட்டேன்.

பெண்ணின் தந்தை பண்பானவர். அவரும் ஒரு பெண்ணைப் பெற்றவராயிற்றே? தமது மகளின் நல் வாழ்வை நாசப்படுத்த விரும்பாதவர். திருமணத்தை நிறுத்தி விட்டார் கடும் கோபத்துடன்.



என்னால் தடைப்பட்டு விட்டது கல்யாணம் என்று தெரிந்ததும்—மாமியார் பத்ரகாளியானார். உடனடியாக வீட்டை விட்டுக் 'கல்தா' கொடுக்கப்பட்டது. என் பிறந்த வீட்டிலோ. 'வாழாவெட்டி' என்ற நிலையில் என்னை ஏற்றுக் கொள்ள மறுத்தனர். வேறு வழியின்றி அடுத்த தெருவில், ஒரு சிறு வீட்டில் என் தனிமை வாழ்வு துவங்கியது.

என் மகள் பிறந்த போதும், இரு தரப்புக் குடும்பத்திலும் மகிழ்ச்சி இல்லை. என் கணவர், என் வீட்டிற்கு வருவதும் நாளடைவில் குறைய ஆரம்பித்தது. வாரத்தில் சில நாட்கள் என்னுடன் தங்குவார். மற்ற நாட்கள் தாயுடன்.

மீண்டும் தாய்மையுற்ற எனக்கு ஒரே மகிழ்ச்சி. எனக்கு துணையாக ஒரு ஆண் குழந்தை பிறக்கும் என்ற கனவு. அதில் என் கணவர் ஒரு பேரிடியைப் போட்டார். கலப்புத் திருமணத்தின் மூலம் ஆண் குழந்தை பிறந்து விட்டால் அவர்களது குடும்ப கௌரவம் பாதிக்கப்படும் என மாமி கூறிவிட்டார்களாம். எனக்கு பேச யார் வருவார்கள்? அதனால் கருச்சிதைவு செய்து கொண்டாக வேண்டும் என்று என் கணவர் அடம் பிடித்தார்.

நான் நிர்ப்பந்தத்திற்கு ஆளானேன். இது சமயம் பலவித மோசடிகளையும் என் மாமியார் உத்தரவின் பேரில் என் கணவர் செய்துவிட்டிருந்தார். என்னை அறியாமல், சாட்சியாக வைத்திருந்த போட்டோக்கள், சான்றிதழ் யாவற்றையும் அப்புறப்படுத்தி எரித்து விட்டிருந்தார். வேறு ஒரு பெண்ணைப் பார்த்து ரகசியமாக அவசரமாக திருமணம் பேசி முடித்திருந்தார் மாமியார். என்னைக் கடுமையாக வற்புறுத்தி, ''உன்னை நான் கவனித்துக் காப்பாற்றுவேன். வேறு திருமணம் செய்துகொள்ள சம்மதம்

தா'' என்று என் கணவர் ஒம்புதல் கையெழுத்தும் வாங்கிப் போனார். திருமணம் நடந்தது.

இப்படி என் வாழ்வு பறிபோயிற்று. என் கணவர் ஆரம்பத்தில் இரண்டு வீடுகளுக்கும் வந்துபோனார். மாமியார் தமது இனத்து மருமகளுடன் வாழ்ந்தார். நாளடைவில் என் கணவர் வரவு குறைந்து கொண்டே வந்தது. வாரம் ஒரு நாள் வருவார். வந்தாலும் இரவு தங்கமாட்டார். தாம்பத்திய முறையில் வாழவும் மாட்டார். ஆனால் அதிகாரமோ...? தூள்பறக்கும். கடைத்தெரு, கோவில் எதற்கும் நான் தனியே செல்லக்கூடாது! ஒரே ஊரில் குடியிருந்தும் பிறந்த வீட்டுப் பக்கம் தலைவைத்து படுக்கக் கூடாது. வெட்கம் மானத்தை விட்டுக் கெஞ்சிக் கூத்தாடி, சினிமாவிற்குப் போகவேணும் என்றால் பகல் ஆட்டத்திற்கு என் தங்கை துணையோடு போகவேணும். என்ன வாழ்க்கை இது? வீடு என்ற சிறை அதில் நான் ஒரு கைதி...ஆயுள் கைதி!

என் நாடகள் பெருந் துயரச் சுமையாக நகர்ந்தன நான் சமைத்ததைச் சாப்பிடக்கூட என் கணவருக்குப் பயம் வந்து விட்டது. ஒருவேளை வசிய மருந்து கலந்திருக்கலாம் நான் என்று என் மாமியாரின் உபதேசம்! சக்களத்தியின் போதனை படித்த பகுத்தறிவுமிக்க ஒரு மனிதன்... ஒருத்திக்கு ஒருவன் என்று கல்லூரியில், மேடையில் முழங்கிய தமிழன்... இப்படியா தன் சுய வாழ்வில் வேஷம் மாறிப் போவார்? என்ற வேதனையும் வெறுப்பும் எனக்கு...

படம் முடிந்து பளிச்சென்று விளக்குகள் எரிந்தன. அவசரமாகக் கண்களைத் துடைத்தபடி எழுந்தேன்.

பாவம்! அந்தக் காதநாயகி! திரைப்படக் கதாநாயகியின் சோக முடிவிற்கு கண்ணீர் உகுத்தபடி எழுந்தாள் என் தங்கை. நான் எனக்காக அழுததை அந்த சிறுமியிடம் எப்படிக் கூறுவேன்?



மலிகாள் என் தோழி லீலா வந்தாள். தனியாக வரவில்லை, கணவருடன் வந்தாள்.

"இதுவா உன் வீடு? உன் கணவர் வசதியான வர்னு...'' அவள் ஆரம்பிக்கும் முன் என்னையுமறியாமல் வெடித்து விட்டேன்— அழுதபடியே உண்மையைக் கூறிவிட்டேன்.

கூடத்திலிருந்த மோடாமீது வந்தமர்ந்த லீலாவின் கணவர் மனைவியையே பார்த்தார். லீலா கண்களைத் துடைத்தபடி என்னை ஆதரவுடன் பற்றிக்கொண்டாள்.

"கவலைப்படாதே. என் சுணவர் ஒரு வக்கீல், அவர் கட்டாயமாக உதவி செய்வார். உனக்கு ஒரு வழி செய்யச் சொல்றது என் பொறுப்பு'' என்றாள் திடமாக.

"தங்கச்சி! அந்த முருகன் சாட்சியா கல்யாணம் செய்து கொண்டீங்க. நிச்சயம் அவர் துணை செய்வார்'' என்றார் லீலாவின் கணவர்.

"சாட்சியங்களைத்தான் எரிச்சுட்டாங்களே!'' புலம்பினேன் நான்.

"கோவில் அலுவலகத்தில் கல்யாணத் தேதியைச் சொல்லி, அதே 'காப்பி'யை வாங்கிவிட முடியும். அதே போல, அதே போட்டோ ஸ்டுடியோ கம்பெனியிலே காப்பி புதுசா போட்டுத் தரச் சொல்ல முடியும்.''

"இனிமே அப்படிக் கிடைச்சுத்தான் என்ன பயன்? நான்தான் ஒப்புதல் கையெழுத்திட்டிருக்கேனே'' அரற்றினேன் நான்.

"முதல்ல ஒரு பெண்ணை இந்துமத முறைப்படியும் பதிவு முறைப்படியும் திருமணம் செய்த பின்னர்...அவள் ஒப்புதல் குடுத்தாலும், இரண்டாம் தாரம் செய்து கொள்வது சட்டப்படி குற்றம். அப்படி இரண்டாவதாக வந்தவங்களுக்கு மனைவிங்கற உரிமை சட்டபடி கிடையாது. இதை வச்சே நீதிமன்றத்திலே வழக்காடலாம்.''

ஹூம், பெரு மூச்சுவிட்டேன்.

"இதனால் உங்க கணவர் கண்டிக்கப்படலாம்...இப்படி அடிமையா, சித்திரவதை பட்டு நீங்க வாழறதை விட விவாகரத்து பெற்றுக் கொண்டு, விலகி சுதந்திரமாக ஏன் வாழக்கூடாது. நீங்க படிச்சவங்க. உங்களுக்கு நல்ல வேலை கிடைக்க வாய்ப்பு உண்டு. அதுக்கு நாங்க கட்டாயம் உதவறோம் தங்கச்சி. அப்படி இல்லைன்னா தாம்பத்திய உரிமை கோரி வழக்குத் தொடருங்கள். இரண்டாவது வந்தவளைத் தள்ளி வச்சிட்டு, சட்டப்படி உங்களை மனைவியா வாழ வழக்காடி வெற்றி பெறலாம். சட்டம் உங்கள் பக்கம்தான் தீர்ப்பு சொல்லும். நிரந்தரமாக ஜீவனாம்சம் வழங்கும்படி உங்கள் கணவரை வற்புறுத்த நீதிமன்றத்திற்கு உரிமை உண்டு. சட்டத்தைச் சரணடையுங்கள். அந்த முருகன் கட்டாயம் உங்களுக்கு வெற்றி தருவான். தங்கச்சி வேலின் மீது ஆணையிட்டு விட்டு ஏமாத்தினால் வேலன் சும்மா இருப்பானா?" என்றார் மனம் நெகிழ்ந்து போன லீலாவின் கணவர்.

என் உள்ளத்தில் புதிய தெம்பு உருவாகியது. அவர் வழக்கறிஞர். அவரைப் போன்ற உடன் பிறவா அண்ணனின் உதவியுடன் இந்தப் பிரச்சினைக்கு வழி தேடுவேன். "காதலியைக் கானகத்தே விட்டுப் போன காதகனைப்" போன்ற என் கணவரை விடப் போவதில்லை இது திண்ணம்! திண்ணம்!

"லீலா! கொஞ்சம் இரு சூடா காப்பியும் பலகாரமும் கொண்டு வரேன். சாப்பிட்டுப் போகலாம்" என்றபடி உள்ளே திரும்பினேன்.

□

# ஜோதிடம் பலித்ததா?

என்னைப் பற்றித் தம்பட்டம் கொட்டிக் கொள்வதாக யாரும் எண்ணக்கூடாது. என் வாழ்வில் ஏற்பட்ட இந்த திருப்பம் முற்றிலும் உண்மையானது!

உங்களது வார பலன், மாத ராசிபலன் என்று பத்திரிகைகளில் பிரபலமாகி வரும் பக்கங்களைப் புரட்டிப் பார்க்கிறீர்கள் அல்லவா? அப்போதெல்லாம், பிரபல ஜோதிட சிகாமணி சோமநாதன் என்ற பெயரையும் பார்த்திருப்பீர்களே? உங்களது வருங்காலத்தைத் தமிழிலும், ஆங்கிலத்திலும் பிய்த்து வாங்குகிற அதே ஜோதிட சிகாமணி நான்தான்.

நேற்றுத்தான் நான் எனது அமெரிக்கா—கானடா சுற்றுப் பயணங்களை முடித்துக் கொண்டு ஊர் திரும்பி இருந்தேன்.

உலகத்தில் எந்த மூலையில் வாழ்ந்தால் என்ன? எந்த இனத்தவராக இருந்தால் என்ன? தங்களது வருங்காலத்தைப் பற்றித் தெரிந்து கொள்ள விரும்பாதவர்கள் மிகச் சிலர்தான்

மரத்தடி கிளி ஜோசியம் முதல்...."ஜோசியம் பார்க்கலியோ சோசியம்" என்று தெருவில் கையில் சிறு கோலுடன் வெற்றிலையைக் குதப்பியபடி கூவி அழைக்கும் எட்டயபுரம் மீனாட்சியின் ஆருடம் முதல்...அவரவர் தகுதிக்கு ஏற்றாற் போல், வருங்காலத்தைத் தெரிந்து கொள்ள விழையாதவர்கள் அபூர்வம்.

சில வைத்தியர்களுக்கு ராசி என்பது கை கொடுத்து உதவி அவர்களைப் பிரபலப்படுத்திவரும். அதைப் போலவே—சில சோதிடர்களையும் அவர்களது யோகம் கை கொடுத்து உயர்ந்த பதவியில் உட்கார்த்திவிடும்.

உயர்மட்டத்துக்கு வந்து விட்ட சோதிடன் நான். இன்று, அகில இந்தியா மட்டும் இன்றி அகில உலகமும் சுற்றும் பிரபலமான சோதிடன் நான்.

பம்பாயில் ஐந்து நட்சத்திர ஓட்டலில் எண்பதாவது அறையில், என்னைப் பார்த்து ஆலோசனை கேட்க அரசியல் வாதிகள், வியாபாரிகள், தொழிலதிபர்கள், பிரபல நட்சத்திரங்கள் என்று வரிசையாக தவம் கிடக்கிறார்கள். நாளை டெல்லி—பிறகு சென்னை...பிறகு சில மாதங்கள் வெளி நாட்டுப் பயணம்...

"செல்வத்தின் செழிப்பு என்னிடம் கொழித்தது. அடையாறில் பங்களா—பூந்தமல்லியில் ஓய்வு இல்லம்—கொடைக் கானலில் கோடை வாசஸ்தலம் என்று பல வசதிகள். வங்கியில் என் பங்குக் கணக்கும் ஏறிற்று. வருமானவரி அதிகாரிகளின் கண்வீச்சிலும் நான் பலமுறை பட்டுத் தப்பிய துண்டு. இவ்வளவு இருந்தும் ... என் வாழ்வில் அமைதி?

ஊருக்கெல்லாம் ஜோதிடம் பார்த்துச் சொன்ன—எனக்கு எனது வருங்காலத்தைப் பற்றி அதிகம் தெரியாதிருந்துவிட்டது என்பது ஒரு கசப்பான உண்மை.

ஏசி அறையில் நுரை மெத்தை மேலே சாய்ந்தபடி... தலைமாட்டிலிருந்து வெளிச்சத்தை உமிழ்ந்த மின்விளக் கொளியில் அந்த கதையைப் படித்துக் கொண்டிருந்தேன்.

பிரபல ஆங்கில ஆசிரியர் எழுதிய சிறுகதை—ஒரு வீட்டு விருந்திலே, பிரபல கைரேகை நிபுணர் ஒருத்தர் கலந்து கொள்கிறார். விருந்திற்குப் பின்னர் வேடிக்கையாக எல்லோரது கையையும் பார்த்து சோதிடம் கூறுகிறார். திடீரென ஒருவரது கையைப் பார்த்துத் திடுக்கிட்டவர், விவரம் கூற மறுக்கிறார். ஆனால் கையைக் காட்டியவர் விடவில்லை. சோதிடரைத் தனியே அழைத்துக் கூறுமாறு வற்புறுத்துகிறார். வேறு வழியின்றி, "இந்தக் கை ஒரு கொலைகாரனுடையது. அதனால் அதிர்ச்சியடைந்தேன்" என்கிறார். நாணயமாக, யோக்கியமாக வாழ்கிறவர் அந்த மனிதர். காதலி ஒருத்தி இருக்கிறாள். அத்தையின் பெருத்த சொத்திற்கு அவர் வாரிசு. அப்படிப்பட்டவரைக் கொலை காரன் என்றால்...? அவரும் அதிர்ந்து போகிறார். அந்தப் பாவத்தை எப்படித் தீர்ப்பது? சதா அவரது மனதைக் குடைய ஆரம்பித்துவிட்டது.



சொத்து தரப்போகும் அத்தையைத் தீர்த்துவிட்டால்...? விஷம் வைத்த சாக்லெட்டை அனுப்பி வைக்கிறார். அத்தை அதை சாப்பிடாது தப்பித்துவிடுகிறாள். காதலியைத் தீர்த்துக்கட்ட முனைந்து, முடிவில் சோர்ந்து போய், வெளியே நடந்து போகும்போது, அப்படி சோதிடம் கூறிய கைரேகை நிபுணரைப் பார்க்கிறார்.

ஆற்றுப் பாலத்தின் மேல் அமர்ந்தபடி அந்த நிபுணர் அவரிடம் பேசுகிறார். இருட்டத் துவங்கும் நேரம், திடும்மென ஒரு யோசனை...கீழே கொந்தளிக்கும் ஆறு....கைரேகை நிபுணரை, குபீரெனப் பிடித்துத் தள்ளிவிட்டு, "அப்பாடா.... கொலை செய்து முடிந்தாகிவிட்டது" என்ற திருப்தியில் நிம்மதியாக நடக்கிறார்.

புத்தகத்தை மூடி வைத்தேன்—கதையின் கருத்து என் மனதிற்குள்ளே எத்தனையோ எண்ணங்களை அலைபாய வைக்க...எனக்குள்ளே என் மனைவி மேல் எழுந்த கொலை வெறியை சிரமப்பட்டு அடக்கிய வண்ணம், உறக்கமின்றி உருண்டேன்.

நிறைய சம்பாதித்த பின்னர் சில வைத்தியர்கள் சமூக சேவையில் ஈடுபட்டு ஏழை எளியவர்களை இனாமாக கவனிப் பதுண்டு. அதே போல, நானும் ஒரு திட்டம் வைத்திருந்தேன்.

ஏழை எளியவர்களுக்கு ஜோசியம், குறைந்த கட்டணத் தில் சொல்வதுண்டு. என்னைப் பொறுத்த வரை அது ஒரு

சமூக சேவையே. ஆரம்ப காலத்தில் நான் தங்கியிருந்த திருவல்லிக்கேணி, ஓட்டு வீட்டை இதற்காகவே இன்னமும் உபயோகித்து வந்தேன். வாரத்திற்கு ஒரு பகல் மட்டும் அங்கே சோதிடம் சொல்வது வழக்கம். அதற்கு என்ன கூட்டம்... அப்பப்பா?

மல் ஜிப்பாவைக் கழற்றி ஆணியில் மாட்டிவிட்டு பட்டை. பட்டையாக விபூதி, கழுத்தில் ருத்ராட்சம், ஸ்படிக மணி மாலையுடன், கை விரல்களில் வைரம், நவரத்தின மோதிரங்கள் மின்ன, நெற்றியில் பெரிய குங்குமப் பொட்டுடன் வெள்ளிக் குமிழிட்ட கருங்காலிப் பலகை மீது உட்கார்ந்து கொண்டு கண்ணை மூடியபடி.... நான் தியானித்துக் கொண்டிருப்பேன். அந்தச் சிறு கூடத்தை நிறைக்கும் ஊதுவத்தி மணமும், சுவரிலே தொங்கும் தெய்வத்தின் படங்களும்... வருப்வர்களுக்கு என் மீது மரியாதை அதிகரிக்க வைக்கும்.

ஒன்றன் பின் ஒன்றாக எனது காரியதரிசி வந்தவர்களை உள்ளே அனுப்ப, ஐந்தே நிமிடங்களில் அவர்களது வருங் காலத்தை வரையறுத்துவிட்டு... நிமிர்ந்தேன். விசிறி இருந்தும், அந்தப் புழுக்கத்திலே வியர்த்துக் கொட்டியது.

'இனி பங்களா ஏ. சி. ரூமுக்குப் போக வேண்டியது தான்' என்று நினைத்த போதுதான், இந்த இரண்டு இளம் பெண்கள்... கடைசியாக உள்ளே வந்தனர்.

கல்லூரி மாணவிகள்—பரீட்சை பற்றி கேட்க வந்திருக் கலாம்... ஓரக் கண்ணால் கவனித்தேன். பெரியவள் சேலையிலும், இளையவள் பெல்பாட்டத்திலும் இருந்தனர். கையிலிருந்த ஜாதகங்களைப் பணிவுடன் என்முன் வைத்து விட்டு, எதிரே கிடந்த ஜமுக்காளத்தின்மீது சம்மணம் போட்டு அமர்ந்தனர்.

"அக்கா ஜாதகத்தைப் பார்த்திட்டு சொல்லுங்க. குரு பலன் வந்திருக்கான்னு தெரிஞ்சா..." என்றாள் இளையவள், நிமிர்ந்து அவளைப் பார்த்தேன்.



"காதல் விஷயமோ? பெரியவர்கள் இல்லாமல்... இவர்களாகவே புறப்பட்டு வந்திருக்கிறார்கள்?" ஊகித்துக் கொண்டேன். ஜாதகத்தைக் கையில் எடுத்தவன் நினைவில் ஒரு பொறி தட்டியது.

"அமிர்தா!" அவசரமாக பிறந்த தேதி-நாள் நேரம்... யாவற்றையும் பார்த்தவன், சட்டென அடுத்த ஜாதகத்தையும் பிரித்துப் பார்த்தேன்.

"வினோதா!" சந்தேகமேயில்லை. என் மூளைக்குள், பூமத்தாப்புப் போல, நினைவுப் பொறிகள் சிதறின. உடம்பெல்லாம் வியர்த்துக் கொட்ட நெஞ்சு படபடவென துடித்தது. அந்த இரு பெண்களையும் ஊன்றிப் பார்த்தேன்.

அந்தக் கண்கள்— சொக்கினாற் போன்ற மூக்கு, உதடுகள், பொன் நிறம்... சுருண்ட கூந்தல், சுகந்தியின் அச்சாக... அட கடவுளே! இத்தனை ஆண்டுகளுக்குப் பின்னர் இப்படி ஒரு சந்திப்பா? வேதனையை விழுங்கியபடி, அவர்களைப் பார்த்தேன்.

"ஹாஸ்டல்ல தங்கிப் படிக்கிற மாணவிகளா? காதல் சங்கதிபோலத் தெரியுது? உங்கம்மாவுக்குத் தெரியாதில்லையா?"

அமிர்தாவின் கண்கள் பனித்தன. உணர்ச்சி வசத்தில் உதடுகள் துடித்தன.

"ஆமா! திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்தவங்க. அப்பா சின்ன வயசிலே..." அவள் முடிவுக்கு முன் நானே முந்திக் கொண்டேன்.

"உன் தாயும், தந்தையும் மனத்தாங்கல்பட்டுக் கொண்டு பிரிஞ்சுட்டாங்க. உங்கப்பா போன இடம் தெரியாது. அம்மா தான் உங்களைப் படிக்க வச்சு ஆளாக்கிட்டு வராங்க... இப்போ உன் மனசிலே ஒரு வாலிபன் மேல் காதல்... அவன் விரும்பறான், ஆனா... அந்தஸ்து குறுக்கிடுது.... அவங்க வீட்டுக்குத் தகுந்தபடி சீரும் சிறப்புமா கட்டிக்குடுக்க, உங்கம்மாவுக்கு வசதியில்லை..."

கண்களில் வழிந்த நீரைச் சட்டெனத் துடைத்தவள் வியப்புடன் என்னைப் பார்த்தாள். "ஒரே பார்வையில் அப்படியே நடந்ததையெல்லாம் சொல்லி விட்டீங்களே அய்யா?"

'நான் இப்போது சொன்னது, எனது ஜாதக விவரம்' என ஓங்கிக் கூக்குரலிட வேண்டும் போல இருந்தது. நான் பெற்ற குழந்தைகள், நினைவு தெரியாத பருவத்திலே பிரிந்து விட்ட தந்தை நான். இப்போது இப்படி ஒரு சந்திப்பு... என் மனதில் தவிப்பு... என்னையும் மீறி பாசத்தின் உணர்வு சாடியது.

"என் செல்வங்களா! நான் பங்களாவும், காருமாக வாழும்போது, நீங்கள் வறுமையில் வாடுகிறீர்களே, ஆனால், இப்படி ஆவதற்குக் காரணம்... நானல்ல உங்கள் தாய்.... அவள்தான் என் காதல் மனைவி செய்த அடாத செயல்..." பொரிந்து தள்ள வேணும் என்ற ஆவேசம் பொங்கியது மனதில். அமிர்தாவின் கலங்கிய கண்களைத் துடைத்துவிட வேண்டும் என்று பெற்ற மனம் பரிதவித்தது.

முன் நெற்றி மீது புரண்ட கூந்தலை ஒதுக்கிவிட்டு "என் மகளே!" என்று கதற வேண்டும் போன்ற ஆத்திரம். ரத்த பாசத்திற்குத்தான் எத்தனை பெரிய சக்தி; எப்படியோ சமாளித்தேன்.

"நாளைக்கு, இந்த சீட்டில் உள்ள முகவரிக்கு வாங்க. விவரமா ஜாதகத்தைப் பார்த்து எழுதித்தரேன்" என்றேன் மெல்ல.

அமிர்தா, கைப் பையைத் திறந்தபடி, "நல்ல வாக்கு சொல்லுவீங்கன்னு நினைக்கிறோம்" என்றாள்.

"பணம் இப்ப தரவேணாம். பிறகு வாங்கிக் கொள் கிறேன். உங்க காலேஜ் முகவரியைக் குடுத்திட்டுப் போங்க" என்றேன் தடுமாற்றத்துடன்.

அன்றிரவு, சமையல் ஆள் கொண்டு வந்து வைத்த பால் என் தொண்டையில் இறங்க மறுத்தது. அமிர்தாவின்



அழுக்கான கைப்பை, சின்னவளின் காதுகளில் தெரிந்த போலி முத்துக் காதணிகள், இருவரது உடைகளின் பழமை... எல்லாமே... சுகந்தி இவர்களைப் படிக்க வைக்கப் பாடுபட் டிருக்க வேண்டும். பள்ளி ஆசிரியையாகப் பணியாற்றிக் கொண்டு... பிறந்த வீட்டின் தயவை எதிர்பாராது.... தன் கையை நம்பி வாழ முயன்றிருக்க வேண்டும் என்று விவரித்தன.

ஆனாலும் இப்படி ஒரு பிடிவாதமா? பாவி! என் கண் மணிகளை வறுமையிலே வாடவிட்டு... என்ன திமிர்? தன் பிடிவாதத்திற்காகக் குழந்தைகளின் வருங்காலத்தையே பலி வாங்கிவிட்டாளே? என் கண்கள் கண்ணீர் உகுத்தன.

பழைய நினைவுகளுடன் படுக்கையில் புரண்டேன். கல்லூரியில் பட்டப்படிப்பில் இறுதி ஆண்டு. ஒருமுறை அண்ணனுடன், அண்ணியின் பிறந்த வீட்டுக்குச் சென்று தங்கின போதுதான் நான் சுகந்தியைக் கண்டேன். என் அண்ணியின் தங்கையான அவளைக் கண்டதும் காதல் எழுந்தது என்னுள்.

ஒரே வீட்டில் இரு பெண்களை எடுத்தல் கூடாது என்று என் பெற்றோர் மறுத்தனர். நான் விடவில்லை. அண்ணி யிடம் தஞ்சமடைந்தேன். என் அண்ணி சூழ்ச்சிக்காரி என்று எனக்கு அப்போது தெரியாமல் போயிற்று.

வசதியான எங்களது குடும்பத்தில் தன் தங்கையும் சுகமாக வாழட்டும் என்ற எண்ணத்தில் எனக்கு உதவினாள். என் பெற்றோரையும் எதிர்த்துக் கொண்டு என் காதல் திருமணத்தை நடத்த அண்ணி உதவினாள்.

பின்னர்தானே அந்த பேரிடி! முதலிரவிலேயே சுகந்தி உண்மையைக் கூறிவிட்டாள். "நான் வேறு ஒருவரை காதலித்தேன். என் விருப்பத்திற்கு மாறாக உங்களுக்கு என்னைக் கட்டிவைத்து விட்டார்கள்" இடிந்தே போனேன். ஏமாற்றத்தால் மனதில் அதிர்ச்சி.

எப்படியோ எலியும், பூனையுமாக சில ஆண்டுகள் வாழ்ந்ததன் பயன் அமிர்தாவும், வினோதாவும். அதற்கு மேல் சுகந்தியுடன் வாழ முடியாத நிலையில் ஒருநாள் குடும்பத்தை உதறிவிட்டுப் புறப்பட்டு விட்டேன். எப்படியோ வாழ்ந்தேன். முடிவில், ஜோஸ்யக் கலைமீது ஏற்பட்ட மோகம், என்னை முறைப்படி அதைக் கற்க வைத்தது.

கணபதி சோமநாதன், இப்போது சோதிடமணி சோமநாதன் பிறரது தலையெழுத்தை வரிக்கு வரி சொல்லக் கூடியவன் என்று புகழப்பட்ட சோமநாதன், தனது தலையெழுத்தை அறியாதவனாக இருந்து விட்டானே? இப்படி ஒரு அமோக வாழ்க்கை வாழ்வேன் என்று சுகந்தி எண்ணி இருக்க மாட்டாள். ஒருமுறை ஊர்ப் பக்கம் சென்று விசாரித்துப் பார்த்தேன். ஊரைவிட்டே போய்விட்டார்கள் என்ற தகவல்தான் கிடைத்தது.

சதா என் மனதை அரித்துக் கொண்டிருந்த வேதனையை என் மனைவி அறிவாளா? எத்தனை நாட்கள், தின்ற சோறு கூட செரிக்காமல் அவர்கள் நினைப்பிலே துடித்திருப்பேன்.

மறுநாள் அமிர்தாவும், வினோதாவும் அடையார் பங்களாவிற்கு வந்தார்கள். வரவேற்பறையில் பிரமிப்புடன் உட்கார்ந்திருந்த அவர்களைப் பலகாரமும், பாலுமாக உபசரித்தேன்.

"குழந்தைகளா! இனிப்பு சாப்பிடுங்கோ பாலைக் குடியுங்கோ..."

அமிர்தா ஏதோ சொல்ல முயன்றாள்.

"அப்பான்னு உங்க வாயால கூப்பிடுங்க. நீங்க அறியாத வயசில வெளியே போனவள் நான். ஆனா...என் கண்மணிகளை எனக்குத் தெரியாம போயிடுமா" கண்களில் நீர் மல்க, விவரமாகக் கூறினேன் நான்.

"அப்பா! அப்பா!" இருவரும் என்னருகில் வந்து அமர்ந்து விசும்பி அழலாயினர்.



"அழாதீங்க, உங்கப்பாவுக்கு உங்களை வாழ வைக்கற உரிமை இருக்கு. வளர்க்கத்தான் உரிமை இல்லை. போகட்டும். உங்கம்மாகிட்டே எடுத்துச் சொல்லி எப்படியும் வெற்றி பெறுவேன்" குலுங்கக் குலுங்க குழந்தை போல் அழுதேன்.

சில நாட்களுக்குப் பின்னர் அவர்கள் வசிக்கும் ஊரிலிருக்கும் சிறு ஓட்டு வீட்டை அடைந்தேன். நடுவயதைத் தாண்டிவிட்ட முதுமைத் தோற்றம். காலத்தின் அடிச்சுவடிட்ட கோடுகள் நிரம்பிய முகம். வறுமையும், வாட்டமுமாக நின்ற சுகந்தியை என் கண்கள் காண மறுத்தது. பழைய சுகந்தியாக, தங்கப்பதுமையாகத்தான் பார்த்தன.

"என்னை மன்னிச்சிட்டீங்களா?" தழதழத்தபடி அருகில் வந்தவளை அன்போடு பற்றினேன்.

"சுகந்தி! நம்ம குழந்தைகளை எத்தனை அழகாக வளர்த்திட்டே. நீ ரொம்ப கெட்டிக்காரி. நான்தான் குடுத்து வைக்காத பாவியாகிட்டேன். அவங்களை வாழ வைக்க ாவது ஒரு வாய்ப்பு குடும்மா" என்றேன் உணர்ச்சி மிகுந்த குரலுடன்.

அதுவரை புரிந்து கொள்ளாத எங்கள் மனம், இன்று ஒருவரையொருவர்... புரித்து கொண்டது.

சோதிடம் பலித்ததா? கேட்காதீர்கள்! என்வரை அது பலிக்கும். காலம் சேர்த்து வைக்கும் என்று நம்பினேன் நம்பிக்கை பலித்துவிட்டதே.

□

# சிறகு முளைத்த பின்னர்

தபால்காரர் கையில் வெளிநாட்டு விமானத் தபாலைக் கண்டதும் நான் கைவேலையைப் போட்டுவிட்டு வாயிலுக்கு விரைந்தேன்.

குவைத்திலிருந்து என் கணவர் கடிதம் எழுதியிருந்தார். இரண்டு மாத லீவில் வரப்போவதாகவும்... வரும்பொழுது எனக்கு என்ன வாங்கி வரவேண்டும் என்றும் கேட்டு எழுதியிருந்த கடிதத்தைப் பலமுறை மகிழ்ச்சியுடன் படித்துக் கொண்டு வாயிலிலேயே நின்று விட்டேன்.

கல்யாணமாகி சில மாதங்களுக்குப் பின்னர் என்னைப் பிரிந்து போனவர்...இரண்டு ஆண்டுகளுக்கு பின்னர் வரப் போகிறார்! எனக்கு கட்டுக் கொள்ளாத மகிழ்ச்சி.

“என்ன அக்கா? அங்கேயே நின்னுட்டீங்க? கோயிலுக்குப் போயிருக்கிற மாமனார்—மாமியார் திரும்பிவிடுவாங்க—இன்னும் சமையல் தயாராகலை?” வேடிக்கையாகக் கேட்டபடி என் ஓரகத்தி ஷீலா... சமையறையிலிருந்து வெளியே வந்தாள்.

ஷீலாவுக்கும் என் மைத்துனருக்கும் சமீபத்தில்தான் திருமணம் நடந்தது. அதற்குக்கூட என் கணவரால் வர இயலவில்லை. தம் தம்பிக்கும் என் கணவர் குவைத்திலேயே வேலை தேடிக் கொடுத்துவிட்டார். அதனால் தேன் நிலவு முடிந்தவுடன் என் மைத்துனர் ஷீலாவை எங்களுடன் விட்டு விட்டு அண்ணனுடன் கலந்து வசிக்க அரபு நாட்டுக்குப் பயணமாகி விட்டார்.



“படிப்பும் திறமையும் உள்ள நம்ப பசங்களுக்கு நம் நாட்டிலேயே நல்லவேலை வாய்ப்பு இருந்தா... பெண்டாட்டி பிள்ளைகளைத் தவிக்கவிட்டுட்டு இப்படி வெளிநாடுகளுக்கு போய் பரதேசிகளாட்டம் பாடுபடுவான்களா?... எப்போ நம் நாட்டில் இந்த வேலையில்லாத் திண்டாட்டம் ஒழியப் போகுதோ தெரியலை.... என் மாமனார் நித்தமும் புலம்பிக் கொண்டிருந்தார்...

தமது வயது காலத்தில் கண்ணின் கருமணிகளைப் போன்ற தமது இரு மகன்களையும் வெளிநாட்டுக்கு அனுப்பி விட்டு... அவர்கள் நல்லபடியாகத் திரும்பிவர ஊரில் உள்ள கோயில்களையெல்லாம் சுத்திக் கொண்டிருக்கிறோமே என்ற அங்கலாய்ப்பு என் மாமியாருக்கு.

“நம்ப ஊர்லியே ஒரு வேலை தேடிகிட்டு—கஞ்சியோ கூழோ குடும்பத்தோட உட்கார்ந்து சாப்பிடறதை விட்டுட்டு என்னவோ வெளிதேசத்து வேலைமேலே மோகம்... காசு சம்பாதிக்கலாம். ஆனால் காலத்தை சம்பாதிக்க முடியாதே?” எங்கள் காதுபட அடிக்கடி முணுமுணுத்தார் மாமியார்.

எனக்கும் என் கணவரின் பிரிவு... தாளமாட்டாத துயரமாகத் தானிருந்தது.. ஒவ்வொரு கடிதத்திலும் என் தனிமையின் கொடுமையை குறிப்பிட்டுத்தான் எழுதிக் கொண்டிருந்தேன்.

“கொஞ்சம் பொறுத்துக்கோ. பிறகு வீடும்—காரும்—சொந்த நிலமும்—வங்கியில் பணமுமாக நாம் சுகமாக வாழலாம்...!” அடிக்கடி தைரியம் சொல்லி என் கணவர் எழுதிக் கொண்டிருந்தார்... நானும் பொறுமையாகத்தான் காத்திருந்தேன். இப்போது அவர் கடிதத்தைப் படித்து விட்டு நான் மகிழ்ச்சியில் திளைத்துப் போனேன்...

“என் வீட்டுக்காரர்.... இன்னும் இரண்டு வாரத்தில் இங்கே வரப்போறார்... இரண்டு மாச லீவில் வந்து தங்கப்

போகிறார்...''—ஆர்ப்பரித்தேன். என் ஓரகத்தியின் முகம் வெளிறடைந்து போனது.

தன் கணவன் அங்கே குவைத்திலேயே தங்கியிருக்க மூத்தார் மட்டும் புறப்பட்டு மனைவியைப் பார்க்க பறந்து வரப் போகிறார் என்ற மனக்குறை—பொறாமை போலும்... இயற்கைதானே... சில நாட்கள்தான் தன் கணவனுடன் சேர்ந்து வாழ்ந்திருக்கிறாள். இளம் வயது மனம் வேதனைப் படுவது இயல்புதானே...பாவம் ஷீலா?... அவளுக்காக மனம் இரக்கத்தில் கரைந்தது.

நாங்கள் கூட்டுக் குடித்தனமாக வாழ்கிறவர்கள். மாமியார், மாமனார், ஓரகத்திகள், அவ்வப்போது பிறந்தகத் திற்கு சீராடவரும் நாத்தனார்கள் என்று வீட்டில் எப்பொழுதும் நாலுபேருக்கு மேலானதொரு கும்பல் இருந்து கொண்டேயிருக்கும்.

ஷீலா எனது கணவரின் சொந்த மாமாவின் மகள். சிறு வயதிலிருந்தே அவளை என் கணவர்தான் கட்டிக்கொள்ள வேண்டும் என்று இரு குடும்பமும் தீர்மானித்து விட்டிருந்தது. பட்டணத்திலேயே பல ஆண்டுகள் படிப்பிற்காக தங்கி விட்டுத் திரும்பிய என் கணவர் மாமன் மகளை மணந்து கொள்ள மறுத்துவிட்டார். உறவில்லாத அந்நியத்திலிருந்து என்னைத் தேர்ந்தெடுத்து மணமுடித்துக் கொள்ள ஒப்பினார். பின்னர் குவைத்துக்கு வேலை தேடிக்கொண்டு போய் விட்டிருந்தார்.

என் மாமியார் தமது தம்பியின் உறவை முறித்துக் கொள்ள விரும்பாது தமது இளைய மகனுக்கு ஷீலாவைத் திருமணம் செய்து வைத்துவிட்டார். என் மைத்துனர் திருமணமான சில தினங்களிலேயே அண்ணன் தேடிக் கொடுத்த வேலையைப் பிடித்துக்கொள்ள இளம் மனைவியை விட்டுவிட்டு குவைத்துக்கு கிளம்பி விட்டார்.



நாங்கள் இருவரும் ஓரகத்திகள்—ஆனால் நெருங்கின தோழிகளாக, சகோதரிகள் போல பாசத்துடன் பழகி வந்தோம்.

"உனக்கு ஏதாச்சும் வேணுமா, அரபு நாடுகளில்... நைலான் புடவை—பவுடர்...செண்ட் இதெல்லாம் எக்கசக்க மாக கிடைக்கும்...வாங்கி வரச்சொல்லவா...?'' என்று நான் கேட்டபோது ஷீலா சுள்ளென்று எரிந்து விழுந்தாள்.

"என் வீட்டுக்காரரும் அந்த ஊரில்தானே வேலை பார்க்கிறார். மனைவிக்கு ஏதாவது கொடுத்தனுப்ப வேணும்னு ஆசையிருந்தா அனுப்பி வைக்கட்டும். இல்லாட்டி எனக்கொண்ணும் வேணாம்'' சுடச்சுட பதிலளித்தாள்.

அதற்குப் பின் அந்த சில நாட்களில் அவள் மிகவும் மாறி விட்டிருந்தாள். கலகலப்பாக என்னுடன் பேசாது...மவுன மாக.. எங்கேயோ வெறித்தபடி முகத்தைக் கடுமையாக வைத்துக் கொண்டு இருந்தாள். ஏன் இப்படி? எனக்கே விளங்காத புதிராகத்தான் இருந்தது. ஆனால் நான் கவலைப் படவில்லை...என் கணவர் வரப்போகும் நாட்களை ஆவ லுடன் எண்ணிக் கொண்டிருந்தேன்.

ஒரு நாள் காலை எங்கள் வீட்டு வாசலில் வந்து நின்ற டாக்சியிலிருந்து என் கணவர்...பல பெட்டிகளுடன் இறங்கிய போது.. வீடு இரண்டுபட்டு போயிற்று.

"உனக்கு டிஜிட்டல் வாட்ச், ஃபாரின் செண்ட். அமெரிக்கன் ஷிபான், யார்ட்லி பவுடர்...எல்லாம் வாங்கிட்டு வந்திருக்கேன்...''—எங்கள் அறையில் பெட்டியைத் திறந்து கொண்டு வந்த பொருட்களை ரகசியமாக முதலில் எனக்கு தான் அள்ளிக் கொடுத்தார். எனக்கு ஏற்பட்ட ஆனந்தம்?

"ஷீலாவுக்கு ஏதாச்சும் கொண்டு வந்தீங்களா?'' நான் கேட்டதும் அவர் முகம் சுருங்கிப் போனது.

"அவளுக்கு அவள் கணவன் கொடுத்த பொருட்களைத் தனியே ஒரு பெட்டியில் கொண்டு வந்திருக்கேன். அம்மா—அப்பா—தங்கச்சிகள்! அவங்க வீட்டுக்காரங்களுக்கு சாமான் வாங்கவே என் பணம் தீர்ந்து போச்சு...ஷீலாவைப் பத்தின நினைப்பு இருக்கலை. அதை விடு. உனக்கு ஒரு டேப்ரிகார்டர் வாங்கிட்டு வந்திருக்கேன். உன் குரலை டேப்பில் பிடிச்சு எடுத்திட்டுப் போகப் போறேன். உன்னை நினைச்சு தனிமையில் நான் அங்கே தவிக்கிறபோது...உன் குரலை கேட்டாவது மனதில் நிம்மதி ஏற்படுமில்லையா?"....என் கன்னத்தைச் செல்லமாகக் கிள்ளினார்.

அப்பப்பா! என் கணவருக்குத்தான் என்மேல் எத்தனை ஆசை? நான் பூரித்துப் போய்விட்டேன்.

சாப்பாடு பரிமாறும் போதுதான் தமது தம்பி மனைவி ஷீலாவை அவர் முதல் முதலாய் பார்த்தார். சின்ன வயதில் தான் அவர் அவளைப் பார்த்தது...அவர் முகத்திலே ஒரே திகைப்பு. பின்னர் தலையைக் குனிந்து கொண்டு சாப்பிடத் துவங்கியவர்...நிமிரவேயில்லை. அதற்குப் பிறகு வீட்டில் ஒரு புதிய சூழ்நிலை உருவாகிவிட்டது.

ஷீலா மாடியில் துணிகளைக் காயவைக்கச் சென்றால்—என் கணவர் அங்கிருந்து பரபரப்பாக இறங்கி கீழே ஓடி வந்து விடுவார்.

சமையலறையில் அவள் இருந்தால்—அவர் வாசலுக் குள்ளிருந்து விடுவார். எல்லோருடன் வேடிக்கையாக சிரித்துப் பேசிய என் கணவர் ஷீலாவுடன் பேசாது இருப்பதை நான் கவனித்து மனம் வருந்தினேன்.

'ஏன் இப்படி விரோதம்? அவர் மணம் முடிப்பதாக இருந்த மாமன் மகள் என்ற உறவு இருந்தபோது ஷீலாவை ஏன் உதாசீனம் செய்ய வேண்டும்? என் மனம் மிகவும் சங்கடப்



பட்டது. தனியாக நாங்கள் இருந்தபோது ஷீலாவுக்காக பரிந்து கொண்டு நான் என் கணவரைச் சாடினேன்.

"நீங்க நடந்துக்கிறது நல்லாவேயில்லை. தம்பி மனைவிய பார்த்து முகத்தை திருப்பிக்கிறீங்க. அவ உங்களை என்ன செஞ்சா. பாவம் ஷீலா... நலமா இருக்கியான்னு ஒரு வார்த்தை கேட்டா தேஞ்சா போய் விடுவீங்க?" —அதட்டினேன். இருவரையும் வற்புறுத்திப் பேச வைத்தேன். என் தலையிலேயே நான் நெருப்பை அள்ளிக் கொட்டிக் கொள்கிறேன் என்று அப்போது உணரவில்லை.

முதலில் ரொம்ப கண்டிப்பாக இருந்த என் கணவர் சில நாட்களில் ஷீலாவுடன் பேசுவதும்—சிரிப்பதுமாக...மிகவும் நெருக்கமாகவே பழக ஆரம்பித்துவிட்டார். அவள் சமைத்தால் சாம்பாருக்கே தனி ருசி என்று எல்லார் முன்னிலையிலும் புகழ்ந்தார்—கிணற்றடியில் நின்று கொண்டு அவளுக்கு குடம் குடமாக நீர் இரைத்துக் கொடுத்து உதவினார்... நான் இதை ஆரம்பத்தில் தப்பாகவே எடுத்துக் கொள்ளவில்லை. மாமன் மகள் என்கிற உறவில் ஏற்பட்ட பரிவு என்று நினைத்து ஏமாந்தேன்.

அன்று இரவு... அயர்ந்து உறங்கிப் போன நான் திடுக்கிட்டு விழித்துக் கொண்டு எழுந்து உட்கார்ந்தேன். படுக்கையில் என்பக்கத்தில் இருந்த இவரைக் காணவில்லை. தாகத்துக்கு தண்ணீர் தேட சமையலறைக்குப் போயிருக்கிறாரா... வியப்புடன் எழுந்து நான் வெளியே வந்தபோது திடுக்கிட்டுப் போனேன்.

மோகத்தைத் தணித்துக் கொள்ள என் கணவர் ஷீலாவின் அறைக்கதவை மெல்ல தட்டிக் கொண்டிருந்தார்.

முன் ஏற்பாடு போலும்.... ஒரே தட்டலில் அவள் திறந்தாள். என் கணவர் உள்ளே சென்றார். நான்

விடுவேனோ? ஆவேசமாக ஒரே பாய்ச்சலில் கதவைத் தள்ளிக்கொண்டு உள்ளே போய் நின்றேன்; இருவரும் திடுக் கிட்டுப் போய்விட்டனர்.

"தண்ணீர் குடிக்க வந்தேன்...!" —என் கணவர் தடுமாறினார்.

"தம்பி மனைவியின் அறையிலா தண்ணீர் குடம் இருக்கு... இந்த வெட்கக்கேட்டை வீடு முழுக்க தெரியும்படி நான் கூச்சலிட்டு சொல்லட்டுமா...?" ஆத்திரமாக அடிக் குரலில் சீறினேன் நான்.

ஷீலா என்னைக் கையெடுத்துக் கும்பிட்டாள். அவளைத் திரும்பிப் பார்க்கவும் பிடிக்காது என் கணவர் கையைப் பற்றிக் கொண்டு எங்கள் அறைக்குள் வந்து கதவைத் தாழிட்டுக் கொண்டேன். அதற்குமேல் கட்டுப் படுத்த முடியாது.... சுவற்றில் சாய்ந்து கொண்டு விம்பி விம்மி அழுதேன்.

"மன்னிச்சுக்கோ—மாமன் மகள் ஷீலாவை எனக்குத் தான் முதலில் மணமுடிக்க பேசியிருந்தாங்க—அவ இத்தனை அழகியா வளர்ந்திருப்பான்னு தெரியாது... சின்ன வயசில பார்த்தது மயங்கிப்போய் " —திணறியபடி என் கணவர் என் கைகளைப் பிடித்துக்கொண்டு என்னை சமாதானப் படுத்த முயன்றார்.

அதற்குப் பின்னர் எனக்கு உறக்கம் ஏது...? அவரது அருகாமை இன்பத்தை கொடுப்பதற்கு பதில்.... சதா திகிலைக் கொடுத்து என்னைத் துயரத்தில் ஆழ்த்தி விட்டது.

"அண்ணன் மனைவி ஒரு சகோதரிக்கும், பெற்ற தாய்க்கும் சமம். தம்பி மனைவி... ஒரு தங்கைக்கு சமம் அல்லவா? அவளையே பெண்டாளத் துணியும் என் கணவரது காம வெறியை நினைத்து நான் மிகவும் கலங்கிப் போனேன். ஷீலாவும் இப்படி மானம்ழியத் துணிவாளா?



கணவனுக்கு துரோகம் செய்கிறோம் என்று நினைக்க மறந்து விட்டாளே பாவி மகள்! இதற்கென்ன முடிவு—? தற்கொலை தான்!

ஒருநாள் இரவு என் கணவர் கொஞ்சம் நேரம் பொறுத்தே எங்கள் அறைக்குள் உறங்க வந்தார்.

"எங்கே போனீங்க—ஷீலாவோட பேசினீங்களா?"— எதையும் நான் கேட்கவில்லை. ஆத்திரத்தில் நான் இரைந்து பேசிவிட்டால் ஆபத்து. கூட்டுக் குடித்தனத்தில் வாழ்கிற வர்கள் நாங்கள். விஷயம் மாமனார்—மாமியாருக்குத் தெரிந்துவிட்டால் பெருத்த அவமானமாகிவிடும்.

என் படுக்கையருகே வந்து உட்கார்ந்த என் கணவர் விடிவிளக்கு வெளிச்சத்திலே என் தலையணையடியிலிருந்து எட்டிப் பார்த்த கயிற்றைக் கண்டு அதிர்ந்து போனார்.

"அமரா! அப்படித்தான் என்னை அவர் அழைப்பது வழக்கம்) என்ன இது..." கேட்டபடி...தலையணை அடியி லிருந்த முறுக்கேறிய கயிற்றை கையில் எடுத்தார்.

"தூக்குப் போட்டுக்கொண்டு சாக வச்சிருக்கேன். அதையேன் எடுக்கறிங்க...!"

"அமரா! என்னை விட்டுட்டு தற்கொலை செஞ்சுக் கணும்னு உன் மனதில் அத்தனை வெறுப்பா?"

"தம்பி பெண்டாட்டியைத் தாரமாக்கிக்க நீங்க நினைச்ச பிறகு எனக்கு வாழ விருப்பமில்லை..."

"அப்படி ஒரு மன மயக்கம் ஏற்பட்டது எனக்கு— அவளும் கணவனைப் பிரிஞ்சு இருக்கிற துயரத்திலே ஒரு தவறு செய்ய இருந்தா. அவளுடைய அழகு என் கண்களை மறைச்சுடுச்சு ஒப்புக்கறேன். ஆனா சமயத்திலே நீ உள்ளே வந்து நாங்க செய்ய இருந்த தவறைத் தடுத்துட்டே. இது மாதிரி ஊர் உலகத்திலே தப்புத் தண்டா நடக்கிறதில்லை

யின்னு நீ நினைக்கிறியா...?'' தழதழத்த குரலில் மெல்லக் கேட்டார்.

''இதைவிட அசிங்கமான சங்கதிகள் நடக்கின்றன அக்கிரமமானதை நீங்க நியாயப்படுத்தி பேசாதீங்க ஒருத்தன் சாக்கடையில் விழுந்தால் அதற்காக நாமும் விழுவது நியாயமாகிடுமா?'' கோபத்துடன் கேட்டேன்.

''இதோ பார் அமரா! உனக்கு கையடிச்சு சத்தியம் பண்ணிக் கொடுக்கிறேன். நம் குலதெய்வத்து மேலே ஆணையா சொல்றேன். நான் என் தம்பிக்கும் உனக்கும் இனி கனவில்கூட துரோகம் செய்ய நினைக்க மாட்டேன். ஷலா அழகா இருக்காளேன்னு மன மயக்கத்திலே தவறு செய்ய நினைச்சேன். மன்னிச்சுக்கோ. அவளும் அறியாப் பொண்ணு. கணவனைப் பிரிஞ்சு இருக்கிற தாபத்திலே.... தவறு செய்ய நினைச்சா. அவளையும் மன்னிச்சுடு. இது யாருக்கும் தெரிய வேண்டாம்'' என்று திணறியபடி என்னைப் பரிவுடன் தம் மார்போடு அணைத்துக் கொண்டார்.

''இத்தோட எனக்கு நீங்க இன்னொரு வாக்கும்... சத்தியம் செய்து தரணும். இந்த காண்டிராக்ட் முடிஞ்சதும் குவைத்து வேலையை முடிச்சுகிட்டு சம்பாதிச்சது போதும்னு ஊர் திரும்பிடணும். இங்கேயே ஒரு வேலை தேடிக்கொண்டு நாம இந்த குடும்பத்தைவிட்டு தனியா பிரிஞ்சு...தனிக் குடித்தனம் நடத்தணும். சிறகு முளைச்ச பிறகு பறவைகள் கூட்டுக்குள் இருப்பதில்லை...ஜோடி சேர்ந்துட்டு...தனியே பறந்து போய் விடுகின்றன. அது இயற்கையின் நியதி. மனிதன் சுயநலம் காரணமாக, பொருளாதாரத்து அடிப்படையிலே.. உணர்வுகளுக்கு கட்டுப்பட்டு...இப்படி கூட்டுக் குடித்தனமாக இருக்க ஆரம்பித்தான். இதனால் வெளியே சொல்லிக்க முடியாத பல சிக்கல்கள் ஏற்பட ஏதுவாக இருந்திச்சு. உங்க பெற்றோர்கள் நம்பகிட்ட கொஞ்ச காலமும்—உங்க தம்பி வீட்டிலே கொஞ்ச காலமும் தங்கிக்



கலாம். அவங்களை நாம கைவிட வேண்டாம்—ஆனால் இனி நமக்கு இந்த கூட்டுக்குடித்தன சிக்கல் தேவையில்லை.... சரித்தானே!'' என்றேன்.

என் கணவர் என் ஆலோசனைப்படி நடக்க ஒப்புக் கொண்டு விட்டார்—அதற்குப் பின்னர் அவர் தமது தம்பி மனைவி பக்கம்கூட திரும்பிப் பாராது மிகவும் கண்ணியமாக நடந்து கொண்டார். லீவு முடிந்து பிரியா விடை பெற்று கொண்டு அவர் திரும்ப தமது வேலை ஒப்பந்த காலத்தை முடிக்க குவைத்துக்குப் போய்விட்டார்.

அவருக்கு நான் கடிதம் எழுதிக் கொண்டிருக்கிறேன்—மகிழ்ச்சியானதொரு சங்கதியைச் சொல்ல என் அறையில் உட்கார்ந்து கொண்டு கடிதம் எழுதுகிறேன்—ஆமாம் விரைவில் நான் தாயாகப் போகிறேன்.

அவர் திரும்பி வரும்போது அவரை வரவேற்க ஒரு மகளோ—மகனோ என்கூட இருக்கப் போகிறது—உடனடியாக நாங்கள் சிறகு முளைத்த பறவைகளாகி இந்த கூட்டுக் குடும்பம் என்கிற கூட்டைவிட்டு வேறு இடம் தேடி வாழப் போகிறோம், அப்பப்பா! என் மனதில் இப்போது எத்தனை அமைதி ஆனந்தம்.

□

# அம்...மா...

அந்தப் பெரிய அறுவை சிகிச்சைக்குப் பிறகு வீடு திரும்பிய அம்மாவை நான்தான் வரவேற்றேன்.

“கல்யாணப் பெண்ணா நான்? ஆரத்தி சுத்தி கொட்டி திருஷ்டி கழிச்சு அமர்க்களப்படுத்தறே?” சுபாவமான புன்னகையுடன் அம்மா என்னைக் கேட்டார்கள்.

மஞ்சள் நீரைத் தொட்டு அம்மா நெற்றியில் வைத்தேன். என் கண்கள் கலங்கிப் போயின. ஆஸ்திக்கு மூன்று பிள்ளைகளையும், அன்புக்கு ஒரு பெண்ணையும் பெற்றவர்கள் அம்மா. நான்கு குழந்தைகளின் தாய். நாற்பத்தைந்து வயதைத் தாண்டியவர்கள் என்று யாரும் உணர முடியாத இளமை—அழகு.

மஞ்சள் ஒளி வீசும் முகத்திலே வைரமூக்குத்தி ‘டால்’ அடிக்க...உயரமும், பருமனுமாக மெட்டி மெல்லிதாக ஓசையிட அம்மா வீட்டுக்குள் நடந்தாலே....வீடு சகல பாக்யங்களும் நிறைவு பெற்று விடுவது போல் தோன்றும்.

சாந்தம் நிறைந்த அந்த அழகு முகத்திலே பளிச்சென்று ஒரு புன்னகை—கண்களில் மென்மையான பார்வை... அதிர்ந்து நடந்தோ.. ஆர்ப்பாட்டமாகப் பேசியோ .. கை ஓங்கி எங்களை அடித்தோ நாங்கள் அம்மாவைப் பார்த்த தில்லை.



அம்மா! கல்யாணமாகிவிட்டிருக்கும் மூத்த அண்ணன் வரை, எங்கள் யாவருக்குமே ஒரு தெய்வம் போல....

சம்பளம் வாங்கியதும், அண்ணன், அதை அப்படியே அம்மா கையில் கொடுத்து விட்டு காலைத் தொட்டுக் கும்பி டுவார், அத்தனை பக்தி அவருக்கு!

இளைய அண்ணன் ரொம்ப விளையாட்டுத்தனமானவர்கள். விளையாட்டு வீரர்கூட, கல்லூரி விளையாட்டுப் போட்டிகளில் பரிசுகள் வாங்கிவிட்டால் வீட்டிற்கு ஓடி வந்து அப்படியே அம்மாவை அலாக்காகத் தூக்கியபடி உற்சாகமாக வளைய வருவார்கள். முன்னறை முழுவதும், அப்பா உள்பட எல்லோரும் கை தட்டி மகிழ்வோம்.

“டேய்! கீழேவிடு... கீழே போட்டுடாதீங்கடா” அம்மா வெட்கமும், பயமுமாக சிரிப்பார்கள்.

மூன்றாவது அண்ணன் படிப்பிலே தங்கப் பதக்கப் வாங்கும் கெட்டிக்கார மாணவர். தங்கப்பதக்கத்தை எடுத்து அம்மா கழுத்தில் மாட்டிவிட்டு அப்படியே அம்மாவை இறுக அணைத்து “எங்கம்மாவோட ஆசீர்வாதத்தால் தான்...” என்று பூரித்துப் போவார்.

நான்! படிப்பில் அத்தனை சூட்டிகை இல்லை. ஏதோ தட்டு தடுமாறி தோல்வி இல்லாமல் கல்லூரி படிப்பை முடித்துக் கொண்டவள். கல்லூரியில் படித்த காலத்திலேயே, வீடு திரும்பியதும், குளித்து வேறு உடுத்துவேன். அம்மா ஆசாரம் மிக்கவர். பட்டுப்பாயில் களைப்பாக சாய்ந்திருக்கும் அவர்களருகில் இடுப்பில் கையைப் போட்டபடி அருகில் கிடப்பேன்.

“பச்சை பிள்ளையாட்டம் என்ன விளையாட்டு இது?” அம்மா போலியாகக் கோபிப்பார்கள்.

“டில்லிக்கு ராஜாவானாலும் தல்லிக்கு பிட்டாதானே... எத்தனை தான் படிச்சாலும் நான் உங்க குழந்தை” என்பேன் வேடிக்கையாக.

அவர்கள் கைவளையல்களை நகர்த்தி சப்தமிட்டுக் குலுங்குவதை வேடிக்கை பார்ப்பேன்.

"அம்மா நான் உங்கள் கைவளையல்கள் ஆகவிரும்பு கிறேன்" என்ற பாரதிதாசன் பாடலை முணுமுணுப்பேன்.

அண்ணி தலைப்பிரசவத்திற்கு பிறந்த வீடு போன புதிதில்தான் கவனித்தேன். சலியாமல் பம்பரம் போல் வேலை செய்து கொண்டிருந்த அம்மா, அடிக்கடி பாயின் மீது சுருண்டு கொண்டு லேசாக முனகுவது தெரிந்தது.

கல்லூரி படிப்பு முடிந்து வீட்டில் தங்கிவிட்ட சமயம் அது. தோழிகளுடன் கோவிலுக்குப் போய்விட்டு வந்தவள். விளக்குக்கூட ஏற்றாமல் அம்மா, பாயின் மீது முடங்கி யிருந்ததைக் கண்டு பதறிப் போனேன்.

வெள்ளிக்கிழமை பொழுது சாயும் வேளையில் அம்மா அப்படி இருக்க மாட்டார்களே...? என்ன விபரீதம் இது? ஓடிச் சென்று அவர்களைத் தொட்டேன். லேசான காய்ச்சல்.

"என்னம்மா உடம்புக்கு?" மிகவும் வற்புறுத்தியதன் பேரில், கடந்த ஒரு வருடமாக தான்படும் வேதனையை விவரித்தார்கள்.

மாதத்தீட்டு நில்லாமல் உபத்திரவிப்பதையும், அடி வயிற்றில் விடாத நோவு இருப்பதையும், காய்ச்சல் வருவது பற்றியும் அறிந்து கொண்ட போது அயர்ந்து போனேன்.

அம்மா கூச்ச சுபாவம் உள்ளவள். அதிலும், ஆண் பிள்ளைகள் அதிகமாக இருக்கும் வீட்டில் தமது நோய்த் தொல்லைகளை எடுத்துக் கூறாமல் வெட்கப்பட்டுக் கொண்டு மவுனம் சாதித்து விட்டார். எத்தனை பெரிய தவறு! வைத்தியரிடம் அழைத்துச் சென்றபோது...?



"ஒருசமயம்... உங்கள் மனைவிக்கு கருப்பையில் புற்று நோய் ஆரம்பமாகி இருக்கலாம்" —டாக்டர் அம்மா, அப்பாவிடம் கூறியபோது அருகில் உட்கார்ந்திருந்த எனக்கு மயக்கமே வந்துவிடும் போன்ற அதிர்ச்சி.

பிள்ளைகள் நால்வரை சுமந்த அந்தக் குடியிருந்த கோவிலுக்கு இப்படிப்பட்ட பயங்கர நோயா? உஹூம். கடவுளே! எங்கள் அம்மாவைக் காப்பாற்றுங்கள். மனம் கதறி அழுதது. "நிச்சயமாக அந்த வியாதி : வந்து விட்ட துன்னு நம்புறீங்களா டாக்டர்?" நான் அழுகையுடன் தழு தழுத்தேன்.

டாக்டர் என்னைக் கருணையுடன் பார்த்தார்.

"பெண்கள் மாதவிடாய் சம்பந்தப்பட்ட எந்த தொந் திரவுகளையும் உடனுக்குடன் டாக்டரிடம் கலந்து ஆலோ சனை கேட்கணும். இதுல வெட்கப்பட ஏதுமில்லை. உங்கம் மாவோட வெட்கம் எப்பேர்ப்பட்ட வேதனை ஆகிவிட்டது... எதுக்கும் ஒரு சின்ன ஆபரேஷன் செய்து பரிசோதிச்சு பார்த்துவிட்டு, புற்றுநோய்தான்னு நிச்சயமாயிட்டா.. ஒளிக்கதிர் வைத்தியம் செய்து... பின்னர் அறுவை சிகிச்சை மூலம் காப்பாத்த முயற்சிக்கிறேன்."

அம்மாவைத் தவிர, வீட்டில் மற்ற அனைவருக்கும் இந்த சங்கதி தெரியும்.

"டாக்டரம்மா என்ன சொன்னாங்க?" அம்மா என் முதுகை அன்போடு தடவியபடி கேட்ட போது... ஐயோ! நான் பட்டபாடு...!

"ஒண்ணுமில்லே... கருப்பையிலே என்னமோ, பரி சோதனை செய்யணுமாம். அது சரியில்லேன்னா, அறுவை சிகிச்சை செய்து கருப்பையே வெளியே எடுத்துட்டா உயிருக்கு ஆபத்தில்லை. மாதாந்திர தொந்தரவே இல்லாமல் நீங்க நிம்மதியா இருக்கலாம்னாங்க" கபடமற்ற ஒரு அன் புள்ளத்திடம் பொய் கூறுகிறோமே என்று குமைந்து போனேன். உண்மையைச் சொல்ல மனம் நடுங்கியது.

அம்மாவுக்கு ஏற்பட்டிருப்பது புற்றுநோய்தான் என பரிசோதனையின் முடிவு தெரிவித்த போது...? டாக்டர் அம்மா கையை விரித்து விட்டார். ஒளிக்கதிர் சிகிச்சைக்குப் பிறகு அறுவை சிகிச்சை மூலம் கருப்பையை அகற்றினால் அதற்குப் பின்னர் அம்மா சுமார் ஐந்து அல்லது ஏழு ஆண்டுகள் ஆரோக்கியமாக வாழக்கூடும். ஆனால் அறுவை சிகிச்சையின்போது புற்றுநோய் வயிற்றினுள் பல பாகங்களில் பரவி இருந்தால்... உத்திரவாதமாக எதுவும் செய்ய இயலாது என்று கூறிவிட்டிருந்தார். எங்களுக்கு பெருந்த அதிர்ச்சி.

கருப்பைப் புற்றுநோய் படிப்படியாக முன்னேறுவது வழக்கமாம். முதல்படி— இரண்டாம்படி—மூன்றாம்படி என்று நோயின் கடுமைக்கு ஏற்றபடி வைத்தியர்கள் ஒரு கணிப்பு வைத்திருக்கிறார்களாம்.

அம்மாவின் நோய் இரண்டாம் படியை எட்டியிருந்தது. சில மாதங்கள்—அல்லது சில ஆண்டுகளுக்குப்பின் ரத்தக் குழாய் மூலம் நோய் அணுக்கள் உடலில் எங்காவது பரவி, தீவிரமாகி தாங்க முடியாத வலியைக் கொடுத்து மரணம் ஏற்படுத்துமாம்.

டாக்டர் அம்மா தீர்மானமாகக் கூறிவிட்டார். எங்கள் குடும்பத்தினர் அனைவருக்கும் உண்மை தெரிந்தும், அம்மா விடம் மூச்சுக் காட்டவில்லை. அத்தனை வேதனையையும் விழுங்கிக் கொண்டு நான் அம்மா ஆஸ்பத்திரியிலிருந்து வரும் நாளை பாயசம் வைத்து ஒரு நல்ல நாளாகக் கொண்டாட முடிவு செய்திருந்தேன்.

அண்ணி பிரசவ சமயமாதலால் வீட்டில் இல்லை. செம்மண் கரை கட்டிய கோலம்—மாவிலைத் தோரணம்—வீடு முழுவதும் கமழ்ந்த ஊதுவத்தி மணம்—கோலாகலமாக வரவேற்பு.



"என் கையால பாயசம் சாப்பிடுங்க" படுக்கையருகே அமர்ந்தபடி பாயசக் கிண்ணத்தை அம்மா வாயருகில் கொண்டு போனேன்.

"எதுக்கு இப்படி ஒரு அமர்க்களம்? புதுசா இருக்கு" அம்மா சிரித்தபோது அப்பா முகத்தை லேசாகக் கவனித்தேன். கண்களில் புரண்ட நீரைக் கட்டுப்படுத்த முடியாமல் அவர் அப்பால் சென்று விட்டார்.

அண்ணன்மார் மூவரும் சிரிக்க முயன்று, தோற்றுக் கொண்டிருந்தனர்.

"எதுக்குக் கவலைப்படறே? உன் மனைவிக்கு சுகப் பிரசவம் ஆகிடும். பிள்ளையோ பெண்ணோ பிறக்கும். எதுவானாலும், எங்களுக்கு சந்தோஷம்தான்..." தெம்பாக பேசினார்கள்.

"ஜெய்ப்பூர் வேலை கிடைக்காட்டி போகட்டும். இப்ப நீ பார்க்கிற வேலையே போதும். ரொம்ப தொலைவுக்கு போனா எங்களையெல்லாம் பிரிஞ்சு போகணும். பணமா பெரிசு?"... இளைய அண்ணனுக்கு உபதேசம் செய்தார்கள்

கடைசி அண்ணன் தலையை அன்புடன் கோதி விட்டு... "அவசரப்படாதே... உன் படிப்புக்கேத்த வேலை கிடைக்கும். முயற்சி செய்திட்டே இரு. வயது இருபத்து மூணுதானே ஆகுது?" பரிந்து உரைத்தார்கள்.

"ஏன் இப்படி உம்முனு இருக்கிறீங்க? ஆபரேஷன் செய்துட்டு சுகமா வீடு திரும்பிட்டேன். வீட்டு வேலை முழுசையும் சுவர்ணாதான் கவனிக்குது. நான் ஓய்வாத் தானே இருக்கேன். இனிமே உங்க உடம்பையும் கவனிச்சுக் கோங்க...ரிடயர்ட் ஆன பிறகு நாம ரெண்டு பேருமா கோயில் குளம்னு ஜோடியா போய் வரலாம்..." உற்சாக மாக அப்பாவிடம் பேசினார்கள்.

எந்த வைபவமானாலும் அப்பாவும், அம்மாவும் ஜோடியாகத்தான் போவது வழக்கம். 'பார்வதி பரமேஸ்வரர் போல்' என்று பிறர் பேசுமளவுக்கு வாழ்ந்த ஜோடிப் பறவைகள் இப்போது பிரியும் நாள் வந்துவிட்டதே....என்று எண்ணி என் நெஞ்சு துன்பத்தில் புலம்பியது.

அன்று எல்லோரும் வெளியே சென்றுவிட்டனர். நான் மட்டும் அம்மாவுக்கு ஹார்லிக்ஸ் கலக்கியபடி அடுப்பருகில் நின்று கொண்டிருந்தேன்.

"சுவர்ணா!"—அம்மாவின் தீரமான குரல் கேட்டது. ஒரே எட்டில் அம்மாவை அடைந்து கட்டில் அருகே நின்றேன்.

"அண்ணன் படிக்க நிறைய புத்தகங்கள் வாங்கி வச்சிருக்காரே.... ஏதாவது எடுத்து படிக்கணுமா?..." ஆவலுடன் கேட்டேன்.

"அதெல்லாம் வேணாம்... திருவாசகத்தை பூஜை அறையிலிருந்து எடுத்து வந்து... 'பாரோடு விண்ணாய் என்கிறதை தினமும் கொஞ்சம் எனக்கு படிச்சு காட்டு... அதைக் கேட்க ஆசையா இருக்கு..."

திடுக்கிட்டுப் போனேன்... 'அம்மாவுக்கு ஏதாவது தெரிஞ்சு விட்டதா?....ஏன்...இப்படி பேசறாங்க...?'

"படிக்கிறேன் அம்மா... கவலைப்படாதீங்க!" என்றேன் ஆறுதலாக....

நாளடைவில் அம்மாவின் கொஞ்ச நஞ்ச நடமாட்டமும் குறைந்து உடல் இளைக்கத் துவங்கியது. சிறிது நடந்தாலும் மூச்சுத் திணறியது....முகம் வெளுத்து தலைமுடி உதிர்ந்து... அழகே உருவான எங்கள் அம்மா எங்கள் கண் முன்...கரைந்து கொண்டு மரணத்தை நெருங்கிக் கொண்டிருந்தார்கள்... அந்த நாட்களை புரிந்து கொண்டோம். ஆனால் வெளியே சொல்ல முடியாது மவுனமாக அழுதோம்.



அன்று மாலை பூஜையறை விளக்கை ஏற்றிவிட்டு திருவாசகத்தைப் பாடத் துவங்கிய என்னை அம்மா அழைத்து அருகே அமர்த்தினார்கள்.

"சுவர்ணா! எனக்கு எல்லாமே தெரியும். என் புற்று நோய் அதிகமாயிட்டது. எனக்கு சாவு வெகு தொலைவில் இல்லை.

"அம்மா!..."—பச்சிளங் குழந்தைபோல நான் தாங்க முடியாது விம்மி அழுதேன்.

"ஏன் அழறே...? இறைவனை நினைச்சுகிட்டே நிம்மதியா போய்விடுவேன். ஆனா உங்கப்பா பாவம்! என்னைப் பிரிஞ்சு ரொம்ப தவிச்சுப் போவார்...உன் பெரிய அண்ணன் வெகுளி. உங்கண்ணி ஒரு சாதுப் பொண்ணு. அதுக்கு குழந்தை பிறந்த வேளை பாட்டி செத்துட்டாங்கன்னு நிந்திக்காதிங்க. மரணம் ஒன்றுதான் மனித ஜீவனுக்கு நிச்சயமாக நேரக்கூடிய நிகழ்ச்சி. மத்ததெல்லாம் வெறும் எதிர்பார்ப்புகள்தான். அதனால் சாவைக் கண்டு பயப் படாதீங்க....நீங்க நவநிதிகள் மாதிரி எனக்கு நல்ல குழந்தைகளாக நிறைவைக் கொடுத்திங்க...அன்பான கணவருடன் பல ஆண்டுகள் வாழ்ந்துட்டேன்.... இதுக்கு மேல் நான் பேராசைப் படலாமா!..."

நான் விம்மியழுதேன்... :"அப்படி ஒவ்வொரு நாளையும் பயனுள்ளதாகக் கழிக்கணும்னு தான்...அன்னைக்கு அத்தனை சிரமப்பட்டு எங்களோட கேரம் விளையாடினீங்களா அம்மா?"

"ஒரு பெண் எந்த நிலையிலும்-நல்லவளா-உயர்ந்தவளா-மத்தவரை மகிழ்ச்சியில் ஆழ்த்தக் கூடியவளா-பொறுமையா-திடமனசோட வாழணும். இந்த புத்திமதி தான் உனக்கு நான் விட்டுப்போகும் சொத்து சுவர்ணா!"

"மறக்கமாட்டேன் அம்மா...!" குமுறினேன் நான்.

"அழுது ஆர்பாட்டம் செய்யாம கல்யாணப் பெண் போல... மஞ்சள்பூசி-குங்குமப் பொட்டு வச்சு என்னை வழி அனுப்பி வையுங்கோ ...."

என் இதயம் கனத்தது... துயரம் சுமையாக அழுத்தியது? அழுது கண்ணீர் சிந்தக் கூடாது என்று அம்மா உத்திர விட்டிருக்கிறார்கள்! அடக்கிக் கொண்டேன்.

மறுநாள் மாலையே அம்மாவுக்கு மரணதேவனின் அழைப்பு வந்துவிட்டது. புன்னகையுடன் கட்டிலைச் சுத்தி நின்ற எங்களைப் பார்த்து தன் இரு கரங்களையும் கூப்பிய படியே விடைபெற்றுக் கொண்டு விட்டார்கள்....

இதயம் வெடித்துவிடும் போல துயரத்தில் ஓலமிட்டது.

அம்மா கேட்டுக்கொண்ட வண்ணம்...யாரும் கண்ணீர் சிந்தாது... அவர்களை அலங்காரமாக வழி அனுப்பி வைத்தோம்...

இதோ அம்மாவின் படம் சுவற்றிலிருந்து எங்களைப் பார்க்கிறது. நாங்கள் யாவரும் சேர்ந்து மாலை நேரம் சாப்பிடும்போது அவர்களைப் பற்றிய இனிமையான நினைவுகளைப் பேசி... அமைதியுடன் பல எதிர்பார்ப்பு களுடன் வாழ்கிறோம்.

அம்மா! ..உமது கைவளையாக நான் ஆவேனா? உமது பொட்டாக நான் மாற மாட்டேனா... அம்மா நீங்கள் விட்டுச் சென்ற இனிய நினைவுகளுக்கு நன்றி— அம்...மா!

[]

# ஆயிரங் காலத்துப் பயிர்

அன்று மாலை, வேலையினின்று திரும்பியபோது எனக்கு ஒரு அதிசயம் காத்திருந்தது. எங்களைப் போன்ற மத்திய தர வகுப்பில் சம்பந்தம் செய்து கொண்டதே தனது கவுரவத்துக்கு இழுக்கு என்று நினைக்கும் என் அத்தான் சுந்தரத்தின் பியட் தோட்டத்திற்குள் நின்று கொண்டிருந் தது. ஒரே ஊரில் வாழ்க்கைப் பட்டிருந்தும் பிறந்தகத்தையே எட்டிப் பார்க்காத அக்கா சுமதி எதற்கு தன் கணவருடன் வந்திருக்கிறாள்.. ?

வியப்புடன் நடந்த என் கண்ணில் நீல அம்பாசிடர் ஒன்றும் பட்டது. இன்னும் யார் வந்திருச்காங்க? இன் றைக்கு நம் வீட்டில் என்ன? திறந்த வாயில் வழியே உள்ளே நுழைந்தேன். மல்லிகை—சந்தனம் ஊதுபத்தியின் கலவை மணம் முகத்திலே மோதியது. முன்னறையில் பலரின் குரல்கள்... சிரிப்பும்... மகிழ்ச்சியுமாக! திடுக்கிட்டு போனேன். மெல்ல எட்டிப் பார்த்தேன்.

முன்னறையில் கழுத்தில் புரண்ட முடி, தொங்கு மீசை, கிருதாவில் பளிச்சென்று தெரிந்த ஒரு வாலிபன் சோபா ஒன்றில் அமர்ந்திருந்தான்- அவன் பக்கத்தில் குட்டையும், நெட்டையுமாக இரண்டு மனிதர்கள்— பட்டு வேட்டி மல்ஜிப்பாவில் பற்களை காட்டியபடி, எதிர் பக்கம் அப்பா... அவர் அருகே அமுத்தலாக கோட்டும் சூட்டுமாக அத்தான், அவர் பக்கத்தில் வைர அட்டிகையுடன் அக்கா சுமதி...இப்படி ஒரு கூட்டம்...

ஆவி பொங்கிய காப்பி நிறைந்த தம்ளர்களையும்—தட்டுகளில் சிற்றுண்டி வகைகளையும் கண்டதுமே... எனக்கு புரிந்துவிட்டது. பெண் பார்க்கும் படலம்... துவங்கியிருக்கிறது... எனக்குக்கூட இந்த அப்பா தெரிவிக்காமல்... பற்களைக் கடித்துக்கொண்டு உள்ளே வேகமாக நகர்ந்த போது தங்கை ரம்யா பச்சைவண்ண பட்டுப் புடவை சரசரக்க .. முன்னறை பக்கம் வந்தவள் என்னை கண்டு முகம் சிவந்து போனாள். பின்னால் அவளைத் தள்ளிக் கொண்டு வந்த அம்மா என்னை வெட்டிவிடுவது போல் பார்த்தார்கள்.

"ரம்யாவைப் பார்க்க வந்திருக்காங்க. உன் திருவாயை மூடிக்கிட்டு... போய் முகத்தை கழுவி சீர் செய்துகிட்டு முன்னறைக்கு வா...அண்ணன் உன்னை அறிமுகப்படுத்தணும்" அடிக்குரலில் அதட்டினார்கள்.

செம்மை படர்ந்த ரம்யாவின் முகத்தைப் பார்த்தேன். இருபது வயது நிரம்பிய இளம் குமரி. அழகி என் தங்கை ரம்யா. பட்டப்படிப்பை முடித்தவள்தான். அம்மாவின் தலைப்பைப் பிடித்துக்கொண்டு வீடு என்னும் வட்டத்திற்குள் அடங்கிப் போனதொரு பத்தாம் பசலி. கல்யாணம்—திருமண வாழ்க்கை என்பதின் அர்த்தத்தையும் பொறுப்பையும் உணராத அரை வேக்காடு...

குளியலறை குழாயிலிருந்து பச்சைத் தண்ணீரை முகத்தில் ஊற்றிக் கழுவிக் கொண்ட போதிலும்...ஆத்திரம் உடல் முழுவதையும் அனலாக எரித்தது. இது அப்பா செய்த வேலை.... இந்தக் கஷ்ட காலத்திலே வந்தவன் வழியோட்டிக்கெல்லாம் காப்பி, டிபன் கொடுத்தால் வீடு உருப்படுமா?

கடந்த ஞாயிற்றுக்கிழமை நாளேட்டின் மணமக்கள் தேவை பகுதியைப் படித்துக்கொண்டிருந்த அப்பா சிவப்பு பென்சிலால்.... ஒரு குறிப்பிட்ட தேவைப் பகுதியை கோடிட்டபோதே...என் மனதில் ஒரு சந்தேகம்... ஆபத்து



என்று என் உள்ளுணர்வு எச்சரித்தது. அந்த நாளேட்டை எடுத்து பின்னர் அந்த சிவப்பு கோடிட்ட பகுதியைப் பார்த்தேன்.

ஸாம்பியாவிலிருந்து ஒரு மாத லீவில் தமிழகத்திற்கு வரவிருக்கும் இருபத்தைந்து வயது என்ஜீனியர் இளைஞருக்கு... இந்த வகுப்பைச் சேர்ந்த இருபது வயதுக்குள்ளடங்கிய அழகிய, இளம் பட்டதாரி பெண் தேவை..."

அப்பாவுக்கு இந்த வரன் பிடித்துவிட்டிருக்கிறது. உடனே தபால் பெட்டி எண்ணுக்கு தொடர்பு கொண்டிருக்கிறார்! இப்போது பெண் பார்க்க அந்த ஸாம்பியாக்காரன் வந்துவிட்டிருக்கிறான்...!

இரண்டாண்டு காலமாக நானும் அப்பாவும் பேசிக் கொள்வதில்லை. அம்மாதான் எங்களுக்கு இடையே பாலமாக தொடர்பு அமைத்து பேசுவது வழக்கம். ஜாதி—மதம்... வரதட்சணை—மூட பழக்க வழக்கங்கள் இவைகளை எதிர்க்கிறவன் நான். அப்பா பிற்போக்கு சிந்தனையாளர்... எங்களுக்குள் ஏற்படும் வாக்கு வாதங்கள் பலத்த சண்டையில் முடிவடையத் தொடங்கவே நான் அப்பாவுடன் பேசுவதையே நிறுத்திக்கொண்டு விட்டிருந்தேன். ஆனாலும் வீட்டுக்கு ஒரே மகன். என் கடமைகளை புறக்கணிக்காது வாங்கிய மாத சம்பளத்தில் என் செலவிற்கு சிறிது எடுத்துக் கொண்டு மீதியை அம்மா கையில் கொடுத்தேன்...

பின்னால் ஓடி வந்தார் அம்மா... "ராமு! அப்படி முறைச்சு பார்க்காதே. வந்தவங்க எதிரில் விவாதம் ஏதும் வேணாம், உன் அத்தான்கூட நம்மை மதிச்சு இங்கே வந்திருக்கார். அவர் எதிரில் அப்பாவை மட்டம் தட்டாதே .. பையன் பார்க்க நல்லா இருக்கான்..." அம்மா கெஞ்சினார்கள்...

"அம்மா! நம்ப ரம்யாவும் அழகான பொண்ணு தான்' மேலும் அவளுக்கு இப்போ கல்யாணத்துக்கு என்ன அவசரம்?"

"வயசு பெண்ணை வீட்டிலே வச்சுகிட்டிருக்கிற பெத்தவளுக்குத்தான் அதன் பொறுப்பு தெரியும்—உனக் கென்னடா தெரியும்...?"

"குழந்தைகள் மேலே உங்களுக்கு நம்பிக்கை இல்லை... அதனால்தான் இல்லாத கவலைகள். பத்திரிகையில் பார்த்த வரனுக்கு சட்டுபுட்டுனு கொண்டு கொடுத்து உங்க பொறுப்பை உதறப் பார்க்கிறீங்க..."

"இரைஞ்சு கத்தாதே... அவங்க காதில் பட்டுவிடப் போகுது... சீக்கிரம் முகத்தை துடைச்சுட்டு—உடையை மாத்திக்கிட்டு முன்னறைக்கு வாப்பா ..."

"அம்மா! எனக்கு இந்த அவசரக் கல்யாணம் பிடிக்கலை —நான் இதில் பங்கு எடுத்துக்கப் போறதில்லை "

"ராமு! நீ எப்பவும் அப்பாவுக்கு எதிராகவே இருக் கிறதுன்னு தீர்மானிச்சுட்டே. உன் அத்தான், அக்கா எல்லோருக்கும் இந்த வரன் பிடிச்சிருக்கு "

"எனக்குப் பிடிக்கலை. கல்யாணங்கிறது ஆயிரம் காலத்துப் பயிர்ன்னு நீங்க சொல்லுவீங்களே... அந்த பயிரை பத்திரமாக பாதுகாப்பது நம்ம பொறுப்பு இல்லையா...?"

"உன் தங்கச்சிக்குக்கூட மாப்பிள்ளையை பிடிச்சிருக்கு ராமு!"

"ரம்யா உலகம் தெரியாத மக்குப் பெண். கல்யாணம் என்றதும் பட்டு சேலையும்... கொட்டு மேளமும்தான் அவள் கண்களுக்கு தெரியுது..."

"ராமு அவள் படிச்ச பொண்ணுடா..."

"படிச்சா மட்டும் போதுமா... பகுத்தறிவு வேண் டாமா...?"



"நீ சுயநலமா பேசறே. இந்த வரனுக்கு நிச்சயம் செய்துட்டா அண்ணன் என்கிற முறையில் கல்யாணச் செலவு உன் கையைக் கடிக்குமோன்னு பயப்படறே?"

"அம்மா நீங்க நினைக்கறது தப்பு. ரம்யா கல்யாணத் துக்கு பிறகுதான் எனக்கு கல்யாணம்னு நான் தீர்மானிச்சு நீங்க கொண்டுவந்த பெரிய இடங்களை ஒதுக்கிவிட் டிருக்கேன். ரம்யா கல்யாணத்துக்குனு வங்கியில் தனியா பணம் சேர்த்துகிட்டு வரேன்...ஆனால் நெற்றி வியர்வை சிந்தி சம்பாதிச்சதை...நல்லபடியா செலவழிக்கணும்னுதான் ஆசை. ரம்யாவை பெத்த தாய் நீங்க ஒப்புக்கிறேன்...ஆனால் உசிரைக் கொடுத்து அவளுக்கு வாழ்வு தர ஆசைப்படற பாசமுள்ள ஒரு நல்ல அண்ணன் நான். நீங்க அதை மறக்கக் கூடாது..." ஆவேசமாகப் பேசினேன்.

என் விவாதம்—என் மறுப்பு எல்லாம் ஒரு கை ஓசை யாகப் போய்விட்டன.

அந்த ஸாம்பியா வரனுக்கு அப்பா மகளை கட்டிக் கொடுக்க ஒப்புக்கொண்டு விட்டார். ஒரே வாரத்தில் நிச்சயதார்த்தம் நடந்து முடிந்துவிட்டது.

அடுத்த வாரத்தில் கல்யாணம் என்று பத்திரிகை அச்சாகி வேகமாக விநியோகமாகிப் போனது.

அம்மாவுக்கு பட்டுச்சேலை கடைக்கும் பாத்திரங்கள் விற்கும் கடைகளுக்கும் பறக்கத்தான் பொழுது இருந்தது.

அப்பா கல்யாண மண்டபத்தைப் பிடிக்க அலைந்து கொண்டிருந்தார். ரம்யா கனவு உலகில் மிதந்து கொண் டிருந்தாள்....

அக்கா அந்தஸ்தை மறந்து அடிக்கடி பிறந்தகம் வந்து கொண்டிருந்தாள்.

அத்தான்...மாப்பிள்ளைக்கு எந்தவித உயர்ந்தரக உடை தேவை....வைர மோதிரம் எத்தனை பெரிசாக இருக்க

வேணும்...என்ற ஆலோசனைகளை வழங்கிக் கொண்டிருந்தார்.

வங்கியிலிருந்த என் பணத்தைத் தவிர யாரும் என்னிடம் எதுவும் கேட்கவில்லை...வரதட்சணை—சீர்...மாப்பிள்ளைக்கு மோதிரம் என்று என் உழைப்பு....காற்றில் ஊதிப்போனது.... கல்யாணம் சிறப்பாக நடந்தது. விருந்துக்கு வந்தவர்கள் வயிறு நிறைய சாப்பிட்டு...மணமக்களை ஆசிர்வதித்து விட்டுப் போனார்கள். மாப்பிள்ளையும் பெண்ணும் என் பணத்தில் தேன் நிலவுக்கு மைசூருக்குப் போனார்கள்.

இத்தனை அமர்க்களமும் இரண்டே வாரத்தில் இனிதே நடந்தேறி முடிந்தன. தேன் நிலவிலிருந்து திரும்பிய மாப்பிள்ளை ஜயந்தன் எங்களுடன் தன் மீதி விடுமுறை நாட்களைக் கழிக்கத் தங்கியிருந்தான். பெற்றோர்—மற்ற நெருங்கின உறவினர் இல்லாத ஒண்டிக்கட்டை என்று எனக்குக்கூட அவன்மீது லேசாக அனுதாபம் ஏற்படத்தான் செய்தது. ஜயந்தன் எல்லோரிடமும் சிரிக்கச் சிரிக்கப் பேசினான்—இனிமையாகப் பழகினான்.

வெளியூரில் வாரிக் கொட்டும் ஒரு என்ஜினீயர் மாப்பிள்ளையைப் பிடித்துவிட்ட மகிழ்ச்சியில் அப்பா தலை நிமிர்ந்து நடந்தார். ரம்யாவைப் பற்றி கேட்கவே வேண்டாம் —அவள் புதியதோர் உலகில் பறந்து கொண்டிருந்தாள்....

விடுமுறை முடிந்ததும் மாப்பிள்ளை கலங்கிய கண்களுடன் எங்களிடமிருந்து பிரியாவிடை பெற்றுக்கொண்டு புறப்பட்டான்.

ரம்யாவுக்கு பாஸ்போர்ட் எடுத்து ஆப்பிரிக்க நாட்டுக்குள் அனுமதிக்க மருந்து ஊசிகள் போட்டு நீங்கள் தயாராக இருங்கள். போனதும் உடனடியாக விசா வாங்கி அனுப்



கிறேன். என்று பன்னிப்பன்னி சொல்லிவிட்டு விமானத்தில் பறந்து போய்விட்டான்.

வாரத்துக்கு ஒரு கடிதம்—மாதத்திற்கு ஒரு கடிதம் என்று ரம்யாவுக்குத் தபால் வந்து கொண்டிருந்தது. அன்பைக் கொட்டி ஜயந்தன் எழுதியிருந்தான். விசா இன்னமும் கிடைக்கவில்லை; பொறுத்துக் கொள்ள வேணும் என்று கெஞ்சியிருந்தான்.

நாங்கள் எல்லோருமே பொறுத்துக் கொண்டு இருந்தோம். மாதம் ஒன்று இரண்டு...என்று விரைந்து...வருஷத்தின் முடிவை எட்டிவிட்டது... மாப்பிள்ளையிடமிருந்து கடிதம் வருவதும் நின்று போனது...விசா என்ற தகவலே இல்லை...

அம்மாவின் முகம் பேயறைந்தது போன்று மாறிப் போனது. அப்பாவின் நிமிர்ந்த தலை தொங்கிவிட்டது. ரம்யா ஊனும் உறக்கமுமின்றிச் சதா...அழுது கண்ணீர் வடித்துக் கொண்டு இளைத்துத் துரும்பாகிப் போனாள்...போட்ட கடிதங்கள்...கிணற்றில் போட்ட கல்லாகின.

மாப்பிள்ளை ஜயந்தனுக்கு என்ன ஆகிவிட்டது...? என்னுள் கவலை பூதமாக உருவாகிவிட்டது...

"ராமு! நீதான் ஏதாவது செய்யணும்...ஸாம்பியாவில் வேலை பார்க்கிற யாரையாவது கொஞ்சம் விசாரிச்சுப்பார் அப்பா....ரம்யாவின் முகத்தை என்னால் பார்க்கச் சகிக்கலை" ஒரு நாள் அம்மா என்னிடம் முறையிட்டுக் கொண்டு அழுகையில் குலுங்கிவிட்டார்கள்.

"தும்பைவிட்டு வாலைப் பிடிக்கச் சொல்றீங்க அம்மா... ஏதோ விபரீதம் நடந்து விட்டிருக்குன்னு எனக்கே பயமா இருக்கும்மா..." நானும் கண் கலங்கிப் போனேன்...என் உயிரினும் இனிய தங்கச்சி ரம்யாவுக்கு இப்படி ஒரு சோதனையா?

உலகம் மிகவும் சிறியது என்பார்கள் அறிஞர்கள். சில நாட்களுக்குப் பின்னர் அலுவலகத்து கூட்டம் ஒன்றில் என் நண்பரின் வீட்டுக்கு வந்த ஒரு விருந்தாளியைச் சந்தித்தேன்.

"ராமு; இவர் ஸாம்பியாவில் வேலை பார்க்கிறார்... திருநெல்வேலிக்காரர்தான்" அறிமுகம் செய்து வைத்தான் நண்பன்.

அவ்வளவுதான் அவரை நான் கெட்டியாகப் பிடித்துக் கொண்டுவிட்டேன்.

நேரிடையாகக் கேட்க துணிவில்லாமல் சுற்றி வளைத்தேன்.

"ஏன் சார் உங்களுக்கு நைஜீரியாவில் சண்முகம் என்பவரைத் தெரியுமா?" என்று கேட்டேன். அவர் பதிலுக்கு விழுந்து விழுந்து சிரித்தார்.

"ஆப்பிரிக்கா என்பது உலகத்திலேயே இரண்டாவது பெரிய கண்டம். நீங்கள் கேட்கும் நைஜீரியா...அதில் உள்ள ஒரு நாடு. நான் வசிக்கும் ஸாம்பியாவுக்குத் தொலை தூரம்..."

"ஸாம்பியாவில் லுசாகா என்கிற இடத்தில் என்ஜீனியரா வேலை பார்க்கிற ஜயந்தன் என்கிற தமிழ்ப் பையனைச் சந்திச்சிருக்கீங்களா?"

"நான் கிட்டுவிங்கிற இடத்தில் இருக்கேன். எப்பவோ ஒரு முறை சுற்றுலாப் பயணம்போது...தமிழ்ப்பையன் என்கிற ஆவலில் பேசிக் கொண்ட நினைவு...இருங்கோ, லுசாகா வந்தால் தன் வீட்டுக்கு வரச்சொல்லி முகவரி கொடுத்ததை என் டைரியில் எழுதி வச்சிருக்கேன்"— சொல்லிக் கொண்டே தமது கோட்டின் உள் சட்டையிலிருந்து ஒரு சிறு குறிப்பு டைரியை எடுத்துப் பிரித்துப் புரட்டினார்...தொலைபேசி எண்கூட கொடுத்திருக்கிறார்



அவர்...ஒரு சிறு கடிதத்தில் முகவரி —தொலைபேசி எண்ணெல்லாம் கிறுக்கிக் கொடுத்தார்.

என்ன விந்தை? மாப்பிள்ளை ஜயந்தன் எங்களுக்குப் கொடுத்திருந்த முகவரி வேறாக இருந்தது...! ஒரு சமயம் வீடு மாற்றியிருப்பாரோ?...

என்னுள் எழுந்த கலவரத்தை நான் வெளியே காட்டிக் கொள்ளவில்லை...

"ரம்யா உன் கணவர் வீடு தொலைபேசி எண் கிடைச்சுட்டது. நேராவே விசா பத்தி விசாரிக்கலாம்...?" என்று தங்கைக்கு உற்சாகம் ஊட்டினேன்.

அன்று எல்லோரும் முன்னறையில் ஆவலுடன் கூடி இருந்தோம்.

லுசாகாவிலிருந்து தொலைபேசித் தொடர்பு கிடைக்கப் பல மணி நேரம் ஆகியது...

"ஹலோ!" என்று தொலைபேசி இணைப்புப் பெண் கூப்பிட்டதும் நான் தொலைபேசியை ரம்யாவின் கையில் கொடுத்து விட்டேன்.

"நீயே உன் கணவரிடம் பேசிக்கோம்மா. உனக்குத்தான் பேச ஆசை அதிகமாக இருக்கும்...." மனம் கரைந்து போனேன்.

"ஹலோ! என்ஜினயா திரு. எம். ஜயந்தன் வீடு தானே...?"ரம்யா உற்சாகமாக முகம் சிவக்க உரத்த குரலில் கத்திக் கேட்டாள்.

"அவரோட பேசணும்.... சென்னையிலிருந்து ராமு குடும்பத்தார் கூப்பிடறாங்கன்னு சொல்லுங்க..."

"நான்தான் திருமதி ஜயந்தன் பேசறேன். அவர் வீட்டில் இல்லை. எங்கள் மூத்த பையனுக்கு உடம்புக்குச் சுகமில்லை. டாக்டரை அழைக்க வெளியே போயிருக்கார்...

முக்கியமான சங்கதியாக இருந்தால் என்கிட்டே சொல்லுங்கள். என் கணவர் பிறகு உங்களுக்கு போன் செய்வார்...''

ரம்யா முகம் வெளிரடைந்து... கையில் பிடித்த தொலைபேசியை நழுவ விட்டபடி மயங்கி விழுந்து விட்டாள்.

அதற்குப்பின் எங்கள் வீடு... அவங்கோலமாகிப் போனது.

''பாவி! தலையில் கல்லைத் தூக்கி போட்டுட்டானே—வரதட்சணை பணத்துக்காக... ஏற்கனவே கல்யாணமாகி—குழந்தைகளிருக்கும் ஒருத்தன் என் பெண் வாழ்வை நாசமடிச்சுட்டானே...?'' அம்மா தலையிலடித்துக் கொண்டு கதறி அழுதாள்.

அப்பா பேசத் தோன்றாது... தலையில் துண்டைப் போட்டுக் கொண்டு வாயிலில் போய் நின்று விட்டார்.

டாக்டர் கொடுத்த மருந்தில்கூட உறக்கம் வராது ரம்யா... விசும்பிக் கொண்டே.... படுக்கையில் புரண்டு கொண்டிருந்தாள். அக்காவும் அத்தானும் சங்கதியைக் கேள்விப்பட்டு மலைப்புத் தாளாது.... முன்னறையில் உட்கார்ந்து விட்டனர்.

முன்னிருந்து இந்தக் கல்யாணத்தை நடத்தி வைத்து விட்டுத் தமக்கு ஏதும் சம்பந்தமில்லை போல அத்தான் பேச்சைத் துவக்கிய போது நான் ஆத்திரத்தில் துடித்துப் போனேன்—

''நகருங்கள்... எல்லோரும் போங்கள்... என் தங்கச்சியை என்னிடம் விட்டுவிட்டு... அப்பா—போங்க... எல்லோரும்...'' இரைந்து கத்தினேன்.

அப்பாகூட பயந்துபோய் உள்ளே வந்து என்னை வியப்போடு பார்த்தார்.



துவண்டு கொடியாகக் கிடந்த ரம்யாவைத் தூக்கி மடி மீது சாத்திக் கொண்டேன்...

மெல்ல கண்களை விழித்துப் பார்த்தாள் என் அன்புத் தங்கை.

''அண்ணா! அவர் மோசம் செய்துட்டார்... அண்ணா! இப்போ நான் என்ன செய்வேன்... என் வாழ்வு நாசமாகி விட்டதே அண்ணா...'' விம்மி... துயரத்தில் வெடித்து அழுத என் தங்கையின் முகத்தைப் பார்த்தபோது என்னால் தாங்கவே முடியவில்லை. துயரம் நெஞ்சைப் பிழிந்தது... அந்தப் பாவி மோசக்காரன் ஜயந்தனின் குடலைப் பிடுங்கி மாலையாகப் போட்டுக் கொள்ள மாட்டோமோ என்று ஆவேசத்தில் பதறினேன்.

''தங்கச்சி! இந்த அண்ணன் இருக்கிறவரை நீ கவலைப் படவேண்டாம். இனி கண்ணீர் உகுக்க வேண்டாம், இந்திய விவாகச் சட்டத்தை மீறிய அந்த அதிசய இந்தியக் குடிமகனுக்கு... சட்டமூலம் தக்க தண்டனை வாங்கித் தருவேன்—அவனை விடமாட்டேன்'' என்று ஆத்திரத்துடன் கத்திக் கொண்டு அவள் கழுத்தில் கிடந்த தாலிச் சரட்டைப் பிடுங்கி எடுத்து அறையின் மூலையில் வீசினேன்.

''என்ன காரியம் செய்துட்டே ராமு?'' அம்மா அலறினார்கள்.

''ரம்யாவைப் பொறுத்த வரை இந்தத் தாலிக்கயிறு—அவளுக்கு ஒரு தூக்குக் கயிறு—இந்தக் கல்யாணம் ஒரு போலிச் சடங்கு. சட்டம் ஒப்புக்கொள்ளாத ஒரு நிகழ்ச்சி—''

''கல்யாணம் என்பது ஆயிரம் காலத்துப் பயிர் என்பீர்களே அப்பா! அந்தப் பயிரை அரை மணி நேரத்து முடிவில் அழிக்கப் பார்த்துட்டீங்களே... ஆனால் நான் இந்தப் பயிரைக் கருகவிடப்போவதில்லை... என் தங்கச்சிக்கு இந்த

அதிர்ச்சியிலிருந்து மீள நல்ல சிகிச்சைகள் கொடுத்து சாதி— மதம் குறுகிய கொள்கைகள் இல்லாத ஒரு நல்லவனுக்கு மறுபடியும் கட்டிக் கொடுக்கப் போகிறேன். அவள் வாழத் தான் போகிறாள்.... அப்பா அம்மா நீங்க எல்லோரும் இனி, என் பேச்சுக்கு எதிரா பேசினா...'' நான் முடிக்கவில்லை... வாயால் துண்டை அடைத்துக் கொண்டு அழுதுக்கொண் டிருந்த அப்பா துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டார்...

''ராமு! உன் புண்ணியத்தில்—உன் முயற்சியில் ரம்யா வாழட்டும்... எனக்கு மறுப்பு இல்லை... என்னை மன்னிச்சுடு மகனே... நமக்கு இந்தக் கஷ்டம் வந்தபோது தான் உன் முற்போக்குச் சிந்தனைகளின் உண்மை உருவம் என் மரமண் டைக்கு நல்லாபுரிஞ்சுது.. ராமு நீ என் மகன் அல்ல... இந்தக் குடும்பத்தை வாழவைக்க வந்த தெய்வம்...'' அப்பா அழுகிறார்.... அம்மா கண்ணீர் வடிக்கிறார்கள்— மிரள விழிக்கும் ரம்யா முகத்தில் நம்பிக்கை ஒளிர்கிறது—

''பயப்படாதே தங்கச்சி— நீ ஆயிரம் காலத்துப் பயிர்.... இந்த அண்ணன் உன்னைப் பாதுகாத்து வாழவைப்பான்'' என் நெஞ்சு பெருமையால் நிமிர்கிறது... ரம்யாவைக் கட்டாயம் நான் வாழ வைக்கப்போகிறேன்... ஜயந்தன் எனும் காதகனை நான் விடப்போவதில்லை.... இது சத்தியம்.''

□

# ஆயிரம் மலர்கள்

'சர்வர் சுந்தரம்' படம் மறுபடி அருகிலிருந்த சினிமா கொட்டகையில் காட்டப்பட்ட போது, லோகநாதன் அதைச் சில தடவைகள் தொடர்ந்தாற் போல் போய்ப் பார்த்து மனம் நெகிழ்ந்து போனான். ஏன் எனில் அந்தப் படத்தில் வரும் கதாநாயகனைப் போல அவனும் ஒரு ஹோட்டல் தொழிலாளி. அந்த சுந்தரத்தைப் போல அவன் உள்ளத் திலும் அன்பு ஊற்றாகப் பெருகிப்பொங்கி வழிந்து கொண்டி ருந்தது உண்மை.

சர்வர் சுந்தரம் கதாநாயகிமேல் அன்பு கொண்டான். லோகநாதனோ தான் வசித்த வீட்டின் பக்கத்திலிருந்தவர் களின் மழலைச் செல்வங்களை நேசித்தான். இந்த மாதிரி யான அன்பில் தான் வேறுபாடு... மற்ற பல வகையிலும் அவன் அந்த சர்வர் சுந்தரத்தைப் போலவே கபடமே தெரியாத ஒரு பத்தாம் பசலி. எல்லோரையும் நல்லவர்கள் என்று எண்ணும் தூய உள்ளம்.

''கடந்த பேரும் கடப்போரோ, மக்கள் மேல் காதல்'' என்பது ஆன்றோரின் வாக்கு. உலகத்து ஆசைகளையெல் லாம் துறந்த துறவிக்குக் கூட மழலை பேசும் குழந்தை மேல் ஏற்படும் அன்பை உதறமுடியாதாம். அப்படியிருக்கையில் சராசரி மனிதனான லோகநாதன் தான் வசித்த பக்கத்துப் பகுதியிருந்த மழலைச் செல்வங்கள் தாமே ஓடி வந்து மாமா என்று உறவு கொண்டாடி ஒட்டிக் கொண்ட போது அவர்களை விரட்டியடித்து முகத்தைக் கடுமையாக்கிக் கொண்டு தனியே வாழ இயலவில்லை.

அவனுக்குத் திருமணமாகிப் பதினான்கு ஆண்டுகள் ஆகியும் குழந்தைச் செல்வம் இல்லை என்ற ஏக்கம் இருந்தது. யாரையும் நொந்து கொள்வதில் பயன் இல்லை- முன்வினைப் பயன் என்று எண்ணி, தன் வாழ்க்கையில் ஏற்பட்ட குறையை மறந்து மற்றவர்களின் மழலைச் செல்வங்களை பார்த்து மகிழ்ந்து வாழத் தெரிந்து கொண்ட பண்பான மனிதன் அவன். வேலை காரணமாக மனைவியைக் கிராமத்தில் தன் பெற்றோரிடம் விட்டு விட்டு அவன் மட்டும் தனியாக சென்னையில் வசித்துக் கொண்டிருந்தான்.

அப்போது சிந்தாதிரிபேட்டையில் பிரபலமாகவிருந்த சுவப்பனா விலாசில்' அவன் ஒரு சர்வராக வேலைசெய்து கொண்டிருந்தான். அதன் அருகே ஹோட்டல் தொழிலாளிகள் சிலர் ஒன்றாகச் சேர்ந்து குடியிருப்புப் பகுதியை வாடகைக்கு எடுத்து வசித்துக் கொண்டிருந்தனர். அவர்களுடன் கூட்டாக லோகநாதன் தங்கி வசித்துக் கொண்டிருந்தான். அடுத்தக் குடியிருப்புப் பகுதிகளில் தசான்' அவன் மனதை மயக்கிய அந்த மழலைச் செல்வங்களின் பெற்றோர்கள் வசித்துக் கொண்டிருந்தனர்.

மல்லிகா, சமந்தா, ராமு என்ற மூன்று வயதிற்குட்பட்ட குழந்தைகள்... மதமும்—சாதியும் வேறுபட்ட பெற்றோர்களின் செல்வங்கள். ஆனால் அவனைப் பொறுத்தவரை அவர்கள் மூவரும் ஞானக் குழந்தைகள்... கடவுள் குழந்தை உருவில் மனிதனுக்குத் தரிசனம் கொடுக்க புறப்பட்டு வந்தால்... மல்லிகாவைப் போல அரிசிப் பற்கள் தெரிய சிரித்துக் கொண்டு, சமந்தாவைப் போலக் குறும்பாகப் பார்த்து, ராமுவைப் போல குதித்தோடிக் கொண்டு தான் வருவார்... என்று தீர்மானமாக எண்ணினான்... குழந்தைகள் தெய்வத்திற்குச் சமம் என்று தெரியாமலா பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள்?... என்று தன்னுள் அவர்களைப் பார்க்கும் போதெல்லாம் எண்ணி மகிழ்வான்.



மல்லிகா-சமந்தா-ராமு, என்ற மூவரையும் அழைத்து அருகில் உட்கார வைத்துக் கொண்டு கதை சொல்லி, மிட்டாய், பழங்கள் தந்து தன் தோள்மேல் தூக்கிக் கொண்டு தெருவை வேடிக்கை காட்டி விளையாடி மகிழ்வது அவனுக்கு வழக்கமாகி விட்டது.

"மாமா!" என்று அன்புடன் அழைக்கும் அவர்களின் இனிய குரலைக் கேட்டு மனம் பூரித்துப் போனான்

குழந்தைகளைப் பெற்ற தாய்மார்களும்—லோகநாதன் தம் குழந்தைகளைக் கொஞ்சி விளையாடி மகிழ்வதைப் பற்றிப் பெருமைப்பட்டார்களே ஒழிய தடை சொல்லவில்லை. அவசரமாகக் கடைகளுக்கோ—சினிமாவுக்கோ போக நேர்ந்தால் பெற்றவர்களே அவனிடம் தங்கள் குழந்தையைப் பார்த்துக் கொள்ளச் சொல்லி சில சமயம் விட்டுப் போவதுண்டு...அப்படிப்பட்ட சந்தர்ப்பம் ஏதேனும் ஏற்பட்டு விட்டால் அவன் மகிழ்ச்சியில் மிதந்து போவான். தான் பெற்ற செல்வம் போல ராமுவை மடியில் வைத்துக் கொண்டு சாதம் பிசைந்து அவனுக்கு ஊட்டிவிட்டு பின்னர் வாயைத் துடைத்து விட்டு—பாயின் மீது தலையணையுடன் படுக்கப்போட்டு...மெல்ல முதுகைத் தட்டி...

"மழையெல்லாம் ஒருநாள் தேனாகலாம். மணல்கூட ஒரு நாளில் பொன்னாகலாம்—ஆனால் அவை யாவும் நீ ஆகுமோ...." என்று கொஞ்சிப் பாடி தூங்க வைப்பான்.

லோகநாதனுக்கு இனிய குரல். ஊரில் கேட்ட அத்தனை சினிமா பாட்டுகளும் மனப்பாடம். சொந்தமாகக் கவிதைகள் கட்டும் திறனும் இருந்தது.

தீபாவளி, பொங்கல், கிறிஸ்துமஸ் போன்ற பண்டிகைகளுக்கு ராமு, மல்லிகா, சமந்தா மூவருக்கும் பரிசுகளும்... தானே இட்டுக் கட்டிய கவிதைகள் அடங்கிய வாழ்த்து மடல்களும் தபால் மூலம் அனுப்பிவைத்து மகிழ்ந்து போவான்.

குழந்தைகளுடன் ஒன்றிப்போய், தன் மனக்குறையை மறந்து அவன் வாழ்ந்து கொண்டிருந்த சமயந்தான் அந்த அதிர்ச்சி தரும் சம்பவம் நடந்தது.

மல்லிகாவின் சித்தி மகள் லலிதா— பனிரெண்டு வயது பள்ளிச் சிறுமி, ஊரிலிருந்து கோடை விடுமுறைக்குத் தன் பெரியப்பா வீட்டிற்கு வந்திருந்தாள்.

கபடமற்றவள் லலிதா. ஆனால் வயதுக்கு மீறி சற்று வளர்ந்து விட்டிருந்தாள். லோகநாதனுடன் குழந்தை மல்லிகா ஓடிவந்து விளையாடும் போதெல்லாம் லலிதாவும் கூடவே வந்து அவனிடம் கள்ளமில்லாது பேசிச் சிரித்து விளையாடினாள்.

தன்னைப் போலவே பிறரை எண்ணிக்கொண்டு வாழ்ந்த லோகநாதன் அந்தச் சிறுமி தன்னிடம் இயல்பாகப் பேசிப்பழகுவதை வித்தியாசமாகவே நினைக்கவில்லை. அவளையும் தான்பெற்ற ஒரு குழந்தையாகவே பாவித்து நேசித்தான். வேடிக்கையாகப் பேசிச் சிரித்தான். மல்லிகாவுக்கு மிட்டாய் வாங்கி வரும் போது லலிதாவிற்கும் ஒரு பொட்டலம் வாங்கி வந்தான். ஆனால் அவனது அன்புச் செய்கைகள் சுற்றிலுமிருந்தவர்களின் கண்களில் தவறாகப் பட்டன. அந்தச் சிறுமியிடம் அவன் காட்டிய பரிவைப்பற்றி அசிங்கமாகக் கிசுகிசுக்கத் தொடங்கிவிட்டனர்.

சங்கதி அத்துடன் நிற்கவில்லை. தெருவிலிருந்த வம்பர்கள், மல்லிகாவின் தந்தையை அணுகி, லோகநாதன் அவரது மைத்துனி மகளிடம் தவறாக நடப்பதாகக் கதை கட்டி விட்டனர். அவ்வளவுதான். மனிதன் ஆத்திர வசப்பட்டுப் போனார். ஒரு ஓய்வுநாள் பகல்—உணவுக்குப் பின் தன் அறையில் நிம்மதியாக உறங்கிக் கொண்டிருந்தான் லோகநாதன். மல்லிகாவின் தந்தை மதுபோதையுடன், கூட நான்கு அடியாட்களுடன் வந்து கதவைத் தட்டி, லோகநாதனை எழுப்பி கைப்பிடியாக வெளியில் இழுத்துச் சென்று தெருவில் நிறுத்தி கையாலும், இடுப்பு



பெல்ட்டாலும், தடிக்கம்பாலும் நொறுக்கித் தள்ளி விட்டார். அத்துடன் கேட்க முடியாத ஆபாச மொழியில் ஊரே கேட்கும் குரலில் திட்டி முடித்தார்.

ஏழைத் தொழிலாளி லோகநாதன், வேறு ஊரைச் சேர்ந்தவன். அவன உதவிக்கு யாரும் வரவில்லை. அவன் அடிபட்டு அவமானம் அடைவதைத் தெருவே நின்று வேடிக்கை பார்த்தது. மனம் உடைந்து போனான் லோகநாதன். அன்றே தற்கொலை செய்து கொண்டுவிட வேண்டும் என்றே திட்டம். யார் முகத்திலும் விழிக்கப் பிரியப்படாது மூட்டைப்பூச்சி மருந்தை வாங்கி வைத்துக் கொண்டு அறையில் வந்து உட்கார்ந்தான். சன்னமாக யாரோ கதவைத் தட்டுவது கேட்க...நடுங்கிக் கொண்டே திறந்தான்.

"மாமா!'' என்று மழலைக் குரலில் அழைத்தபடி குழந்தை மல்லிகா உள்ளே வந்து நின்றாள்.

தேவி மீனாட்சியே குழந்தை உருவில் வந்து தடுத்துக் கொண்டு விட்டது போன்று மெய்சிலிர்த்துப் போனான் அவன்;.

"மாமா உங்களை அடிச்சுட்டாங்களா. முதுகைக் காட்டுங்க...'' கொஞ்சியபடி அருகில் வந்து நின்று கேட்ட குழந்தையை அன்புடன் வாரி அணைத்து முத்தமிட்டான். கண்கள் நீரைக் கன்னத்திலே வழியவிட்டது.

கடவுளே! மனிதன் குழந்தையாகவே ஏன் இருந்துவிடக்கூடாது. பெரியவனாக வளர்ந்த பின்னர்.. மனிதனாகவாவது இருக்கக் கூடாதா? மிருகமாகி விடுகிறானே... ஏன்? அவனுள் மாறுபட்ட உணர்வுகளைப் படைத்தவன் நீதானே...கேட்டுக் கொண்டே குழந்தையைத் தன் மார்போடு அணைத்துக்கொண்டு விம்மி விம்மி அழுதான். மல்லிகா தன் சின்னஞ்சிறு கையால் அவனது கண்ணீரைத் துடைத்துக் கொண்டிருந்த சமயம்... வாயிற் படியில் நிழலாடியது.

"விடடா ராஸ்கல் குழந்தையை...இன்னொரு தடவை அவளைத் தொட்டே கையை முறிச்சுடுவேன்...."உரத்த குரலில் கத்தியபடி அவள் தந்தை தன் மகளை அவனிட மிருந்து முரட்டுத் தனமாகப் பிடுங்கி எடுத்துக்கொண்டு போய்விட்டார்..

தெருவில் எல்லோர் மூன்னிலையிலும் அடிவாங்கி அவமானப்பட்டதுகூட லோகநாதனுக்கு அத்தனை வேத னையாக இல்லை. அவனை அன்போடு நேசிக்கும் மல்லி காவின் உணர்விலே வெறுப்பைக் கலக்கிறார்களே என்று இதயம் வேதனையில் சுக்கலாக வெடித்தது...

அத்துடன் அவனது தொல்லைகள் அடங்கிப்போக வில்லை. லோகநாதனைப் பற்றி அந்த மனிதர் அவன் வேலை செய்யும் ஓட்டல் முதலாளியிடம் முறையிட்டுக் கொண்டதால்... சில நாட்களில் அவனது வேலை போய் விட்டது. வீட்டைக் காலி செய்யும்படி மற்ற கூட்டாளிகள் நிர்ப்பந்தித்தனர்...

நிற்க நிழலின்றி—உண்ணச் சோறு இன்றி...வேலை தேடிக்கொண்டு பித்தம் பிடித்தவனாக...அவன் அலைந்த அலைச்சல்—பட்டமன வேதனை...அப்பப்பா...

முடிவில் சில நாட்களுக்குப் பின்னர் அடையாறில் புதிதாக ஆரம்பித்திருந்த ஒரு ஓட்டலில் வேலை கிடைத்தது. வயிற்றுக்குச் சோறும்—தங்க இடமும்...செய்த வேலைக்குக் கூலியும் நிறையவே கிடைத்துவிட்டன. ஆனால் மனதிற்கு நிம்மதி?

ராமுவையும் — மல்லிகாவையும் — சமத்தாவையும் நினைத்தபோதெல்லாம் நெஞ்சுருகிக் கண்ணீர் வடித்தான். பிள்ளை பாக்கியமில்லாத ஒரு ஏழைத் தொழிலாளி அவன்... ஆனால் அவனும் ஒரு மனிதன் தானே... பச்சிளம் குழந்தை களின் பால் வடியும் முகத்தைக் கண்டு பரிவு கொள்ளுவது தவறா?.... பாசம் காட்டுவது முறைகேடான செயலா? அவனால் தன்னைச் சுற்றி உள்ள மனிதர்களின் மனப் போக்கைப் புரிந்து கொள்ள முடியவில்லையே?



பகலெல்லாம் கடுமையாக உழைத்தான். இரவில் தன் பாசத்தைக கவர்ந்து கொண்டுவிட்ட அந்த மூன்று குழந்தை களையும் நினைத்து நெஞ்சுருகி வேதனைப்பட்டான்....அவர் களை மறுபடி பார்க்க மாட்டோமா என்று ஏங்கினான். ஆனால் தன் உணர்வுகளை அவன் யாரிடமும் சொல்லிக் கொள்ளவில்லை. கேட்பவர்கள் சிரிப்பார்கள்—யாரோ பெற்ற குழந்தைகளை எண்ணி கண்ணீர் வடிக்கிறான் முட்டாள் என்று கேலி செய்யக்கூடும் என்ற அச்சம்...

ஆனால் சமூக சேவகி கமலா அமமாள் அப்படி நினைக்க வில்லை. அந்த ஓட்டலில் அடிக்கடி மாலை டிபன் சாப்பிட அவர்கள் வருவார்கள்—மிகவும் பணிவுடன் அவன் பரிமாறு வான்.

புன்னகையில் ஆரம்பித்து...'எந்த ஊர் அப்பா நீ!' என்கிறவரை கமலா அம்மாவின் கவனம் அவன் பக்கம் திரும்பியது. ஒரு நாள் மாலை ஓட்டலில் கூட்டம் அதிக மில்லாதபோது அவள் சிறிது நேரம் அவர்கள் சாப்பிட உட்கார்ந்த மேசையருகே நின்று தன்னைப்பற்றிப் பேச முடிந்தது.

எல்லா விவரத்தையும் கேட்டு மனமுருகிப் போனார் கமலா...அவன் கண் கலங்குவதைப் பார்த்து மனம கரைந்து போனார்.

"இதுக்கு ஏன் நீ வருத்தப்படறே? நான் வேலை பார்க் கும் கருணை இல்லத்திலே சுமார் ஐநூறு குழந்தைகள் இருக்காங்க. தாய் தந்தை யாரும் இல்லாத அனாதைக் குழந்தைகள் அத்தனை பேரும்; அவர்களுக்கு உறவு என்று யாருமே உலகில் கிடையாது...நீ ஏன் அவர்களது உறவின னாகக் கூடாது? ஞாயிற்றுக் கிழமைகளில் மதபோதகர் களையும் பஜனைப் பாடல்கள் சொல்லித் தருகிறவர்களையும் நாங்கள் ஆசிரமத்திற்குள் அனுமதிக்கிறோம். அவர்கள் இதை ஒரு சமூகநலச் சேவையாக நினைத்துத் தாங்களே முன்

வந்து உதவுகிறார்கள். உனக்கு மறுப்பு இல்லையென்றால் உனது ஓய்வு நாட்களில் எங்கள் ஆசிரமத்திற்கு வந்து... குழந்தைகளுக்கு உனக்கு தெரிந்த பாடல்களைச் சொல்லிக் கொடேன். ஏற்பாடு செய்கிறேன்....'' என்றார் கமலா.

லோகநாதன் இப்போது அந்த ஆசிரமத்திற்கு வாரத்திற்கு ஒருமுறை தன் ஓய்வு நாளின் போது போகிறான்—முன்பக்கத்துத் தோட்டத்திலேயே அடர்ந்து வளர்ந்து நிற்கும் வேப்பமரத்தைச் சுற்றிலும் இறைந்து கிடக்கும் இலைகளைத் தானே பெருக்கி இடத்தைச் சுத்தம் செய்கிறான்.

அவன் வருகைக்காக வரிசையாகக் காத்து நிற்கும் குழந்தைகளைத் தன்னை சுற்றிலும் உட்கார வைத்துக் கொள்கிறான். முன்னர் மூன்று குழந்தைகள்தான் அவனை "மாமா" என்று அன்போடு அழைத்தன. இப்போது முன்னூறுக்கு மேற்பட்ட குழந்தைகள் "மாமா!" என்று மழலைக் குரலில் அவனை அழைக்கும்போது அவன் நெஞ்சு மகிழ்ச்சியில் பூரித்து விம்முகிறது...

"ஆயிரம் மலர்களே... மலருங்கள்... அமுதகீதம் பாடுங்கள்..." என்று தனக்குத் தெரிந்த சினிமாப் பாடலை இனிய குரலில் அவன் உரத்துப் பாடும்போது...குழந்தைகள் அவனுடன் கூடி கோஷமிட்டுப் பாடுகின்றனர். அந்தத் தோட்டமே...சுவர்க்கமாகி விடுகிறது...அப்போது அங்கே அவன் கடவுளைக் காண்கிறான்...மனதில் அமைதியும் சுகமும் ஏற்படுகின்றன.

□

# அடுத்த வீட்டுப் பெண்

திருச்சியில் வேலை பார்த்த என் கணவருக்கு—அதே நிறுவனத்தின் சென்னைக் கிளைக்கு மாற்றலாகியிருந்தது. உத்யோக உயர்வில் நல்ல நிலையில் சென்னைக்குக் குடியேறி விட்டோம்.

குழந்தைகள் ரவி, நீலா இருவரையும், பள்ளியில் சேர்க்க வேண்டியிருந்தது. அந்தக் குடியிருப்புப் பகுதியில் புதிதாக உருவாகியிருந்த வீடுகளில் ஒன்றை வாடகைக்கு ஏற்பாடு செய்து உதவியது அவரது நிறுவனம்.

சாமான்களை இறக்கி, வீட்டை ஒழுங்குபடுத்தி அந்தந்த இடத்தில் வைத்து சீர் செய்வதற்குள்... அப்பப்பா! மூச்சு விடப் பொழுதில்லை. நிற்க நேரமில்லை, நாட்கள் ஓடி விட்டன.

ஒருநாள் மாலை, அலுவலகத்திலிருந்து திரும்பி வந்த கணவருடன்—குழந்தைகளை அழைத்துக் கொண்டு அவர்களுக்கு வேண்டிய பள்ளிச் சீருடைகளைத் தைக்கத் துணி வாங்குவதற்காகக் கிளம்பினோம்.

அண்ணாசாலையில், ஒரு சிந்திக்காரர் கடையில் துணிகளைப் பொறுக்கி எடுத்தபடி இருந்த நான் ஒரு கணம் திடுக்கிட்டுத் திரும்பினேன்.

"மாலதி! எல்லாம் வாங்கி முடிச்சிட்டியா? குழந்தையோட வாசல்ல வந்து நில்லு. நான் போய் காரை எடுத்துக்

கிட்டு வறேன்'' அந்த ஆண்குரல் வந்த திக்கு நோக்கி நிமிர்ந்தேன். கம்பீரமான, உயரமான, களையான ஒரு மனிதன் முப்பது வயதிற்கு மேல் இருக்கும்.

மறக்க முடியாத அந்தப் பெயர் தந்த ஒரு விசித்திர உணர்வில் திகைத்துப் போனவளாய், அந்த மனிதன் கூப்பிட்ட திசையில் திரும்பினேன். வருஷங்கள் எத்தனை ஆனால்தான் என்ன? அவளை அடையாளம் கண்டு கொள்ள முடியாதா?

சந்தேகமில்லை. அவள் திருச்சியில் நாங்கள் முதல் முதலாக வாழத் துவங்கிய அந்த வீட்டிற்கு, அடுத்த வீட்டில் வசித்த மாலதியேதான்—கிணற்றில் நீர் எடுத்துப் போகக் கொல்லைப்புறம் வரும்போது பார்த்திருக்கிறேன்.

சங்கு போன்ற சிவந்த கழுத்து. அதில் பச்சையாகச் சிறிய இலைபோல் இடது பக்கமாகப் படர்ந்திருந்த மச்சம். இன்னமும் அப்படியே அடையாளம் காட்டியது.

துணி பார்சலைக் கையில் பிடித்திருந்த அவளது வலது கரத்தில் அன்று நான் கண்ட அந்தப் பயங்கர காயத்தின் வடு... ஒரு கோடு போலத் தெரிந்தது. ஒடிய உயரமாக... அழகாக, தாழம்பூ நிறத்திலே; பொம்மை போல இருந்த அதே மாலதிதான்... காலம் இப்போது அந்தக் குழந்தை முகத்திலே சிறிது முதிர்ச்சியை ஏற்றி விட்டிருந்தது. தலையில்கூட ஓரிரு வெள்ளிக் கம்பி போன்ற நரை... அவள் பட்ட துன்பங்களுக்கும் சித்ரவதைகளுக்கும், தலைமுழுதும் நரைத்திருக்க வேண்டும்! பாவம்! அடுத்த வீட்டுப் பெண் மாலதி... 'இப்போது சுகமாக இருக்கிறாயா?' என்று கேட்க வேண்டும் என்ற ஆவல் உந்தியது.

ஆனால் அவள் என்னைக் கண்டு கொண்டதாகவே தெரியவில்லை. ஒரு சமயம், வேண்டுமென்றே தெரியாதவள் போல் நடிக்கிறாளோ... அந்தப் பயங்கர சூழ் நிலையில்,



அக்கம் பக்கத்தவரின் அறிமுகமில்லாது தனிமையில் வாழ்ந்த அவளுக்கு என்னைத் தெரிய வில்லையோ...?

உண்மையில் ஓரிரு முறை, ஜன்னல் வழியே அவளைப் பார்த்துவிட்டு, "நீங்கதான் பக்கத்து வீட்ல இருக்கறவங்களா?'' என்று கேட்டதோடு சரி. அப்படி இருக்க, இப்போது போய் அவளை விசாரித்துவிட்டு "நீங்க யார் தெரியலியே'' என்று மாலதி கூறிவிட்டால்...

முகத்தில் அசடு வழிய நிற்க வேணுமே! அப்போது அடுத்த வீட்டுப் பெண் என்று உதவினோம். அந்த உதவி நாங்கள்தான் செய்தோம் என்று அவளுக்குத் தெரிந்திருக்க வழி இல்லையே?

பலவாறு சிந்தித்தபடி அவளை மீண்டும் பார்த்தேன். வசதியாக வாழ்கிறாள் என்பதை அவளது சேலையும், கழுத்து, கை நகைகளும் கட்டியம் கூறின.

"எப்படியோ சுகமாக இருக்கட்டும்'' வெளியே வந்த நான், குழந்தையுடன் அவள் காரில் ஏறிக்கொண்டு உற்சாகமாக செல்வதைப் பார்த்தேன்.

"ஆண்டவா! இந்தப் பெண்ணுக்கு இப்படிப்பட்ட ஒரு நல்வாழ்வைக் கொடுத்து விட்டாயே. நீ கருணை மிக்கவன்'' உணர்ச்சி வசத்தில் நெகிழ்ந்தபடி வீடு திரும்பினேன்.

இயந்திர கதியில் வேலைகளை முடித்தபடியே இருந்த என் மனதில் பழைய நினைப்புகள் அலை மோதின.

இரவு உணவிற்குப் பின்னர், குழந்தைகள் உறங்கி விட்டனர். என் கணவர் புத்தகமொன்றில் ஆழ்ந்திருந்தார்.

"ஞாபகமிருக்கா... திருச்சியிலே நாம முதல் முதலா குடித்தனம் வச்சப்போ...''

புத்தகத்தை மூடிய என் கணவர் வியப்புடன் என்னைப் பார்த்து மெல்லச் சிரித்தார்.

"வீடே கிடைக்காம, அந்தத் தோப்பு தெருவுல ஒரு வீடு பிடிச்சேன். இப்ப என்ன அதுக்கு? இங்கேயும், அது மாதிரி, ஏதானும் பக்கத்து வீட்டுலே பேய்—பிசாசு வந்திட்டதா?"

"இல்லை. அந்த மாலதியைப் பார்த்தேன். கடையிலே அவளை நீங்க பார்க்கலையா?"

"நான் அப்படி எல்லாப் பெண்களையும் முறைச்சிப் பார்க்கற வழக்கமில்லேன்னு தெரியுமே உனக்கு" கண்ணைச் சிமிட்டினார் அவர்.

"அதுக்கு சொல்லலை. அந்த மாலதி என்னை அடையாளம் கண்டுக்கவே இல்லை."

"பழசை நினைச்சு அவள் வேதனைப்பட வேணாம்னு இருந்திருக்கலாம்."

"ஆமா. நானும் அதான் பேசாமே வந்துட்டேன். அவ இப்போ வசதியா, கணவன், குழந்தைன்னு இருக்கான்னு புரிஞ்சுது."

"சந்தோசப்பட்டுக்கோ! ஜன்னல் வழியா நீ எட்டிப் பார்த்து துப்புத்துலக்கினே... விடிவு கிடைச்சது" மீண்டும் புத்தகத்தினுள் ஆழ்ந்து போனார் என் கணவர்.

பாலை சூடாக்கி எடுத்து வர, சமையலறைக்குள் புகுந்தேன் நான். மனதிலே அந்தப் பழைய பயங்கர சம்பவங்கள் விரிந்தன.

தனிக்குடித்தனம். வீடு கிடைக்காத சிரமம். கல்யாணமான புதிது. முடிவில் தோப்புத்தெரு வீட்டில் உள்ள ஒரு தனி ஓட்டுவில்லை வீட்டில் குடி புகுந்தோம்.

எதிர்ப்புறமும், இடது பக்கமும்... காலிமனைகள். ஆனால் அடுத்த வீட்டில் ஒரு குடித்தனம் இருந்தது.



"அப்பாடா! பேச்சுத் துணைக்கு ஒரு ஆள் கிடைத்ததே" என்ற உற்சாகத்தில், ஜன்னல் வழியே பக்கத்து வீட்டை மெல்ல எட்டிப் பார்த்தேன்...அந்த அழகான பெண்ணின் முகம் என்னை மகிழ்ச்சியில் ஆழ்த்தியது.

வந்த முதல் நாளே வேலைக்காரி பலவித கதைகளைச் சொல்லிவிட்டிருந்தாள். பக்கத்து வீட்டு மனிதர் பெரிய ஆசார சீலர். மந்திரம், மாயம், பூஜை புனஸ்காரங்களில் நம்பிக்கை உடையவர். அவரது மூத்த மனைவி—அவரை விட்டு ஓடிப்போய்விட்டாள். அவள் தற்கொலை செய்து கொண்டதாகவும் அதனால் இரவில் பிசாசாக வந்து அமைதியைக் கெடுக்கிறாள் என்றும் பேச்சு. அதனால் அவர் தினமும் பூஜை செய்து பேயை ஓட்டுகிறார். சில சமயங்களில் அந்த வீட்டிலிருந்து வெகு தொலைவிற்குக் கூட ஒரு பெண் அலறும் சத்தம் கேட்குமாம்!"

வேலைக்காரி சொன்ன பெயரைத் தெரிந்து கொண்டு கிணற்றில் நீர் எடுக்க வரும்போது, "மாலதி அம்மா!" என்று அவளை நான் கூப்பிட்டேன்.

ஒரு புன்னகை, மறுகணம் நீர்க் குடத்துடன் சட்டென உள்ளே மறைந்து போனாள் அவள்.

மாலதியின் கணவர் வீட்டை விட்டு வெளியே செல்லும் போது பார்த்திருக்கிறேன். அவளது அழகுக்கும், இளமைக்கும் ஈடு ஜோடில்லாதவர்.

வரதட்சணை, சீர் என்று கொடுக்க வசதியில்லாமல், இப்படி ஒரு காட்டானிடம் வயது வேற்றுமை கூடப் பாராமல் தள்ளி விட்டிருக்கிறார்கள் அவர்களது பெற்றோர்கள் என்று மனம் குமைந்து போனேன்.

மனதிற்கும், தோற்றத்திற்கும் பொருந்தாத இடத்தில்... கல்யாணம் என்ற பெயரில் ஒரு விலங்கு ஒரு பெண்ணுக்குத் தேவைதானா... வேலைக்காரி கூறிய அந்தப் பேய் நடமாட்டத்தை ஆரம்பத்தில் நான் கவனிக்கவில்லை. மாலதிக்காக உருகிக்கொண்டிருந்தேன்.

ஒரு சில தினங்களுக்குப் பின்னர்...ஒரு நாள் இரவு.... ஓவர்டைமிலிருந்து தாமதமாக வீடு திரும்பப் போகும் கணவருக்காகத் தூங்காமல் நான் காத்திருந்தபோது....

தெரு விளக்குகள் 'திடும்'மென அணைய, அந்தத் தனிமையில் இருக்கப் பயந்தவளாய், அடுத்த வீட்டை, எங்கள் ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தேன்.

இரு வீடுகளுக்குமிடையே சிறிது இடைவெளி இருந்தது. இடையே வேப்பமரம் கொஞ்சம் மறைவு கொடுத்தது. எங்கள் வீட்டு சமையலறை வழியே பார்த்தால், அவர்கள் வீட்டு படுக்கையறை தெரியும்படி ஒரு ஜன்னல் உண்டு.

சமையலறை விளக்கை அணைத்தேன். ஜன்னல் ஓரமாக ஒண்டிக் கொண்டேன். ஏனெனில் மாலதியின் கணவர், ஆவேசமாக அவளை இழுத்துக் கொண்டு, வீட்டினுள் நுழைவதைப் பார்த்து அரண்டு போயிருந்தேன்.

அவர்கள் படுக்கையறையில் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அப்போது...நான் கண்ட காட்சியை என் ஆயுள் உள்ளளவும்...ஏன் இப்போது நினைத்தாலும் குலை நடுங்குகிற அந்தக் காட்சியை மறக்கவே முடியாது!

இடையில் வெள்ளை வேட்டி—உத்திராட்ச மாலை அணிந்து, பட்டை பட்டையாக திருநீரும் அதன் நடுவே பெரிய குங்குமப் பொட்டுமாக, கையிலே சாட்டையுடன் மாலதியை இழுத்தபடி வந்தார் அவளது கணவர்.

அவளது சேலை அலங்கோலமாகப் புரண்டது. திகிலுடன் நெஞ்சில் நான் கையை வைத்துக் கொண்டேன். மறுகணம் அந்த மனிதர் ''ஓம்... ரீம்...'' என்று என்னென்னவோ, மந்திரங்களை உரக்க உச்சாடனம் செய்தபடி, சாட்டையால் ஓங்கி மாலதியின் முதுகில் அடிக்க—அவள் அலற...முதுகின் ரவிக்கை கிழிந்து பச்சைப் புண்ணாக ரத்தம் கொட்டியது. கோரமாக அந்த மனிதன்



நகைத்தபோது, என் கையும், காலும் தந்தியடிக்க, அப்படியே உறைந்து போனேன்.

மாலதியின் கூந்தலைப் பற்றி உலுக்கினார் அந்த மனிதர். பிறகு சாட்டையை வீசிவிட்டு விளக்கை அணைத்த போது எனக்கு ஏதோ பயங்கரமான சினிமாக் காட்சியைப் பார்ப்பது போல, மெய்சிலிர்த்துப் போனேன்.

என் கணவர் வந்து கதவைத் தட்டி வெகுநேரமாகியும் கதவைத் திறக்க முடியாமல் விரல்கள் மரத்துப் போயின.

எனது பீதியைக் கண்டவர், பதறிப் போய் என்னை விசாரிக்க ஆரம்பித்தார். படித்தவர், பண்பானவர் என் கணவர். அவரிடம் உண்மையை மறைக்க முடியவில்லை.

உடனே சொன்னார் அவர். ''அடுத்த வீட்டுக்காரன் பெரிய பூஜை, மந்திர அனுஷ்டானம் செய்கிறவன் என்பதெல்லாம், சுத்தப் பேத்தல். அவன் ஒரு ஸாடிஸ்டு. மிருக வெறி கொண்ட மனிதன். பால் உணர்வில் வக்கரித்துப் போன புத்தி கொண்டவன். தாம்பத்திய உறவு கொள்ளு முன் ஒரு பெண்ணைச் சித்திரவதை செய்து அதில் இன்பம் காணும் வெறியன். அதனால்தான் முதல் மனைவி ஓடிப் போயிருக்கிறாள். அவள் இறந்து ஆவியாக இங்கே அலைவதாகக் கதை கட்டிவிட்டு, தனது காமவெறியாட்டத்தை நடத்தி ஊரை ஏய்த்துக் கொண்டிருக்கிறான்.''

''ஐயோ! பாவம் அந்தப் பெண் மாலதி'' எனக்கு அழுகை பிறிட்டது.

''அண்டை வீட்டுக்காரன் என்ன செய்தால் நமக்கேன் வம்பு என்று நாம் ஒதுங்குவது முறையல்ல. அண்டை வீட்டில் ஒரு துன்பம் வந்தால், சமூகத்திலே வாழும் ஒவ்வொருவருக்கும் அதில் ஒரு பங்கு உண்டு. அதை நிவர்த்திப்பது நமது கடமை, மனிதாபிமானமும் கூட.''

''அந்த மனுஷரைப் பார்த்தாலே கொலைகாரனாட்டம் தெரியுதே...''

"கவலைப்படாதே. பொறுத்திருந்து பார்ப்போம்'' சமாதானப்படுத்தினார்.

மீண்டும் ஒருநாள் நள்ளிரவு, கணவரின் சாட்டையடி தாங்காமல், வெளியே தோட்டப்பக்கம் மாலதி அலறியபடி ஓடிவந்தாள். தொடர்ந்து சாட்டையுடன் துரத்தியபடி அந்த கொலை பாதகன்...!

தெருவிளக்கு வெளிச்சத்தில், இந்தக் காட்சியைக் கண்ட என் கணவர் அதிர்ந்து போனார்.

மறுநாள் தமது நண்பரான ஒரு காவல்துறை அதிகாரியின் உதவியை நாடினார். அவர் சில சமூக சேவகிகளின் உதவியால் அந்தப் பெண்ணை அணுகி, நிலைமையைப் புரிந்துகொண்டு, அவளது அண்ணனுக்குக் கடிதம் எழுதி தெரிவித்து விட்டார்.

அண்ணன் வந்து அழைத்துப் போன பிறகு எங்களுக்கு காவல்துறை அதிகாரி வழியாகத்தான் மற்ற தகவல்கள் கிடைத்தது.

உடலையும், உள்ளத்தையும் துன்புறுத்திக் கொடுமை செய்ததாகக் கணவன் மீது வழக்குத் தொடுத்து அந்தப் பெண் விவாகரத்து வாங்கிக் கொண்டதாகக் கேள்விப்பட்டுப் பெருமூச்செறிந்தோம்.

மாலதியின் அண்ணன் உடனடியாக பெண் டாக்டரிடம் அவளது உடலை பரிசோதித்து சான்றிதழ் வழங்கச் செய்தான். அதைப் பார்த்த நீதிபதி மிக்க அனுதாபத்துடன், வழக்கை அவளுக்குச் சாதகமாகத் தீர்ப்பளித்தாராம். அத்தனை தூரம், மாலதியின் கை, தோள், மார்பு ஆகிய வற்றில் பச்சைப் புண்ணான சாட்டையடிக் காயங்கள் இருந்தனவாம்.

அவள் அண்ணன் தங்கைக்கு மறுவாழ்வு தர முயன்று வெற்றி பெற்றிருக்கிறான். அவளுக்கேற்ற அழகான கணவர். கண்ணியமும், வசதியும் படைத்தவர். அப்படிப்பட்டவரை தங்கைக்கு தேடித்தந்த அண்ணன் பெண், குலத்தால் பாராட்டப்பட வேண்டியவன்.



என் கணவர் கூறியது சரிதான். கடந்துபோன கசப்பான துயரமான சம்பவங்களைத் தூண்டிவிட்டு பழைய மனப் புண்ணிலிருந்து ரத்தம் கசியச் செய்வானேன். அவள் அடையாளம் கண்டு கொள்ளாததே மேல்...

"எங்கே என் ஹார்லிக்ஸ்?'' என் கணவர் குரல... திடுக்கிட்டபடி, பாலும், ஹார்லிக்ஸுமாகக் கலந்து எடுத்துக் கொண்டு, அவர் அருகில் வந்தேன்.

"மாலதியும், இதேபோல் கணவருடன், சந்தோஷமாக நீண்டகாலம் வாழ வேண்டும் இறைவா'' என் மனம் மீண்டும் நிறைவோடு வேண்டிக் கொண்டது.

□

# ஆடிக்கூழ்

ஆடி மாதத்தின் போது வாரத்திற்கு ஒரு தெரு மக்கள் உபயத்தை ஏற்று எங்கள் ஊர் மாரியம்மன் கோவிலில் கூழ் ஊற்றும் திருவிழாவைக் கோலாகலமாகக் கொண்டாடுவது வழக்கம். ஆடி மாதம் பிறக்கு முன்பே தருமகர்த்தா சீட்டுக் குலுக்கிப்போட்டு எந்த வாரம் எந்தத் தெருவுக்கு எந்த பணி என்று சொல்லிவிடுவார். விழா பத்திரிகையிலும் விவரமாக அச்சடித்து ஊர் மக்களுக்கு வினியோகம் செய்து விடுவார்.

முதல் நாள் இரவே பெண்கள் தலைமுழுகி...சுத்தமாக உடுத்திக்கொண்டு புளிக்க வைத்திருக்கும் கூழ்மாவை பெரிய 'டேக்சா'க்களில் கிளறி தயாராக்கி விடுவார்கள்—மறுநாள் காலை அம்மனுக்கு அபிஷேக ஆராதனை முடிந்ததும்...பொங்கல் வைத்து கூழ் படைத்து, பின்னர் கூழை ஏழை எளியவர்களுக்கு தானம் செய்வது எங்கள் ஊர் பழக்கம். அதில் பெண்களான நாங்கள் மிகச் சிரத்தையுடனும் மகிழ்ச்சியுடனும் பங்கு பெறுவோம்.

அன்று மாலை நான் தலை முழுகிவிட்டு சுத்தமாக தானே துவைத்துக் காயவைத்த சேலை ரவிக்கையை கொடியினின்று இழுத்து உடுத்திக் கொண்டு நானே கரைத்து புளிக்க வைத்திருந்த மாவை...கூழாகக் காய்ச்ச பாத்திரங்களைத் தூக்கிக்கொண்டு எங்கள் வீட்டின் பின்கட்டிற்குள் புகுந்தேன். பல ஆண்டுகளாக வந்து கொண்டிருந்த



பழக்கத்தை நான கைவிட விரும்பவில்லை. மேலும் ஊரில் பெரிய தனக்காரர் என்ற பட்டப்பெயருடன் இப்போது உண்மையில் வசதியாக வாழ்கிறது எங்கள் குடும்பம்; சாமி பூஜையில் குறை வைப்பானேன்? பக்கத்து வீட்டுப் பெண்கள் இருவர் எனக்கு உதவ முன் வந்திருந்தனர்.

கல்யாண காரியங்களுக்கு என்று கட்டப்பட்ட பெரிய அடுப்பு...பாத்திரங்களும் நாலு பேர் தூக்க வேண்டிய கனம். வேலையிலிருந்து திரும்பி என் மூத்த மகனும் அவனது மனைவியும் பின்கட்டின் பக்கம் வந்தார்கள்.

மகன் கணேசன் ஜாடை செய்து என்னை வெளியே வரும்படி அழைத்தான். அவன் பக்கத்து நகரத்தில் தனியார் மருத்துவமனையின் பரிசோதனைச் சாலையில்...இரத்த பரிசோதகராக வேலை பார்க்கிறான். அவன் மனைவி சாவித்திரி அதே மருத்துவமனையில் நர்சாக பணி செய்கிறாள். ஒன்றாக ஸ்கூட்டரில் வேலைக்குப் போய் அநேக நாட்களில் ஒன்றாக வீடு திரும்புகிறவர்கள்...காதல் திருமணம் செய்து கொண்டு ஒற்றுமையாக வாழ்கிறவர்கள். அவர்களது அன்புச் செல்வம் என் பேரன் தோட்டத்தில் வேலையாள் மேற்பார்வையில் விளையாடிக் கொண்டிருந்தான்.

"அம்மா! உங்களுக்கு ரத்த அழுத்தமும்—சக்கரை வியாதியும் இருக்குன்னு தெரியுமில்லையா...இந்த அண்டா சருவங்களைத் தூக்கி வச்சு...கூழ் கிளறாட்டி அம்மன் உங்களை அடிக்கிறாங்களா...?" கேலியும் கோபமுமாக கணேசன் என்னை அதட்டினான்.

"ரொம்ப வேலை செய்து மயக்கமா விழுந்துட்டீங்கன்னா?"—என் மருமகள் சாவித்திரி லேசாகக் கண்டித்தாள்.

"அம்மா இந்த வருசம் ரொம்ப உற்சாகமாகவே கூழ் காய்ச்சுவாங்க, ஏன் தெரியுமா? இது அவங்களைப் பொறுத்த

வரை திருமண ஆண்டு விழா...'' சொல்லிக் கொண்டே வேலையினின்று வந்த என் இளைய மகன் வாயிற்படியருகே வந்து நின்றான்.

''அப்படி சொல்லுங்க அண்ணா? அவங்களுக்கு ஒரு வாழ்த்துக் கவிதை எழுதி முடிச்சுடறேன்....'' கைகொட்டி கேலியாக சிரித்தான் நகரத்துக் கல்லூரியில் படிக்கும் என் கடைக்குட்டி மகன். நல்ல வேளை! மூணாவது மகன் சென்னையில் ஐ. ஐ. டி. யில் என்ஜினியர் பட்டத்திற்கு படித்துக் கொண்டிருக்கிறான். அவன் வீட்டிலிருந்து விட்டால் போதும். என்னை வம்புக்கிழுத்து வேடிக்கை செய்து எல்லோரையும் சிரிக்க வைத்து விடுவான். அத்தனை ஒரு பொல்லாதவன்.

''அக்காவுக்கு எழுதிப் போடறோம்...சாமி பூதம்னு நீங்க உடம்பை அலட்டிக்கிறது அவங்களுக்குத் தெரியட்டும்...'' விளையாட்டாக, ஆனால் கண்டிப்பான குரலில் இளைய மகன் சொன்னான்.

''உன் அக்காவும் இப்போ தன் வீட்டிலே கூழ் ஊத்தர உற்சவம் செய்யப் போவதாக நேத்து கடிதாசி போட்டது. அதனாலே நான் செய்யறதைக் கேள்விபட்டால் ரொம்ப மகிழ்ச்சியடையும்!'' நான் விட்டுக் கொடுக்காது பேசினேன்.

நான் சொன்னதைக் கேட்டு என் மூன்று மகன்களும்—மருமகளும் சேர்ந்து ஒருங்கே சிரித்தபோது எங்கள் வீடு கலகலப்பாகியது...என் உள்ளம் பெருமையால் விம்மியது.

''அம்மாவுக்கு நம்ப ஊர் மாரியம்மன் கோயில் அருகே ஒரு சிலை எடுத்து வைக்கணும் ... கண்ணகியின் வாரிசாச்சே '' சிரித்துக் கொண்டே மூத்த மகன் குளியலறை பக்கம் விரைந்தான்.

''சிலை எடுக்கிறதை பிறகு பார்ப்போம்—இந்த வாரம் இவர்களுடைய ரத்தத்தை பரிசோதிக்க உங்க சோதனை சாலையில் ஏற்பாடு செய்யுங்க...அம்மன் திருவிழான்னுட்டு



கண்டபடி இனிப்புகளை சாப்பிடறாங்க... நாளைக்கு நம்ப உபயமா.... அத்தையைக் கையிலே பிடிக்க முடியாது...'' மருமகள் சாவித்திரி அன்புடன் அதட்டிவிட்டு... தன் வேலைகளை கவனிக்க அப்பால் சென்றாள்.

நான்கு பிள்ளைகள்—ஒரு பெண் என்ற பெரிய குடும்பத்தின் தலைவி நான். என் குழந்தைகள் மட்டும் என் மேல் கொள்ளைப் பாசம் வைத்திராவிடில்...? எண்ணிய படியே எங்களது வீட்டின் அலங்காரமான பெரிய கூடத்திற்குள் வந்தேன்.

அந்த நோய்க்குப்பின் என் கால் தப்பியதே அதிசயம். ஆனாலும் முன்போல வேகமாக நடக்க முடியாது வலது காலைத் தாங்கிக் கொண்டு நடக்கத் துவங்கி இருந்தேன். கூடத்து சுவற்றிலே என் கணவரது மூத்த மனைவியின் போட்டா மீது நான் போட்டிருந்த மல்லிகை மாலையின் மொக்குகள் விரிந்து... கூடம் முழுவதும் கம்மென்று மணம். மூத்தவள் படத்திலிருந்து என்னைப் பரிவோடு பார்த்தாள். பாவம்! என் கணவரைக் கட்டிக்கொண்டு அவள் துளி சுகங் கூட பெறவே இல்லை. இத்தனைக்கும் அத்தை மகள் என்ற சொந்தம்.

தங்க, வைர நகைகள் போட்டு வரிசை எடுத்து விமரிசையாகத்தான் அவள் பெற்றோர் கட்டிக் கொடுத்தனர். பெண் கருப்பு...என்ற ஒரே காரணத்திற்காக அவள் அருகேகூட என் கணவர் நெருங்காது... ஏழு வருஷம் வாழ்க்கையை ஓட்டிவிட்டார். கணவன்—மனைவி என்ற உறவே இல்லாது அந்நியர்கள் போல அவர்கள் வாழ்ந்ததை அறியாது என் மாமனாரும் — மாமியாரும்... பிள்ளையில்லையே என்று தெய்வங்களை வேண்டி இருந்த விரதங்கள் கணக்கில் அடங்காது.

வீட்டில் கிடைக்காத சுகத்தை என் கணவர் வெளியில் தேடிக்கொண்டார். பணத்தை வாரி இறைத்தார்—பல பெண்களோடு நெருக்கம் வைத்து பழகிக்கொண்டிருந்தார்.

கணவனின் பாராமுகமே என் மூத்தாளுக்கு ஒரு பெரும் நோயாக மாறிவிட்டது. உணவும்—உறக்கமும் இன்றி அழுது—சோர்ந்து முடிவில் காச நோய்வாய்ப்பட்டு...என் மாமியார் இறந்த மறுமாதம் அவளும் காலமாகி விட்டாள்.

மகனுக்கு மற்றொரு கால்கட்டு போடவிட்டால் குடி முழுகிப் போகும் என்ற பயத்தில் ஏழை வீட்டுப் பெண்ணான என்னை எதுவும் கேட்காமல்.... தம் மகனுக்கு முடித்து வைத்தார் என் மாமனார். பெரிய தனக்காரர் வீட்டு மருமகள் என்ற பதவியில்—பட்டுகள் உடுத்தி பகட்டாக நகை அணிந்து கொண்டு—இடுப்பில் சாவிக்கொத்து சொருகிக் கொண்டு வீட்டை நிர்வகிக்கத் தொடங்கினேன். எனக்கும் சட்டென்று குழந்தைகள் பிறந்துவிடவில்லை. குலம் விளங்க வேண்டுமே என்ற கவலையால்... ஆஸ்பத்திரி—கோயில்கள் என்று பல இடங்களுக்கு என்னை என் மாமனார் அனுப்பி வைத்தார்—ஒரு அறுவை சிகிச்சைக்குப்பின்... கணேசன் பிறந்தான். அதற்குப்பின் அடுக்கி வைத்தார் போல.... இரண்டாண்டுக்கு ஒன்று விகிதத்திலே... ஐந்து குழந்தைகள்... போதும் என்று நான் வைத்தியரிடம் கெஞ்சி பிள்ளைப் பேற்றுக்கு முற்றுப் புள்ளி வைக்கும் வரை... பெற்றுத் தள்ளிவிட்டேன்.

கடைக்குட்டி பிறந்த பின்னர், ஓராண்டு கழித்து என் வலது காலில் ஒரு சிறு புண் ஏற்பட்டது. மாதுளம் பிஞ்சை அரைத்து பூசினால் போதும் என்றாள் எதிர் வீட்டுக்கிழவி. அந்த சிகிச்சைக்கு அது அசையவில்லை. பதிலுக்கு கால் தூணாக வீங்கிக் கொண்டு... புண்ணில் சீழ் கட்டி—எனக்கு ஜன்னி வந்து விட்டது.

பயந்து கொண்டு நகரத்திலிருந்து டாக்டரை வரவழைத் தார் என் மாமனார். இன்னும் கொஞ்சம் தாமதித்திருந்தால் காலையே எடுக்க நேர்ந்திருக்கும். இந்தம்மாளுக்கு சர்க்கரை வியாதி எக்கச்சக்கமாக இருக்கிறது. என்னால் முடிந்தவரை



பார்க்கிறேன் என்று கைவிரித்து விட்டார் டாக்டர். அதற்குப் பின் எனக்கு ராஜ வைத்தியம் நடந்தது. டாக்டர்கள், இரத்த பரீட்சை, ஊசி மருந்துகள்—மாத்திரைகள்... என்று பலத்த சிகிக்சைக்குப் பின் மெல்ல எழுந்தேன்.... என் கால் பிழைத்தது... ஆனால் உடம்பில் வலு இருக்கவில்லை. வீட்டு வேலைகளுக்கு எனக்குக் கைகொடுத்து உதவி செய்யப் பத்து வயது ஏழைச் சிறுமி ஒருத்தியை என் சொந்தக்காரர் ஒருவர் கிராமத்திலிருந்து கொண்டு வந்து அமர்த்தினார்.

கணவன்—குழந்தைகள்— வயதான மாமனார்... என்று என் வாழ்க்கை அவர்களை கவனிப்பதில்... வேகமாக ஓடியது... நாட்கள் மாதமாகி—ஆண்டுகள் சிலவாகி... விரைந்தன.

திடீரென்று விழிப்பு ஏற்பட்டது எனக்கு.

பத்து வயது சிறுமியாக வேலைக்கு அமர்த்தப்பட்ட அந்தப் பெண் இப்போது பருவத்தின் பளபளப்பிலே.... காண்பவர் கண்களை ஈர்க்கும் வகையில் அழகான இளம் பெண்ணாக வளர்ந்து விட்டிருந்தாள்...! கல்லூரியில் காலடி எடுத்து வைக்கும் வாலிபர்களாக என் பிள்ளைகளும் வளர்ந்து விட்டனர். இந்நிலையில் பஞ்சையும் நெருப்பையும் பக்கத்தில் வைப்பதுபோல... இவளைத் தொடர்ந்து வீட்டில் வைத்துக் கொண்டால்...? என் கணவரும் இதையேதான் எண்ணினார் என்று முதலில் நான் ஏமாந்து போனேன்.

"வேலைக்காரப் பெண்ணை இனி நம்மோடு வச்சுக் கிறது சரியல்ல—அவளை பெத்தவங்ககிட்ட ஒப்படைச்சுட்டு வரேன்.... என்ன சொல்றே?'' என் கணவர் கேட்ட போது சரி என்று நான் தலையை ஆட்டினேன். அந்த பெண்ணை அழைத்துக்கொண்டு புறப்பட்டுப் போனவர்... போனவரே.... வாரங்கள் இரண்டாகியும் திரும்பி வரவில்லை.

பயந்து போய்விட்டோம் நாங்கள். வழியில் விபத்து ஏதாவது ஏற்பட்டு ஆஸ்பத்திரியில் கிடக்கிறாரா?... அந்த பெண்ணின் முகவரியை ஒரு துண்டுக் காகிதத்தில் எழுதி என் அலமாரிக்குள் வைத்த நினைவு. உடனடியாக அலமாரியைத் திறந்து தேட ஆரம்பித்தபோது... இன்னொரு இடி!

என் நகைப் பெட்டியிலிருந்த என் நகைகள்—என் மூத்தவள் விட்டுப்போன விலை உயர்ந்த நகைகள் அத்தனையையும் காணவில்லை.

மாமனார் சங்கதியைக் கேட்டு அதிர்ந்து போனார். ஊரிலுள்ள தமது நண்பர்கள் சிலரை துணைகொண்டு... என் கணவரைத் தேடத் தொடங்கினார்.

பத்து நாள் தேடிக் களைத்து வீடு வந்த என் மாமனார் சொன்ன செய்தி ..எல்லாவற்றையும்விட மிகவும் பயங்கரமாக இருந்தது. அந்தக் கவலையில் படுத்த படுக்கையாகிவிட்ட என் மாமனார் சில தினங்களில் மாரடைப்பில் இறந்து போனார்.

என் கணவர்...அந்த வேலைக்காரப் பெண்ணை தமது மனைவியாக்கிக் கொண்டு...பக்கத்து நகரத்திலே வீடு எடுத்துக் கொண்டு வசதியாக வாழ்கிறார்...கையோடு கொண்டுபோன குடும்பத்து நகைகளை அவள் போட்டுக் கொண்டு குலுக்கி மினுக்குகிறாள்....!

பஞ்சு போன்ற அந்தப் பெண்ணுக்கு என் பிள்ளைகள் நெருப்பாகிவிடுவார்கள் என்று அஞ்சினேன்... என் கணவரே...நெருப்பாகிப் போனதைக்கேட்டு நான் துடிதுடித்து- கதறி அழுது- புலம்பி... பட்ட வேதனை... அம்மம்மா இப்பவும் நினைத்தாலும் குடல் புரண்டு கலங்கிப் போகிறேன். பெரிய தனக்காரர் என்று செல்வாக்குடன் வாழ்ந்த எங்களுக்கு ஊரார் முன்னிலையில் மாபெரும் தலை குனிவு. அத்துடன் என் கணவர் வைத்துப்போன கடனை அடைத்துவிட்டு நாங்கள் நிமிர்வதற்குள்... மிஞ்சியது பெருங்காயப் பாண்டம்போல கிராமத்திலிருந்த அந்த வீடு ஒன்றுதான்.



இருந்த இரண்டொரு நகைகளையும் விற்று—நிலத்தில் ஒரு பகுதியை விற்று—தோட்டத்தில் காய்கறி பயிர் செய்து நகரத்திற்கு அதை பஸ்சில் ஏற்றி கடைகளுக்கு அனுப்பி... கட்டும் செட்டுமாக நான் ஐந்து குழந்தைகளுடன் பட்ட அவதி?... அப்பப்பா... பிள்ளைகள் நால்வரும்... ரத்தினங்கள் என்றே சொல்ல வேணும். உபகாரச் சம்பளம் வாங்கி... புத்திசாலிகளாகப் படித்தார்கள்...ஆனால் அப்பா செய்த அநியாயத்தை மறக்கவில்லை... குழந்தைகள் எல்லார் மனதிலும் தந்தைமேல் வெறுப்பு... நெஞ்சு மட்டும் வழியும் கசப்பு நிறையவே இருந்தது.

"அப்பா மறுபடி இந்த வீட்டில் காலை வைத்தால் கொலை விழும்" என்று உறுமினான் பெரியவன்.

"அப்பன் செத்து விட்டான் என்று முழுக்கு போட்டு விட்டோம். நீங்க கவலைப் படாதீங்க... நாங்க நாலு பேர் இருக்கோம்... உங்களை நடுத் தெருவில் விட்டுட மாட்டோம்." வீராப்பாகப் பேசினான் கடைக்குட்டி...

எனக்கு பிள்ளைகள்தான் பெரும் உறைவிடமாக, உற்ற துணையாக இருந்தார்கள்... அம்மா... அம்மா என்று காலைச் சுற்றிக்கொண்டு வந்த அந்த குழந்தைகளால் எனக்கேற்பட்ட அந்த மாபெரும் இழப்பை மறந்து வாழ்க்கையில் எதிர்நீச்சல் போட்டேன்...

பெரியவன் தலையெடுத்தான்—தங்கச்சியை நல்ல இடத்தில் கட்டிக் கொடுத்தான்—தானும் காதல் கல்யாணம் செய்து கொண்டான். மருமகளோ... மகளுக்கு மேல் பாசத்துடன் என்னைக் கவனித்துக் கொண்டாள்—இளைய மகனும் சம்பாதிக்கத் தொடங்கியதும் எங்கள் வீட்டில் இல்லாமை

மறைந்தது... வயிறார சாப்பிட்டு—மனம் நிறையப் பேசி... மகிழ்ச்சியோடு—நிறைவோடு வாழத் தொடங்கினோம்....

அப்போதுதான் மறுபடியும் அந்தக் குழப்பம் வந்து சேர்ந்தது.

கடந்த ஆண்டு மாரியம்மனின் ஆடித்திருவிழாவின் போது கூழ் ஊற்ற... பெண்கள் நாங்கள் சிலர் வெளிப்புற மதில் சுவர் அருகே வந்து தயாராக நின்றோம். கூழ் நிறைந்த பெரிய அண்டாக்களைத் தூக்கி ஆட்கள் கொண்டு வந்து எங்கள் அருகே வைத்தனர். கையிலிருந்த பெரிய கிண்ணங் களில் கூழை மொண்டு... வரிசையாக நின்ற ஏழை எளியவர் களின் கையிலிருந்த பாத்திரங்களில் ஊற்றிக் கொண்டிருந் தோம். கை சளைக்க நான் கூழை அள்ளி அள்ளி ஊற்றிக் கொண்டிருந்தபோது என் பார்வை... என் அருகேயிருந்த ஒரு வரிசை மீது பட்டுவிட்டது... திடுக்கிட்டுப் போனேன். உடல் முழுவதும் பதற....நிற்க முடியாது கால்கள் துவள... நெஞ்சு படபடக்க... கண்களில் நீர்மல்க நான் நிலைகுலைந்து போய் விட்டேன். அந்த வரிசையில் நின்ற சில பிச்சைக்காரர்கள் பின்னால் கிழிந்த சட்டையும்—அழுக்கு வேட்டியுமாக தாடி மீசை நரைத்த கிழக் கோலத்திலே... தள்ளாடியபடி கோலை ஊன்றிக் கொண்டு கையில் ஒரு தகரக் குவளையுடன் என் கணவர் நின்று கொண்டிருந்தார்.

ராஜா ராணி கதைபோல... பல ஆண்டுகளுக்கு முன்னர் ஓடிவிட்ட என் கணவரை... இந்தக் கோலத்திலா சந்திக்க வேண்டும்....?

அந்த மாபெரும் துயரத்தைத் தாளாது நெஞ்சு வெடித்து விடும்போல வேதனை செய்ய... என் உணர்ச்சி போராட்டத்தை யாரும் கண்டு கொள்ளுமுன்... கிண்ணத்தை அருகிலிருந்த பெண் ஒருத்தியிடம் கொடுத்து விட்டுக் கோயிலுக்குள் சென்று மறைவாக ஒரு இடத்தில் நின்று கொண்டேன்.... ஆனால்... கண்ணீர் வடித்தபடி.... பிச்சைக் காரனாகிவிட்ட கணவனை— பார்த்துக்கொண்டே நின்றேன்.



கூழை வாங்கிக்கொண்டு தள்ளாடியபடி கோலை ஊன்றி மெல்ல நடந்தவர்... அருகிலிருந்த பாழடைந்த சாவடியின் திண்ணையை நோக்கி செல்வதைக் கண்டேன்.

எல்லோரும் போன பின்பு—வீட்டு சாமான்களை வேலை யாட்களிடம் கொடுத்தனுப்பிவிட்டு... யாரும் காணாத வகை யில் மெல்ல அந்த சாவடியை நோக்கி நடந்தேன். தகரக் குவளையில் மீதியிருந்த கூழை விரலால் தொட்டுச் சப்பிக் கொண்டிருந்த என் கணவர்... காலடிச் சத்தம் கேட்டுத் திடுக்கிட்டுப் போனார்.

"யார் அது...?" கேட்டபடி எழுந்து அருகில் வந்தார்.

மேலும் கீழும் என்னைப் பார்த்துவிட்டு—தமது தலை முடியைக் கரங்களால் பிடித்துக் கொண்டு...

"அமிர்தம் பார்த்தியா என் கதியை? அந்தப் பாவி என்னை நிர்கதியா விட்டுட்டு நகைகளுடன் வேறு ஒருத்த னுடன் ஓடிட்டா. அதுக்குப் பிறகு எனக்கு ஊர் திரும்ப முகம் இல்லே. நான் காசு இல்லாம வேலை இல்லாம பட்ட துன்பம் கொஞ்ச நஞ்சமல்ல. இப்போ வயசும் சீக்கும் வந்து விட்டது. பிறந்த ஊரிலேயே வெட்கமில்லாமல் பிச்சை யெடுக்க வந்து நின்னுட்டேன்" விம்மி விம்மி அழுதார்.

தாள முடியாது நானும் அழுதேன். எங்களுக்குள் இப்படி ஒரு பிரிவு ஏற்படணுமா? இந்த நிலையில் அவரை நான் மீண்டும் சந்திக்கணுமா என்று துயரத்தில் குலுங்கி அழுதேன்.

"அந்தக் கூழ் மாரியாத்தாவின் பிரசாதம். அதைவாங்கி சாப்பிட வந்தீங்க. அது பிச்சையில்லை. ஆனால் நாம ரெண்டு பேரும் இத்தனை வருஷம் கழிச்சு சந்திச்சுமே அதுதான் ஆத்தாள் நமக்குப் போட்ட கருணைப் பிச்சை'

என்று தழுதழுத்தேன். இருட்டு மட்டும் பல சங்கதிகளை இருவரும் பேசினோம்—அழுதோம்—சிரித்தோம். "வீட்டுக்கு வந்து சேருங்க" என்று கூறிவிட்டு நான் அன்று வெகுநேரம் கழித்து வீடு திரும்பினேன்.

மறுநாள் மாலை முன்னறையிலிருந்த அழுக்குப் பிடித்த கிழவனைக் கண்டு குடும்பத்தவர் திகைப்படைந்து போயினர்.

"என்ன அப்படிப் பார்க்கிறீங்க... உங்க அப்பா... திரும்பி வந்திருக்கார்..." என்ற போது என் பிள்ளைகள் அனைவரும் ஒரே முகமாக... அவரை உள்ளே சேர்க்க மறுப்புத் தெரிவித்தனர்.

"முதலில் இடத்தைக் காலி பண்ணச் சொல்லுங்க..." என்று கத்திய என் மூத்த மகன்முன் முந்தானையை பிடித்துக் கொண்டு நின்றேன்.

"மாரியாத்தாளுக்கு மடிப்பிச்சை போடுங்கோன்னு கேட்டு பெண்கள் அரிசி சேர்த்து பொங்கவச்சு ஆத்தாளைக் கும்புடுவாங்க... உங்ககிட்ட உங்களைப் பெத்த தாய் நான் மாங்கல்ய பிச்சை கேட்கிறேன். சீரும் சிறப்புமா உங்கப்பா இருந்திருந்தால் நான் உள்ளே சேர்த்திருக்கமாட்டேன்... சீக்காளியாக நாதியத்து நிக்கிறார்.... ஏழைப்பெண்ணான என்னை கட்டிகிட்டு... எனக்கு உங்களுடைய தாய் என்கிற தகுதியைத் தந்தார்... அந்த நன்றிக் கடனைத் தீர்க்க... நானும் அவரும் இந்த வீட்டின் அவுட் அவுசிலே தங்கிக்கிறோம்... அதுக்கும் மறுப்பு உண்டோ?..." கண் கலங்கி நான் அழுதபோது என் பிள்ளைகள் வாயடைத்துப் போனார்கள்

கோயில் பூஜை முடிந்ததும் கூழ் நிறைந்த பாத்திரத்துடன் நான் என் கணவரைக்காண அவுட் அவுசுக்குப் போனேன்—தம்ளரில் கூழை நிறைத்து அவரிடம் கொடுக்கிறேன்.



"அமிர்தம்... எனக்கு இந்த நிலையிலும் இடம் கொடுத்து —சோறு போட்டு—பணிவிடை செஞ்சு, காப்பாத்தறயே... உன் தாராள மனதையும் உன் தாயன்பையும் எண்ணி உருகிப் போறேன்—பெண்களில் பலர் இப்படி இருப்பதால்தான் பெண் குலத்தையே தாய்க்குலம் என்கிறாங்க அறிஞர்கள்." அவர் தழுதழுக்கிறார்... தம்ளரை பிடித்த கரம் நடுங்குகிறது!

என் மூத்த மகன் அடிக்கடி சொல்லும் ஒரு சங்கதியை நான் நினைக்கிறேன்.

'ஞானிகள் சிலருக்கு ஒரு இருண்ட கடந்த காலம் இருக்கும்—அதைப்போல பாவிகள் பலருக்கும் ஒரு ஒளிமயமான வருங்காலம் இருக்கலாம்,' தம் தவறுகளை நினைத்து உருகி மனம் திருந்திய என் கணவரை இப்போது நான் ஒரு நல்ல மனிதனாகப் பார்ப்பதில் தவறு உண்டா?

□

# அவளும் ஒரு தாய்

செல்வன் சிறப்பு அங்காடியின் கிடங்கிலிருந்து அன்று நான் வீடு திரும்புவதற்குள் பொழுது நடுப்பகலைத் தாண்டி விட்டிருந்தது. வீட்டிலேயே தான் தயாரித்த வத்தல், வடகங்களை பிளாஸ்டிக் பைகளில் நிரப்பி, எடைபோட்டு வாயை அடைத்து... அவைகள் மேல் நிறை, விலை முதலியவை கொண்ட துண்டு காகிதத்தை ஒட்டி கூடைகளில் ஏற்றிக் கொண்டு வழக்கம் போல் ரிக்ஷாவில் போயிருந்தேன்.

சிக்கனமாக இருந்தால்தானே நாலுபிள்ளைகளும் நானும் அவரும் பசியின்றி வாழ முடியும் என்ற நினைவில் திரும்பும்போது பஸ் பிடித்துதான் நான் வருவது வழக்கம். நிலையத்திலிருந்து குடை கூட இல்லாத மண்டை வெடிக்கும் வெய்யலில் நடந்து வீட்டுக் கதவைத் திறந்து உள்ளே வந்தவளுக்கு ஒரே தாகம். அவசரமாகக் குளித்து வேறு உடுத்திக் கொண்டு சமையலறையிலிருந்த ஸ்டவ்வை மூட்டினேன்.

வெளியில் பயணம் செய்துவிட்டு வீட்டுக்கு வந்தால்... உடனடியாக நான் குளித்து மாற்றுடை உடுத்துவது வழக்கம். சமையலறை அலமாரியில் எங்கள் வீட்டு குல தெய்வத்தின் படங்களை வைத்து வணங்கிக் கொண்டிருந்தேன்—கடவுள் பக்தி—சுததம்...இவைகளைப் பற்றி அழுத்தமாக போதிக்கப்பட்டு வளர்க்கப்பட்டவள்.... அவசரமாக



பாலைக் காய்ச்சி... திடீர் காப்பித்தூளைப் போட்டு சிறிதளவு காப்பியைக் கலக்கிக் குடித்த பின்னர் தான் அப்பாடா என்ற உணர்வு ஏற்பட்டது.

நான் அதிகம் படித்தவள் இல்லை. அதனால் அலுவலக வேலைக்கு வாய்ப்பிருக்கவில்லை. என் கணவர் ஒருவரது சம்பாத்தியத்தில் நாங்கள் குடியிருந்த அந்த தனிப் பகுதிக்கு வாடகை கட்டி, நான்கு குழந்தைகளில் மூத்த இருவரைப் பள்ளிக்கு அனுப்பி... வீட்டை நிர்வகிக்க என்னால் முடியவில்லை.

பட்டணத்தில் வந்து குடியேறிய ஆரம்ப நாட்களில் மிகவும் சிரமப்பட்டுப் போனோம். என் பிறந்த வீட்டில் எனக்குப் போட்ட கைவளையல்கள், என் மூத்த மாமியார் தாம் இறக்குமுன் எனக்குத் தம் கழுத்திலிருந்து கழற்றிப் போட்ட இரண்டு கொத்து தங்க சங்கிலி எல்லாம் அடமானத்திற்குப் போய்விட்டன. அடுத்த மாதத்தை எப்படி ஓட்டப் போகிறோம் என்று கலங்கிக் கொண்டிருந்த போதுதான் அடுத்த வீட்டு அம்மா எனக்கு அந்த யோசனையைச் சொன்னார். அத்துடன் செல்வன் சிறப்பு அங்காடியின் முதலாளியிடம் என்னை அழைத்துச் சென்று அறிமுகப்படுத்தினார்கள்.

அங்காடியின் விற்பனைக்கு வத்தல், வடகம், அப்பளம், மிளகாய்ப்பொடி, மஞ்சள் பொடி இத்தியாதிகள் பல எடைகளில் சுத்தமாக தயாரித்து பொட்டலங்களாக வாரா வாரம் யாரவாது கொண்டுவந்து தர வேண்டிய ஒரு நெருக்கடி ஏற்பட்டிருந்தது. அந்த பணியை செய்து கொண்டு வந்த குடும்பம்.... மாற்றலாகி வேறு ஊருக்குப் போனதும் என் அதிர்ஷ்டம் என்றே கூறவேண்டும். அந்த தயாரிப்பின் ஒப்பந்தத்தை முதலாளி என் அண்டை வீட்டுக்கார அம்மாளின் சிபாரிசுக்கிணங்கி எனக்குத் தந்தார். உடனடியாக நான் மிஞ்சி இருந்த என் நகையான ஒரே ஒரு தங்க மோதிரத்

தையும் விற்று.... அந்தப் பணத்தை முதலாகக் கொண்டு தொழிலைத் துவங்கினேன்.

வாழ்க்கையில் நானும் என் கணவரும் எங்கள் குடும்பத்தாரால் பெரிதும் வஞ்சிக்கப்பட்டவர்கள். பெரிதும் ஏமாற்றப்பட்டவர்கள். அதனால் பிறரை ஏமாற்ற எனக்குத் துளியும் விருப்பம் கிடையாது. என் தயாரிப்புகளில் குற்றம் குறை இல்லாத வண்ணம்—சுத்தமாக—எடை குறைவின்றி கொண்டு கடைக்குப் போட்டேன்...ஒப்பந்தம் தொடர்ந்தது. கேட்ட சரக்கின் அளவும் அதிகரித்தது... லாபமும் நிறையக் கிடைத்தது. உற்சாகத்துடன் உடலை வருத்தி உழைத்தேன்.

இந்த இரண்டு ஆண்டுகாலத்தில் நான் எவ்வளவோ கற்றுக் கொண்டு விட்டிருந்தேன். காய்களை குறைந்த விலையில் எங்கே வாங்க முடியும்? வத்தல், வடகம் தயாரிக்க எந்த மாதங்கள் உகந்தன? எப்பொழுது மிளகாய்ப் பொடி முதலியவை தயாரிக்கத் துவங்க வேண்டும்.... என்று தொழிலில் பல நுட்பங்களை உணர்ந்து கொண்டு செயல் பட்டேன். படிக்கா விட்டாலும் பரவாயில்லை—ஒரு பெண் மனம் வைத்தால் உடல் உழைப்பால் நாணயமான நடத்தையால் தன் கணவனுக்கு உற்ற துணையாக சம்பாதித்து குடும்பத்தைச் சீராக நடத்த முடியும் என்பதற்கு நானே ஒரு எடுத்துக்காட்டு.

கடையிலிருந்து கொண்டுவந்த முன்னூறு ரூபாய் ஐம்பது பைசாவில் செலவுகள் போக எனக்குக் கிடைத்த லாபத்தை வழி நெடுகிலும் கணக்கிட்டுக் கொண்டுதான் வந்தேன். இந்த வாரம் எனக்கு எழுபத்தைந்து ரூபாய் லாபம்... மகிழ்ச்சிப் பிடிபடவில்லை. வீட்டுக்கு அவர் திரும்பியதும் முதலில் இந்த சங்கதியைச் சொல்லியாக வேண்டும் என்ற பரபரப்பு... அவருக்கு அலுவலகம் உடுத்தி செல்ல அவசரமாக மாற்றுச் சட்டை ஒன்று தேவையாக இருந்தது. அதை வாங்கித் தந்துவிட வேண்டும். அடுத்த



வாரம் கிடைக்கும் லாபத்தில் வரப்போகும் பண்டிகைகளுக்கு துணி எடுத்து வைத்துவிட வேண்டும். அதற்கு அடுத்த வாரம்?... எங்கள் குடியிருப்பு பகுதியின் முகப்புக் கதவு இடி படும் ஓசை கேட்டு திடுக்கிட்டு விரைந்தேன்...

இந்த வேளையில் 'என் கணவர் முகச் சோர்வுடன் வேலையிலிருந்து ஏன் திரும்பி வந்திருக்கிறார்?

பகீர் என்ற உணர்வு வயிற்றைப் பிசைய, "உடம்புக்கு முடியலையா? உட்காருங்க...காப்பி கொண்டு வரேன்!" உள்ளே ஓடினேன்.

அவர் கொண்டு வந்த துணிப்பைக்குள் கையைவிட்டு டிபன் டப்பாவை எடுத்துத் திறந்தேன். பகல் உணவைச் சாப்பிட்டு முடித்திருந்தது தெரிந்தது.

"அப்போ? உடம்புக்கு ஏதும் இல்லை...பின்?"

காப்பியைக் குடித்துவிட்டு என் முகத்தைத் தயக்கமாகப் பார்த்தார்.

"சுகுணா! அம்மாவுக்கு உடம்பு அதிகமாகிட்டது... உடனே வந்து பார்க்கணும்னு ஆஸ்பத்திரியிலிருந்து சேதி வந்திருக்கு... உன்னைக் கூட்டிக்கிட்டுப் போக வந்தேன்." தடுமாறினார் அவர்.

அம்மா என்று அவர் குறிப்பிட்டது...என் கணவரின் சிறிய தாயாரைத்தான். உண்மையைச் சொல்லப் போனால்-என் மாமனாருக்கு என் கணவர் வளர்ப்புப் பிள்ளைதான். பல ஆண்டுகள் குழந்தையில்லாது போகவே என் மாமனார் இரண்டாம் தாரமாக ஒருத்தியை மணந்தார். அவளுக்கும் பல ஆண்டுகள் குழந்தை பிறக்கவே இல்லை...என் பெரிய மாமியார், தமது குடும்பப் பெயர் பிள்ளையில்லாது அழிந்து விடும் என்று பக்கத்து கிராமத்திலிருந்த ஒரு ஏழைக் குடும்பத்திலிருந்து ஒரு பிள்ளையைத் தாம் தத்து எடுத்துக் கொண்

டார். தத்துப்பிள்ளை வீட்டிற்குள் கால் வைத்த வேளை இளைய மனைவி கருத்தரித்தாள்....சில மாதங்களில் ஒரு அழகான குழந்தைக்குத் தாயானாள்.

அப்பொழுதே குடும்பத்தில் குழப்பம் ஆரம்பமாகி விட்டது. மூத்தாள் எடுத்து வளர்த்து வந்த பிள்ளை மீது இளையாளுக்கு ஒரே வெறுப்பு. தன் மகனின் சொத்தில் பாதி அவனுக்குப் போய் விடுமோ என்ற கவலையில் கணவரிடம் தத்துப் பிள்ளையைப் பற்றி பல கதைகள் சொல்லி வெறுப்பை ஏற்படுத்தி விட்டிருந்தாள்—அதன் காரணமாக என் மாமனார் அந்தப் பிள்ளையைப் படிக்கவைக்கவில்லை. பி. யு. சி. யுடன் நிறுத்திவிட்டு வேலைக்குப் போகச் சொல்லி விரட்டினார். தானே தன் முயற்சியால் தட்டெழுத்து—சுருக்கெழுத்து பயின்று அந்த பிள்ளை அடுத்த நகரத்தில் ஒரு கடையில் கணக்கர் வேலை தேடிக் கொண்டார்.

திருமணம் செய்து வைத்து உறவைக் கத்தரித்து கொள்ள வேண்டும் என்பது என் சிறிய மாமியாரின் அடுத்த திட்டம்.

எங்கள் வீட்டில் கடைசி பெண்ணான என்னைத் தேர்ந்தெடுத்து தமது தத்து மகனுக்கு என் மாமனார் கட்டி வைத்தார். இது சமயம் என் மூத்த மாமியார் நோயாக படுத்துவிட்டார். மருமகள் கூட இருந்தால் நோயாளியை கவனித்துக் கொண்டு தனக்கும் ஏவல் செய்வாள் என்ற எண்ணத்துடன் என் சிறிய மாமியார் என்னையும் என் கணவரையும் தங்களது பெரிய வீட்டில் தங்கி வாழ அனுமதி கொடுத்திருந்தார். ஆனால் அங்கே என் வாழ்க்கையோ... கொத்தடிமையிலும் கேவலமாகி விட்டிருந்தது. எப்பொழுதும் வீட்டில் ஒரே சண்டை. நோயாளியாக இருந்த மூத்தவளை நான் கவனித்தால் இளைய மாமியாருக்கு எரிச்சல் வந்து விடும்...



"என் கால் வலிக்குது. வந்து பிடிச்சுவிடு. மூணு வேளை நல்லா தின்னுட்டு, ராணி போல....வீட்டை சுத்தி கிட்டிருந்தா?" கூச்சலிட்டு அழைப்பார்.

"அங்கே பெண்டாட்டியோட என்ன பேச்சு. ஆம்பிள்ளைக்கழகா வாசல் திண்ணையிலே வந்து உட்கார். தேங்காய் இறக்கி வச்சுட்டு போய் விட்டாங்க. மட்டை உரிச்சு எண்ணி கொண்டு உக்கிராண அறையில் வை"... வேலையிலிருந்து வந்ததும் வராததுமாக என் கணவரை அதட்டுவார் மாமனார்.

ஏற்கனவே தான் சொந்த மகன் அல்ல வளர்ப்பு மகன் என்ற உண்மையை வாலிப வயதில் அறிந்து அதிர்ந்து மனம் குழம்பிப் போயிருந்தார் என் கணவர். தொடர்ந்து வளர்ப்புத் தந்தைத் தன்னை அடிமை போலவும், சொந்த மகனை அரச குமாரனைப் போலவும் ஓர வஞ்சனையுடன் நடத்திய கொடுமைகளைத் தாங்க முடியாது தத்தளித்துக் கொண்டிருந்தார். பெரிய மாமியார் இறந்து போகுமுன் எனக்குத் தமது கழுத்துச் சங்கிலியைக் கழற்றிக் கொடுத்ததைக் கண்டதும்...என் சின்ன மாமியாருக்குக் கவலையாகி விட்டது.

பெரியவரின் மூச்சு நின்றவுடன் யாரும் நெருங்கு முன் வேகமாக மற்ற நகைகளை தனக்கு வரப்போகும் மருமகளுக்கென்று கழற்றி தன் பெட்டிக்குள் அடக்கிக்கொண்டார்.

அதற்கு மேல் அங்கே எங்களைத் தங்கவிட்டால் மூத்த மாமியாரின் பாத்திரம் பண்டங்களில் பங்கு கேட்போம் எனப் பயந்து கருமாதி முடிந்தவுடன் எங்களைத் தனிக்குடித்தனம் அமர்த்திக் கொள்ளச் சொல்லி வெளியே அனுப்பிவிட்டார் சிறிய மாமியார்.

அடுத்த தெருவிலிருந்த ஒரு சிறிய வீட்டில் கணவனும் மனைவியும் நான்கு குழந்தைகளுடன் மிகவும் சிரமப்பட்டு வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்தோம். அந்த சமயம் தமது மகனுக்கு அவசரமாக ஒரு பெரிய இடத்திலிருந்து பெண்

எடுத்து திருமணம் செய்து முடித்தார் என் மாமனார். எல்லோரையும் போல நாங்கள் கல்யாணத்தில் கலந்து கொண்டோம். அவ்வளவுதான். இரு வீடுகளுக்குமிடையே போக்குவரத்தே இல்லாதிருந்தது. அது சமயம் மாமனார் மிகவும் நோய்வாய்ப்பட்டு.. வீட்டின் பின் வராந்தாவில் கவனிப்பாரின்றி அனாதை போல் ஒரு கயிற்றுக் கட்டிலில் கிடப்பதாகக் கேள்விப்பட்டு அதிர்ந்து போனேன். போய்ப் பார்த்தபோது என் மனம் பட்ட வேதனை?

சிங்கம்போல கர்ஜித்துக் கொண்டிருந்தவர் சுண்டெலி போல...சுதந்திரத்தை இழந்து...கேட்பாரற்றவராக பின் கட்டு வராந்தாவிலே நோயாளியாகக் கிடந்தார். சொத்து முழுவதையும் மகன் பெயருக்கே எழுதி வைத்துவிட்டதால் மாமனார் பல்லிழந்த பாம்பாக மகன் ஆணைக்கு அஞ்சி அடிமையாகி விட்டிருந்தார்.

மலம், ஜலம் கழிக்க எழுந்திருக்கத் தெம்பின்றி படுக்கையை அசுத்தப்படுத்திக் கொண்டிருந்த கிழவர் அருகே பெரிய இடத்து பெண்ணான அவர் மருமகள் நெருங்கு வாளா?—

ஒரு சில நாட்கள் அவருக்குப் பணிவிடை செய்ய நான் அங்கிருக்க ஒத்துக்கொண்டேன்.

என்ன இருந்தாலும் என் கணவரை வளர்த்து ஆளாக்கிய மனிதராச்சே அவர்....இது சமயமாவது அவருக்கு நான் உதவாவிட்டால் அந்த நன்றிக் கடனை எப்படிக் கழிப்பது?

என்னால் முடிந்தவரை இரவு—பகல் எனப் பாராது அவருக்குப் பணிவிடை செய்தேன்...ஒரு சில தினங்களில் மாமனார் இறந்து போனார். அவர் காரியம் முடிந்தவுடன் என் மாமியார் வீண் சண்டையைக் கிளப்பி என்னை அவ மானப்படுத்தி வீட்டைவிட்டு வெளியேற்றினார்.



சொத்துக்குப் பங்கு கேட்கத்தான் நான் பணிவிடை செய்வதாக பாவனை செய்தேனாம்? எப்படி கதை?

பழிச்சொல் தாங்க முடியாது நானும் என் கணவரும் வேதனையில் கண்ணீர் வடித்தோம். நீடித்து அடுத்த தெரு விலே இருந்து கொண்டு அவ்வப்போது அவர்கள் கண்களில் பட்டுக் கொண்டு வாழ விருப்பமின்றி, பட்டணத்திற்குப் புறப்பட்டு விட்டோம். நண்பர் ஒருவர் உதவியால் என் கணவர் சில தினங்களிலேயே ஒரு பெரிய நிறுவனத்தில் தட்டெழுத்தராக வேலை தேடிக் கொண்டுவிட்டார். குடியிருக்க ஒரு வீட்டின் பின்னிருந்த பகுதியும் கிடைத்து விட்டது. குழந்தைகளைப் பள்ளியில் சேர்த்து விட்டோம். நானும் வத்தல், வடகம் போட்டு உழைத்துச் சம்பாதிக்கத் தொடங்கியதும் எங்களை வாட்டிய பற்றாக்குறை மறைந் தோடிப் போனது.

எனது ஓரகத்திப்போல பெரிய வீடு—சொந்த வியா பாரம், உடுத்த பட்டு சேலை—மேனி முழுவதும் ஒளிவிடும் நகைகள்... போக்குவரத்துக்கு சொந்த கார் என்று ஓகோ என்று நாங்கள் வாழாவிட்டாலும்... சோற்றுக்கும் துணிக்கும் பஞ்சமில்லாது வாழ்கிறோம்.

அன்பான கணவர்—நல்ல குழந்தைகள்—கண்யமான வாழ்க்கை—இதைவிட—எனக்கு இன்னும் என்ன வேணும்?

அந்த பழைய நினைவுகளினின்று திடுக்கிட்டு விழித்துக் கொண்டேன்.

"வத்தல், வடகம் விற்று இன்னிக்கு எனக்கு எழுபத்தஞ்சு ரூபா லாபம் வந்திருக்கு!" அவரை உற்சாகப்படுத்த ஆரம் பித்தேன்.

"நீ பாடுபட்டு சேர்த்து வச்சிருக்கிற அந்த பணத்துக்கு இப்போ செலவு வந்துட்டது சுகுணா... என் சின்னம் மாவுக்கு உடம்பு அதிகமாயிட்டது. அவங்களை ஆஸ்பத்

திரியிலே இங்கே போட்டுட்டு... மகனும் மருமகளும் அமெரிக்காவுக்கு வியாபார விஷயமாக போயிருக்காங்க—அவங்க வரத்துக்குள்ளே ஏதாச்சும் ஆயிட்டா?—''

''பணம் இன்னிக்கு வரும்—நாளைக்குப் போகும்... கடமை செய்கிற வாய்ப்பு நினைச்ச போது வராது. புறப் படுங்க ஆஸ்பத்திரிக்கு. நாமபோய் அத்தையைக் கவனிச் சுப்போம்'' உற்சாகப்படுத்தினேன்.

''உன் அத்தை என்னை ஒரு நாளும் தன் மகனாக நினைச்சதேயில்லை. அதனாலே...'' தயங்கினார் என் கணவர்.

''அவங்க உங்களை மகனாக நினைக்காட்டாலும் அவங்க வீட்டு உப்பைத்தின்னு ஆளாகினவங்க நீங்க. உங்களைத் தத்து எடுத்து வளர்த்த என் மாமியார் உங்களைத் தன் மகனாகத்தான் கடைசிவரையும் நினைச் சாங்க. அவங்களுக்கு மகனான நீங்க சின்ன அத்தைக்கும் மகன்தான். அவங்களும் உறவில் ஒரு தாய்தான். அதனாலே மகன் செய்ய வேண்டிய கடமைகளை நீங்க செய்ய முன் வருவதில் தவறு இல்லை'' ஆறுதலாகச் சொன்னேன்.

மறுநாளே என் சின்ன அத்தை மரணமடைந்து விட்டார்கள். அவர்களது இறுதிக் கடனை நானும் என் கணவரும் மகன்—மருமகள் என்ற நிலையில் எங்கள் நிலைக்குத் தக்கபடி கவுரவமாக செய்து முடித்தோம்.

போன வாரம் அத்தையின் சொந்த மகனும் மருமகளும் அமெரிக்காவிலிருந்து திரும்பி விட்டதாகக் கேள்விப் பட்டோம்.

''சின்ன அத்தையை விஷம் வைத்து நாங்கள் கொன்று விட்டதாகவும்—சொத்தில் பங்கு கேட்க நாங்கள் துடிக் கிறோம்'' என்று எங்களைப் பற்றிய ஒரு பழியை எங்கள் ஊரில் என் ஓரகத்தி கிளப்பி விட்டிருக்கிறாள். பரவலாக அதைப் பற்றியும் கேள்விப்படுகிறோம். நான் அதைப்பற்றி



சிறிதும் கவலைப்படவில்லை. உண்மை ஆண்டவனுக்கும் ஆஸ்பத்திரி டாக்டர்களுக்கும் தெரியும். அத்தை நோயால் தான் இறந்து போனார்கள் என்பது ஊர் அறிந்த ரகசியம்.

என் உடல் உழைப்பில் தீவிர நம்பிக்கையுள்ள எனக்கு பிறர் சொத்து எதற்கு?...பாவம் என் ஓரகத்தி, படித்தவள் ஆனால் விவேகம் இல்லாத மட்டிப் பெண். அவளுக்காக அனுதாபப்படுகிறேன்.

''அடடா! மொட்டைமாடியில் காய வைத்திருக்கும் வடகங்களை போய் சீக்கிரம் எடுக்க வேண்டும். மழைவரும் போல தோணுதே..''

படிகளில் வேகமாக கூடையுடன் ஓடுகிறேன்.

□

# சந்தேகம் என்பது

மதிய உணவு நேரம்—மணியடித்ததும் பள்ளியின் முன் பரவியிருந்த அந்தச் சிறு தோட்டத்திற்குள், சிட்டுக்குருவி களாக, சிறுவர் சிறுமியர் பறந்தோடி மறைந்தனர்.

காலையிலிருந்து தொடர்ந்து மூன்று வகுப்புக்கள், மூன்று மணி நேரமாகப் பாடம் சொல்லிக் கொடுத்துத் தொண்டையே காய்ந்து போய் விட்டிருந்தது. தாகமும், பசியும் தாள முடியாதவளாய் ஆசிரியர்களின் சாப்பாட்ட றைக்குள் விரைந்தேன்.

கையோடு கொணர்ந்திருந்த டிபன் பொட்டலத்தை திறந்தேன். காலையில் சுட்ட தோசை, தையல் இலைச் சருகின் மீது சுருட்டி நாளேட்டுத் தாளில் கட்டிக் கொண்டு வந்திருந்தது. அந்த புரச இலை போலவே சருகாகக் கிடந்தது.

ஒரே ஒரு விள்ளலைப் பிட்டு வாயில் திணித்துக் கொண் டேன். என்னையறியாமல் அழுகை பொத்துக் கொண்டு வந்தது.

சில நாட்களாக நான் கட்டிக் கொடுத்த டிபனை அவர் தொடுவதே இல்லை. அதிலும், அந்தத் தவறான காரியத் திற்குப் பின்னர் என்னிடமிருந்து அவர் விலகிக்கொண்டே போவதை என்னால் உணர முடிந்தது.

காலை வேளையில் அவர் தாமே, அவசரமாக அடுப்பை மூட்டி,. காப்பி தயாரித்து சாப்பிட்டுவிட்டுக் குளித்து உடுத்திக் கொண்டு அலுவலகம் கிளம்பிவிடுகிறார். வரும் போதே, ஓட்டலில் இரவு சாப்பாட்டை முடித்துக்கொண்டு விடுவதால் அலுவலக உடைகளை மாற்றிக் கொண்டு, மாலை நாளேட்டுடன் உட்கார்ந்து விடுவார்.

"சாப்பிடலையா?" எத்தனையோ முறை வற்புறுத்தினேன். "நீங்க சாப்பிடாட்டி, நானும், நம்ம ரெண்டு குழந்தைகளும் பட்டினி கிடப்போம்" பயமுறுத்தினேன். அழுதேன். கெஞ்சினேன். அவர் அசைந்தே கொடுக்கவில்லை.

"அமுதா! என்னை இம்சை செய்யாம கொஞ்சம் தனியா இருக்க விடறியா? உன் பேருக்கு களங்கம் ஏற்படாம இருக்கணும்னுதானே, நம்ம குழந்தைகளுக்கு அப்பா, உன் கணவன்னு, ஊரார் கண்ணுக்கு, வாழ்ந்துவறேன். அது போதாதா...வேறே எதாச்சும் செய்தா பின்னால் நீயே வருத்தப்படுவே" முடிவாகச் சொல்லி விட்டார்.

அமுதா! அந்த அழகான பெயரைக் கொண்ட நான் தான், எங்கள் இன்ப வாழ்வில் விஷத்தையே கலந்த அவசரக்காரி, ஆத்திரக்காரி... பாவி...நான் தவறு செய்ததற்கு தண்டனையை அனுபவிக்கும் ஒரு கொடுமைக்காரி.

என் கைபட்ட சாப்பாட்டை அந்தக் கண்ணியவான் தொட மறுத்ததில் தவறு இல்லையே. என்னை உயிருக்குயிராக நேசித்தவர். தனது பெற்றோரின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் என்னைத் திருமணம் செய்தவர். வாழ்வில் ஒரு குறையும் வைக்காமல், அன்புடன் என்னுடன் இணைந்து வாழ்ந்த ஒரு உத்தமர். அவர் மனம் நோக, படாதபழிக்கு ஆளாக்கி, அத்துடன் ஒரு பெண்ணின் வாழ்விற்கே உலை வைத்த சண்டாளி நான்.

தோசை தொண்டையில் அடைத்துக் கொண்டு விக்கல் எடுத்துக் கொண்டது. அவசரமாக எழுந்து சென்று,

அருகிலிருந்த மண் கூஜாவில் நீரை தம்ளரில் பிடித்து ஒரே விழுங்கில் குடித்தேன்.

என் பிரச்சினையை இப்படி முடிக்க முடிந்ததா! இல்லையே. மீண்டும் மேஜையருகில் அமர்ந்தவள் தோசையை வெறித்தேன்.

கருணா மிகவும் நல்ல பெண். பதினெட்டு வயது பருவ மங்கை. என் கணவரின் தூரத்து உறவு மட்டும் என்றில்லாமல், அவளது அண்ணனும், இவரும் உற்ற தோழர்களாக இருந்து வந்தனர் என்று என் கணவரே அடிக்கடி கூறியிருக்கிறார்.

கருணாவின் அண்ணனுக்கு, வெளியூரில் வேலை கிடைத்திருந்தது. தங்கையும், அவளுக்குப் பாதுகாவலாகத் தாயையும் விட்டுச் சென்றிருந்தார். என் கணவரின் பெற்றோர்களின் எதிர்ப்பு, எங்கள் திருமணத்திற்கு ஏற்பட்டதால் அந்த உறவு பாதிக்கப்பட்டிருந்த நேரம். இந்த வீட்டின் உறவை அவர் பலமாகப் பிடித்துக் கொண்டிருந்தார்.

தந்தை இல்லாத குடும்பம், பாவம்! அண்ணனும் இல்லை. தங்கை போல சிரித்து சிரித்துப் பழகுகிறாள் என்று நானும், ஆரம்பத்தில் அவர்கள் வீடு செல்வேன்.

கருணா அழகிதான். பல்வரிசை மின்ன "என்ன இன்னிக்கு உங்களைக் காணோம். ரொம்ப லேட்டா வந்திருக்கீங்க" என்று உரிமையுடன் கோபித்துக் கொள்வாள்.

"கருணா, வாசல்லியே பழியா நின்னுக்கிட்டிருக்கா தம்பீ! ஒரு நாள், உங்களைக் காணலேன்னா அது தவிச்சுப் போயிடுது" என்று கருணாவின் அம்மாள் கூறும் போது, "பாவம்! கண்ணெல்லாம் வலிச்சிருக்குமே" என்று நானும் தமாஷில் கலந்து கொண்டிருக்கிறேன்.

"தம்பிக்கு 'குழாய் புட்டு' புடிக்கும்னு இன்னைக்கு அதுதான் பலகாரம் பண்ணணும்னு ஒரே தொந்தரவுபோ, என்பாள் கருணாவின் அம்மா,



பலமுறை பாடங்களில் சந்தேகங்கள் தெளிவிக்க அவர் போவதுண்டு. அப்போதெல்லாம் துளிர் விடாத சந்தேகம், திடீரென ஒரு நாள் என் மனத்தில் தோன்றியது.

பள்ளியில் உடன் வேலை செய்யும் ஒரு தோழி, "ஆமா... அதென்ன, உங்க வீட்டுக்காரர் அப்படி அந்த கருணா பொண்ணுகூடப் பேசிட்டு, சிரிச்சுக்கிட்டிருந்தார். முந்தாநாள் எங்க வீட்டுக் காதுகுத்து விசேஷம்னு கூப்பிடப் போனபோது பார்த்தேன்" மெல்ல காது குத்தினாள்.

"சே!"சே! அவர் சுத்த தங்கம். ரொப்ப நாளா குடும்பத்துப் பழக்கம். உறவுவேற... அதைப் போயி" மழுப்பி விட்டேன்.

"என்னதான் உறவுன்னாலும்..." மற்றொருத்தி இழுத்தாள்.

"ஆண்பிள்ளைங்களை நம்பவே கூடாதும்மா, எப்பவுமே அவங்களுக்கு ஒரு தப்பான எண்ணம் மனசிலே. எத்தனை வயசானாலும், எத்தனை பிள்ளைங்களுக்கு அப்பாவானாலும் இன்னொரு அழகான சின்னப் பொண் சிரிச்சுப் பேசினா அவ்வளவுதான்."

என் மனதில் விஷவிதை விழுந்துவிட்டது. "சே! சே! அவர் அப்படி அல்ல. ரொம்ப நல்லவர். அவர் குணம் ஊர் முழுசும் தெரிஞ்சதுதானே. என்னை மனப்பூர்வமா காதலிச்சுக் கல்யாணம் செய்தவராச்சே. இரண்டு குழந்தைகளுக்குத் தகப்பனாராச்சே!"

மனதில் சைத்தான் வேலை செய்ய ஆரம்பித்தால் உறக்கம் எங்கே? நிம்மதி எங்கே? மகிழ்ச்சி...? என்னை அறியாமல், கருணாவைக் கண்காணிக்கத் துவங்கினேன். அவள் சிரிப்பு, பேச்சு, செயல் யாவுமே இப்போது புதிய கோணத்தில், புது அர்த்தங்களுடன்...என் மனம் கொஞ்சம் கொஞ்சமாகக் கொதிக்கத் துவங்கியது. அவர்கள் வீட்டிற்குப் போவதையும் நிறுத்த ஆரம்பித்தேன். அதே சமயம் நானில்லாமல் அவர் அங்கு போய் வருவதை விஷமாக வெறுக்கத் துவங்கினேன்.

ஒரு நாள் மாலை பள்ளியிலிருந்து வீடு திரும்ப சிறிது நேரமாகிவிட்டிருந்தது. குழந்தைகள் என்ன செய்திருப்பார்களோ? அவர் வேறு அலுவலகத்தில் இருந்து வீடு திரும்பி இருப்பாரே…கவலையுடன் வீடு திரும்பிய எனக்கு—?

குழந்தைகள் பலகாரம் சாப்பிட்டு வெளியே விளையாடப் போய்விட்டனர். என் கணவர் வீட்டைப் பூட்டி சாவியைப் பக்கத்து வீட்டில் கொடுத்துவிட்டு கருணாவிடம் அரட்டை அடிக்கச் சென்றிருந்தார்.

சாவியை வாங்கிக் கொண்டு பூட்டைத் திறந்தவள் மனம் எரிமலையாகக் குமுறியது. நான் ஒருத்தி ஓடாய் உழைத்துவிட்டு வீடு திரும்புமுன்—அப்படி ஒரு அவசரமா? அந்த மாயக்காரியின் பேச்சிலே அப்படி ஒரு மயக்கமா? சீ! என்னைக் காதலித்துக் கல்யாணம் செய்ததெல்லாம் போலி நாடகம்தானா? பள்ளியில் உடன் வேலை செய்யும் தோழிகள் சொன்னதெல்லாம் உண்மையாக இருக்குமோ?'

பற்களைக் கடித்துக் கொண்டேன். சினம் பொங்க வீட்டைப் பூட்டினேன். நேராகக் கருணா வீட்டினுள் நுழைந்தேன்.

அங்கே அவரும், கருணாவும் 'ஓஹோ' என்று உற்சாகமாப் பேசியபடி 'கேரம்' விளையாடிக் கொண்டிருந்தனர்.

என்னைக் கண்டதும், "வாங்க! உங்களுக்கும் காப்பி கொண்டு வரேன்" வரவேற்றாள் கருணாவின் அம்மா.

என் முகம் கடுகடுத்தது. "உங்க காப்பிக்காக நான் இங்கே வரலே. என் கணவரை இந்த மாயக்காரியின் பிடியிலிருந்து அழைச்சிட்டுப் போக வந்திருக்கேன். வெக்கம் கெட்ட உங்க பெண்ணை அடக்கி வையுங்க. ஊரெல்லாம் இவ சமாச்சாரம் தெரிந்து அவமானமா போயிட்டுது" கூக்குரலிட்டேன் வெறி பிடித்தவளைப் போல்.

கருணா அவமானத்தால் குன்றிப் போனாள். 'என்ன இது' என்ற அதிர்ச்சியுடன் என்னைப் பார்த்தார் என் கணவர்.



"கல்யாணமான மனுஷனுக்கு வலை போடறதை இனியாவது நிறுத்திக்கோ!…ம் புறப்படுங்க" என்று அவரை அதட்டினேன்.

"கண்டபடி ஏசாதீங்கம்மா. என் பெண்மேல அபாண்டம் கற்பிச்சு, அவ வாழ்வைப் பலியாக்கிடாதீங்க அம்மா. வார்த்தையை அளந்து பேசுங்க" என்ற கருணாவின் தாயின் கண்கள் கண்ணீரால் நிறைந்தன.

"பெண்ணுக்குப் பக்க பலமா? நல்ல புத்தி சொல்லித் தரத் தெரியலே…இப்படிப்பட்டவளை நாளைக்கு எவன் கட்டுவான்?"

கருணா, விசித்து விசித்து அழத் தொடங்கினாள். ஆனாலும், என் கோபம் அடங்கவில்லை. வீடு திரும்பி விட்டேன்.

அன்று வீடு திரும்பிய கணவர் என்னிடம் கேட்டது… அப்பப்பா…என் வாழ்வின் திருப்பமே அவரது வார்த்தைகளில் அடங்கிவிட்டதே!

"இத்தனை நாளா, புருஷன் பெண்சாதியா, மனம் ஒத்து வாழறோமே, என்மேல இப்படிப்பட்ட அவநம்பிக்கை உனக்கு ஏற்படலாமா அமுதா? சரி! அப்படி ஒரு சந்தேகம் ஏற்பட்டிருந்தா, அதை என்கிட்டயே கேட்டுத் தெரிஞ்சு கொண்டிருக்கலாமே. என்ன காரியம் செய்திட்டே? கொண்டவனைத் தூற்றினால், கூரையும் தூற்றும்னு கேள்விப்பட்டிருக்கியா…இப்ப உன்னோட செயலாலே, என் மேல மட்டும் அவப் பெயர் இல்லே, அநியாயமா, ஒரு பாவமும் அறியாத ஒரு இளம் அப்பாவிப் பெண்ணோட வாழ்க்கையையும் பாழாக்கிட்டியே? இந்த ஊர்ல, இனி, எந்தப் பொண்ணும் என்கிட்ட மரியாதையா பேசவே பயப்படும்படி செய்திட்டே இல்லியா? நல்லா சிந்திச்சுப்பாரு" என்று கூறி கண்ணீர் சிந்தினார்.

என் மனம் என்னையே சுட்டது. அன்று முதல் அவரிடம் பெரும் மாற்றம்…ஒரு இயந்திரம் போல இயங்கி வருவது புரிந்தது.

கருணா வீட்டிற்குப் போவதை நிறுத்திக் கொண்டார். ஊராரின் வீணான அவச் சொல், கருணாவை மிகவும் துன்புறுத்தி இருக்க வேண்டும். ஏனெனில், திடீரென ஒருநாள், அந்தப் பேரிடி...என்னை ஒரேயடியாகத் தாக்கி, என் நெஞ்சை அமுக்கி, என்னையும் வீழ்த்திவிட்டது.

கருணா, ஊராரின் பழிச் சொல் தாளாமல், தற்கொலை செய்து கொண்டுவிட்டாள்! நானே என் கண்களைக் குத்திக் கொண்டுவிட்ட பாவியாகி விட்டேன். என் குடும்பத்தின் ஒளி விளக்கு அணைந்து இருள் பரவத் துவங்கியது.

என் கணவர் அந்தப் பெண்ணின் முடிவிற்கு தான்தான் காரணம் என்ற மகத்தான வேதனையில் தானே தண்டனையை அனுபவித்தார்.

துறவி போன்ற வாழ்க்கை, பகவத்கீதை, இராமாயணம் நூல்களைப் படிப்பார். முப்பத்தைந்து வயதிற்குள் ஒரு விரக்தி. தமது சம்பளத்தில் ஒரு பகுதி ஏழைக் குழந்தைகள் உதவிக்கு. மற்றது குடும்பத்திற்கென்று கணக்கிட்டுக் கொடுப்பார். பிறருக்கு உதவி செய்வதில் முன் நிற்பார். அதிகமாகப் பேசுவதில்லை. ஊரில் இப்போது இவர் நல்லவராக நிலை நின்றுவிட்டார்.

ஆனால் எனக்கு...? எத்தனை புலம்பியும், அழுதும் வற்புறுத்தியும்...என் வாழ்வு போனதுதான்.

மணி அடித்தது. அவசரமாகக் கண்களைத் துடைத்தபடி எழுந்தேன்.

"உன்னை மன்னிப்பதால் இறந்தவள் திரும்பப் போகிறாளா? அதற்காக, உன்னை நான் கொடுமைப்படுத்தவில்லை. வசதியாக வைத்திருக்கிறேன்" என்று அவர் கூறியதை நினைவுப்படுத்திக் கொண்டேன்.

"இறைவா! அவரது உண்மையான அன்பை எனக்கு மீட்டுக் கொடு. பழையபடி கலகலப்பாக இருக்க அருள் புரி" மனம் உருகியது.



சில தினங்களுக்குப் பிறகு ஒரு நாள் வெள்ளிக்கிழமை மாலை இறைவனுக்கு விளக்கு ஏற்றி வைத்து வணங்கினேன். குழந்தைகள் விளையாடப் போயிருந்தனர்.

வாயிற்புறம், சேரில் ராமாயணப் புத்தகத்தில் உறைந்திருந்த என் கணவரிடம் ஓசைப்படாது வந்து நின்றேன்.

புத்தகத்திலிருந்து, முகத்தை நிமிர்த்தினார் அவர். அதற்குமேல் என் மனம் தாளாமல் உடைந்து போனது.

அவர் காலடியில் அமர்ந்தவள் விசித்து அழுதபடி, "என்னை மன்னிச்சிடுங்க. இந்தப் பாவியால், கோரமான சம்பவம் நடந்து போச்சு. உங்க மனசைப் புண்படுத்திட்டேன். தயவு செஞ்சு, நடந்ததைக் கெட்ட கனவா மறந்து, வாழ முயற்சி செய்வோம்" கதறினேன்.

அவர் எழுந்து நின்றார். "அமுதா! நம்ம குழந்தைகளை நல்லபடியா வளர்த்து ஆளாக்குவோம். உனக்கு எல்லா வசதியும் செய்து குடுத்துக் காப்பாத்துவேன். ஆனா... இப்ப என்னைக் கணவனா இருக்கச் சொல்லி வற்புறுத்தாதே. ஏன்னா, அந்தப் பயங்கரமான சம்பவத்தின் அதிர்ச்சி என் மனசைவிட்டு நீங்கவேயில்லை. ஒரு சமயம், காலப் போக்கில், அது மறையும்னு நம்பிக்கை இருக்குமானால்... பிறகு யோசிப்போம்" என்றார்.

"என் வாழ்வில் மீண்டும் புத்தொளி பிறக்குமா? இறைவா! பாவிகள் மன்னிக்கப்படுகிறார்கள் என்று சொல்கிறார்களே? இந்தப் பாவியை மன்னித்து, எனக்கு வாழ்வு கொடு.. வாழ்வு கொடு...." மனம் கதறியது.

"காலம் ஒரு நாள் மாறும்" என்ற நம்பிக்கையுடன் கண்களைத் துடைத்துக் கொண்டேன்.

□

# இது தேவையா ?

காரிலிருந்து இறங்கி என் கணவரின் கரத்தைப் பற்றிக் கொண்டு புதுமணப் பெண்ணாக என் புக்ககத்து பங்களாவின் வாயிலில் நின்றபோது என் இரு ஓரகத்திகள் ஓடிவந்து ஆரத்தி சுற்றி உள்ளே அழைத்துக் கொண்டனர்.

அத்தனைப் பெரிய பங்களாவுக்கும்—மறைந்து போன என் மாமனாரின் அந்தஸ்திற்கும் ஏற்ற மருமகள் தான் அவர்கள் இருவரும். தங்கப்பதுமைகள் போல... தகதக வென்று இளமையில் ஒளிர்ந்த அவர்களிருவரும் எத்தனை அழகாக இருந்தனர். பணக்காரர் என்று பறைசாற்றி அவர்கள் நகைகளும்... கட்டியிருந்த சேலைகளும் ... அந்த ஒப்பனை தினுசுகளும் அப்பப்பா அழகுக்கு அழகு செய்தாற் போல்... பார்த்து வியப்பிலே சிலையாகி விட்டேன்.

பட்டிக்காட்டான் பட்டணத்தைப் பார்த்தது போல என்பார்களே... அதைப்போலவே நான் சட்டென்று நிமிர்ந்து தலைக்குமேல் தொங்கிய கண்ணாடிச் சரவிளக்கை வியப்போடு பார்த்தேன். காலுக்கடியில் மெத்தென்று கிடந்த ரத்னக்கம்பளத்தை திகைப்புடன் உற்றுப் பார்த்தேன்...

என் ஓரகத்திகள் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்து நமுட்டுச் சிரிப்பு சிரித்ததையும் பார்த்தேன். என்ன செய்ய, அவர்கள் பட்டணத்துவாசிகள். நாகரீகம் அதிகம் தெரிந்த பெண்கள். நான் கிராமவாசி...



“வாம்மா துளசி...”— அன்பொழுக உள்ளே அழைத்துச் சென்றனர்.

அலங்காரமான அந்த பங்களா, ஆடம்பரமான அவர்கள் வாழ்க்கை.... கலகலவென்று எதற்கும் சிரித்த ஓரகத்திகள்... ஆண், பெண் என்று அடக்கமின்றி... வெளிப்படையாக, பச்சையாக அவர்கள் பேசிய கொச்சையான சங்கதிகள்... இவைகளுடன் என்னால் ஒன்றிப் போக முடியாது, உணர்வு களும்—கட்டுப்பாட்டில் வளர்க்கப்பட்ட என் பண்பாடும் முரண் பிடிப்புதைச் சில நாட்களிலேயே புரிந்து கொண்டு விட்டேன்.

அவர்கள் எப்படியோ வாழட்டும்... அம்மா கற்றுக் கொடுத்த பழக்க வழக்கங்களை அடியோடு உதறிவிட்டு... நானும் ஏன் அவர்களது நாகரீகக் கோதாவில் குதிக்க வேண்டும்? என்ற உறுதியுடன் எங்கள் குடும்ப வழக்கப்படி வாழத் தொடங்கினேன். காலையில் அந்த வீட்டில் படுக்கை யினின்று அவர்கள் எழ மணி எட்டாகிவிடும். பல் விளக்காது பெட்காபி அருந்தும் பழக்கமுடையவர்கள்.

நான், அதற்குள் குளித்து வேறு உடுத்திக்கொண்டு பூஜையறையில் விளக்கேற்றி—அபிராமி அந்தாதி பாடி முடித்துவிட்டுச் சமையலறையில் வேலை செய்யும் ஆட் களுக்கு உதவ சென்றுவிடுவேன்.

குளிக்காது சமையலறையில் காலை வைக்கக் கூசும் பழக்கம் என்னுடையது... அவர்கள் காலையில் குளிப்ப தில்லை. இரவு படுக்கப்போகும் முன்தான் குளியலறைக்கு ஓடும் பழக்கமுடையவர்கள். என் ஓரகத்திகளைப்போல நானும் ஒரு பட்டதாரிதான். பட்டங்கள் வாங்கிவிட்டால் என்ன? படித்துவிட்டால் என்ன? நமக்கு என்று சில பண் பாடுகள் உள்ளனவே. அவைகளை அனுசரித்துக் குடும்பத்தை கவுரவமாக நடத்திப் போவதுதான்... திருமணமான ஒரு பெண்ணின் தலையாய கடமை... அம்மா.. சொல்லிச் சொல்லி என்னைத் தன் பாணியில் வளர்த்துவிட்டிருந் தாங்க.

அன்று வெள்ளிக்கிழமை. தலைமுழுகிவிட்டு—ஈர முடியைக் காயவைத்து வாரிக் கட்டிக் கொண்டு... பூஜையை முடித்துக் கொண்டதும் மரத்தட்டில் காப்பி கெட்டிலும் கோப்பையுமாகப்... படுக்கையில் புரண்டு கொண்டிருந்த என் கணவருக்குக் கொடுக்க மாடியேறினேன். இரவு உடைகளிலே இன்னமும் இருந்த என் ஓரகத்திகள் தங்கள் அறைகளினின்று வெளிப்பட்டு வராந்தாவில் நின்றபடி வம்பு பேசுவது கேட்டது.

"சாமிக்கு வேண்டுதலை, கல்யாணத்தை ஊர் கிராமத்துச் கோவிலில்தான் செய்யணும்னு சம்பந்தி சொன்னப்பவே நினைச்சேன். வெறும் அழகைப் பார்த்துட்டு நம்ம கொழுந்தன் மயங்கிட்டார்—இந்த, இடம் சுத்த நாட்டுப் புறம்னு அப்பவே நினைச்சேன்!" மூத்தவள் களுக்கென்று சிரித்தாள்.

"நம்ம வீட்டுக்காரங்களைப் பார்க்க அவங்க நண்பர்கள் வந்தால் இவ முன்னறையிலிருந்து ஓடி அடுக்களையில் பூந்துக் கிறாள். அவங்க இவளைக் கடிச்சு முழுங்கியா விடுவாங்க? படிச்சவளாம்! நல்லா ஆங்கிலத்திலே அவங்களோடு சிரிச்சுப் பேசி காப்பி டிபன் கொடுத்து உபசரிக்கத் தெரியலையே—மக்குப் பெண்... சரியான பட்டிக்காடு...!" இளையவள் கோபத்தோடு சொன்னாள்.

"இவளை நான் நம்ம வழிக்குக் கொண்டுவரேன் பார்! நாளை சனிக்கிழமை நம்ம பொழுது போக்குச் சங்கத்தின் ஆண்டு விழா—இந்த வாட்டி ஒரு புது விளையாட்டை ஆரம் பிக்கப் போறாங்களாம்.... இவளை நம்ம பார்ட்டிக்கு இழுத்திட்டுப் போவோம்... கொஞ்சம் நாகரீகப்படுத்து வோம். வீட்டிலேயே நாம பார்ட்டி வச்சா தலைவலியின்னு போய் படுத்துக்கிறா... வெளியிலே நடக்கிற பார்ட்டிக்கு வான்னு கூப்பிட்டா சாக்கு போக்குச் சொல்லியே மறுக் கிறா... இவளை இப்படியே விடக்கூடாது"—கண்டிப்பான குரலில் பேசினாள் மூத்தவள்.



படிகளில் என் காலடியை அழுத்தமாக ஓசைபட வைத்தேன். ஓரகத்திகள் சட்டென்று பிரிந்து தமது அறை களுக்குள் மாயமாகினர். என் கணவர் இன்னமும் அரைத் தூக்கத்திலே படுக்கையில் கிடந்தார். மெல்ல ஓசைப்படாது பெட்காப்பி தட்டை மேஜை மீது வைத்துவிட்டுத் திரும்பினேன்.

விழித்துக் கொண்டார் அவர்....தமது சிவந்த விழிகளால் என்னை உருட்டிப் பார்த்தார். "காப்பியை கப்பிலே ஊத்திக் கொடுக்காம அப்படி கீழ ஓட என்ன அவசரம்?" முதல் நாள் குடித்த மதுவின் பாதிப்பில் இன்னமும் அவர் நாக்குக் குழறியது.

பல் தேய்க்காது வேகமாகக் காப்பியைக் குடித்துவிட்டு படுக்கையில் மீண்டும் அவர் புரண்டார். அந்த அருவருப்பைக் காணச் சகியாது என் குடல்கள் புரண்டன.

பங்களா—கார்—ஆட்படைகள் என்று ஆர்ப்பாட்டமாக நாங்கள் வாழவில்லை. நான் பிறந்தது ஒரு கிராமம் தான். ஆனால் எங்கள் குடும்பம் ஓரளவுக்கு வசதியானதுதான். எனக்கு ஒரே ஒரு அண்ணன். என் வீட்டுக்கு நான் ஒரே செல்ல மகள். அப்பா என்னையும், அண்ணனையும் அடுத்த நகரத்திலிருந்த கல்லூரிக்கு அனுப்பிப் படிக்க வைத்தார், அண்ணன் அப்பாவுக்கு உதவியாக விவசாயத்தைக் கவனித்துக் கொண்டிருந்தார். எனக்கு எந்த வகையிலும் குறை வைக் காது... செல்லமாகத்தான் வளர்த்தார்... அந்த வகையில் கிராமத்துப் பெண் என்றாலும் நான் கைநாட்டுப் பேர்வழி யல்ல—இவர்களைப் போல ஒரு பட்டதாரிதான். கார் ஓட்டக் கூடத் தெரிந்தவள்!

அப்பாவின் அந்தஸ்து மோகத்திற்கு என் காதல் பலியாகிப் போனது. என் விதி... அவ்வளவுதான். அது என் வாழ்க்கையிலே ஏற்பட்ட ஒரு மாபெரும் துன்ப அதிர்ச்சி.

பட்டப்படிப்பு முடிந்தவுடன் ஆஸ்டலிலிருந்து கிராமத்துக்கு வந்து வீட்டோடு தங்கத் துவங்கியபோதுதான் முதல் மூதலாக ரகுநாதனை நான் சந்தித்தேன். எங்கள் கிராமத்தில் புதிதாக ஆரம்பித்திருந்த உயர் நிலைப்பள்ளியில் ...கணக்கு ஆசிரியராக வேலை மேற்கொண்டு...வந்திருந்தார். எதிர் பாராதவிதமாக வாய்க்கால் கரை ஓரத்தில் சந்தித்தேன். பார்த்த அளவிலே இருவரும்—புன்னகையைப் பரிமாறிக் கொண்டோம்... கண்களால் பேசிய எங்கள் காதல் பின் கடிதமூலம் தொடர்ந்தது. அப்பா கையில் ஒரு கடிதம் அகப்பட்டு விட்டபோதுதான் விதி எங்கள் இடையே குறுக்கிட்டு விட்டது. அப்பா கடும் கோபத்துடன் எங்கள் காதலுக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டார்.

மாதச் சம்பளத்தை நம்பிப் பிழைக்கும் ஒரு பள்ளி ஆசிரியருக்கு வசதிமிக்க குடும்பத்தில் பிறந்து செல்லமாக வளர்க்கப்பட்ட தம் பெண்ணைத் தர முடியாது எனத் தீர்மானமாக மறுத்துவிட்டார். கெஞ்சினேன்—அழுதேன், பயன் இல்லை. விரைவாக எனக்கு வேறு இடங்கள் பார்க்கத் தொடங்கினார்.

அந்த முயற்சியில்தான்... பட்டணத்திலே பெரிய வியாபாரத்தில் ஈடுபட்டு... பங்களா—கார் என்று படோடோபமாக வாழும் இந்தக் குடும்பத்தின் கடைசி மகனுக்கு என்னை கட்டிக் கொடுத்தார். அப்பாவை நான் நொந்து கொள்ளவில்லை. அவரது அந்தஸ்து மோகம் என்னை இந்தப் பாழும் கிணற்றில் தள்ளிவிட்டது.

திருமணமான அன்றே நான் ஒரு உறுதியை மேற்கொண்டேன். 'காலந்தொட்டு நம் நாட்டுப் பெண்கள் அனுசரிக்கும் அந்த அழகான பண்பாட்டிலிருந்து நான் ஒரு இம்மியும் விலகக் கூடாது.... பெரியவங்க பார்த்துத் தேர்ந்தெடுத்த கணவனுக்கு நல்ல மனைவியாக நடந்து கொண்டு புகுந்த இடத்துக்கும், பிறந்த இடத்துக்கும் பெருமை தேடித்



தர வேண்டும்' என்று எண்ணியபடி வலதுகாலை எடுத்து வைத்து அந்த வீட்டிற்குள் வந்தேன்.

நான் கேட்டறியாத, அனுபவித்தறியாத ஒரு புதுவித நாகரீகத்தில் வாழும் புக்ககத்து மனிதர்களுடன் தொடர்ந்து என்னால் வாழ முடியுமா? தொட்டுப் பேசும் மைத்துனர்களைச் சமாளிக்க முடியுமா? அண்ணிகளின் கன்னங்களைக் கிள்ளி விளையாடும் என் கணவரைக் கண்டித்து ஒழுங்கு படுத்த இயலுமா? என்று வந்த சில நாட்களிலேயே என்னுள் திகில் உருவாகி விட்டிருந்தது.

வாரத்திற்கிருமுறை வீட்டில் பார்ட்டி வைத்து .. ஆணும் பெண்ணும் கட்டிப்பிடித்து மேனாட்டுச் சங்கீதத்திற்கு ஒத்தபடி அவர்கள் ஆடிய ஆட்டம்... வாரத்திற்கு ஒரு முறை ஓட்டல்களில் நடத்திய களியாட்டம்... இதில் கலந்து கொள்ளாது ஒதுங்கி வாழ்ந்தேன். இதனால் எனக்கும், என் கணவருக்குமிடையே குடும்பப் பூசல்கள் பல லேசாகத் துவங்கி விட்டிருந்தன.

அன்று காப்பி பலகாரம் சாப்பிட கீழே இறங்கி வந்த என் ஓரகத்திகள் என் கணவர் முன்பு சொல்லி விட்டார்கள்.

"தம்பி! நாளை சனிக்கிழமை நமது சங்கத்து ஆண்டு விழா, அப்சரா ஓட்டலிலே நடக்கவிருக்கிறதில்லையா— அதுக்குத் துளசியைக் கட்டாயம் கூட்டிக்கிட்டுப் போகணும்!"...

என் கணவர் கண்களாலேயே உறுத்துப் பார்த்துக் கட்டளையிட்டு விட்டார்.

சனிக்கிழமை காலையிலேயே என் ஓரகத்திகள் முடி அலங்காரத்திற்கு அலங்கார மாளிகைக்கு விரைந்து விட்டனர். குருவிக்கூடு போன்ற கொண்டையும்—முகத்திலே கனமான பவுடர் பூச்சும்—உதட்டுச் சாயமும்... கணிகளில் மையும்... இமைகளில் வண்ணமுமாக... மெல்லிய

ஷிபான் சேலையில்...சிங்காரிகளாகப் புறப்பட்டுவிட்டனர். நான் வழக்கம் போல் கொண்டையில் பூவும் நெற்றியில் குங்குமப் பொட்டும்—இடையில் காஞ்சிப் பட்டுமாகக் கிளம்பி யிருந்தேன்.

ஓட்டல் அப்சராவில் அந்தப் பெரிய அறைக்குள் ஒரு வினோதமான கூட்டம் சங்கத்து உறுப்பினர்கள் என்ற நிலை யில் கூடியிருந்தனர். சபாரி ஸூட்களில் ஆண்களும்—மெல்லிய ஷிபானில் மிதமிஞ்சிய ஒப்பனையில் பெண்களும் கூடியிருந்த அந்தக் கூட்டத்தில் காஞ்சிப் பட்டில், நான் ஒரு நாட்டுப்புறத்துப் பெண்ணாக ஒரு மூலையில் நாற்காலியில் அமைதியாக உட்கார்ந்திருந்தேன்.

மது வகைகள் பரிமாறப்பட்டன—என் ஓரகத்திகள் கண்ணாடிக் கிண்ணங்களிலிருந்த மதுவை உறிஞ்சி மெல்ல சாப்பிட்டபடி, ஆங்கிலத்தில் உரையாடிக் கொண்டு மற்ற ஆண்களுடன் உரசிக்கொண்டு நின்ற காட்சி எனக்குப் பார்க்க பொறுக்க முடியாததாக இருந்தது. போதை ஏற ஏற கூட்டத்திலே பேச்சும்—சிரிப்பும் எல்லையைத் தாண்டிக் கொண்டிருப்பதைக் கண்டு நான் பயந்து போனேன். அருகில் உட்கார்ந்திருந்த ஒரு பெண் சொன்ன சங்கதி அதிர்ச்சிக்கு மேல் பேரதிர்ச்சியாக இருந்தது.

"இன்னிக்கு நம்ப சங்கத்துப் புது அங்கத்தினர் பம்பாயி விருந்து மாற்றலாகி வந்தவர் ஒருவர், ஒரு புது விளையாட்டை நம்மிடையே ஆரம்பிக்கப் போகிறாராம். தலைவர் ஒத்துக்கொண்டு விட்டார்—உறுப்பினர்களும் உற்சாகமாக இருக்காங்க."

"எனன விளையாட்டு...?"

"நீங்களே இப்பப் பார்க்கப் போறீங்க" அவள் முழுவதும் சொல்லாது என்னைத் திகைப்பிலே தொங்க விட்டு விட்டாள்.



விருந்துக்குப் பின்னர் தலைவர் எழுந்திருந்தார். "கீழே தோட்டத்தில் கார்கள் வரிசையாக நிற்கின்றன. பெண்கள் அவரவர் வீட்டு கார்களின் அருகே முன் ஆசனக் கதவின் பக்கத்தில் நிற்கவும்" என்றார். அதற்குள் மேஜை மீது ஒருவர் ஒரு பெரிய பூச்சாடியை வைத்தார். 'ஆண்கள் எல்லோரும் உங்களது கார்களின் சாவிகளை ஜாடிக்குள் போடுங்கள்' என்று தலைவர் உத்தரவிட்டார். ஜாடி குலுக்கப்பட்டு சாவிகள் ஒலிக்க மறுபடி மேஜைமீது வைக்கப் பட்டது.

"பெண்கள் எல்லோரும் கீழே போங்கள்!" என்று உத்திரவிட்ட தலைவர் 'ஆண்கள் ஒவ்வொருவராக வந்து ஜாடியில் கைவிட்டு கைக்கு வந்த கார் சாவியை எடுத்துக் கொள்ளுங்க. இது ஒரு அதிர்ஷ்ட சீட்டு குலுக்கல் போல. சாவியோட அந்த எண் கொண்ட காருக்கருகில் போய் அங்கே நிற்கும் காரின் சொந்தக்காரரின் மனைவியுடன் நீங்கள் தாராளமாக இரவின் மீதிப் பொழுதை உல்லாசமாக எங்கு வேணுமானாலும் கழிக்கலாம்...!"

இடி விழுந்த அதிர்ச்சியுடன்... கணவரின் காரின் அருகே நின்று கொண்டிருந்தேன். நடுத்தர வயதைத் தாண்டிவிட்ட ஒரு வழுக்கைத்தலை மனிதன். "ஹாய்! மை ஸ்வீட்டி" என்று மதுவின் நெடிவீச காரைத் திறக்க சாவியுடன் அருகில் வந்தான். வெடுக்கென்று அவன் கையிலிருந்த எங்கள் கார் சாவியைப் பிடுங்கிக்கொண்டு, நானே காரைத் திறந்து, உள்ளே ஏறிக்கொண்டு படீரென்று கதவைச் சாத்தினேன்.

"சே! அப்பால் நகரு. இந்த அசிங்கம் பிடிச்ச விளையாட்டை உன் அம்மாவிடம் நடத்திக்கோ மடையா!" கட்டுக்கொள்ள முடியாத கோபத்திலே கத்திக் கொண்டு தலைதெரிக்க வண்டியை வெளியே ஓட்டினேன்.

"பெரிய இடத்தில் வாழ்க்கைப்பட்டால் உனக்கு கார் ஓட்டத் தெரிந்திருப்பது நல்லது" என்று அண்ணன்

எனக்குக் கார் ஓட்ட பக்கத்து டவுனுக்கழைத்துச் சென்று பயிற்சி அளித்து லைசென்ஸ் எடுத்துக் கொடுத்திருந்தது இப்போது எத்தனைப் பெரிய உதவியாக இருந்தது?

பட்டணத்து சாலையில் ஓட்டி பழக்கமில்லை என்றா லும் இரவின் அந்த நேரத்தில் எப்படியோ ஓட்டிக்கொண்டு வீடு வந்து சேர்ந்தேன். கதவைத் திறந்துகொண்டு உள்ளே வந்தவள் பின் ஆவேசமாக என் கணவர் வந்து நின்றார்.

"அத்தனைப்பேர் எதிரில் அவமானம் செய்ய உனக்கு என்ன துணிச்சல்?" என்று என்னை அடித்த அடி... அப்பப்பா இந்த பிறவி முழுவதுக்கும் போதும்.

மறுநாள் புக்ககத்திலே பெரிய பஞ்சாயத்து நடந்தது. "நமது நாகரீகத்துக்கு ஒத்துவராத இவளை உடனடியாக பிறந்த வீட்டுக்கு அனுப்பி வைக்கணும். வாழாவெட்டியாக இருந்தால்தான் புத்திவரும்"– நீதி வழங்கிவிட்டனர்.

இரண்டாவது நாள் விடியற்காலை கையில் ஒரு சிறு பெட்டியுடன்—கலைந்த. கூந்தலும்—பயணத்தால் நசிங்கிய ஆடையுமாக வீட்டு வாசல் கதவைத் தட்டினேன். என்னைக் கண்டு என் பெற்றோர்கள் அதிர்ந்து போயினர். கதையைக் கேட்டு அண்ணன் ஆவேசமடைந்து விட்டார்.

"திரும்ப அவன் வீட்டுக்குப் போகத் தேவையில்லை. இந்த விவாகத்திலிருந்து உனக்கு விடுதலை வாங்கி உன்னைக் காதலித்தனுக்கு நான் கட்டித் தரேன். கவலைப் படாதே தங்கச்சி!" என்று ஆத்திரத்தில் பட படத்தார்.

சில மாதங்களுக்குப்பின் என் கணவர் என்னைத் தேடிக்கொண்டு வந்தார். என் பெற்றோர்கள் உடன் அனுப்ப மறுத்ததால் எங்களுடனேயே மாமனார் வீட்டு மருமகனாக வாழத் தலைப்பட்டார். வெளிநாட்டு மது வகைகளைச் சாப்பிட்டு பழக்கப்பட்டவர். கிராமத்தில்

அவைகள் கிட்டாது சிரமப்பட்டார். முடிவில் மட்டமான பட்டை சாராயத்தில் சரணாகதியடைந்தார். அதன் விளைவு, சில நாட்களில் ஆரோக்கியம் குன்றி நோயாளியாகி விட்டார்.

ஒருநாள் திடீரென்று வயிற்றுவலி என்று கூச்சலிட்டுக் கொண்டு வந்து படுத்தவர் மயக்கமாகிவிட்டார். நகரத்து ஆஸ்பத்திரியில் அனுமதித்தோம். 'பான்கிரியாஸ்' எனும் கோளம் பாதிக்கப்பட்டதால், ரத்தம் கெட்டுப்போய் அடுத்த நாளே மயக்கத்திலிருந்து மீளாது இறந்து போனார்.

துக்கத்துக்கு வந்த என் புக்ககத்தார் மாப்பிள்ளைக்கு என் தந்தை விஷம் வைத்துக் கொன்றுவிட்டதாக அவர் மீது வழக்குத் தொடுக்க முயன்றார்கள். ஆனால் பலிக்க வில்லை. அரசு ஆஸ்பத்திரி டாக்டர் சாவுக்குக் காரணம் என்ன என்று கொடுத்த சான்றிதழ் எங்களிடம் பத்திரமாக இருந்தது.

பத்தொன்பது வயதிற்குள் ஆறே மாத மண வாழ்க்கை யில் இத்தனையும் அனுபவித்து விதவையாகிவிட்ட என்னை விதவைக் கோலத்தில் பார்க்க அண்ணன் மறுத்தார்— அவருக்காக நான் பூவும் பொட்டுமாக இன்னமும் இருக் கிறேன்.

மறுமணம் செய்து கொள்ளத் துடித்த என் காதலரை நான் ஒதுக்கிவிட்டேன். திருமணம் என்கிற வார்த்தையே எனக்கு வேம்பாகக் கசக்கிறது. அண்ணன் உதவியால் அரசு ஆஸ்பத்திரியில் நர்ஸ் பயிற்சியில் சேர்ந்து விட்டிருக்கிறேன். நோயாளிகளுக்குப் பணிவிடை செய்வதில் என் மனம் அமைதியை அடைகிறது.

வருங்காலம்? ... அதைக் காலந்தான் தீர்மானிக்க வேண்டும். ஆனால் நான் நமது சகோதரிகளுக்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன்.

நாகரீகம் என்ற பெயரில் நம் பண்பாட்டுக்கு முரணாக நாம் எதையும் பிறரிடமிருந்து கற்றுக் கொள்ளத் தேவை யில்லை. மனைவியை மாற்றிக் கொள்ளும் அசிங்கமான விளையாட்டை கற்காலத்து மனிதனே காலப்போக்கில் கைவிட்டு விட்டான்....அப்படியிருக்க நாகரீகத்திலும்—விஞ்ஞானத்திலும் முன்னேறிவிட்ட சமுதாயத்துக்கு இது தேவையா!

நாமக்கல் கவிஞர் சொல்லியிருப்பது போல "தமிழன் என்ற ஒரு இனம் உண்டு-அவனுக்கு ஒரு தனிக்குணம் உண்டு."

அதுதான் ஒருத்தனுக்கு ஒருத்தி என்ற ஒழுக்கம் நிறைந்த பண்பாடு. அதை நாம் மறக்கலாமா...?

□

# அன்பைத் தேடி

கருணாகரனுக்கு மூச்சுத் திணறியது—நெஞ்சிற்குள் பலமாக யாரோ அமுக்குவது போன்றதொரு இறுக்க உணர்வு—ஏ.சி. அறையில் கூட புழுக்கம். முகத்தில் முத்தாக அரும்பி நின்ற வியர்வை கழுத்திலே தாரையாக ஓடுவதை உணர்ந்தான். கைகுட்டையால் அழுத்தி முகத்தையும் கழுத்தையும் துடைத்துக் கொண்டான்.

"நாற்பது வயதைத் தாண்டிய பின் இந்தக் காலத்தில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஆயிரம் விதமான நோய்கள் வந்து தொலைகின்றன. எதுக்கும் டாக்டரைப் பார்க்கிறது தானே—இப்படித்தான் என் மச்சான் சொல்லிக்கிட்டிருந் தான். டாக்டர்கிட்டே போன பிறகுதான் அது மாரடைப்பு நோய்னு தெரிஞ்சது..." நண்பன் நாராயணன் அவனை நன்றாகவே பயமுறுத்தி விட்டிருந்தான்.

இருபது ஆண்டுகளுக்கு மேல்...வெற்றிக்குப்பின் வெற்றி என்று தொழிலையும் அந்தஸ்தையும் வளர்த்துக் கொண்டு விட்டிருந்த கருணாகரன் ஒரு தலைவலி என்று கூட அரை நாள் படுத்தவன் அல்ல. பந்தயக் குதிரை போல—உடலில் அப்படி ஒரு துடிப்பு—மனதில் ஒரு உற்சாகம்!

தாமரைப்பட்டியை உதறிவிட்டு பட்டணத்திற்கு வந்ததுமே அவனுக்கு நல்ல காலம் பிறக்கத் தொடங்கி விட்டது. இத்தனைக்கும் அவன் எஸ்.எஸ்.எல்.சி. வரை தான் எட்டிப் பார்த்தான். படிப்பிற்கும்—உழைப்பால்

உயர்வதற்கும் சம்பந்தமே இல்லை என்பதை அனுபவத்தில் அறிந்தவன். கார்கள் பழுது பார்க்கும் ஒரு தொழிற்கூடத்தில் மெக்கானிக் பயிற்சிக்குச் சேர்ந்தவன்.

விரைவில் திறமைமிக்க மேற்பார்வையாளனாக மாறி, முதலாளியின் அன்பைக் கவர்ந்து கொண்டு விட்டான். அத்துடன் மட்டுமா? தமது தொழிற்கூடத்தையும்—தமது ஒரே மகளையும் அவனுக்குத் தந்துவிட்டு சில மாதங்களில் முதலாளி மரணமடைந்து போனார். மனைவி மூலம் கிடைத்த அந்தத் தொழிலை அவன் மலையாக விரைவில் வளர்த்து விட்டிருந்தான். தாமரைப்பட்டி தெற்குத் தெரு கருணாகரன் என்று யாருமே அடையாளம் காண முடியாத படி...கார், பங்களா, ஆட்படைகள் என்று பெரியதொரு தொழிலதிபராக மாறிவிட்டிருந்தான்.

பள்ளியில் ஆங்கிலத்தைக் கண்டு அஞ்சி ஓடியவன் ஆசிரியரை வைத்து அந்த மொழியை ஆக்ஸ்போர்ட் பல் கலைக் கழகத்தில் படித்துவிட்டு வந்தவன் போல துல்லியமாகப் பேசத் தெரிந்து கொண்டிருந்தான். தன் ஒரே மகனை என்ஜீனியர் பட்டத்திற்கு படிக்க வைத்திருந்தான். அவன் இறுதி ஆண்டை முடித்து வெளியே வந்ததும் மேல் படிப்புக்கு வெளி நாட்டிற்கு அனுப்பி வைக்கவேண்டும்—திரும்பி வந்ததும் தொழிற்சாலையின் பொறுப்பை மகன் கையில் கொடுத்துவிட்டு மனைவியுடன் உலகம் முழுவதையும் சுற்றிப் பார்க்க வேண்டும் என்று பல ஆசைகள்... பல திட்டங்களைத் தீட்டி வைத்திருந்தான்.

பல பொதுநல அமைப்பிற்கு நிதிகளை வழங்கி கொடை வள்ளல் என்ற பெயர் வேறு அவனுக்கு—இலக்கியப் பணி—சமூக சேவைகள் முதலியவுற்றில் பங்கெடுத்துக் கொண்டு அந்த அமைப்புகளின் தலைவர், செயலாளர், பொருளாளர் என்ற பல தகுதிகள் வேறு. வாரத்திற்கு ஒரு கூட்டத்தில் ஏதாவது ஒரு மேடையில் பேசி, மாலை மரியாதை பெற்று வீடு திரும்பும் அந்தஸ்து.



அப்படிப்பட்ட கருணாகரனுக்கு— துணிவு மிக்க கருணாகரனுக்கு இப்பொழுது என்ன வந்துவிட்டது. சில நாட்களாக பலவித பயங்கர கனவுகள் வந்து அவனை ஏன் அப்படி அச்சுறுத்துகின்றன? நெஞ்சை என்னவோ அடைப்பது போன்ற அந்த பயங்கர உணர்வு அடிக்கடி ஏற்படுவானேன்? கனவுகள் எல்லாம் அடி மன நிலையில் அமுங்கிக் கிடக்கும் சில நிகழ்ச்சிகளின் பிரதிபலிப்பு என்றாரே டாக்டர்...?

ஆபீஸ் பையன்...பெரியசாமியிடம் கதை கேட்ட நாளிலிருந்து இந்த நெஞ்சடைப்பு. தொடர்ந்து தொந்தரவு செய்கிறது. தூக்கமில்லாத இரவுகள்...அப்படியே தூங்கினாலும் பயங்கர கனவுகள். நாராயணன் சொன்னது போல இது லேசான மாரடைப்பா? அப்படியென்றால் அவன் வருங்காலத்தைப் பற்றி வகுத்திருக்கும் திட்டங்கள் என்னாவது?

மகன் படிப்பு முடியவேணும்—அதற்குள் கருணாகரனுக்கு ஏதாவது நேர்ந்துவிட்டால்? தொழிலதிபர் சுந்தரமூர்த்தியின் இரண்டாவது மகளை தன் மகனுக்கு கட்டி வைக்க அவன் மனைவி பரிமளாவின் ஆசை என்னாவது? அந்த திருமண வைபோகத்தை அவன் பார்க்க முடியாமல் யமலோகம் போய்விட்டால்?

சே! ஏன் இப்படி பயப்பட வேணும். மரணத்தைப் பற்றி ஏன் இந்த எதிர்பார்ப்பு? மேசை மேலிருந்த தொலை பேசியில் குடும்ப வைத்தியரை அழைத்தான்.

'இருதய நோய் நிபுணர் டாக்டர் சரத்தை நான் பார்க்கணும்—உடனடியாக ஏற்பாடு செய்யுங்க' கேட்டுக் கொண்டான்.

டாக்டர் சரத் அவனை நன்றாகவே பரிசோதித்தார். கைகால்களில் ரப்பர் போன்ற குழாய்களைக் கட்டி மின் விசையில் இயங்கிய யந்திரத்தில் பொருத்தி....அதிலிருந்த

முள் வரைந்த காகிதத துண்டை கத்தரித்து எடுத்து நன்றாகப் பார்த்தார்.

"இ.சி.ஜி.யில் ஒன்றும் தவறு தெரியவில்லை. உங்கள் இருதயம் ஆரோக்கியமாக இயங்குகிறது. உங்கள் ரத்த அழுத்தம் நல்ல நிலையில் இருக்கிறது" என்று மெல்லியதாக சிரித்தார்.

"அடிக்கடி ஒரு திகில் நெஞ்சை அடைக்கிறது டாக்டர்" புலம்பியபடி சட்டை பொத்தான்களை சரி செய்து கொண்டு பரிசோதனைப் பலகையிலிருந்து கீழே இறங்கினான் கருணாகரன்.

"மிஸ்டர் கருணாகரன், உங்க உடம்புக்கு ஒன்றுமில்லை. உங்க மனதில்தான் ஏதோ ஒரு மிரட்சி இருக்கு—தக்கதொரு சைக்யாட்டிரிஸ்ட்டிடம் காட்டினால் ஆலோசனை கிடைக்கும். என் நண்பன் ஒரு பெரிய உளவியல் நிபுணன். அவனிடம் அனுப்பி வைக்கிறேன்" என்று கூறிவிட்டு, ஒரு கடிதம் எழுதித் தந்தார்.

கருணாகரனுக்கு மெத்த கவலையாகிவிட்டது. இப்போது உளவியல் நிபுணரான ஒரு மருத்துவரைப் பார்க்க வேண்டும். அவர்...உன் கண்களில் கோளாறு என்று, கண் வைத்தியரிடம் அனுப்ப, அவர் காது மூக்கு செவி நோய்களைப் பார்க்கும் ஒரு ஸ்பெஷலிஸ்டிடம் அனுப்பி—அவர் வேறு ஒருவரிடம் அனுப்பி இப்படி அவன் டாக்டர் பட்டாளத்தை வளைய வந்து கொண்டிருக்க நேர்ந்து விட்டால்? அவன் இப்போது தேடுவது அமைதி. இந்த அமைதியை அவன் எந்த சிகிச்சை மூலம் பெற இயலும்?

உளவியல் மருத்துவர் ரொம்ப கலகலப்பாக சிரித்துப் பேசினார். மெத்தென்ற ஒரு சாய்மானத்தில் அவனை படுக்க வைத்து அறைக்குள் மெல்லிய நீல ஒளி தரும் விளக்கைப் போட்டு மின் விசிறியைச் சுழலவிட்டார்.



"பேசுங்கள்-ஒளிவு மறைவு இல்லாமல் மனதில் இருப்பதையெல்லாம் ஞாபகத்துக்கு வருவதையெல்லாம் சொல்லுங்கள்" என்று குழைவான குரலில் டாக்டர் கேட்டுக் கொண்டதும் மந்திரத்தில் கட்டுண்டவன்போல கருணாகரன் கண்களை மூடிக்கொண்டு பேச ஆரம்பித்தான். மூட்டை கட்டி வைத்திருந்த நெல்லிக்காய்களை அவிழ்த்து விட்டது போல் அடிமன நிலையில் அவன் உள்ளத்தை அடைத்துக் கொண்டிருந்த குற்ற உணர்வுகள் அதன் மூலகாரணமான சம்பவங்கள் எல்லாம் தடதடவென்று வெளியே கொட்டின.

"எங்க அலுவலகத்திலே பெரியசாமின்னு ஆபீஸ் ஆள் இருக்கான்—அவன் வந்து அதை சொன்ன பிறகு தான் ஆரம்பிச்சுது டாக்டர். அவர்கள் வசிக்கும் குடியிருப்பு பகுதியில் பெற்றோர்களோடு ஒரு பெண் - பதினெட்டு வயது இருக்கும்—எதிர் சாரியில் வசித்துக் கொண்டிருந்தாள்- அவமேலே பெரியசாமி மகனுக்கு ஒரு கண்ணாம்-ஆனால் அவள் பிடி கொடுக்கலை. அந்த ஆத்திரம் ஒரு நாள் இரவு ...அவள் தண்ணி பிடிக்க பம்புசெட்டுகிட்ட கட்டடத் தோரமா வந்தப்போ காத்திருந்து அவள் வாயைப்பொத்தி அவளைத் தூக்கிக்கொண்டு ஒரு சந்திற்குள் எடுத்துச் சென்று கற்பழித்து அலங்கோலப் படுத்திட்டான். தன் பெண் கர்ப்பமாகிட்டதுக்கு பெரியசாமி மகன்தான் காரணம்னு அந்த பெண்ணின் தந்தை முறையிட்டபோது தனக்கு ஒண்ணுமே தெரியாதுன்னுட்டான். அவமானம் தாங்காம் அந்த குடும்பம் அந்த குடியிருப்பை விட்டு எங்கேயோ போயிட்டது.

ஒரு பெண்ணை கண்ணீர் விட வச்ச பாவம் சும்மா விடுமா?... அரசன் அன்று கொல்வான். தெய்வம் நின்று கொல்லுமே.... இரண்டு வருஷம் கழிச்சு பெரியசாமி மகனுக்கு கல்யாணம் பேசி முடிச்ச சமயம்... அவன் ஏறி வந்த சைக்கிள் லாரியோட மோதி...பையன் ஒரு காலையும் ஒரு கையையும் இழந்துட்டான். கல்யாணம் நின்னு போச்சு.

இப்படித் தப்பித்துக் கொண்டுட்டான். ஒரு பெண்ணை அலங்கோலப்படுத்தினத்துக்கு கடவுள் தண்டனை கொடுத்திட்டார்னு கதறி அழுகிறான்-அந்த வேதனையில்... பெரியசாமி குடும்பமே கலங்கி போயிருக்கு...

"சரி மிஸ்டர் கருணாகரன்! அதுக்கும் உங்களுக்கும் வரும் நெஞ்சடைப்புக்கும் கனவுகளுக்கும் தொடர்பு என்ன?..." ...டாக்டர் கேட்டபோது... மறுபடியும் கருணாகரன் படபடவென்று பேச ஆரம்பித்தான்.

"தெய்வம் நின்று கொல்லும்னு பெரியசாமி சொன்னதிலிருந்து என் மனதில் ஒரு உறுத்தல்... நெஞ்சிலே ஒரு அடைப்பு... அடிக்கடி வியர்த்துக் கொட்ட ஆரம்பிச்சது. அத்தோட பல பயங்கர கனவு. என் ஒரே மகனுக்கு ஏதோ ஆயிட்டது போல ஒரு திகில்...நானும் ஒரு வகையில் பெரிய குற்றவாளி. ஒத்துக்கிறேன். சின்ன வயதில் எனக்கு ஒரு கிறுக்கு புத்தி இருந்திச்சு. மத்தவர்களை துன்புறுத்தி வேடிக்கை பார்ப்பதில் ஒரு இன்பம். தூங்குகிறவன் காதில் கட்டெறும்பை போட்டுட்டு அவன் எழுந்து துடிப்பதைக் கண்டு சிரிப்பது... நாற்கா்லியில் உட்காரப்போகும் போது மெல்ல அப்பால் நகர்த்திட்டு ஆள் கீழே விழுந்து அலறுவதைக் கண்டு ஆனந்திப்பது... தண்ணிப்பாம்பை கூட்டத்துக்குள் விட்டு...பாம்பு-பாம்பு என்று பெண்களிடையே பயத்லதப் பரப்பி... அவர்கள் நாலாபக்கமும் சிதறி ஓடுவதைக் கண்டு சிரிப்பது... இப்படி பல வக்கிரமான செயல்களில் ஈடுபட்டுக் கொண்டு... பள்ளிப்பருவத்தை கழித்தவன் நான். எனக்குத் தெரிஞ்ச எங்க தெருக்காரர் ஒருவர் மனைவிக்கு ரொம்ப பயந்தவர். அவர் மனைவி பெரிய சந்தேகக்காரி. எதுக்கும் தப்புக்கண்டு பிடிக்கிறாள் என்று அவர் என்னிடம் முறையிட்டபோது என் கெட்ட புத்தி வேலை செய்யத் தொடங்கிவிட்டது...?

"உன் கணவர் மூன்று ஆண்டு காலமாக ஒரு பெண்ணுடன் கள்ளத்தொடர்பு வைத்திருக்கிறார்—அவர்களிருவருக்கும் இரண்டு வயதில் ஒரு குழந்தை உள்ளது. மனைவியான நீ எச்சரிக்கையாக இல்லாவிடில் உன் கணவர் உன்னையும் உன் குழந்தைகளையும் நடுத்தெருவில் திண்டாடவிட்டு காதலியுடன் மறைந்துவிடுவார்... இப்படிக்கு நல்லதை எடுத்துச் சொல்லும் உண்மை விளம்பி" என்று ஒரு மொட்டைக் கடிதத்தை எழுதி அவர் மனைவிக்கு அனுப்பி வைத்தேன். அவ்வளவுதான் அவர்கள் வீடு இரண்டு பட்டது. சண்டையில் தெருவே வேடிக்கை பார்த்து சிரித்தலதத் தாங்க முடியாது... அந்த நல்ல மனிதன்... மனைவி குழந்தைகளை விட்டு மாயமாகப் போய் விட்டான்.... நானும் அந்த ஊரைவிட்டு கிளம்பி பட்டணம் வந்துவிட்டேன். நான் நல்ல நிலையில் இருக்கிறேன்— பாவம் அந்த குடும்பம் எப்படி தத்தளிக்கிறதோ? ஒரு குடும்பத்தைப் பிரித்த பாவம் என்ன செய்திடுமோன்னு இப்போ இத்தனை ஆண்டு காலத்திற்குப் பிறகு என் மனம் தவிக்கிறது.

"உங்களுக்கு வேண்டியது அமைதி... புரிகிறது... அந்த குடும்பத்தை தேடிப்பார்த்து அவங்க சிரமப்பட்டுகிட்டு இருந்தா தக்கபடி உதவுகிறதுதான்... உங்களுக்கு தகுந்த சிகிச்சை என்பது என் ஆலோசனை. உடனடியாக செயல்பட்டு பாருங்க" என்றார் டாக்டர்.

"அவர்களுக்கு ஏற்பட்ட இழப்புக்கு ஈடு செய்யணும்னு சொல்றீங்க செய்துடறேன்" கருணாகரனுக்கு திடீரென்று புதுதெம்பு ஏற்பட்ட்து போன்றதொரு பிரமிப்பு—நெஞ்சை அடைத்த அந்த அழுத்தம் மாயமாகிவிட்ட மலைப்புடன் டாக்டரது கிளினிக்கைவிட்டு புறப்பட்டான்.

உடனடியாக அவன் அந்தஸ்து—பணம் இரண்டின் மூலமாக தொடர்பு விட்டுப்போன தன் கிராமத்து மனிதன் குடும்பத்தைத் தேட முயன்றான்.

கருணாகரனின் மனைவி பரிமளாவுக்கு ஒரே வியப்பு-அதே சமயம் கோபம்— தொழிலதிபர் சுந்தரமூர்த்தியின்

மகளைப் பார்க்க நல்ல நாள் குறித்துக் கொண்டிருந்த போது அதே நாளில்.... கணவன் அவளை ஏன் இந்த இடத்திற்கு அழைத்துக்கொண்டு வந்தார்? நெருக்கமான தெருவில் ஒரு வீட்டுமுன் தங்கள் பென்ஸ் காரை நிறுத்திவிட்டு 'இந்தப் பெண்ணை முதலில் பார்த்துவிட்டு பிறகு போகலாம்' என்று மகனையும், அவளையும் அந்த வீட்டுக்குள் அழைத்துச் செல்வதின் மர்மம்?

"வாங்கோ உட்காருங்கோ!"— கரம்குவித்து வணங்கி விட்டு—பிரம்பு நாற்காலிகளையும்—மோடாக்களையும் அந்த சிறு கூடத்தில் இழுத்துப் போட்ட பெண்ணுக்கு... வயது பதினெட்டு இருக்கும்... சாதாரண நூல் சேலை இடையில்... கைகளில் கண்ணாடி வளையல்கள்... அப்படியும் அவள் பார்க்க கவர்ச்சியாக-அழகாகவே இருந்தாள்.

"இவ என் பேத்தி கமலா. பி. ஏ., படிச்சுக்கிட்டிருக்கா... என் காலம் முடியறதுக்குள்ளே ஒரு நல்ல இடமா குதிரணும்னு கவலைப்பட்டுக்கிட்டு இருந்தேன்.. இவளைப் பெத்த என் மகளும்—மருமகனும் இவ சின்ன குழந்தையா இருக்கும்போதே ஒருத்தர் பின் ஒருத்தராக டைபாய்டுலே போயிட்டாங்க. என் கணவரும் என் கூட சண்டைப் போட்டுக்கிட்டு வீட்டை விட்டுப் போனதால... நாங்க இரண்டு பேரும் அனாதையாகிவிட்டோம். பட்டணத்துக்கு வந்து தையல் கத்துக்கிட்டு ஒரு தையல் கடைவச்சு பொழைச்சிட்டு இருந்தோம். தம்பி கருணாகரன் எங்க ஊரைச் சேர்ந்தவர். என்னை அடையாளம் கண்டுகிட்டு பார்க்க வந்தார். மகனையும் கூட்டுகிட்டு வந்தார்" என்று கூறியபடி காப்பி தம்ளர்களை முக்காலி மீது வைத்த தலை நரைத்துப்போன கிழவியைப் பார்த்து அதிர்ந்து போனாள் பரிமளம்.

"ஒண்டி குடித்தனத்தில் வாழும் இந்த ஏழைக்கிழவியின் வீட்டில் பெண் எடுக்க இவருக்கு பைத்தியமா பிடித்திருக்கு?" கோபத்துடன் கணவர் பக்கம் திரும்பினாள்.



"இன்னிக்கு நல்ல நாளுன்னு பெண் பார்க்க—பரிமளா வையும் அழைச்சிட்டு வந்தேன். நீங்க எதுக்கும் கவலைப்பட வேணாம்.... கமலா இனி எங்க வீட்டுப் பெண் நினைவிருக் கட்டும்." கருணாகரன் சிரித்தான். திடுக்கிட்டு கணவன் பக்கம் பார்த்த பரிமளாவுக்கு இன்னொரு அதிர்ச்சி.

ஒருவரையொருவர் பார்த்தபடி உலகை மறந்து நின்ற கமலாவையும் தன் அருமை மகன் அருண்குமாரையும் பார்த்து திகைத்தே போய்விட்டாள். ஏற்கனவே இவர்களுக்குள் அறிமுகம் ஆகிவிட்டிருக்கிறதே இதென்ன கூத்து!

"உங்களை இப்பதான் முதல் முதலாகப் பார்க்கிறோம் —தம்பி கருணாகரன் இங்கு மகனோடு அடிக்கடி வரதுண்டு. எத்தனை பெரிய ஆளாகியும் ஏழையான எங்களைப் பார்க்க வந்ததே பெரிசு— சம்பந்தம் செய்துக்க ஆசைப்பட்டு கேட்டப்போ எனக்கு ரொம்ப ஆச்சர்யமாயிட்டது. என்ன இருந்தாலும் தம்பி கருணாகரனுக்கு ரொம்ப உயர்ந்த மனது. தங்கமான பிள்ளை." அந்தம்மாள் புகழ்ந்ததைக் கேட்ட பரிமளாவின் தலை சுற்றியது.

இத்தனை ஏற்பாடுகளையும் செய்து விட்டு அவளை ஒப்புக்காக கணவர் அங்கே அழைத்து வந்திருக்கிறாரே... இது என்ன அக்கிரமம்! பரிமளா மனதிற்குள் பொருமி னாள்....

"என்னங்க இதெல்லாம்?" —வீட்டிற்குத் திரும்பியதும் வெடித்தாள் கோபத்துடன்.

"இதோ பார் பரிமளா உன் மகனுக்கு கமலாவை பிடிச்சிருக்கு. அதுக்கு மேலே நாம தடைசொல்ல முடியாது."

"நீங்களா கொண்டு போய் உங்க ஊர்க்காரங்கன்னு அறிமுகம் செய்து வச்சீங்க— இளவயசு அவனுக்கு ஆசை வந்திடுச்சு—தப்பு உங்களது. இந்த கல்யாணத்தை நடத்தினா நம் அந்தஸ்து என்னாவது?"

"இன்னும் ஒருபடி மேலே உயரும். கருணாகரன் பெரிய சீர்திருத்தவாதி—தன் ஒரே மகனுக்கு ஒரு ஏழை வீட்டுப் பெண்ணை வரதட்சணை—சீர் ஏதும் எதிர் பார்க்காம தானே எல்லாம் செலவழிச்சு கட்டி வச்சார்ன்னு பெயர் பிரபலமாக அடிபடும்... உன் அப்பா உன்னை தொழிலாளியான எனக்கு கட்டி வைக்கலையா? இப்போ முதலாளியாகப்போற உன் மகனுக்கு ஒரு ஏழைப் பெண்ணை நான் கட்டி வைக்கப் போறேன்—இதில் என்ன தவறு இருக்கு?" என்று அதட்டிப் பேசினான் கருணாகரன். பரிமளாவுக்கு கணவனை எதிர்த்து பேசும் சுபாவம் கிடையாது. மௌனமாக கோபத்தை அடக்கிக் கொண்டு 'உங்க இஷ்டம்!' என்று முணுமுணுத்தபடி உள்ளே சென்று விட்டாள்.

அப்பாடா என்றதொரு அமைதி உணர்வில் கருணாகரன் சிரிக்கிறான்! எந்தக் குடும்பத்தின் பிரிவுக்கு காரணமாக இருந்தானோ... அந்த குடும்பத்தை தேடிக் கண்டுபிடித்து தான் செய்த தவறுக்கு ஈடு செய்யத்தான் அந்த ஏழைப் பெண் கமலாவை தன் மகனுக்கு கட்டி வைக்க முடிவெடுத்தான்.

அமைதியைத் தேடி எடுத்த முடிவு அது—ஊரை அதிசயிக்க வைக்க எடுத்த முடிவல்ல என்பது ஆண்டவனுக்கும், அவனுக்கும்—அந்த டாக்டருக்கும் மட்டுமே தெரியும்... அப்படியே இருக்கட்டும். மனைவிக்கும் மகனுக்கும் தெரிய தேவையில்லை.... மறுபடியும் அவன் சிரித்தான்.

□

# இருதலைப் பட்சம்!

"என்னடா? உன் பெண்சாதி பிறந்த வீட்டுக்குப் போறேன்னு ஒத்துக்கிட்டாளா?" என் மாமியார் வழக்கமான அதிகாரத் தோரணையில் வினவியதும் என் சப்த நாடியும் ஒடுங்கி விட்டது.

வீட்டின் ஒரே பிள்ளையான என் கணவர், என்னை முறைத்துப் பார்த்தார். "எல்லாம் கிளிப்பிள்ளைக்கு சொல்லிக் குடுக்கிறது போல சொல்லிக் குடுத்திருக்கேன். இதுக்குமேல எப்பிடி?"

என் உடல் பயத்தில் பதறியது. அந்தச் சிறு சூட்கேசில், மூன்று நாள் பயணத்திற்குத் தேவையான உடைகளை அடுக்கிய போது, கைகள் நடுங்கின.

"ரயிலுக்கு நேரமாகுது" உசுப்பினார் என் கணவர்.

"அவங்க அண்ணன்மாருங்க யாராச்சும் ஸ்டேஷனுக்கு வருவாங்களா? தந்தி குடுத்தியா?"

"சென்னையில பிறந்து, படிச்சு, வளந்தவ... பட்டப் பகல்ல போய் இறங்கப்போறா. என்ன பயம் வச்சிருக்கு?" கணவரின் சொற்களைக் கேட்டதும் எனக்கு அழுகை பொங்கியது.

பெட்டியை மூடிப் பூட்டியவள், இயந்திரம்போல கூட நடந்தேன். "சொன்னது கவனம் இருக்கட்டும். கையாலாகாத கபோதி போல திரும்பி வராதே" வழி முழுதும், தொண

தொணத்தவர், சென்னை செல்லும் ரயிலில் ஏற்றி விட்ட பிறகு, வண்டி புறப்படும்வரை கூட நிற்கவில்லை. "எங்கே இவள் இறங்கி பின்னால் ஓடி வந்து விடுவாளோ" என்று பயப்படுவது போல், கூட்டத்தில் மறைந்து விட்டார்.

காரணம்...? இந்த நாட்டு மண்ணில் பிறந்துவிட்ட பெண்ணின் தலையெழுத்து. திருமணமாகி, குலம் விளங்க வகையில்லாமல் போனால், ஒரு பெண்ணின் கழுத்தில் மட்டுமே, பூட்டப் பெறும் கனமான விலங்கு. "ஆமாம், எனக்கு புக்ககத்தில் இடப்பட்ட பெயர் 'மலடி!...'

இத்தனைக்கும், நான் பெரிய வசதியான குடும்பத்தில் பிறந்தவள். வீட்டின் கடைக் குட்டி. மூன்று அண்ணன்கள், இரண்டு தமக்கைகள். நான் பி. யு. சி. படித்து முடித்த சமயம், அப்பா, அம்மாவிற்கு ஒரே கவலை.

அவர்களுக்கு வயது ஏறிக் கொண்டே போவதால் கடமையை முடித்துவிட வேண்டும் என்ற அவசரம். முடிவு எனது பதினாறாவது வயதில் திருமணமாயிற்று.

பெரியண்ணன் சம்மந்தத்திற்கு, இதுபற்றி பெரிய மனத் தாங்கல் ஏற்பட்டது. "எதுக்கப்பா அவசரப்படறீங்க. தங்கச்சி சரோஜா நல்லா படிக்கறா. மேலே படிக்க வைப் போமே" என்றார்.

மற்ற இரு அண்ணன்மார்களும், தடுத்துப் பார்த்தனர். "ஏம்பா நாங்கள் இல்லையா? தங்கச்சி மேலே பாசம் வைக் கலையா? நல்ல எடமா பார்த்து மெதுவா கட்டிக் கொடுக்கலாமே."

அப்பா பிடிவாதமாக இருந்தார். "திருச்சியில் என்ஜினீயரிங் நிறுவனம் ஒன்றில், நல்ல வேலை. மாஸ்டர் டிகிரி வாங்கியவன். பார்க்க கம்பீரமாக இருக்கான். ஒரே பிள்ளை. வேறே பிக்கல் பிடுங்கல் இல்லை" என்று முடித்து விட்டார்.



வரதட்சிணை, சீர், நிறைய நகைகள் என்று மிகப் பிரமாதமாகத்தான் என் கல்யாணம் நடைபெற்றது. என் கணவர் சிவகுமார், என்னிடம் பிரியமாகவும், அன்பாகவும் இருந்தார். இதைவிட ஒரு பெண்ணுக்கு என்ன வேண்டும்? மாமியார் எப்போதுமே, அதட்டிப் பேசும் குணமுள்ளவர். மாமனாரும் அவ்வாறே. ஆனால் என் மனதுக்கினியவருடன் உல்லாசமாக வாழ்ந்த எனக்கு, ஆரம்ப நாட்களில் எதுவும் உரைக்கவில்லை.

"சதா அவன்கிட்ட என்ன பேச்சு. முதல்லே, அடுப்பில சோறு கொதிக்குதுன்னு நினைப்பு வச்சிக்க" மாமியார் சிடுசிடுப்பார்.

"ஊர்ல இருக்கிற சினிமா, டிராமாவெல்லாம் பாத் திட்டிருக்க முடியுமா குடும்பப் பொண்ணுங்க" மாமனார் முணுமுணுப்பார்.

அன்பின் திளைப்பில் இதை நான் லட்சியம் செய்யவே இல்லை. வீட்டு வேலைகளை வலியச் சென்று புன்முறு வலுடன் செய்வேன். முதல் ஆண்டு முடிந்து, இரண்டாவது ஆண்டில்தான் என் திருமண வாழ்க்கையின் சோதனை கட்டம் ஆரம்பமாயிற்று.

எனக்கு, நினைப்பிருக்கிறது. எதிர் வீட்டு பார்வதி அம்மாள், என் மாமியாரிடம் ஒரு நாள் கேட்டு விட்டார்கள்.

"ஏன் மரகதம்...உடனுடத்தாப்பல கல்யாணம் செய்து கிட்டானே என் மகன் மருதாசலம். அவனுக்கு பிள்ளை பிறந்துட்டதே..." கிண்டிவிட்டுப் போனார்கள்.

என் கணவரிடம் நான் முறையிட்ட போது, "இப்ப அதுக்கு என்ன அவசரம்? அவங்கள்ளாம் அப்படித்தான் பேசுவாங்க. விடு?" என்று சமாதானப்படுத்தினார்.

இரண்டு வருடங்கள் வெறுமையான எதிர்பார்ப்பில் ஓடிவிட்டன. சாடையாகப் பேசத் துவங்கிய என்

மாமியார், இப்போது நேராகவே வார்த்தைகளால் குத்தத் துவங்கிவிட்டார்.

"எதுக்கும் குடுப்பினை வேணும். பார்க்க ஆள் வாட்ட சாட்டமாக, அழகா இருக்காள்னு மயங்கிட்டோம். பணமும், காசும் யாருக்கு வேணும்? காய்க்காத மரத்தை வீட்ல வச்சுக்கிடணும்னு தலையில் எழுதியிருக்குது."

"ஏன்? அவங்க அப்பா வீட்ல பெரிய பணக்காரங் களாச்சுதே, போய், நல்ல டாக்டரா பாத்து சிகிச்சை செய்து கிட்டு வரது" மாமனார் தன் பங்கு சோடையில்லாமல் இடித்தார்.

நான் புகுந்த வீடும் வசதியானதுதான். குழந்தைச் செல்வம் இல்லை என்று குறைபடுபவர்களே நல்ல டாக்ட ரிடம் அழைத்துச் செல்லலாமே? சுபாவத்தில் நான் மிகவும் கோழை. மேலும், எல்லாப் பெண்களுக்கும் ஏற்படும் குழந்தை ஆசை, தாபம், பரிதவிப்பு. ஏக்கம் எப்படி வேணு மானாலும் எடுத்துக் கொள்ளுங்கள். என்னைப் பிடித்துக் கொண்டது.

ஒரு குழந்தைக்காக எந்தவிதத் தியாகத்திற்கும் நான் தயாரானேன். பிறந்த வீட்டிற்குச் சென்று என் உடலைப் பரிசோதிக்க, டாக்டரைத் தேடிப் போனேன். பெரிய அண்ணனுக்கு ஆத்திரம்... குழந்தை பிறக்கலேன்னா, குத்தம் உன்மேல மட்டும்தானா...? ஏன் மாப்பிள்ளை பேரிலயும் இருக்கலாமில்லையா? அவரையும் அழைச்சிட்டு வந்திருக் கிறதுதானே? எங்க செலவிலேயே வைத்தியம் பாத்து, அனுப்பி இருப்போமே" உறுமினார்.

பெரியண்ணி என்மேல் மிக ஆசையுடன் இருப்பவர்கள். அதனால், "எப்பவுமே, பெண்கள் மேலே இது விஷயமா, பழி சுமத்தறது நம்ம வழக்கமா போச்சு, விடுங்க. சரோஜாவை நல்ல டாக்டர்கிட்ட நாமே அழைச்சிட்டுப் போய்டுவோம்" என்றார் சமாதானமாக.

சம்பந்தம் அண்ணனுக்கு இரண்டு குழந்தைகள் மூத்தவள் மாலதி, மிக அழகான சிறுமி. அடுத்தது சேகர், படுசுட்டிப் பையன். அவர்களது பரந்த நோக்கிலிருந்து பேசுகிறார்கள் ஆனால், என் விதி...?

ஊசி, மருந்து, ஆபரேஷன் என்ற பல வேதனைகளும் சோதனைகளும் பட்ட பிறகு, "உனக்கு ஒரு குறையும் இல்லை" என்று கூறி அனுப்பி விட்டனர், டாகடர்கள்.

வீடு திரும்பியதும், "டாக்டர் என்ன சொன்னாங்க" இடிபோல் முழங்கினார் மாமியார்.

'உங்கள் பிள்ளையையும் சோதிச்சுப் பார்க்கணும்னு சொன்னாங்க.' நாக்கு நுனிவரை வந்த வார்த்தைகளை விழுங்கிக் கொண்டேன். உள்ளதைச் சொல்லிவிட்டால் என் நிலை என்னாகும்?

எட்டு வருட நரக வாழ்வு, தொடர் கதையாகத் தொடர்ந்தது. மருந்து, ஊசிகள் என் உடலெல்லாம் துளைத்தன. கத்தி படாத நாட்கள் அருமை என்ற அவஸ்தை. அதைவிட வார்த்தைகளால், என்னை அணு அணுவாக, சித்ரவதை செய்தார்கள் என் மாமனாரும், மாமியாரும்.

"போகாத கோயில் இல்லே. செய்யாத வைத்தியம் இல்லே, நம்ம தலையெழுத்து..." மாமனார் வார்த்தைகளால் சுட்டார்.

ஊரு உலகத்துல எல்லா வீட்டுலயும், குழந்தை குட்டின்னு பெருகுது. இங்கே... நானும்தான் மந்திரம், மாயம்னு செய்து அலுத்துப் போயிட்டேன், அந்த, பாலக் கரை ஜோஸ்யர் கூட அடிச்சுச் சொல்லிட்டாரே... இவ ஜாதகத்திலே, குழந்தை பிறக்காதுன்னு" என் மாமியார் அழுத்தமாக முத்திரை வைத்தபோது நான் துடித்துப் போனேன்.

மெல்ல, என் கணவரின் போக்கிலும் மாறுதல். என்னிடம் அடிக்கடி எரிந்து விழ ஆரம்பித்தார். கண்களால் உறுத்துப் பார்த்தார். வார்த்தைகளால் எரித்தார். என் அருகாமையை அதிகமாக வெறுக்க ஆரம்பித்தார்.

"ஏங்க... எனக்கு மட்டும் குழந்தை வேணும்னு ஆசை கிடையாதா? என்னை மட்டும் இந்த வேதனைக்குப் பொறுப் பாளியாக்கி விடாதிங்க" என்று கதறி அழுதேன்.

பெற்றோர்களின் தூபத்தால், அவர் மனம் கல்லாகிப் போய்விட்டிருந்தது. என் மனம் வெந்து மடிந்ததை அவர் உணராதவர் போல அலட்சியமாக இருந்தார்.

"வருஷம் எட்டு ஓடிப்போச்சு. இனிமேத்தான் பிள்ளை பெத்துக்கப் போறாளாக்கும். போதுண்டா தம்பி, பேசாம இன்னொருத்தியைக் கட்டிக்கோ. அப்பவாச்சும் எங்க மடியில பேரப் பிள்ளைங்க தவழ்ந்து விளையாடட்டும்" மாமியார் உத்தரவிட்டாள்.

"ஊர் உலகத்துல இல்லாத வழக்கமா? ஒருத்திக்குப் பிள்ளை பிறக்காட்டா, மறு கல்யாணம் கட்டறது உலக வழக்கம்தானே" மாமனார் தூண்டினார்.

இதற்கு மேல் கொடுமையான செயல் இப்போது என்னை சென்னைக்குத் துரத்துவது. என் பெரியண்ணன் மகள் மாலதி, இப்போது வயதுக்கு வந்திருந்தாள்.

"சொந்தம் விட்டுப்போகக் கூடாதுன்னா, மாலதியையே இரண்டாம் தாரமா கேட்கச் சொல்லுடா... இல்லாட்டி, இவ வாழ்க்கைதான் பாழாகப் போகுது" மாமியாரின் மிரட்டலில், சவுக்கடி பட்டது போல் தவித்து போனேன்.

"ஏங்க... நீங்க படிச்சவர்தானே. நீங்க நினைச்சது போல, நான் இரண்டாம் கல்யாணம் செய்துக்க நினைக் கறேனா..." அவரிடம் கரங்களைப் பற்றிக் கொண்டு விம்மினேன்.



"ஏன்? வேணுமானால் நீயும் செய்துக்கயேன்" என்றார் குரோதமாக.

"இப்படி அழுது அட்டகாசம் செய்தா, மனசு மாறிடும்னு எண்ணமா? போய் ஒழுங்கா, பொண்ணு கேட்டுக்கிட்டுவா" முரட்டுத்தனமாக என் கரங்களை உதறினார்.

இறைவா! என் தலையில் நானே மண்ணை அள்ளிப் போட்டுக் கொள்ளும்படி செய்துவிட்டாயே! சின்னஞ்சிறு பெண் மாலதி, என் கணவரின் வயதுக்கு, குழந்தை போன்றவள். அவளை, எப்படி என் சக்களத்தியாக...சே! அப்படி ஒரு வாழ்வு. கவுரவம் எனக்குத் தேவையா? கண் களைத் துடைத்துக் கொண்டேன்.

சென்னைக்கு திடுதிடுப்பென்று போய் நின்ற என் வரவு ஆச்சரியத்தைக் கொடுத்ததைப் போல் நான் சொன்ன செய்தி, பயங்கர அதிர்ச்சியையும் ஆத்திரத்தையும், என் பிறந்த வீட்டாருக்கு கொடுத்து விட்டது.

"உன் புருஷனுக்கு பைத்தியமா? என்ன தைரியமாக சின்னஞ்சிறு குழந்தையை இரண்டாந்தாரமாக கேட்கறான்?" பெரியண்ணா கர்ஜித்தார்.

"எனக்கு வேற வழியே இல்லை அண்ணா!" கெஞ்சி னேன் கண்ணீர் பொங்க.

"உன் ஒருத்தியைக் குடுத்தது போதாதா? இன்னொரு பலி வேற வேணுமா?" சின்ன அண்ணன் கூக்குரலிட்டார்.

"நான் அங்கே போகமாட்டேன். நல்ல தகவல் கொண்டு வந்தா தான் உள்ளே சேப்பாங்க" அலறினேன்.

"நம்ம குடும்பத்துப் பேரைக் கெடுக்கப் பாக்காதே சரோஜா, சாமர்த்தியமாக, புக்ககத்தில் பிழைத்துக்கொள்" அப்பா உபதேசித்தார்.

புக்ககத்தில் எனக்கு என்ன வரவேற்பு இருக்கும்? என் நிலை நாயினும் கேடு கெட்டதாயிற்று.

"கிடக்கறாடா... இவ வீட்டுப் பெண் இல்லாட்டி உலகத்திலியா பெண் கிடைக்காம போயிடும்" மாமியார் சவால் விட்டாள்.

என்னுடைய வாழ்க்கை நாசமாகி விடக்கூடாதென்று, நானே என் கணவருக்கு பெண் வீட்டாரிடம் சிபாரிசு சொல்லுமாறு வற்புறுத்தப்பட்டேன். பன்னிரண்டு வருட வாழ்வில் இப்போது என் கணவரைப் பங்கு போட்டுக் கொள்ள மற்றொருத்தி...!

என் மனம் புரட்சி செய்தது. என் பிறந்த வீட்டவருக்கு எழுதினேன். "கோர்ட், கேஸ்னு அலைய முடியாது. நல்லபடியா வாழத் தெரிஞ்சு கொள்ளு" பதில் வந்து விட்டது.

அபாண்டங்களைச் சுமந்து, அனாதரவாக, பிறந்த வீட்டிலும் வரவேற்கப்படாமல், புகுந்த வீட்டிலும் வாழவும் முடியாமல், சாகவும் முடியாமல், இருக்கவும் முடியாமல், என்ன வாழ்க்கை இது? ஏனிந்தக் கொடுமை?

என் மணவாழ்வைக் கல்லறையாக்கிக் கொண்டு, ஒரே வீட்டில் வாழா வெட்டியாக, அடிமையாக, வேண்டாதவளாக வாழ நேர்ந்த கொடுமை. என் வாழ்வைப் பங்கு போட வருபவளை, ஆரத்திச் சுற்றி நானே வரவேற்ற கொத்தடிமைத்தனம்....?

ஒரு பெண்ணின் வாழ்வில் இதைவிட துயரங்களும் அவலங்களும் ஏற்படப்போகின்றனவா? கண்ணெதிரே, கணவர், மற்றொருத்தியுடன் குலவிக் கொண்டு... என்



வயிறே கலங்கியது. துயரச்சுமையால் உடல் குலுங்கியது. அழுது, அழுது கண்கள் இடுங்கிப் போயின.

இது என்ன கவுரவப் பிரச்சினை? பொய்யான கவுரவத்திற்காக நடைபிணமான வாழ்க்கை. பிறந்த வீட்டிற்குப் போனால், அவர்கள் மதிக்க வேண்டுமே... அதற்காக ஒரு முறை கணவருடன் போய்விட்டு உடனே திரும்புவேன். எத்தனை நாட்கள் இப்படி ஒரு நடிப்பு.

வாழா வெட்டியாக வாழ்வதே மேல் என்ற வெறுப்பு என்னுள் தலைதூக்கலாயிற்று. என் வயிற்றெரிச்சல் தானோ என்னவோ... சக்களத்தி சுகந்திக்கு இரண்டு வருடங்களாகியும் குழந்தை இல்லை!

என் புக்ககத்து மனிதர்களின் நாக்கு, சற்று அடங்கியது. ஆனால் இனி என்ன பயன்? நான் வடித்த கண்ணீர், பட்ட வேதனைகள்... அனுபவித்த தண்டனைகள்... அம்மம்மா... எல்லாம் ஒரு குழந்தைக்காக...?

அப்போதுதான் ஒரு நாள் எனக்குள் ஒரு விழிப்புணர்ச்சி தோன்றியது. என்னைப் போல, எத்தனையோ பெண்கள் வீண்பழி சுமத்தப்பட்டு, இருட்டறையில் தள்ளப்பட்ட கைதிகளைப் போல் வாழ்கின்றார்கள்?

பெண்ணை அன்னையென்றும் சகோதரியென்றும், குடும்ப விளக்கு என்றும் ஒரு பக்கம் கூறிக் கொண்டு மறுபுறம் அவளையே குற்றம் கூறி, குறை காணும் ஆண்களுக்கு என் கதையும் ஒரு பாடமாக இருக்கட்டுமே. என்னாலும் தனித்து வாழமுடியும் என்று எடுத்துக் காட்டாக வாழ வேணும் என்ற தீவிரம், என்னைத் துரத்தியது.

எனது நகைகளை எடுத்துக் கொண்டேன். எவருக்கும் சொல்லாமல், என்னுடன் படித்த உயிர்த்தோழி சரளாவின் சென்னை விலாசத்தை தேடிப் பிடித்துப் போய் விட்டேன்.

சரளா, நர்சரிப் பள்ளி நடத்துபவள், பெண்களின் முன்னேற்றத்திற்காகப் பாடுபடுபவள்.

தோழியைக் கண்டதும், என் நெஞ்சம் வெடித்துவிடும் போல் அழுகை வந்துவிட்டது. 'ஓ'வென்று அவள் கையைப் பற்றிக் கொண்டு அழ ஆரம்பித்தேன்.

"இனிமே நீ அழக்கூடாது சரோஜா. உன்மேல் இல்லாத தப்புக்காக நீ ஏன் தண்டனை அனுபவிக்கணும். இந்த நர்சரி பள்ளிக்கூடத்திலே, உனக்கு வேலை போட்டுத் தரேன். அப்படியே தனிப்பட்ட முறையில படிச்சு பட்டம் வாங்கிக்க. உன் நகையையெல்லாம் விற்றுப் பணமாக்கி வங்கியில் போட்டுக்க. உனக்குன்னு ஒரு வாழ்க்கையை சுதந்திரமா வாழக் கத்துக்க" என்றாள் என்னை அணைத்தபடி.

"எனக்குக் குழந்தை பிறக்கும்னு ரொம்ப ஆசைப் பட்டேன்" விம்மினேன்.

"சரோஜா, உன்னோட ரத்தம், உன் சொந்தம்னு சுயநலமா நீ ஆசைப்பட்டதில தவறில்லை. ஆனா அதுக்காக, உன் கணவரோட பட்சத்தை, மற்றொருத்தியோட பங்கு போட ஒப்புக் கொண்டது பெரிய முட்டாள்தனம்."

"நான் என்ன செய்யட்டும் சரளா" அரற்றினேன் நான்.

"இந்தப் பள்ளிக்கூடத்திலே, எத்தனை குழந்தைங்க இருக்குது பாரு. அவங்க பிஞ்சு முகத்திலே உன் மனசை சந்தோஷப் படுத்திக்கிட்டு வாழக் கத்துக்கொள்ளு. அதை விட்டு வறட்டு கவுரவத்துக்காக போலித்தனமான வாழ்க்கையில் சட்டவிரோதமாக உன் கணவரை பங்கிட்டு கிட்டு வாழ சம்மதிக்காதே. நம்மளைப்போலப் பெண்கள் துணிஞ்சு முன் வந்தாதான், ஆண் பிள்ளைங்க மனசில் உண்மை உரைக்கும்" என்றாள் திடமாக.

கண்ணீரை வழித்தெறிந்து விட்ட என் மனதில், புதிய தெம்பு பிறந்தது.

□

# ஒருத்திக்கு ஒருவன்

மாலை மயங்கும் நேரம். திண்ணை விளக்கைப் போட்டுவிட்டு கையில் கதைப் புத்தகத்துடன் வெளியே வந்தேன். உள்ளே, வெங்காயக் குழம்பின் மணம், மூக்கைத் துளைத்தது. என் மனைவி, குணவதியின் சமையலுக்கே அலாதியான ருசி...! பெயருக்கு ஏற்றது போலவே சகல நற்குணங்களும் நிரம்பிய, அடக்கமான பெண் அவள்.

"அத்தான்!" மனதிற்குள் சிலிர்ப்பை ஏற்படுத்தும், அந்தக் குழந்தைக் குரல்...திடுக்கிட்டு புத்தகத்தினின்றும் முகத்தை எக்கிப் பார்த்தேன்.

என் மைத்துனி காந்தா. அழகுத் தேவதையாக சிரித்த படி, இடுப்பில் ஒரு குழந்தையுடன் நின்றிருந்தாள்.

"அடடே! காந்தாவா? எப்பம்மா வந்தே? எப்படி வந்தே? ஊர்ல எல்லாரும் சுகமா? உன் வீட்டுக்காரர் எங்கே?" என்ற கேள்விக் கணைகளுடன், உட்பக்கம் திரும்பி, "குணா! யாரு வந்திருக்கறது பாரு" உற்சாகத்துடன் கூவினேன்

திண்ணை நடைபாதையில் ஏறிய காந்தா, "சுகமா இருக்கீங்களா அத்தான்" என்றாள் கனிவாக.

அவசரமாக வெளியே வந்த என் மனைவி, "வா வா... என்னது, நீ மட்டும் புறப்பட்டு வந்திருக்கே?" என்றபடி அவள் கையைப் பற்றினாள்.

"அவருக்கு, ஆசிரியர் பயிற்சி முகாம் போக வேண்டியிருந்திச்சு, தனியா நீ மட்டும் இருப்பானேன். பிறந்த வீட்டுக்குப் போய்வான்னாரு" சிரித்தாள் காந்தா.

"அதான், உன் சுபாவப்படி பறந்தோடி வந்திட்டயாக்கும்" கேலி செய்தபடி, குழந்தையை ஆவலுடன் வாங்கியவன், "போங்க, அக்காளுக்கும், தங்கச்சிக்கும் பேச நிறைய இருக்கும். எனக்குப் பேச்சுத்துணை இந்தக் குட்டி பயல்" என்றேன் உரிமையுடன்.

சகோதரிகள் இருவரும் உரக்கச் சிரித்தபடி உள்ளே சென்றனர். திண்ணை மீது குழந்தையுடன் வந்தமர்ந்த என் மனதில்...அந்தப் பழைய சம்பவங்கள், நினைவலைகளாக மிதக்கலாயின.

வரகூர் என்றால் தெரியுமா உங்களுக்கு? சேலத்தில் வளம் கொழிக்கும் ஒரு கிராமம். அங்குதான் நான் பள்ளி ஆசிரியராகப் பணி செய்து வருகிறேன். எனது சொந்த கிராமம் சேத்தூர். இருப்பினும், மலைப்பாங்கான சாலையற்ற அந்த வரகூர் கிராமத்து ஆசிரியர் வேலை எனக்கு மெத்தப் பிடித்தது.

உள்ளூரிலேயே குணவதியைக் கைப்பிடித்தேன். நான் பெண்ணெடுத்த குடும்பம், மிகப் பெரியது. பாட்டி, தாத்தா, அப்பா, அம்மா, தம்பி, தங்கைகள் என ஏழு ஜீவன்கள் கொண்ட குடும்பம், அன்றாடம் தோட்ட வேலையோ அல்லது கூலி வேலையோ செய்து பிழைத்தால் தான் ஒரு வேளைக் கஞ்சிக்கு வழி கிடைக்கும். பற்றாக் குறை நிலை.

பள்ளி ஆசிரியரான எனது பகுத்தறிவு உணர்வு விழித்துக் கொண்டது. "அன்னவாசல் ஆயிரம் கட்டல் அதனினும் மேலாம் ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்" என்றானே பாரதி. அதை மிக தீவிரமாக செயல்படுத்தத் துவங்கினேன்.



மைத்துனர்களைப் படிக்க வைக்க உதவி செய்தேன். மைத்துனிகளுக்குப் பெண் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்த்தினேன். வீட்டிற்கு வேண்டிய துணிமணிகள், சில ஆடம்பரப் பொருட்கள் என்று வாங்கி குவித்து, அவர்களை ஏழ்மையின் பிடியினின்றும் கரையேற்ற முழு முயற்சி எடுத்துக் கொண்டேன்.

என் மாமனார் வீட்டிற்குச் சென்றால் ஒரே ராஜ மரியாதை எனக்கு. "மருமகப்பிள்ளை தங்கக்கட்டி, இவரைப் போலக் கிடைக்கறதுக்கு நாங்க பெரிய குடுப்பினை செய்துருக்கோம்" என்பார் மாமியார்.

"வெளியே சொல்லாதே, கண்பட்டுடப் போகுது" தாத்தா அதட்டுவார் வேடிக்கையாக.

"அத்தான், நீங்களும் பள்ளி ஆசிரியர்தானே, இந்தக் கணக்கைச் சொல்லிக் குடுங்க." மைத்துனர்கள் சந்தேகம் கேட்பார்கள்.

"அத்தான்! நம்ம ஊர் 'டூரிங் டாக்கிஸ்'லே, கமல் படமாம்...பார்க்கணும்" காந்தாவும், அவள் தங்கை மீனாவும் என்னைத் தூண்டி விடுவார்கள். அன்று குடும்பம் முழுதும் என் செலவில் சினிமா விழா நடத்திக் கொண்டாடுவார்கள். வயிறு நிறைய சாப்பிட்டு விட்டு, மனம் நிறையப் பேசிச் சிரித்தபடி வீடு திரும்புவோம் நானும், குணவதியும்.

இயல்பாகவே நான் அரட்டை அடிப்பதில் சாமர்த்தியசாலி. வேலையும் ஆசிரியர் வேலை. பேசுவதற்குக் கேட்கவேணுமா? சதா, சிரிப்பும், வேடிக்கையுமாகப் பேசுவேன். என் மனைவிக்கு என்னைப் பற்றி மிகப் பெருமை.

"அத்தான் இருக்கிற இடத்திலே, கலகலப்பாக இருக்கும்" என்பாள்.

இப்படி, உற்சாகமாகப் பேசியபடி இருந்த எங்கள் வாழ்வில் திடீரென்று ஒரு விரிசல் விழ ஆரம்பித்து விட்டிருந்தது.

காந்தா எட்டாம் வகுப்பு முடித்த சமயம், வயதுக்கு வந்து விட்டிருந்தாள். அவள் பேச்சில் மட்டுமல்ல படிப்பிலும் வெகு சுட்டி. ஆனால் கிராமத்து வழக்கப்படி வயதுக்கு வந்த பெண்ணைப் பள்ளிக்கு அனுப்ப மறுத்து விட்டார்கள் என் மாமனாரும், மாமியாரும்.

"நீங்க சொல்லுங்க அத்தான்! இனிமே நான் மேல படிக்கக் கூடாதாம். அம்மா சொல்றாங்க" காந்தா, என் கைகளைப் பற்றி உரிமையாகக் கேட்டாள்.

அந்த வீட்டு மருமகப் பிள்ளையானது முதல் சிறுமியான காந்தா மீது எனக்கு மட்டற்ற பாசம் உண்டு. அவள் எது கேட்டாலும் செய்து கொடுத்து விடுவேன்.

"அத்தான் கிட்ட ஏதாச்சும் காரியம் நடக்கணு முன்னா, நம்ம காந்தாவை ஏவி விட்டா போதும்" என்று மைத்துனன்மார்களும், மற்றவர்களும் விளையாட்டாகப் பேசுவதுண்டு.

அந்த அருமை மைத்துனிக்குப் படிப்பு கெட்டுப் போகிறது என்று நான் தவித்துப் போனேன்.

"நீ ஏன் கவலைப்படறே காந்தா, நான் அப்பாகிட்ட சொல்லி, உன்னை மேற்கொண்டு படிக்க வைக்கிறேன்" என்று அவளை சமாதானப் படுத்தினேன்.

அவள், பின்னும் என் பக்கம் நெருங்கி உட்கார்ந்தபடி "அத்தான்! என்னை ஏமாத்திடாதீங்க" என்றாள் மீண்டும்.

"அவகிடக்கறா கூறுகெட்டவ. பொட்டப்பிள்ளை. வயசுக்கு வந்தாச்சு இனிமே என்னப் படிப்பு வேண்டிக் கிடக்குது" தாத்தா கத்தினார்.

"பேசாம எவனையாவது பாத்து கட்டிக்குடுத்திட வேண்டியதுதான்" மாமியார் கண்டிப்பாகக் கூறினாள்.



நான் மட்டும் காந்தாவின் கட்சியில் வாதாடினேன். "இதப்பாருங்க, பெண்ணுக்கு தன் சுயதேவையைப் பூர்த்தி செய்துக்கக் கூடிய கல்வி அவசியம் குடுக்கணும்."

"மருமகப்பிள்ளை? நீங்க எங்க குடும்பத்துக்கு தெய்வம் போல.... ஆனா... வயதுக்கு வந்தவளை படிக்க அனுப்பறது நம்ப குடும்ப வழக்கம் இல்லே" என்று மாமனார் தயவாக மறுத்தார்.

நான் முன் வைத்த காலைப் பின் வைக்கவில்லை. காந்தாவை, தையல் பயிற்சி வகுப்பு ஒன்றில் சேர்த்து விட்டேன்.

"உன்னோட திறமையைப் பத்தி அவங்களுக்கு தெரியவே இல்லே காந்தா. நீ திறமைசாலிதான்னு நிரூபிச்சுக் காட்டணும் என்ன?" அன்புடன் அவளது தோளில் தட்டிக் கொடுத்தேன்.

என்னை நிமிர்ந்து பார்த்தவளது கண்களில் ஒரு ஒளி. "அத்தான்! எனக்கு ஆசி கூறுங்க. என்னோட வாழ்விலே நீங்க ஒரு வழிகாட்டும் தெய்வம்" என்றாள் தொண்டை தழுதழுக்க. அப்போது அதை நான் மிகப் பெருமையாக கருதினேன். என் மாமனார் குடும்பத்தினரிடம், எனது கவுரவத்தின் உச்சிக்கே போய்விட்டதற்காகப் பெருமையுடன் நிமிர்ந்து நடந்தேன்.

ஆறே மாதத்தில், தையற்கலையைக் கற்றுத் தேர்ந்து விட்டாள் காந்தா. "அத்தான் இப்ப என்ன சொல்றீங்க" என்றபடி ஓடிவந்து என் கையைப் பற்றிக்கொண்டு குதிக்கத் துவங்கினாள்.

"இன்னும் சின்னப்பிள்ளை சுபாவம் உன்னை விடறதே இல்லை..." பரிகசித்து நான் அவளுக்கு எதிர்பாராத மகிழ்ச்சியான செய்தி ஒன்றையும் தெரிவித்தேன்.

"உனக்குத் தையல் மிஷின் ஒண்ணு வாங்கிட்டேன். இன்னும் ரெண்டு நாள்லே வீட்டுக்கு வந்திடும். நல்லா தச்சுக்

சூடு, அதையே ஒரு தொழிலா வச்சுக் கொள்ளு. பிழைச்சுக் கொள்வே.''

யாவரும் பிரமித்து விட்டனர். ''உங்களுக்கு எத்தனை நல்ல மனசு?'' என்ற புகழ்ச்சியில் என் உச்சி குளிர்ந்து போய் விட்டது.

''உன் அக்காவுக்கு, அழகா, அளவெடுத்து ரவிக்கை தச்சுக் குடுத்துடும்மா காந்தா, இல்லாட்டி அவ கோவிப்பா'' என்றேன் வேடிக்கையாக.

காந்தா, விதம் விதமாகத் தைப்பாள். வேடிக்கையாகப் பேசுவாள். ஏதேனும் வேலை அதிகமாக இருந்து, அன்று நான் போகவில்லையென்றால், ''போங்க அத்தான். நீங்க ஏன் வராம இருந்தீங்க, உங்ககூட நான் பேசப்போறதில்லே'' என்று உரிமையுடன் சிணுங்குவாள்.

''மருமகப் பிள்ளை! ஒரு நாளைக்கி, ஒரு வாட்டியாவது உங்களைப் பாக்கலேன்னா, நம்ம காந்தாவுக்குத் தூக்கமே வராது போங்க'' என்ற பெரியவர்களும் குறிப்பிட்டு வேடிக்கை செய்யும் அளவு காந்தா மிக நெருக்கமாகப் பழக ஆரம்பித்திருந்தாள்.

''முந்தா நாளு, தங்கச்சிக்கு தைச்சது இந்தப் பாவாடை நல்லாயிருக்கா, சொல்லுங்க அத்தான்'' என்பாள்.

''குணவதி அக்காவுக்கு ரவிக்கை தைக்கணும். துணி வாங்கிட்டு வாங்க'' என்று உத்திரவிடுவாள்.

அவளது பேச்சும், தையலுமாக, மெய்மறந்திருந்த சமயம் தான் அந்த நிகழ்ச்சி நடந்தது.

ஒரு நாள், வழக்கம் போல மனைவியும் நானும் மாமனார் வீட்டுக்கு விஜயம் செய்திருந்தோம். காப்பி பலகாரம் என்று உபசரிப்பு நடந்திருந்தது. இப்போது காந்தாவிற்கு தையல் மூலம் கொஞ்சம் வருவாய் கிடைத்ததன் எதிரொலி இந்த உபசாரம் என்று புரிந்துகொண்டேன்.



காந்தா என் அருகிலேயே உட்கார்ந்தபடி, ''அத்தான் அப்படியே எழுந்து நில்லுங்க'' என்றாள் அதிகாரமாக.

எழுந்தேன்: ஓடிச்சென்று தையல் அளவு நாடாவை எடுத்து வந்து, என்னை அளக்கத் துவங்கினாள். மார்புச் சுற்றளவை எடுத்தவள், ''ஏயப்பா! உங்களுக்கு, ரொம்ப விசாலமான மனசுன்னு நினைச்சேன், மார்பு கூடத்தான்'' என்றபடி என்னைப் பார்த்தாள் கண்கள் மின்ன.

அவளது பார்வையில் திடும்மென ஒரு வேற்றுமை. ஒரு கணம் நிலை தடுமாறிப் போனேன். ''என்ன இது? குழந்தையைப் போலக் கருதிப் பழகிவரும் இந்தப் பெண்ணுக்கு என்ன ஆயிற்று? மனதிற்குள், எந்தக் கள்ளன் புகுந்து கொண்டான்? ஏன் இப்படி என்னையே தாபத்துடன் பார்க்கிறாள்?'' நெளிந்தேன் நான்.

அடுத்த கணம் பட்டென, அவளது கைகளை உதறினாள் குணவதி. கண்களில் கனல் பறக்க, ''போதும்படி நிறுத்திக்க. வர, வர, வயசாச்சுதே தவிர, மானம் மரியாதை எதுவுமே தெரியலே. இன்னொருத்தனைக் கட்டிக்கப் போற பொண்ணு, இப்படி அத்தானைத் தொட்டுக் கொஞ்சறியே அசிங்கமா இல்லே!'' என கர்ஜித்தாள்.

மற்ற பெரியவர்கள் எவரும் வாயைத் திறக்கவில்லை. ஒருவேளை, வரதட்சணைக் கொடுமை, அது இது என்று, பெண்ணின் கல்யாணத்திற்குத் திண்டாடாமல் எனக்கே காந்தாவைக் கட்டி வைத்துவிடலாம் என்ற எண்ணமோ என்னவோ. நான் அவமானத்தால் குறுகிப் போனேன்.

காந்தா, 'ஓ'வென்று அழுதபடி, உள்ளே ஓடினாள். ''ஏய் காந்தா? என்ன இது?'' என்று நிலைமையை சமாளிக்க, பின்னால் போக முயன்ற என்னை எரிப்பது போல் பார்த்தாள் என் மனைவி. பொறுமையின் கடல் கொந்தளித்து எழுந்தது போல இருந்தது.

"நில்லுங்க, நேரமாச்சு, நம்ம வீட்டுக்குப் போகலாம்." யாவரும் வாயடைத்து நிற்க நாங்கள் புறப்பட்டோம்.

அந்த சம்பவத்திற்குப் பிறகு, சந்தேகம் என்ற பூதம், என் மனைவியை ஆட்டிப் படைக்கத் துவங்கியிருந்தது.

"பள்ளிக்கூடம் முடிஞ்சு, ரெண்டு மணி நேரம் ஆயிட்டுதே. ஏன் இவ்வளவு நேரம் வீடு திரும்ப?" என்று அதட்டுவாள். பிறந்த வீடு என்றாலே பறந்து ஓடும் அவள் அந்தப் பெயரையே மறந்தவள் போலக் காணப்பட்டாள்.

மாமனார் வீட்டினரோ, சதா எனது உதவியையும், அறிவுரையையும் நாடுபவர்கள். எனது பாராமுகத்தால் தவித்துப் போனார்கள்—

ஒரு நாள், பெரிய மைத்துனன் வேலு, பள்ளிக்கூடத் திலேயே, என்னைத் தேடி வந்துவிட்டான்.

"அத்தான்! அக்காவும், நீங்களும் வராம வீடே சூன்யம் பிடிச்சாப்போல இருக்கு. உங்க வீட்டுக்குப் போனா, அக்கா முகத்தை திருப்பிக்குது. தயவு செய்து வாங்க," என்றான் துயரத்துடன்.

வயதான தாத்தா, தள்ளாடியபடி மற்றொரு நாள், பள்ளிக்கூடம் தேடிவந்தார். "மருமகப்பிள்ளை! காந்தா, அன்னம் தண்ணீர் இல்லாம அழுதுகிட்டே கிடக்குது. ஊர் உலகத்தில் ரெண்டாந்தாரமா, அக்கா, தங்கச்சி வாழற தில்லியா? அதுக்கு நீங்கன்னா உசிரு, பேசாம கட்டிப் போடுவோம். கொஞ்ச நாள் அக்காக்காரி, முரண்டு பிடிப்பா. பிறகு, தங்கச்சிதானே சக்காளத்தின்னு சமாதானமா போயிடுவா" என்று ஒரு குண்டை வீசிவிட்டுப் போனார்.

"இப்படி ஒரு எண்ணம் உண்மையாகவே ஏற்பட்டு விட்டதே!" திடுக்கிட்டுப் போனேன் நான். குழந்தை போலப் பழகி வந்தவளை, கொண்டவளாக்கிக் கொண்டு...



சே! சே! ஊருக்கு உபதேசம் செய்யுமாம் பல்லி காடியில் விழுமாம் துள்ளி என்பதுபோல பள்ளி ஆசிரியனான நான், பிறருக்கு நல்லதைச் சொல்லி வரும் புனிதமான தொண்டு செய்யும் நான், ஒருவனுக்கு ஒருத்தி என்ற நியதியையும் நீதியையும் எடுத்துக் காட்டுவதல்லவா முறை.

கணவன் மனைவி என்ற அன்புப் பிணைப்பை கூறு போட்டு விற்கும் கடைச் சரக்காக்க முடியுமா?

பல நாட்கள் சிந்தித்தேன். அடுத்த ஊரில் என்னைப் போலவே ஆசிரியர் பணியில் ஈடுபட்டிருக்கும் இளைஞன் நாகநாதன் நினைவு வந்தது.

அட! இத்தனை நாள் தெரியாமல் போச்சே. கையில் வெண்ணையை வைத்துக் கொண்டு நெய் வாங்கத் தேடுவார் உண்டா?

ஒரு நாள் மாலை...நான் உற்சாகத்துடன் வீடு திரும்பி னேன்.

குணா! நம்ப காந்தாவை பெண் கேட்க ஏற்பாடு செய் திருக்கிறேன். என்னைப் போல அவனும் ஆசிரியர். நீ பழம், பாக்கு, வெற்றிலை—பூ விதங்களுடன் விரைவில் கிளம்பணும் ...ஏன்னா நாமதான் பிள்ளை வீட்டுக்காரங்க-அந்த பையனுக்கு யாரும் கிடையாது."

குணவதி பிரமித்துப் போய் நின்றாள்—அவளால் சட்டென்று பேச முடியவில்லை. "குணா! நீ என்னை தப்பாகவே புரிஞ்சிக் கொண்டிருந்தே...அதனால் தான் சில நாட்களா என் கிட்டே வித்யாசமா நடந்துகிட்டே—நான் பாராட்டலை.

"என்னைப் பொறுத்தவரை என் மனதில் நீ ஒருத்தி தான் மனைவி....என்றும் அதே நிலைதான். உன் தங்கச்சி காந்தாவுக்கு இப்போ ரெண்டும் கெட்டான் வயது. பழகி பேசுகிற முதல் ஆண் மகனைக் காதலிப்பதாக ஒரு தவறான உணர்வு குழப்பம். இதை இன்பாச்சுவேஷன் அதாவது

வாலிபக் கவர்ச்சி என்பாங்க...காந்தா சின்னப் பெண் விவரம் தெரியாம என்கிட்ட நெருங்கிப் பழக முயற்சி செய்தா—ஆனால் நான் விவரம் கெட்டவனா? சொந்த மகள் போல நினைச்சு அன்பா இத்தனை நாளும் பழகிட்டு திடீர்னு அவளை என் தாரமாக்கிக்குவேனோ—அப்படிப் பட்ட தரங்கெட்டவனா உன் கணவன்?''

குணவதியின் கண்கள் கலங்கின...''என்னை மன்னிச் சிடுங்கோ அத்தான். உங்களைத் தப்பா நினைச்சு நெருங்கிப் பழக அணுகின என் தங்கச்சியையும் மன்னிச்சுடுங்கோ...'' விசும்பியபடி என் தோளின் மீது சாய்ந்தாள் என் மனைவி.

''கல்யாணம் பேசப்புறப்படும் சமயம்கண்கலங்கலாமா...'' அவளது கன்னத்தை செல்லமாகக் கிள்ளி சிரிக்க வைத்தேன். சந்தேகத்தின் சாயை படிந்து சாம்பி விட்டிருந்த அந்த முகத்தில்...சிரிப்பு மலர்வதைக் கண்டு என் மனதில் எத்தனை மகிழ்ச்சி...நிம்மதி.

கலகலவென சிரிப்பு—திடுக்கிட்டு விழித்தவன் மடியி லிருந்த குழந்தையைப் பார்த்தேன்.

''அக்கா! அத்தானைப் பாரு—மடியிலே குழந்தையைத் தூங்க வச்சுகிட்டு...அவரும் உட்கார்ந்தபடியே தூங்கிப் போயிருக்காரு நல்ல காவல் தெய்வம்!'' உரக்கக் கத்தினாள் காந்தா...

உள்ளேயிருந்து ஓடிவந்த என் மனைவி...என்னைப் பார்த்து புன்னகைத்தாள்.

□

# தங்கக் குடம்

தையல் மிஷினில், கால்கள் ஓடி ஓடி, பின்பக்க முது கெலும்பு வரை வலி பரவி விட்டிருந்தது. கால் மிஷின்தான் எனக்குத் தைக்க வசதி என்று வாங்கிப் போட்டதன் பலன், இப்போது சொல்லவும் முடியாமல், மெல்லவும் முடியாமல் அனுபவிக்க வேண்டியிருக்கிறதே? மிஷின் மட்டுமா? என் வாழ்க்கையும் கூடத்தான்.

வாய் ஓயாமல் இருமியபடியே உள்ளே வந்தார் என் கணவர். ''ஆபீசுக்கு நேரமாயிட்டுது. அந்த சட்டையை எடு.'' என்றார் இருமலுக்கிடையே.

''கொஞ்சம் பனங் கல்கண்டையாவது வாயிலே அடக்கிக் கொள்ளக்கூடாதா? ஓயாம இருமினா உடம்பு என்னத்துக் காகும்?''

''விறகுக் கடைக்காரனுக்கு பிளவை வந்தா விறகுக் கட்டையாலயே ஒரு அடின்னு கேட்டதில்லே...நமக்கெல் லாம் வியாதி வந்தா, மருந்து சாப்பிட்டுக் கட்டுபடியாகுமா! பனங்கல்கண்டு கூட மருந்து பண்டம்தான்'' அலுத்தபடியே சட்டையை வாங்கி மாட்டிக்கொண்டு வெளியேறிவிட்டார்.

தீபாவளி நெருங்கி வருகிறதே! வந்து 'ஆர்டர்' குவிந்த துணிகளை ஓயாது தைத்து, முதுகும் காலும் விண்டுபோகும் நிலை. சிறிதாவது ஓய்வெடுக்காவிட்டால் முடியாது. தைத்த வற்றை அந்தந்த அளவுகளுடன் வகை பிரித்துக் கட்டி வைத்தேன்.

மெல்ல அருகிலிருந்த பெஞ்சு மீது காலை நீட்டிப் படுத்தேன். கண்கள் மூட மறுத்தன. பழைய சம்பவங்கள் நெஞ்சுக்குள்ளே நர்த்தனமிட்டன.

என் தந்தை தலை சிறந்த அரசியல்வாதியாக வாழ்ந்தவர். பிறருக்கு சேவை செய்வதில்தான், மனிதனின் மகிழ்வும், அமைதியும் இருக்கிறது என நம்பி வாழ்ந்தவர். அவரது மூத்த மகள், அருமையும், பெருமையுமாக வளர்ந்த என்னை, மாமன் மகனான, இவருக்குக் கட்டி வைத்தார்கள்.

என்னைத் தவிர, குடும்பத்தில் தம்பிகளும், தங்கைகளும் இருந்தனர். சொந்தம் என்று மட்டுமின்றி, வீட்டில் ஒரு மகனைப் போலவே, என் கணவர் பழகி வந்தார். அவருக்கு பெரிய படிப்பு, பதவி என்றெல்லாம் இல்லைதான். ஆனாலும் தங்கமான குணம். தாராளமான மனம் இருந்தது.

பிரபலமான துணிக்கடையில் கணக்கெழுதி வந்த வருமானம்தான். ''ஜகதா? தம்பி வந்திருக்கு பாரு. ஓடிப் போயி, ரெண்டு கலர் வாங்கிட்டு வா. அவனுக்குப் புடிக்குமே'' என்பார்.

என் தங்கச்சிகள் வந்துவிட்டால் கேட்கவே வேண்டாம். துணிக்கடையில் அவரது கணக்கில் பற்று வரவு வைத்துவிட்டு, துணிமணிகள் எடுத்து வருவார்.

''எதுக்காக இப்படி செலவாக்கறீங்க'' என்று நான் கடிந்து கொள்வதுண்டு.

''போகட்டும். எனக்குத் தங்கச்சி இருந்தா செய்ய மாட்டேனா...'' என்பார் அலட்சியமாக.

எங்களின் மனம் நிறைந்த வாழ்வில் ஒருகுறை, பல வருடங்கள் ஓடிவிட்டன. தம்பிகள் படித்துப் பெரியவர்கள் ஆனார்கள். தங்கச்சிகள் திருமணமாகி, குழந்தைகளைப்



பெற்றுக்கொண்டார்கள். அப்பா, தேர்தலில் நின்று கைசளைத்துப் போனார். நாங்கள்...இப்படியே இருவராக நின்றோம். பெயர் சொல்ல ஒரு பிள்ளை!

''பெற்றால்தான் பிள்ளைங்களா? விடு...நமக்குக் குடுப்பினை அவ்வளவுதான்'' சமாதானப் படுத்தினார் என் கணவர்.

என் தகப்பனார் தமது அரசியல் தோல்விக்குப் பிறகு, மனமும் உடலும், நொடிந்துப் போனவர் பிறகு மீளவே இல்லை. என் குடும்பத்தை முன்னுக்குக் கொண்டுவர அரும்பாடுபட்டார் என் கணவர்.

தங்கச்சிகள், தம்பிகள் என்று பாடுபட்ட பிறகு ஒரு நாள் அவர் சொன்னார். ''ஜகதா! குழந்தை இல்லியேன்னு வருத்தப்படாதே. தங்கச்சி குழந்தைங்கள்ளே ஒண்ணை நாமே வளர்த்துப் படிக்க வைப்போம். உனக்கு குறை நீங்கிடும்'' என்றார். காய்க்காத மரமாகி நிற்கிறோமே என்று அதுகாறும், மனதினுள் குமைந்து கொண்டிருந்த எனக்கு இது, அருமருந்தாகத் தோன்றியது.

ரத்னா எங்கள் குழந்தையாக வளரத் துவங்கினாள் ''நாம பட்ட கஷ்டம் நம்ம குழந்தைக்குக் கூடாதுங்க நல்லபடியா படிக்க வைக்கணும்'' என்றேன் நான். அவரும் ஆமோதித்தார்.

கான்வெண்ட் படிப்பு. முடமுடக்கும் சீருடையில் ரத்னாவை அலங்கரித்துப் பள்ளிக்கு அனுப்பும் பொழுது பெருமிதத்தால் என் மார்பு விம்மியது. ரத்னாவிற்காக எங்கள் சக்திக்கும் மீறி செலவிட்டோம்.

''அவ நம்ம குழந்தை ஜகா! நாளைக்கு படிச்சு பெரிய ஆபிஸராயிட்டா, நம்மளை அவதானே பாத்துக்கப் போறா'' என்பார் அவர் கர்வம் பொங்க.

"அம்மா! உங்களை உக்காத்தி வச்சு சோறு போடடறே னம்மா" என்று ரத்னா, மழலை மொழியில் கூறும்போது உச்சி குளிர்ந்து போவேன் நான்.

ரத்னா மெட்ரிக் முடிக்கும் சமயம், எதிர்பாராத நிகழ்ச்சி நடந்தது. எனது முப்பத்தைந்தாவது வயதிற்கு மேல் எனக்குத் தாய்மைப் பேறு கிட்டியது.

மகிழ்ச்சியும், வெட்கமும், ஆவலுமாக நாட்களைத் தள்ளினேன். ரத்னா பரீட்சை பாஸ் செய்துவிட்டு தனது பெற்றோர்களைப் பார்க்க ஊருக்குப் போய்விட்டிருந்தாள். என் குலம் விளங்க அழகான, சிவப்பான, ஆண் குழந்தை; என் கணவரைப் போலவே பிறந்த போது நான் மெய் சிலிர்த்துப் போனேன்.

நாங்கள் செய்த தருமங்கள் வீணாகவில்லை. மற்ற வருக்கு அளித்த கல்விப்பயன்கள் நலிந்துவிடவில்லை. நல்ல தொரு மகன் பிறந்தான் என அகமகிழ்ந்து போனேன்.

ஆனால் என்ன கொடுமை? குழந்தைக்கு மூன்று வயதாகியும் பேசாது இருந்ததைக் கண்டு நாங்கள் பயந்து போய் டாக்டரிடம் காட்டியதில் பேரிடி ஒன்று எங்கள் மீது விழுந்தது. துடித்துப் போனோம். ஆம்! தவமிருந்து பெற்ற எங்கள் மகன் ஒரு செவிட்டுமை.

மற்ற குழந்தையை அலங்கரித்துப் பள்ளிக்கு அனுப்பி அழகு பார்த்த என் கண்கள், எனது மகனை சீருடையில் சிங்காரித்துப் பள்ளிக்கனுப்பி அதைப் பார்த்து மகிழ முடியாத பாவத்தை செய்தது ஏன்? ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும் என்பார் களே? என் பிள்ளை ஊனமுற்றவனாகப் போனது ஏன்? எழுத்தறிவித்தால், கோடி புண்ணியம் என்பார்களே.... இந்தப் பாவத்தை எனக்கு ஏன் ஆண்டவன் வைத்தார்?

கதறினேன். 'தற்கொலை' செய்து கொண்டு விடுவேன் என்று புலம்பினேன். உலகமெல்லாம் முட்களாகத் தோன்றின.



"ஜகதா! கவலைப்படாதே. நம்ம பொண்ணு இருக்கா, அவளோட தம்பியைக் கட்டாயம் அவ கவனிச்சுக்குவா" ஆறுதல் கூறினார் என் கணவர்

என் தங்கைக்கு எனது துயரையெல்லாம் கொட்டி யளந்து கடிதம் எழுதிப் போட்டேன். ரத்னா மேலே படிக்க, கல்லூரியில் இடம் பிடித்து வைக்கிறோம் என்றும் குறிப்பிட்டிருந்தோம்.

வந்தது ரத்னாவல்ல. கடிதம் மட்டுமே. "அத்தான் இப்போது இருக்கும் கஷ்டதசையில், ரத்னா மேற்கொண்டு படிப்பை எங்களிடம் தொடருவதே நல்லது" தங்கச்சி ரத்னா சுருக்கமாக எழுதி இருந்தாள்.

எங்களது வாழ்க்கைப் போராட்டம் ஆரம்பமாகியதும் தம்பிகள் குடும்பத்திடம் உதவிகோரி எழுதினேன். பதில் இல்லை. ரத்னா, பெற்றோரிடம் ஒட்டிக் கொண்ட பிறகு, வெட்டிக் கொண்டவள் தான். வளர்த்த பாசம்கூட பணம் என்று வந்தவுடன் மறைந்துவிடும் போலும்.

எங்கள் மகன் செல்வம், வளர்ந்தான். ஊருக்கெல்லாம் வாழ்வு கொடுத்த அரசியல்வாதியின் பேரன், உயிர் வாழ வழியின்றித் தடுமாறினான். என் மனம் சுக்கு நூறாக சிதறிவிடும் போலாயிற்று.

உலகத்திலே நன்றி என்ற பதத்திற்கே பொருள் இல்லாமல் போய்விட்டதா? ஒரு காலத்தில், "அக்கா, அத்தான்" என்று ஆசை காட்டி வளைய வந்த உறவினர்கள் இப்போது, எங்களுக்கு ஆபத்து என்றதும் விலகி ஓடிவிட்டது எதனால்?

பல நாட்கள் சிந்தித்து, சிந்தித்து மனம் புண்ணாகியது. முன்போல, கடையில் கணக்கெழுதும் வேலையில் சுறுசுறுப் பாக இயங்க முடியாத நிலையில், என் கணவரது வருமானமும், பற்றாக் குறையாக நின்றது. "நெடுநாளாக

உழைக்கிறாரே'' என்ற தயவுடன், அந்தத் துணிக் கடைக் கார முதலாளி, அவரை வேலையில் வைத்திருந்தார்.

எங்களது அருமை மகன், மற்ற குழந்தைகளைப் போல் பேசி, "அம்மா'' என்று கூறி மகிழ்விப்பானா என்று வேண்டாத தெய்வம் இல்லை. போகாத டாக்டர்கள் இல்லை.

முடிவில், மனதைத் திடப்படுத்திக் கொண்டு, அவனை செவிட்டுமை பள்ளியில் சேர்த்தோம்.

"ஜகதா! நம் கைதான் நமக்கு உதவின்னு புரிஞ்சு கொள்ளு. எப்பாடுபட்டாவது நாம பெத்த குழந்தைக்கு ஒரு வாழ்வு குடுக்கணும். அது நம்ம கடமை'' என்றார் என் கணவர்.

எல்லோருக்கும் உதவிய கை இப்போது, என் குழந்தைக் காகப் பிச்சையேந்தி, உதவி கோரிப் போவதா? கூடாது, கூடாது. என் மனம் விரிட்டது. அப்போது தான் என் மனதில் அந்த யோசனை ஏற்பட்டது.

அசதி, வயது யாவற்றையும் ஒதுக்கித் தள்ளினேன். மனதின் வீம்பு தலை தூக்கியது. அருகிலிருந்த தையற் பள்ளியில் ஆறு மாதப் பயிற்சி. பிறகு, தவணை முறையில் இந்த தையல் மிஷின்.

மனிதர்களின் தசையாலான இதயங்களை விட, இந்த இயந்திரத்தின் இரும்பு பாகங்கள் நம்பிக்கைக்கு உகந்தவை சந்தேகமில்லை. எனது மகனைப் படிக்க வைக்க, என் குடும் பத்தின் பற்றாக் குறையைப் போக்கும் பிணிதீர்க்கும் பணியை அது ஓயாமல் செய்து வருகிறது.

"போஸ்ட்!'' தொப்பென்று கூடவே விழுந்த கடிதத்தை எழுந்து சென்று எடுத்தேன். பழக்கமான எழுத்து. ஆம்; ரத்னாதான் எழுதியிருந்தாள்.

பட்டப்படிப்பு முடித்து வேலையில் அமர்ந்தாகி விட்டாளாம். கூடவே வேலை செய்யும் ஒருத்தனைத்



திருமணம் செய்து கொள்ளப் போகிறாளாம்' சேலைகள் வாங்க டவுன் பக்கம் வரும்போது அவசியம் பெரியம்மா, பெரியப்பா ஆசீர்வாதம் வாங்க வருவாளாம்.

பெருமூச்சு விட்டேன் நான். என்ன ஆசி வழங்குவது? உதவி என்று உன்னைக் கேட்டு எழுதிய போது, மௌன மாக இருந்தாளே அதற்காகவா? வளர்த்து ஆளாக்கிய கடா, மார்பிலே பாய்ந்தது போல, செய்த துரோகத்தைக் காட்டியா?

கடிதத்தைக் கணவரின் பார்வையில் படும்படி வைத்து விட்டு, மீண்டும், தையல் மிசினருகில் அமர்ந்தேன்.

இரவு வீடு திரும்பியவர் கேட்டார். "ஜகதா! நாளைக்கி, நம்ம கணக்கில் ஒரு நல்ல நூல் சேலை எடுத்திட்டு வரேன். கூடவே ரவிக்கைத் துணியை வச்சுக் குடுத்திடு அதுதானே நல்லது.''

"என்னங்க இதெல்லாம் கட்டுப்படியாகாதுங்க'' பதறி னேன் நான்.

இரண்டு நாட்கள் சென்றதும், சொல்லி வைத்தாற் போல ரத்னாவும், தங்கையும் வந்தார்கள்.

காப்பி உபசரிப்புக்குப் பிறகு, தங்கை முந்திக் கொண்டாள். "என்ன செய்யறது அக்கா! ரத்னா தினமும் உன்னையே நினைச்சுட்டிருக்குது. ஆனா, அவ சம்பாதிச்சது சேத்துவச்சதெல்லாம், வரதட்சணை, கல்யாண செலவுன்னு வச்சிருக்கோம்.''

நான் அசட்டையாக முறுவலித்தேன். "பெரியம்மா! நீங்களும், பெரியப்பாவும் அவசியம் கல்யாணத்துக்கு வந்திடணும்னு நேரா, நானே கூப்பிட்டுப்பிட்டுப் போக லாம்னு வந்தேன். என்னை ஆசிர்வதிங்க!'' என்றாள் ரத்னா கொஞ்சலாக.

ஒரு காலமாக இருந்தால், பெருமையால் பூரித்துப் பொங்கிப் போயிருக்கும் என் மனம். இப்போது எதிர் பார்ப்புகளின் ஏமாற்றத்தால் துவண்டு கிடந்தது.

“அவங்க அவங்க வாழ்க்கை அவங்களுக்கு. நல்லா இரும்மா'' என்றேன் உணர்ச்சி இன்றி... உள்ளே சென்று, காலையில் அவசரமாக, என் கணவர் கொணர்ந்து வைத்திருந்த நூல் சேலையுடன் ஒரு துண்டு ரவிக்கைத் துணியை வைத்தேன்.

ஒரு பிளாஸ்டிக் தட்டில் பூவும், மஞ்சளும், வெற்றிலையுமாக, சேலைப் பார்சலுடன் வெளியே வந்தவள், “ம்! கும்பிடுங்க, என்றேன்.

“இதெல்லாம் எதுக்கு பெரியம்மா'' திகைத்தபடி கேட்டாள் ரத்னா.

“தங்கச்சிப் பிள்ளை தன் பிள்ளை ஆகாது. தங்கக் குடமும் தண்ணீர்க் குடம் ஆகாதும்மா. ரத்னா! நீ தங்கக் குடமாவே இரு, இதை வாங்கிக்க. உன் ஏழை பெரியம்மா, இந்த அளவுக்காவது, மத்தவங்களுக்குக் கொடுக்கும் வசதியோடு வாழ்ந்து, அவ மகனை வளர்த்து ஆளாக்கட்டும்னு வேண்டிக்க. அது போதும்மா'' என்றேன் உணர்ச்சி வசப்பட்டவளாக. என் கண்களில் நீர் நிறைந்தது. அது கோழைத்தனத்தால் அல்ல. என்னாலும், நிமிர்ந்து நின்று வாழ முடியும் என்ற தன்னம்பிக்கையின் வேகத்தினால் என்பதை சொல்லவும் வேண்டுமா?

□

# பிரச்சினைகள் ஓய்வதில்லை

அபிராமி அத்தைக்கு ஆத்திரமாக வந்தது. அந்தத் திருவல்லிக்கேணி சந்துத் தெரு குடித்தனங்களுக்கே அவள். அத்தைதான். அதற்காக அப்படி ஒரு உரிமையுடன் எதிர்ப் பகுதி காமாட்சி பேசி இருக்கக்கூடாது.

கர்லை வேளை சோறு வயிற்றில் விழுந்ததும் விழாததுமாக, அந்தப் பத்திரிக்கையைத் தூக்கிக் கொண்டு இவளிடம் ஓடி வந்தாள் காமாட்சி.

“அத்தை! இந்தப் படத்தைப் பார்த்தீங்களா?''

அபிராமி, காலை நேரத்தில் தேவாரம், திருவாசகம் தவிர வேறு புத்தகத்தை விரலாலும் தீண்டமாட்டாள். காலைக் கருக்கிருட்டில் தட்டுத்தடவி, குளித்து உடுத்திக் கொண்டு, நெற்றி நிறைய விபூதியை அள்ளிப்பூசி விட்டால் பிறகு வேறு சிந்தனையே இருக்காது அவளுக்கு.

சமையலறைக்குள் புகுந்தவள் வாய் மட்டும் தேவராம், திருவாசகத்தை முணு முணுக்கும். மற்றபடி ஆபீஸ் போகும் தாரிணியின் சலசலப்பும், ஓய்வு பெற்ற உல்லாசத்தில். சதா கதைப் புத்தகமும் கையுமாக வாசல் புற சாய்வு நாற்காலியில் அமர்ந்திருக்கும் தம்பி சபேசனையும் தவிர வேறு எந்தவித நினைப்பும் இல்லாமலே இருப்பவளை இந்தக் காமாட்சி குழப்பிவிட்டாளே!

“நீங்க பத்திரிகை படிக்கிறதே இல்லியா அத்தை?''

"எனக்கெதுக்கு அதெல்லாம்? தம்பி ஒருத்தன் போதாது. ஊர்ல இருக்கிற கதைப் புஸ்தகமெல்லாம் வாசிக்கறதுக்கு?" நொடித்தாள் அபிராமி.

"அதுக்கில்லே அத்தை, அதுல பாருங்க. இந்தக் காலத்துல, நம்ம பொண்ணுங்க மானத்துக்கு எவ்வளவு பங்கம் வருதுன்னு தெரியும்."

அபிராமி அரைமனதுடன் புத்தகத்தின் மேல் அட்டையைப் பார்த்தாள். கதறித் துடித்தபடி இருக்கும் ஓர் இளம் பெண்ணை வலுக்கட்டாயமாக, அருகிலிருக்கும் வாடகை வண்டி ஒன்றில் திணிக்க முயல்கிறார்கள் நான்கு முரடர்கள்.

"ஐயையோ!" அபிராமி பயத்தில் கூவினாள்.

"இது சும்மா மாதிரிப் படம்தான். நிசம்மா நடந்த சம்பவத்தை வச்சு எடுத்திருக்காங்க."

"இதென்ன அக்கிரமம்!"

"அத்தே! வயசுப் பொண்ணுங்க வேலைக்குப் போகுதில்லே. அவங்களுக்கு இந்தக் காலத்துல தொல்லை ரொம்பப் பெருகிப் போச்சு. அதனாலதான் எம் பொண்ணை, படிப்புப் போதும், வேலையும் வேணாம் வெட்டியும் வேணாம்னு கட்டிக் குடுத்திட்டேன்" காமாட்சி ஊசி ஏற்றுவது போல் விஷயத்தைக் குத்திக் காட்டிவிட்டு, தன் பகுதிக்குள் போய் விட்டாள்.

அபிராமி அத்தையின் மனதில் இதுகாறும் இருந்த கவலைகளுடன் புதுக் கவலையும் சேர்ந்து கொண்டது. காமாட்சி தலை மறைந்ததும் மெல்ல அந்தப் புத்தகத்தைப் புரட்டினாள்.

பெண்களின் பாதுகாப்பு பற்றிய தலையங்கம். இந்தியாவில் எங்கெங்கே, எந்த விதமாகப் பெண்கள் மானபங்கப் படுத்தப்படுகிறார்கள் என்ற புள்ளி விவரங்கள்.



"சே! சே! உலகம் ரொம்ப மோசமாகிக்கிட்டு வருது" உடலைக் குலுக்கியபடி, அருவருப்புடன் திரும்பினாள் அபிராமி.

வாசல்புறம் குத்துக்கல் போல, சாய்வு நாற்காலியில் சாய்ந்து கதைப் புத்தகத்தில் லயித்திருக்கும் சபேசனின் வழுக்கைத் தலை தெரிந்தது.

"நல்லா சாஞ்சுகிட்டு கதைப் புஸ்தகம் படிப்பான். ஏதுடா வயசுக்கு வந்த பொண்ணை வீட்ல வச்சிருக்கமே, நல்ல எடமா பார்த்துக் கட்டிக் குடுப்போம். உஹூம். ஒரு துப்பு கிடையாது."

வெகுண்டவளாய், எதிர்புற சுவரை உற்றுப் பார்த்தாள்.

முத்துப்பல் வரிசை தெரிய வாய்விட்டுச் சிரித்தபடி சபேசனின் மனைவி சுலோசனா அதில் நின்றிருந்தாள். மணக்க, மணக்க மல்லிகைப் பூ மாலை படத்தை அலங்கரித்தது.

"பாவி மனுஷி! மஞ்சளும், குங்குமமுமா நீ புறப்பட்டுப் போயிட்டே, இப்பிடி எங்கால்ல மூணு பொண்ணுங்களைக் கட்டிப்பிட்டு..."

அடிவயிற்றில் சுருண்டெழுந்த வேதனையில் அபிராமி முகத்தை சுளித்தாள்.

அபிராமி கணவனை இழந்த தம்பி குடும்பத்தோடு ஒட்டிக் கொண்டபோது சுலோசனா தாரிணியைப் பிரசவித்திருந்த சமயம்.

வாய்க்கும், கைக்கும் போராடும் குடும்பம். மூன்று பெண் குழந்தைகள். நோயாளியான மனைவி. வீடு திரும்பி விட்ட சகோதரி. சபேசன், விவசாய இலாகாவில் குமாஸ்தா. வாழ்க்கைப் போராட்டங்களுக்கு எதிர் நீச்சல் போட முடியாதபடி, கை சளைத்துப் போனார் சபேசன். இன்ன வியாதி

என்று தீர்மானிக்கும் முன்னரே, சுலோசனா இறைவனடி நோக்கிப் பறந்து விட்டாள்.

அத்தை அபிராமி, குடும்பக் கவலைகளைச் சுமந்தாள். சமைப்பது, சாப்பிடுவது தவிர, இதர கவலைகளும் அவளை ஆட்கொண்டன.

பெரியவளையும், அடுத்தவளையும் ஒருமாதிரி வசதியாகக் கொடுத்துவிட முடிந்தது. அந்தக் கல்யாண பேரத்தில், சுலோசனாவின் இரட்டைவடம் சங்கிலி, நாலு ஜதை வளையல்கள், காது தோடு, மூக்குத்தி எல்லாம் மறைந்து விட்டன. எஞ்சி நிற்பது தாரிணி. அவளது அம்மாவின் ஒரு பவுன் தாலித்தங்கம்.

சுலோசனா மாதிரி தாரிணி நல்ல அழகு. நெடு நெடுவென உயரமாக வளர்ந்து விட்டிருந்தாள். படிப்பிலும் கெட்டிக்காரி' பி. காம். படித்து, செக்ரட்டரி படிப்பிலும் தேறிவிட்டிருந்தாள். தனியார் கம்பெனி ஒன்றில் நல்ல வேலை அவளுக்கு. தாரிணியை வேலைக்கு அனுப்புவதில் அத்தைக்கு சம்மதம் இருக்கவில்லை.

"பெரியவளுகளைக் கட்டிக் குடுத்திட்டே, இவளையும் கட்டிக் குடுத்திடு பொறுப்பு தீந்துடும்'' தம்பியை வற்புறுத்திப் பார்த்தாள்.

அப்போதுதான் சபேசன் ஓய்வு பெற்றிருந்தார். திருமணம் என்ற சந்தையில் பேரம் பேசும் தகுதிக்குத் த்ன்னை தயார்படுத்திக் கொள்ள முடியாத சூழ்நிலை. ஏற்கெனவே இரண்டு பெண்களைக் கொண்டு கொடுத்துப் பட்ட கடனை அடைத்து மீண்டு வந்திருந்தவர் கையில் பண ஓட்டம் தாழ்ந்திருந்தது.

"தாரிணி வேலைக்குப் போகட்டும். பாத்துகிட்டே இருப்போம், நல்ல இடமா வந்தா முடிச்சிடலாம் அக்கா', சமாளித்தார் தம்பி.



"போங்கப்பா? பரீட்சை எழுதின மை கறைகூட கையில காயலே, அதுக்குள்ளே எனக்கு எதுக்குக் கல்யாணம். நான் வேலைக்குப் போவேன். எங்க டிப்ளமா, ஸ்கூல்லேயே வேலை வாங்கிக் குடுப்பாங்க தாரிணி பிடிவாதமாக வேலைக்கு சேர்ந்துவிட்டாள்.

சாதாரணமாக அருகிலிருந்த பெண்கள் பள்ளி, பிறகு கல்லூரி என்று தாரிணி போய் வந்தபோது அபிராமி அலட்டிக் கொள்ளவில்லை. ஆனால் ஆபீஸ் என்று தாரிணி பாரிமுனைவரை சென்று வர ஆரம்பித்ததும் அவள் வயிற்றில் புளியைக் கரைக்க ஆரம்பித்து விட்டது.

"இருட்டிப் போயிட்டுது. இன்னம் காணோமே?'' என்று தவிப்பாள்.

"பஸ் கிடைக்கல்லே'' தாரிணியின் பதில்.

"மழை கொட்டுது. எப்படி வருவா?'' அபிராமி வாசலுக்கும் உள்ளுக்குமாக அலைவாள்.

"குடை எடுத்துட்டுப் போகலை. ஆனா, என் சிநேகிதி கொண்டு வந்திருந்தா வந்திட்டேன். பஸ் ஸ்டாண்ட்ல இருந்து கொஞ்சம் நனைஞ்சிட்டேன்'' குழந்தைபோலச் சிரித்தபடி, சொட்டச் சொட்ட தாரிணி வந்து நிற்பாள்.

"காய்ச்சல், தடுமன்னு வருமே'' அத்தை பதறிப் போய் தலையில் துண்டைப் போட்டு துடைப்பதை சபேசன் வேடிக்கை பார்ப்பது வழக்கம்.

அப்போதெல்லாம் தம்பி மீது ஏற்படாத ஆத்திரம் இப்போது ஏற்பட்டது. அபிராமிக்கு அவள் மனக்கண் முன்பு அந்தப் பத்திரிக்கை செய்தி விவரித்த பயங்கரம் கற்பனையாக விரிந்தது.

தாரிணி ஆபீசில் ஃபைலை புரட்டுகிறாள். அருகிலிருக்கும் மானேஜர் (கட்டையில் போறவன்! அவன் குறுந்தாடியும், மீசையும், கறுப்புக் கண்ணாடியும்) மெதுவாக அவளருகில் வந்து இடிப்பது போல் நிற்கிறான்.

தாரிணி வெடுக்கென நிமிர்கிறாள். சுவர் கடிகாரம் ஐந்தரை அடித்தது கூடத் தெரியாது வேலையில் ஈடுபட்டிருந்திருக்கிறாள். அவசரமாக எழுகிறாள். ஆபீசே சூன்யமாகக் கிடக்கிறது.

மானேஜர் கடன்காரன் விஷமமாக சிரிக்கிறான். "நீ ஓவர் டைம் செய்றேன்னு நான்தான் மத்தவங்களைப் போகச் சொன்னேன்" ஹோ, ஹோ என்று சிரித்தபடி தாரிணியைப் பிடித்து இழுக்கிறான்.

"அம்மா! ஐயோ! விடு...என்னை" தாரிணி திமிர...

"காப்பாத்துடா முருகா" தன்னை மறந்து கூவினாள் அபிராமி!

தூக்கி வாரிப் போட்டவராய் சாய்வு நாற்காலியிலிருந்து அலறிப்புடைத்து எழுந்து ஓடி வந்தார் சபேசன்.

"அக்கா ஏன் கத்தினீங்க?" பதறினார்.

அபிராமிக்கே வெட்கமாகப் போய் விட்டது: வெறும் கற்பனைக்கே இப்படி உடல் ஆடிப்போய் விட்டதா? இதுவே உண்மையான நிகழ்ச்சியாகிவிட்டிருந்தால்.... ஐயோ! பஸ் ஸ்டாண்டிலே, தனியாக நிற்கிற சமயத்துல கூட இப்படியும் நடக்குமே?

"அக்கா! அக்கா!" சபேசன் உரக்கக் கூப்பிட்டார்.

"அ! தாரிணிக்கு ஒரு வழி செய்யடாப்பா முருகான்னு சொன்னேன், வாய்விட்டு கத்திட்டேன் போல இருக்குது"

முதன் முறையாக சபேசன் முகத்திலே யோசனைக்குறி எழுந்தது. "எனக்கு மட்டும் பொறுப்பு இல்லன்னு நினைக்கிறே?"

"வாயால சொல்லிட்டா மட்டும் போதுமா? நாலு எடம் பார்க்கணும். நமக்குத் தோதா வரதா பாரு... அவளும் சம்பாதிக்கறா. பொழைச்சிட்டுப் போறாங்க. நமக்குப் பொறுப்பு விட்டுதில்ல எனக்கு. வயசாயிட்டு வருது. அடிவயத்துல நெருப்பைக்கட்டிக்கிட்டு இருக்காப்ல பயந்துகிட்டே இருக்க முடியலேப்பா" புலம்பினாள் தமக்கை.



"அவ படிச்சவ இல்லையா?"

"பெரிய படிப்பு. பலம் இல்லாம ஒரு பொம்பிளையால என்ன செய்ய முடியும்? தம்பீ! இருட்டிப் போச்சுன்னா, வீடு திரும்பணுமேன்னு தவிப்பு. ஆபீஸ்லே 'ஓவர்டைம்'னா எப்பிடி வருவாளோன்னு பதைப்பு...சே! சே! இது நமக்கு வேணாம் தம்பி."

"அதுக்காக அவசரப்பட்டு எவன் கையிலயாவது பிடுச்சுக் குடுக்க முடியுமா அக்கா?"

அபிராமி தம்பியை உறுத்துப் பார்த்தாள். கையில சல்லிக்காசு குடுக்காம கட்டிக் குடுக்கணும்னு பாக்கறே. எல்லாரும் வாய் கிழியப் பேசறானுக. கிட்ட வந்தால் உருவமே மாறிடுது என்ன செய்யறது? வயசுப் பொண்ணுங் களை வீட்ல வச்சுக்கறது வெடிகுண்டு மாதிரி தம்பி. அது எப்ப வெடிக்கும்னு சொல்ல முடியாது."

"இன்னொருத்தன் வீட்ல வெடிக்கட்டும்னு சொல்றீங்க" சபேசன் உரக்கச் சிரித்தார்.

கோபமடைந்த அபிராமி, "சிரிக்க என்ன இருக்குது? நாளைக்குத் தப்புத் தண்டா ஏதாச்சும் நடந்திட்டா அவஸ்தைப் படப்போறது நாமதான். தெரிஞ்சிக்கொள்ளு. முதல்லே அந்த டில்லி பிள்ளையாண்டானைப் பத்தி விசாரிச்சுட்டு வா" என உத்தரவிட்டாள்.

"எல்லாம் விசாரிச்சுட்டேன். அவங்களுக்கு ஸ்கூட்டர் வாங்கப் பணம் தரணுமாம். அதனால..."

"அதனாலே இந்த இடம் வேணாம்னு சொல்லிட்டதோ தம்பி" பதறினாள் அபிராமி.

"அக்கா! எட்டாயிரம் ரூபாய்க்கு நானெங்கே போவேன்? ஏதோ புரட்டலாம். தாரிணி சம்பாதிக்கறது அவ செலவுக்கும் துணிக்குமே சரியாயிருக்குது" தலையைத் தடவிக் கொண்டார் அவர்.

அபிராமியின் முகம் இறுகியது. ஒரு விநாடி கண்களை மூடிக் கொண்டாள். தனது இறுதிச் சடங்குக்கு என்று கொஞ்சம் ரொக்கப் பணம் அவளிடம் இருந்தது.

"செத்த பிறகு இந்த உடலை எப்படி எடுத்தால் என்ன. வாழப் போகிற பெண்ணின் உடலை பங்கப்படுத்தாமல் வாழ்வளிக்கப்படுவதை கண்ணால் பார்க்க இந்தப் பணம் உதவட்டுமே?"

"அதுதானே? நான் தரேன் மிச்சப் பணத்தை. கல்யாணத்தை முடிச்சிடு."

தமக்கையையே அதிசயமும், நன்றியுமாகப் பார்த்தார் சபேசன். அவருக்கு வார்த்தைகள் தடுமாறின.

"அப்பாடா! ரொம்ப நேரமா பஸ் ஸ்டாண்டில நின்னு காலே போச்சு" அலுத்தபடி, சோர்வுடன் உள்ளே வந்தாள் தாரிணி.

கையிலே பெரிய காகித மூட்டை, தோளில்பை; முகத்தில் அளவுக்கு மீறிய அலுப்பு.

"ஏன் இத்தனை நேரம்? ஒரே கவலையாப் போயிட்டுது." அத்தை கடிந்து கொண்டாள்.

"தீபாவளி வருதே. நல்ல சேலையா எடுத்திட்டு வரோம்னு நானும் என் சிநேகிதியுமா போனோம் அப்பப்பா! இப்பவே என்ன கும்பல்—எப்படியோ தீபாவளி 'பர்சேஸ்' முடிஞ்சிட்டுது."

அபிராமி பெருமூச்சு விட்டாள். மனதினுள் "எப்பிடியோ உன் கணவன் "பர்சேஸை"யும் முடித்து விடுகிறோம்" என்று கூறிக் கொண்டாள்.

தாரிணியின் கல்யாணம் விமரிசையாக நடந்து, அபிராமியின் கணிசமான தொகையை விழுங்கிவிட்டு, டில்லி சென்று விட்டது. அங்கேயே தாரிணிக்கு ஒரு வேலையும் கிடைத்துவிட்டது.

இப்போதெல்லாம் எதிர் பக்கத்து காமாட்சியைக் கண்டு அபிராமி அத்தை கடுத்துக் கொள்வதில்லை. வாயிலுக்கும், உள்ளுக்குமாக நடப்பதில்லை. மழை பெய்கிறதே இடி இடிக்கிறதே, வெயிலடிக்கிறதே இருட்டி விட்டதே என்றெல்லாம் அவதிப்படுவதில்லை.



"என்ன அக்கா! இருட்டி நேரமாயிட்டுது. விளக்குக் கூட போடாம உக்காந்திருக்கீங்க?" என்று கேட்டபடி சபேசன் கூடத்து விளக்கைப் போட்டார்.

"மனசில பாரம் குறைஞ்சிட்டுது பாரு. அதனால இருட்டுகூட வெளிச்சமாகத் தெரியுது" அபிராமி தம்பியைப் பார்த்து புன்னகைத்தாள்.

"அக்கா! தாரிணியைக் கட்டிக்குடுத்து பிரச்சினை முடிஞ்சிட்டதா நினைக்காதீங்க. பிரச்சினை இன்னும் இருக்கு" என்றார் சபேசன்.

"என்ன சொல்றே?"

"ஆமாக்கா! பொண்ணுக்கு சம உரிமை அப்பிடி இப்பிடின்னு பேசறாங்க. ஆனா, அவளை சரிநிகர் சமானமா மதிச்சு, அவளைப் பலவீனமானவள் அவமானப் படுத்துப் படக்கூடியவள்னு நினைக்காம, சரி சமதையான ஒரு பிறவின்னு மதிச்சு, என்னிக்கு ஆண்கள் நடக்கறாங்களோ, அன்னிக்குத்தான் பிரச்சினை முடியும். அதுவரை தொடர்ந்து கிட்டே இருக்கும்.

"யாருக்கு? நமக்கா?" அபிராமி கவலையுடன் கேட்டாள்.

"உங்களுக்கு இல்லே. இப்ப, தாரிணியோட மாமியாருக்கு, டில்லியிலே வாழறவங்களுக்கும், இந்த பிரச்சினை உண்டு. இப்ப தாரிணி வர நேரமாயிட்டுதேன்னு அவ மாமியார், வாசலுக்கும் உள்ளுக்குமா நடந்திட்டு இருப்பாங்க. ஆக பிரச்சினைகள் ஓய்வதே இல்லை."

அபிராமி விக்கித்துப் போனாள்.

□

# கவர்ச்சிக் கன்னி

மதுரா போட்டோ ஸ்டுடியோவின் முன்பக்கத்து மரத் தடுப்பின் மீது பல... கவர்ச்சிக் கன்னிகள், விதவிதமான கோணங்களில் புன்னகைத்தபடி காட்சியளித்தனர்.

கோடம்பாக்கம் நெடுஞ்சாலையில் உள்ள சின்னஞ்சிறு போட்டோ ஸ்டுடியோ அது. அதன் முதலாளி, தொழிலாளி எல்லாவிதமான தாமோதரம். தனது வழுக்கைத் தலையைத் தடவியபடி கோபமாக, முன்புறம் மேசை அருகில் அமர்ந் திருந்தார்.

மேசை மீது கிடந்த "பில்" புத்தகம் அவரைப் பரிதாப மாகப் பார்த்தபடி விரிந்து கிடந்தது. காலையில் வீட்டை விட்டு இறங்கும் போதே அவர் மனைவி சொன்னாள். "பொங்கல் பண்டிகை நினைவு வச்சுக்கோங்க. எப்பப் பாத்தாலும் அந்தப் போட்டோ கடையில் பழியா கிடந்தீங்க. எனக்குக் கெட்ட கோவம் வந்திடும்!"

பாவம், தாமோதரம்! ஒரு காலத்தில் அவர் பெரிய சினிமா கதாநாயகனாக ஆகிவிட வேண்டும் என்ற மனப்பிர மையில் கோடம்பாக்கம் படக் கம்பெனிகளையெல்லாம் படையெடுத்துக் கொண்டிருந்தார். படிப்பு பாதியில் கோவிந் தாவாகி விட்டிருந்தது. கழுத்தில் மைனர் செயின், பட்டு ஜிப்பா, பாகவதர் கிராப் சகிதம் திரியத் தொடங்கினார்.

தாமோதரத்தின் தகப்பனார் ஒரு ஸ்டில் போட்டோ கிராபர். நல்ல வாலிப வயதில் மகன் கண்டபடி போய்விடக்



கூடாது என்ற பயத்தில் இந்த குட்டி ஸ்டுடியோவை ஆரம் பித்து வைத்தார். அதில் மகனையும் பிடித்துப் போட்டார்.

காமிராவின் முன்னால் நிற்க ஆசைப்பட்ட தாமோ தரம் இப்போது அதன் பின்னால் நின்றபடி, மற்றவர்களைக் கண்கொட்டாமல் படம் பிடிக்க ஆரம்பித்தார்.

அவருடைய தகப்பனாரும் மகனுக்கு உதவியாக இருந் தார். அப்போதெல்லாம் குட்டி, உதிரி நடிகர், நடிகைகள் வருவார்கள். தாமோதரத்தின் பாடு படு குஷி. அவர் அழகை ஆராதிப்பவர்!

விதம் விதமான கவர்ச்சிப் பெண்மணிகள் அவரது கண் களுக்கு விருந்தாக காமிரா வழியாகப் புன்னகைப்பார்கள்.

பல சமயங்களில் அழகான பெண்களை வேண்டும் என்றே, "கொஞ்சம் அப்பிடி தலை சாயுங்க...! இப்பிடி... ச்சூ! ச்சூ இப்பிடி... அதாவது..." என்று வேண்டுமென்றே கால தாமதம் செய்துவைப்பார்.

பிள்ளையின் இளமைப் பித்தலாட்டம் தந்தைக்கு விளங்க ஆரம்பித்துவிட்டது. காரியம் கட்டுமீறு முன் ஒரு கால்கட்டை போடுவது நல்லது என்று முடிவு எடுத்தார். இப்போது சொர்ணம் அவருடைய மனைவி!

ஐயகோ! சொர்ணம்... பெயரில்தான். சற்று கருப்பு, இருந்தால் என்ன? எத்தனையோ பெண்கள் மூக்கும், விழியுமாக கோயில் சிலை போல இல்லையா! இங்கே எல்லாமே தப்புக் கணக்கு. தாமோதரத்தின் காமிராக் கண்கள் கண்ணீர் வடித்தன.

கல்யாணமான புதிதில், அடக்கமாக ஒடிசலாக வந்த சொர்ணம் இப்போது அடங்காப் பிடாரியாக, மூன்று மடங்கு பருமனாக, வளர்ந்திருந்தாள். மாமனார் மண்டை யைப் போட்டதில் அவளது வாய் அளவுக்கு மீறி வளர்ந்து விட்டிருந்தது.

"எப்பப் பாரு, கடை கடைன்னு குந்திகிட்டா என்ன அர்த்தம்! எனக்கு ஒரு வெளிவாசல் கெடையாது. இந்த வாட்டியாவது காணும் பொங்கலுக்கு நாம கட்டாயம் வெளியே போகணும். ஆமாம்" உத்திரவு போட்டிருந்தாள். "என்னோட போட்டோ ஒண்ணும் எடுத்துக் கொடுக்கணும்!" அடுத்த உத்தரவு.

"பொங்கலுக்கு கடையை மூடுங்க. வீட்ல இருங்க" அதட்டினாள்.

இவளது அழகைப் பார்த்துக் கொண்டு வீட்டிலேயே இருந்தால் அவ்வளவுதான்! "அழகே உன்னை அவமதிக்கிறேன்" என்று கத்த வேண்டும்போல் தோன்றிவிடும். ஸ்டூடியோவில் உட்கார்ந்தாலாவது கண்ணுக்கு விருந்தாக ஏதாவது தேறும்.

"தாமோதரத்தின் தலையில் வழுக்கை விழுந்து விட்டாலும், மனதில் வழுக்கை விழவில்லையே! காலா காலத்தில் குழந்தை குட்டி பிறந்திருந்தால் அவருடைய மகளோ, மகனோ இப்போது பட்டப்படிப்பு முடித்திருக்க வேண்டும். அந்த தொல்லை ஏதும் இன்றி மனம் இன்னமும் இளமையாக இருந்தது. இனிமையை கண்ணால் பார்க்க விரும்பியது! இதில் என்னய்யா நட்டம்?

அன்று சொர்ணம் வாயைத் திறந்த வேளை, ஒரு நல்ல கிராக்கிகூட ஸ்டுடியோவுக்கு வரவில்லை. காலையில் இரண்டு சின்ன பொடிப் பையன்கள் ஏதோ பஸ் பாசுக்கு போட்டோ எடுக்க வந்தனர்.

பிறகு ஒரு குடும்பம். டஜன் கணக்கில் ஏகக்கூச்சலுடன் வந்து போயிற்று. பிறகு ஒரு வயதான மூதாட்டி. பிறகு பயங்கரமான ஓர் அம்மையார்... இப்படி காமிரா வழியாக ஒவ்வொரு முகமாகப் பார்த்தபோது அவருக்கு அழுகையே வந்துவிட்டது.



"சத்தியமா ஒண்ணுகூடத் தேறாது. எல்லாம் அழு மூஞ்சிங்க. இதுங்க எல்லாம் எதுக்காகப் படம் பிடிக்கணும்னு ஓடி வருதுங்களோ தெரியலை" அலுத்துக் கொண்டார்.

மணி எட்டும் அடித்தாகிவிட்டது. நாலைந்து கல்லூரி மாணவர்கள் பிறகு பல்லும் பவிசுமாக சில நாரீமணிகள்... சே! எல்லாம் மட்டமான கேஸ் "பேசாமல் சொர்ணத்தை கூப்பிட்டு ஒரு போட்டோ பிடிச்சிருக்கலாம்!" மனதினுள் சலிப்படைந்தவராய் கடையை மூட எழுந்தார். "ஐயோ! ஒரு நிமிஷம்!..." அவசரமாகக் குரல் கேட்டு திரும்பினவர் திடுக்கிட்டார்.

ஒடிய, உயரமான, அழகே உருவான ஒரு பெண்ணுடன் ஒரு வாலிபன், மேல்மூச்சு வாங்க நின்றான்.

"அது என் தங்கச்சிங்க. சினிமாவில் நடிக்கணும்னு ஆசை."

அடிசக்கை! தாமோதரம் உற்றுப் பார்த்தார். நல்ல 'போட்டோ ஜெனிக்' அழகி செதுக்கி வைத்த மாதிரி கண்ணும் மூக்கும்... அடடடா!

"ஒரு போட்டோ ரொம்ப அவசரமா தேவை. எத்தனை பணம் வேணாலும் கொடுத்துடறேன்."

"இப்ப எடுத்தாலும் உடனே கிடைக்காதே."

"நாளைக்கு சாயந்திரம் கொடுத்தா போதும். ஒரு சினிமா சான்ஸ் வாங்கணும். போட்டோ காட்டினால் போதுமாம். தயவு செய்யுங்க ஐயா!" கெஞ்சினான் அவன்.

"நாளைக்கி பொங்கல் லீவாச்சே!" மீண்டும் தயங்கிய வரை விடாமல், "தயவு செய்யுங்க. எத்தனை பணமானாலும் பரவாயில்லைங்க" கெஞ்சினான். வற்புறுத்தினான்.

ஸ்டூடியோ விளக்குகளைச் சரிசெய்தார். நடுவில் போடப் பட்ட இருக்கையில் அந்தப் பெண்ணை உட்கார வைத்தார். அவள் மயக்கும் வசீகரப் புன்னகையை வீசி விட்டு, “களுக்” என்று மாயச் சிரிப்பை சிந்தினாள்.

தாமோதரன் தலை கிறுகிறுத்துப் போனார். கருப்புத் துணிக்குள் புகுந்து கொண்டவர், கண் குளிர அந்தக் கவர்ச் சிக் கன்னியை தரிசனம் செய்தார்.

பிறகு, வெடுக்கென தலையை வெளியே எடுத்தவர், “கொஞ்சம்...இப்படி...அ...அப்படியே இருங்க” என்றார், கைகளைப் பலமாக அபிநயித்து.

அவள் சகோதரன் அருகில் வந்தான் மெதுவாக “கொஞ்சம் கவர்ச்சியா எடுங்க ஐயா!” என்றான்.

தூக்கிவாரிப் போட்டவராய் அவனையே பார்த்தார் தாமோதரம்.

“பயப்படாதீங்க. நான் அண்ணன்காரன் இருக்கேன். கொஞ்சம் கவர்ச்சியா எடுத்துக் கொடுத்தீங்கன்னா ரொம்ப உதவியா இருக்கும்...”

“அடி சக்கை!” மனதிற்குள் உற்சாகம் பிய்த்துக் கொள்ள, பல கோணங்களில் படங்களைப் பிடித்தார். யாவும் முடிந்து வெளியே வரும்போது, “அட்வான்ஸ் எவ்வளவுங்க? நாளைக்கு சாயங்காலம் “காப்பி” தயாரா இருக்குங்களா?” விசாரித்தான் அந்த வாலிபன் ஆவலுடன்.

“கடை கிடையாது. உங்களுக்காக சாயந்திரம் ஆறு மணிக்கு வச்சிருக்கேன். வந்து வாங்கிட்டுப் போங்க. பணம் நாளைக்கி கொண்டு வாங்க போதும்.”

கடையைப் பூட்டிவிட்டு வீடு திரும்பிய தாமோதரம், அன்று சொப்பன வாழ்வில் அந்த சுந்தரியையே கண்டு மகிழ்ந்து கொண்டிருந்தார்.



அதிகாலையில், மனைவியின் பொங்கல் பிரலாபத்தை காதில் வாங்கிக் கொள்ளாதவராய், ஸ்டூடியோவிற்கு விரைந்தார் அவர்.

அன்று முழுதும் பாடுபட்டு, கவர்ச்சிக் கன்னியின் படங் களை முடித்துவிட்டிருந்தார். “என்னமாய் சிரிக்கிறாள்? ஏயப்பா, இவள் உண்மையிலேயே, ரசிகர்கள் மனதைத் திருடி விடும் மாயக் கன்னியாகிவிடுவாள்” பிரமை பிடித்தவர்போல அவற்றைப் பார்த்தவர், பிறகு, எப்படியோ காகித உறையிட்டு, மேசைமீது வைத்தார்.

மாலை எப்போது வரும் என்ற ஆவலுடன் மதிய உணவுக்கு வீடு திரும்பியவரிடம், “என்னை எப்பாங்க ஒரு போட்டோ பிடிக்கப் போறீங்க? பொங்கல் பரிசா ஏதாச்சும் தரமாட்டீங்களா? நானும் எத்தனைவாட்டி ஆசையா கேக்க றேன்?” சொர்ணா புலம்பினாள்.

“காமிரா முழுசும் அடைச்சுக்குவியே!” மனைவியை கிண்டல் செய்தவராய், பொங்கலை அனுபவித்துச் சாப்பிட் டார் தாமோதரம்.

ஏழு மணி அடித்ததும், மனைவி கேட்டதற்குப் பதில் சொல்லாமல் சிட்டாய் பறந்துவிட்டார் அவர். ஸ்டூடியோ வாயிலில் சொல்லி வைத்தாற்போல் அண்ணனும், தங்கையும் நின்றனர்.

உள்ளே அவர்களை அழைத்துச் சென்றவர், போட்டோக் களை வெளியே எடுத்தார்.

கவர்ச்சிக்கன்னி, அவற்றை அவர் கையைத் தொட்டு வாங்கியபடி, “ஹை! ஏ ஒன்!” என்றாள். கடையின் கதவு களை முழுதும் அவர் திறக்கவில்லை.

“இருங்க. கதவை முழுசா திறந்திட்டு வரேன்.”

“வேண்டாம். மரியாதையா உன் இடத்திலே உக்காரு” வாலிபன் குரல் கட்டையாக இருந்தது.

தாமோதரம் அரண்டு போனார். ஆனாலும் சமாளித்த படி, "என்னப்பா! நேத்து அப்படிக் கெஞ்சினே? இன்னிக்கு மிரட்டறே... என்ன பணம் இல்லியா?" என்றார் அதட்டுவது போல்.

"கிழவா! சும்மா உக்காரு. ஏதாச்சும் சத்தம் கித்தம் போட்டே..." வாலிபன் அருகில் நெருங்கி இடுப்பில் செருகி இருந்த கத்தியை எடுத்து நீட்டினான்.

தாமோதரத்தின் சப்த நாடியும் ஒடுங்கிவிட்டது. அழகு உணர்ச்சி குன்றி அழும் உணர்ச்சி மேலோங்கி நின்றது.

"முதல்ல, கழுத்திலே போட்டிருக்கிற மைனர் செயினைக் கழட்டு..." "களுக்" கென்றாள், கவர்ச்சிக் கன்னி.

"மயிலே மயிலேன்னா இறகு போடுமா" வெடுக்கென கழுத்துச் செயினை அறுத்தான் வாலிபன்.

"பாவிங்களா!" கத்தினார் மிக மெலிதாக.

"வாயைத் திறக்காதே. ஏதாவது வெளியே போய் சொல்ல நினைச்சே, இவள்கூட சிநேகிதம். கவர்ச்சி போட்டோ எடுத்தான் கிழவன்னு சொல்லி, உன் பேரை நாற அடிப்பேன். கவனம் இருக்கட்டும்" அடிக்குரலில் உறுமினான் வாலிபன்.

"கல்லாப் பெட்டியில் எவ்வளவு தேறுது?" கவர்ச்சி கன்னி கேட்க, ஒரு சில விநாடிக்குள், மேசை இழுப்பறையில் இருந்த பணத்துடன், இருவரும் வெளியே இருளில் சென்று மாயமாக மறைந்துவிட்டனர்.

அன்று வீடு திரும்பிய தாமோதரம் ஏதோ சுரத்தில் அடிபட்டவர் போல் முகம் வெளிறிப் போயிருந்தார்.

மறுநாள், "சொர்ணம்! காணும் பொங்கலுக்கு உன்னை நிறைய போட்டோ எடுக்கப் போறேன், திருப்தி தானே" எனச் சொன்னபோது அவளுக்கு ஒன்றுமே விளங்கவில்லை. வியப்போடு அவரையே பார்த்தாள்!

□

# இந்த அம்மா ?

லீலாவுக்கு அவமானமாக இருந்தது. கோபமும் வந்தது இந்த அம்மா சுத்த இது... மனதிற்குள் வெகுண்டாள்.

ரெயில் நிலையம். வண்டி புறப்பட சில நிமிடமே இருந்தது. "அத்தான்! உடம்பைப் பார்த்துக் கொள்ளுங்க. அத்தைகிட்ட ரொம்பக் கேட்டதாக சொல்லுங்க. கவனமா இருங்கோ அத்தான்!" நூறுமுறை அத்தான் என்று ஆதிகேசவனுக்கு உபசாரம் சொல்லி இருப்பாள்.

அம்மாவின் அத்தை மகன், வயதானவர். பெரிய குடும்பி. வண்டியில் ஏறி உட்கார்ந்தவருக்கு ஊருக்குப் போகத் தெரியாதா என்ன? நொடிக்கு நூறு அத்தான்... சட்டைப் பொத்தான் உரக்கக் கத்த வேணுமா என்ன? அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் சிரிப்பை அடக்க முடியாது தவித்ததைக் கண்டு அவளுக்கு எரிச்சல். இரண்டு மூன்று இளவட்டங்கள் அந்தப் பக்கமாக வந்தவர்கள் "அத்தான், என் அத்தான், உன்னைத்தான்" என்று இலேசாக சீட்டி யடித்தனர். வண்டி நகரத் தொடங்கியது. "வரட்டுமா, அத்தான்!" அதற்குமேல் பொறுக்க முடியாது, அம்மாவைத் தள்ளிக்கொண்டு வெளியேறினாள் லீலா.

"உங்கள் அத்தான் உறவுக்காரருக்கு வீட்டிலேதான் விருந்தாளியா வச்சு உபசாரம் செய்தாச்சு. ரெயிலேத்தி விடற இடத்திலும் என்ன அத்தான் வேண்டிக் கிடக்கு? அந்த விடலை பசங்க உங்களைப் பார்த்து சிரிக்கிறாங்க.

வரவர ஏனம்மா இப்படி ஒண்ணும் தெரியாமல் ஆகிட்டு வரீங்க?'' மகள் சீறினாள்.

''ஆமா! உங்கப்பா மாதிரி நீயும் ஆரம்பிச்சுட்டே....'' அசட்டையாகக் கூறியபடி நடந்தாள் அம்மா மனோகரி.

வீடு திரும்பிய பின்னும் லீலா கோபம் தணியாமல் இருந்தாள். கல்லூரியில் அவள் பி. ஏ. கடைசி ஆண்டு. படிப்பில் கெட்டி. வீட்டில் அப்பாவின் செல்லம். அதனால் அதட்டிப் பேசும் துணிச்சல்.

லீலாவுக்கு அம்மா மேல் துளி அளவு பரிவும் உண்டு. ''பாவம், அம்மா'' என்று சில சமயங்களில் மனம் கரைந்து போவாள். ஆனால், வெளியே அழைத்துப் போனால், நாலு பேர் முன்னால் நடந்துகொள்ளத் தெரியாது, அசட்டுத்தன மாகப் பேசுவதைக் கேட்டுத்தான் ஆத்திரத்தில் பொங்கிப் போவாள்.

ஒருமுறை துணிக் கடைக்குக் கூட்டிக் கொண்டு சென்றிருந்தாள். விலை உயர்ந்த சேலைகள் எடுத்து வைத்து பணம்கூடக் கட்டியாகி விட்டது. ''கூல்டிரிங் சாப்பிடுங்கம்மா'' கடைக்காரர் உட்கார வைத்து உபசரித்தார். அம்மா ஒருமுறை சேலைப் பெட்டிகளை நோட்டம் விட்டவள் எழுந்து சென்று, :''என்னங்க, நீங்கள் வழக்கமா கொடுக்கிற துண்டிலே கட்டிக் கொடுக்கலையே'' என்று உரக்கக் கேட்டாள்.

கடைக்காரர் நமுட்டுச் சிரிப்புடன், ''துண்டு தீர்ந்து போச்சு. அதுக்குப் பதிலா துணிப்பை தறோம். சேலையோடு பெட்டிக்குள்ளே வச்சிருக்கோம்'' என்றார்.

லீலாவின் முகம் சிவந்து போனது. ''அம்மா பேசாமல் இருங்கோ...'' அடிக்குரலில் அதட்டினாள். இரண்டு ரூபாய் துவாலைக்கு அம்மா இவ்வளவு பேசியதைக் கேட்க அவளுக்கு அவமானமாக இருந்தது.



''நீ சும்மா இரு. வருடா வருடம் காலண்டர் கொடுப் பாங்க. இந்த வாட்டி அதுகூட இல்லை. துண்டாவது கொடுக்க வேணாமோ?'' அம்மா விடாது பேசினாள்.

''பேசாமல் வாங்கம்மா ஏதாச்சும தத்துபித்துனு பேசிக்கிட்டு'' அம்மாவை லீலா பலவந்தமாக வீட்டுக்கு இழுத்து வந்தாள்.

அன்று அப்பாவிடம் அதைப் பற்றி கேலி செய்தபோது கூட அம்மா முகத்தில் அதே சிரிப்பு.

''உங்கம்மாதானே? பி.ஏ. படிச்சவள். ஆனால் படிச்ச முட்டாள். உலக விவகாரம் தெரியாதவள். அவளை ஏன் கடைக்குக் கூட்டிக்கிட்டுப் போனே?'' ஏளனமாக சிரித்தார் அப்பா.

''என்னவோ ஏழை வீட்டுப் பெண்ணு, படிச்சு இருந் தாலும் அடக்கமா இருக்குன்னு பணம் காசு கேட்காமல் கட்டிகிட்டோம். முன்னே பின்னே பணத்தைப் பார்த்தாத் தானே தெரியும்?'' பாட்டி தன் பங்காக இடித்தாள்.

''நீங்கள் எல்லாம் சொல்லிக்கிட்டே கிடங்க'' என்ற முகக் குறியுடன் அம்மா ஒரு சிரிப்புடன் அடுப்படிக்குப் போய்விட்டாள்.

ஒருமுறை லீலாவின் கல்லூரித் தோழிகள் வந்து இருந் தார்கள். வரவேற்பு அறையில் அவர்கள் கும்மாளம் அடித்துக் கொண்டிருந்தனர். வெளியே பாத்திரக்காரனுடன் அம்மா பேரம் பேசிக் கொண்டு இருந்தாள்.

''ரெண்டு துணி வச்சுக்கிட்டு இம்மாம் பெரிய பாத்திரம் கேக்கிறியே தாயி! உன்னாட்டமா பங்களா கட்டிடுவேன் போ...'' உரக்க அவன் கத்தினான்.

''பங்களா கட்டினால் சேலை சும்மா வந்திடுமா? நானும் பணம் கொடுத்துத் தான் வாங்கறேன்'' அம்மா பதிலுக்குக் கத்தினாள்.

"பேராசைப் பிடிச்ச தாயி. உன்கிட்ட வியாபாரம் பண்ண முடியாது" சலித்தபடி வெளியேறினான் அவன்.

லீலாவுக்கு வெட்கமாகப் போய்விட்டது. தோழிகள் முன்னிலையில் இந்தம்மா...? "உள்ளே போய் காபி பலகாரம் அனுப்பி வையுங்கோ அம்மா...." நிலைமையை சமாளிக்க முயன்றாள் மகள். அப்போதும் அம்மா முகத்தில் அதே சிரிப்பு.

அன்று கல்லூரியில் இருந்து வீடு திரும்பிய லீலா அம்மாவைக் காணாது அடுப்படி வரை போய்த் தேடினாள்.

உங்கள் தாத்தாவுக்கு உடம்புக்கு முடியாமல் இருக்காம். பார்க்க போயிருக்கா. நீ காபி சாப்பிடவா. பாட்டி அன்புடன் அழைத்தாள்.

திடீர் என்று லீலாவுக்கு ஒரு யோசனை. "நாமும் தாத்தாவைப் பார்த்தால் என்ன? பார்த்து இந்தம்மா ஏன் இப்படி மக்காக இருக்காங்கன்னு கேட்கலாமே!"

"நீ போகணுமா அங்கே?" பாட்டி கவலையுடன் கேட்டதைக் காதில் வாங்கிக் கொள்ளாது காருடன் கிளம்பி விட்டாள் லீலா.

சிந்தாதிரிப் பேட்டையில் ஒரு சந்தின் மாடிப் பகுதியில் அம்மாவின் குடும்பம் வசித்தது.

அங்கே போனால் பசங்க படுக்கக்கூட நல்ல பாய் கிடையாது. லீலாவையோ அவள் தம்பி கதிரேசனையோ பாட்டி அங்கே அதிகம் அனுப்புவது இல்லை. தாயின் குடும்பத்தோடு ஒட்டுதலின்றி வளர்ந்து விட்டனர் அவர்கள். பிள்ளைகளுக்கு தந்தைவழி பாட்டி மீது பாசமும் பரிவும், தாய்வழி பாட்டன் மீது இல்லாமல் போய்விட்டது.

லீலாவைப் பார்த்ததும், அபூர்வ விருந்தாளி வந்து விட்டதைப் போல தாத்தா அகமகிழ்ந்து போய்விட்டார்.



"லீலா குட்டி வந்தியாம்மா, உட்காரு நல்லா படிக்கிறியா?', கட்டிலில் கிழிந்த நாராகப் படுத்தபடியே கேட்டார். இதற்குள் மாமனும் அத்தையும் உபசாரம் செய்யத் தொடங்கி விட்டார்கள்.

"உங்கள் உடம்புக்கு என்ன தாத்தா?" விசாரித்தபடி ஓர் ஓட்டை நாற்காலி மீது மெல்ல உட்கார்ந்து கொண்டாள், லீலா.

"வயசாயிடுச்சு. இனி அப்படித்தான், என்னை விடு. நீ உங்கம்மாளாட்டம் நல்லா படிக்கிறியா?" தாத்தா பரிவுடன் கேட்டார்.

லீலா பக்கென்று சிரித்துவிட்டாள். "அம்மா மாதிரியா?"

"அதென்ன இப்படி ஒரு வார்த்தே கேட்டுட்டே!" தாத்தா எழுந்து உட்கார்ந்தார்.

"அதோ பார் அந்த போட்டோ ஆல்பம் அதை எடு' உத்தரவிட்டார்.

புகைப்பட ஆல்பத்தை எடுத்துப் பிரித்துப் பார்த்த லீலாவுக்கு ஒரே திகைப்பு. மிகமிக அழகாக, ஒடிசலாக உயரமா அம்மா டென்னிஸ் மட்டையுடன்... இரட்டைப் பின்னலுடன்... கண்கள் மின்ன பரிசுக் கோப்பைகளுடன் அம்மா...! இன்னும் பலவிதமான கோணங்களில் புதிய உருவமாக அம்மா... "இதெல்லாம் அம்மாதானா தாத்தா!" வியப்புடன் கேட்டாள், லீலா.

"நீ எங்கே இங்கே வரே? இதைப் பார்க்க நேரம் எது? உன் அம்மாவைப்பத்தி தெரிஞ்சுக்கத்தான் பொழுது ஏது? அலமாரியிலே இருக்கிற அத்தனையும் அவள் வாங்கின பரிசுகள்... படிப்பில் கெட்டிக்காரி. பேச்சுப் போட்டியில் தங்கப்பதக்கம் வாங்கினாள்."

தூக்கிவாரிப் போட்டது, லீலாவுக்கு. "பின்னே எப்படி எங்கப்பாவை அம்மா கட்டிகிட்டாங்க? அப்பா ரொம்பப் மடிக்கலையே..."

"படிக்காட்டா என்ன? வியாபார நுணுக்கம் தெரிஞ் சவர். அதுவும் ஒரு படிப்புத்தானே. கட்டிகிட்டேன். முதல்லே விருப்பம் இல்லேதான். பிறகு ஐக்கியமாகி விட்டேன்" அம்மா திடீரென்று பேசினாள்.

"பிடிக்கலைன்னா மறுத்துடறதுதானே?"

"நீ இந்த காலத்துப் பெண். நான் அந்த காலத்துப் பெண். பெற்றவங்க பேச்சை மறுக்காது ஏற்று வாழணும்னு நினைக்கிறவள்."

"இது கோழைத்தனம்."

"இல்லே, புரிஞ்சு கொண்டு நம்மை நாமே தக்கபடி மாத்திக்கிற புத்திசாலித்தனம். கல்யாணம் ஆனவுடனேயே உங்கப்பா சொன்ன முதல் வார்த்தை "நீ படிச்சவங்கிற திமிரை எங்க வீட்டிலே காட்டக்கூடாது. நினைப்பு வச்சுக்கோ" நானும் நினைப்பு வச்சுகிட்டேன். காலப் போக்கில் சரியாயிடும்னுதான் எண்ணினேன். நீ பிறந்தே, பிறகு உன் தம்பி பிறந்தான். ஆனாலும் உங்க அப்பாவோ, அவர் குடும்பமோ எங்களது ஏழ்மையை மறக்கலை, கிண்டல் செய்வதை விடலை..."

லீலாவின் தொண்டை அடைத்தது. அம்மாவின் சிரிப்புக் குப் பின்னால் இப்படி ஒரு கதையா?

"உங்க அப்பாவுக்குத் தன்னைப்பத்தி ஒரு தாழ்வு மனப்பான்மை நிறைய உண்டு. அதனாலே தன்னை உசத்திக்க, என்னைக் குத்தி காட்டி வீணா சண்டை சச்சரவு களை ஆரம்பிப்பார். பதிலுக்குப் பேசினால்தானே வம்புன்னு நான் சிரிச்சுக்கிட்டே ஒண்ணுந் தெரியாத மக்கு போல



இருக்க முயன்றேன். பிறகு அதுவே பழக்கமாயிடுச்சு. ஏன் அப்படி செஞ்சேன் தெரியுமா?" அம்மா பெருமூச்செறிந்தாள்.

"ஏனம்மா?"

"உங்களுக்கெல்லாம் அம்மா ஆகிட்டேனே, அதுக்காகத் தான். ஒரு தாய் தன் குழந்தைகளுக்காக எந்த தியாகமும் செய்ய அஞ்சமாட்டாள். நான் என்வரை என் உணர்வுகளை, என் பெருமைகளைத்தான் தியாகம் செய்தேன். மத்தபடி நல்லா சாப்பிடுகிறேன். வசதியா வாழ்றேன். போதாதா?" அவள் குரல் கரகரத்தது.

லீலா முதல் முதலாக பார்ப்பது போல—அம்மாவை மதிப்பும் பெருமையுமாக பார்த்தாள்.

"அம்மா.... நீங்கள் ரொம்ப உயர்ந்தவங்க.... உங்கள் குழந்தைகளுக்காக உங்கள் உணர்வுகளை எல்லாம் காலடியில் போட்டு மிதிச்சுட்டு... அவமானங்களை முழுங்கிக் கொண்டு சிரிச்சபடியே இருக்கீங்களே.... அம்மா நீங்கள்..."

பேச முடியாது, அம்மாவைக் கட்டிக் கொண்டு விம்மி னாள், லீலா.

□


லக்ஷ்மி
நிகழ்ந்த
கதைகள்